A-PDF Merger DEMO : Purchase from www.A-PDF.com to remove the watermark

# சொந்தம் எந்நாளும் தொடர்கதைதான்



ரமணிசந்திரன்

# சொந்தம் எந்நாளும் தொடர்கதைதான்...

## சொந்தம் எந்நாளும் தொடர்கதைதான்...



1

ஐந்து மணியாகி வேலை முடியும் நேரம் வந்தாலே உதயசந்திரனுக்கு வெறுப்பாக இருக்கும். அவ்வளவு தினமும் உற்பத்தியைப் பெருக்குவது, அதற்கு ஏற்றவாறு 'மார்க்கெட்' உருவாக்குவது, பணிபுரிவோர் பிரச்சினை, ஆடிட், வசூல், அது இதென்று மூளைக்கு எத்தனையோ வேலை இருக்கும்.

அந்த வேலைக்கு நடுவில் அதன் தொடர்பற்ற எதையும் சிந்திக்கவே வழியிராது.

அதிலும் வேலை செய்கிறவர்கள் எல்லோரும் அவரவர் பொருட்களை எடுத்துக்கொண்டு சென்றுவிட அலுவலகத்தில் சத்தம், பரபரப்பு எல்லாம் அடங்கிவிடுகிற அந்த நேரம்தான் அவனுக்குத் தாங்க முடியாததாகிவிடும். மயான அமைதி என்றுகூட எண்ணுவான்.

கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளாக இந்த வேதனை!

சென்ற ஆண்டு வரையும்கூடச் சற்று பரவாயில்லாமல் இருந்தது. பணி முடியும் வரை தந்தையும் கூடவே இருந்து வேலை செய்வார். இருவரும் சேர்ந்தே வீட்டுக்குக் கிளம்புவார்கள். இருவருமாக அடுத்துச் செய்ய வேண்டியது, மற்ற தொழில்கள், தொழிலதிபர்கள் பற்றியெல்லாம் பேசிக்கொண்டே போவார்கள்.

எனவே, தனிமை அவ்வளவாக அவனை உறுத்தியதில்லை.

ஆனால், கடந்த ஆண்டு ஏற்பட்ட சுகவீனத்தின் பின் ராகவன் அதிகம் அலுவலகம் வருவதில்லை. அதிலும் மதியம் கட்டாயமாக வருவதே கிடையாது. வரக்கூடாதென்று வைத்திருக்கிறார்கள். மருத்துவர் உத்தரவு!

தந்தையின் பொறுப்பையும் சேர்த்துச் செய்வது உதயசந்திரனுக்கு அப்படி ஒன்றும் கடினமாக இல்லை. சும்மாவே அவன் மீன் குஞ்சு! அத்தோடு அவ்வப்போது அப்பாவும் பிள்ளையும் டெலிஃபோனில் வேறு கலந்துகொள்வார்கள். ரகசியம் காக்கப்பட வேண்டிய விஷயம் என்றால், இருக்கவே இருக்கிறது வீடு!

ஆனால், இந்த மாலைத் தனிமைதான் அவனுக்குப் பெரும் துன்பமாகிப் போயிற்று.

சில சமயங்களில் உதயன் தன்னைத்தானே கடிந்துகொள்ளுவான். எத்தனை காலம்தான் அப்பாவின் பின்னே ஒளிந்துகொள்ளும் சின்னப் பிள்ளையாகவே இருப்பது? அவனும் வளர வேண்டாமா? தனித்து நின்று தாங்கத் தெரிய வேண்டாமா?



மனதை மாற்றும் முயற்சியாகத்தான் உதயசந்திரன் ஜன்னல் வழியே வெளியே பார்த்தது.

இரு கல்லூரி மாணவர்கள் ஒரு பச்சைச் சுரிதாரைக் கண்டதும், இருவரும் நிமிர்ந்து போஸ் கொடுத்தது. ஒரு வயதான அம்மாவுக்கு சாலையைக் குறுக்கே கடக்க ஒரு சிறுவன் உதவியது. பிள்ளையை இழுத்துக்கொண்டு ஓடிய ஒரு பெண், வேலை முடிந்து வேகமும் சோர்வுமாக விரைகிற மக்கள்.

மனிதன் சுமை பெரும்பாலும் ஒதுங்கி விலகிக்கொண் டிருந்த அப்போதுதான், அவன் அந்தப் பெண்ணைப் பார்த்தான்.

கால் செருப்பின் வார் கடித்ததோ அன்றி அறுந்துதான் போயிருந்ததோ ஒரு புறமாகச் சாய்ந்து, சாய்ந்து விந்தியவாறு நடந்துகொண்டிருந்தாள் அவள்.

'பிள்ளையார் பிடிக்கப் போய்க் குரங்காய் முடிந்தது' என்றால் இதுதான் என்று ஒரு கசந்த புன்னகையோடு எண்ணினான் அவன். மறக்க முயன்றதைத் தலையில் ஆணி அறைந்தாற்போல நினைவுபடுத்துவது என்றால், அதை வேறு என்னவென்று சொல்ல முடியும்?

ஏனெனில், மூன்று ஆண்டுகளுக்கு முன் இப்படித்தான் அது தொடங்கியது!

அன்றும் இதே போலத்தான் சாய்ந்து, சாய்ந்து நடந்துகொண்டிருந்தாள் அவள். வெகு கவனமான நடை. பால் முகத்தில் ஓர் இறுக்கம்!

ஆனால், இன்றளவு அனுபவ ஞானம் இல்லாத காரணத்தால், பாவம் அந்தப் பெண்ணுக்கு கால்

ஊனமோ? அல்லது எங்கேனும் விழுந்து பலமாக அடிபட்டிருக்கிறதோ? வலியை அடக்கிக்கொண்டு இப்படி இறுகிப் போய் கஷ்டப்பட்டு நடக்கிறாளோ என்றெல்லாம் உதயசந்திரன் உருகிப் போனான்.

பங்களூரில் ஒரு கிளை தொடங்குவதின் சாத்தியக்கூறு பற்றி அறிந்து வருமாறு தந்தையால் அனுப்பப்பட்டிருந்தான் அவன்.

கார், பைக், ஸ்கூட்டர் போன்றவற்றுக்கு உதிரிப் பாகங்கள் தயாரிப்பது அவர்கள் தொழில். சென்னையில் அவர்களுக்கு நல்ல மார்க்கெட் இருந்தது. கர்நாடகத்திலும் வாடிக்கையாளர்கள் இருந்தார்கள். சென்னையில் தயாரித்து அங்கே அனுப்புவதைக் காட்டிலும், அங்கேயே தயாரித்தால் அனுப்புகிற செலவோடு அனுப்புவதற்கு ஆகும் நேரத்தையும் மிச்சப் படுத்தலாமே என்பது ராகவனின் கருத்து. ஆனால், அதற்கு இன்னும் கொஞ்சம் அதிக விற்பனைக்கு வழியிருந்தால்தான் செலவு கட்டிவரும்.

அது பற்றிய புள்ளி விவரங்களைத்தான் உதயன் சேகரித்துக்கொண்டிருந்தான்.

அன்றும் அப்படித்தான். கொஞ்சம் விலையைக் குறைத்துக்கொண்டால் பெருமளவு 'ஆர்டர்' கொடுப்பதாக இரண்டு சக்கர வாகனத் தயாரிப்பில் புகழ்பெற்ற நிறுவனம் ஒன்று வாக்குக் கொடுத்தது. தொழிற்சாலையை இங்கே கட்டிவிட்டால் ராகவன் நிறுவனத்துக்குக் கட்டிவரும் விலைதான் அது. உற்சாகத்தோடு 'செல்'லில் தந்தையைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொல்லிவிட்டு, தெருவோரக் கடை ஒன்றில்



சாத்துக்குடி ஜூஸ் போடச் சொல்லி, வாங்கி ரசித்துக் குடித்துக்கொண்டிருந்தான்.

அப்போதுதான் அவளைப் பார்க்க நேர்ந்தது.

அதுவும் பரிதாபத்துக்குரிய நிலையில்!

அவளுக்கு உதவி செய்தே ஆக வேண்டும் என்று தோன்றிவிட குடித்துக் கொண்டிருந்த பழச்சாறுக்கான பணத்தைக் கொடுத்துவிட்டு அவளை நோக்கி விரைந்தான்.

அவள் அருகில் சென்று ''வேண்டுமானால் என் மீது சாய்ந்துகொண்டு நடக்கிறீர்களா, மேடம்?'' என்று பரிவுடன் கேட்டான்.

அவள் மறுப்பாகத் தலையை மட்டும் அசைத்துவிட்டு, உதடுகளை இறுக மூடிக்கொண்டு மேலே நடந்தாள்.

சாதாரணமாக என்றால் 'என்ன பெரிய ராங்கி, போயேன்!' என்று தன் வழியே சென்றிருக்கக் கூடியவன்தான்.

ஆனால் அன்று அதற்கும் மனம் உருகியது. மகிழ்ச்சியை மற்றவர்களோடு பகிர்ந்து துக்கத்தைத் தனக்குள்ளேயே விழுங்கிக்கொள்கிற உயர்ந்த குணம் என்று உயர்வாகத்தான் எண்ணினான்.

கூடவே நடந்தபடி ''பாருங்கள், உங்களைநான் தாங்கிக்கொண்டால் உங்களுக்கு நடப்பதற்கு இலகுவாக இருக்கும்'' என்று மீண்டும் கேட்டான்.

''இல்லை. நான் இப்படியே நடந்துகொள்கிறேன்'' என்று அவனை வெட்டிவிடவே அவள் மீண்டும் முயன்றாள்.

''அதுதான் ஏன் என்று கேட்கிறேன்? பாவம் கஷ்டப்படுகிறீர்களே என்று மெனக்கெட்டு ஒருவன் உதவிக்கு வந்தால்... ஏன், என்னைத் தப்பாக எண்ணி விட்டீர்களா? நல்ல மனதோடு உதவ வரும்போது முடியாது. நான் கஷ்டப்பட்டேதான் தீருவேன் என்று உதவியை மறுப்பது உதவ முன் வருகிறவர்களை அவமானப்படுத்துவது ஆகாதா?'' என்று விடாமல் தொடர்ந்து சென்று வினவினான் அவன்.

என்னவோ, அவளது துன்பத்தை நீக்கியே தீரவேண்டும் போல ஒரு வேகம் அவனுக்கு. ஏன் என்று யோசிக்கக்கூடத் தோன்றவில்லை!

ஆனால், அவனது உதவியை ஏற்கும் எண்ணம் கொஞ்சமும் இல்லாதவள் போன்று ''அப்படியெல்லாம் இல்லை. பிறர் உதவி தேடும்படி எனக்கு ஒன்றும் இல்லை. அவ்வளவுதான்.'' என்றாள் அவள், பொறுமையை இழுத்துப் பிடித்த குரலில்.

''ஆகா! சும்மா, கதை! உதவி தேடும்படி, உங்களுக்கு ஒன்றுமே இல்லையாக்கும்? பின்னே நடப்பதற்கு இந்த சிரமம் ஏன் படுகிறீர்களாம்? ஆனாலும் இந்த அளவுக்கு ஒருவருக்குச் சுயகௌரவம்... 'கௌரவத்தை விடக் கர்வம்' என்பதுதான் இங்கே சரியான வார்த்தை என்று எனக்குப் படுகிறது! என்ன கஷ்டப்பட்டாலும் பரவா யில்லை, கீழே விழுந்தாலும் சரி பிறர் உதவியை ஏற்கமாட்டேன் என்று இப்படி விந்தி விந்தி நடக் கிறீர்களே!'' என்று ஆத்திரத்துடன் படபடத்தான் அவன்.

''மை காட்! வார் அறுந்த செருப்பைப் போட்டுக் கொண்டு, வேறு எப்படி நடக்க முடியுமாம்?'' என்று பதிலுக்கு வெடித்தாள் அவள்.



''என்னது? வார் அறுந்த செருப்பா?'' என்று திகைப்புடன் அவள் காலைப் பார்த்தான் உதயன். குதிங்காலுக்கு முன்பாக, அடிப்பாகத்துடன் சேரும் இடத்தில் ஒருபுறத்து வார் அறுந்து தொங்கிக் கொண் டிருக்க முன் இணைப்பை மட்டும் விரல்களால் பிடித்து எப்படியோ சமாளித்துக் கொண்டு நின்றாள் அவள்.

இப்படிப் பிடித்துக் கொண்டு நடக்க வேறு செய்வது என்றால் சர்க்கஸ் பழகியிருக்க வேண்டும்!

சற்றே அசடு வழிந்த போதும், ''பிய்ந்த செருப்பைத் தூர வீசி விட்டு வருவதற்கென்ன?'' என்று எடுப்பாகவே கேட்டான் அவன்.

''இதிலிருந்தே தெரிகிறது நீங்கள் கூலிக்கு மாரடிக்கிற கூட்டம் இல்லை என்பது. இந்த செருப்பு என்ன விலை தெரியுமா?''

கெட்டிக்காரிதான், என்று உள்ளூர மெச்சியதோடு, 'சரிதானம்மா உன்னிஷ்டம்' என்று உதயசந்திரன் விலகிப் போயிருக்கலாம். ஆனால், அவன் அப்படிச் செய்யவில்லை. ஏனோ அவளுடன் பேச்சுக் கொடுக்க வேண்டும் என்று தோன்றிவிட ''தூரப் போட வேண்டாம். கழற்றிக் கையில் தூக்கிக் கொண்டாவது வரலாமில்லையா?'' என்று அவளை மடக்க முயன்றான் அவன். ''குறைந்த பட்சம் கீழே விழுந்துவிடும் பயம் இல்லாமல் நேராகவேனும் நடக்க முடிந்திருக்குமே!''

''நடந்திருக்கலாம். ஆனால் வெறும் காலோடு நடந்து பழக்கமில்லையே! இந்தப் பொடிக் கற்களும் மணலும் காலைப் புண்ணாக்கி விடுமே!'' என்றாள் அந்த அழகி. ''நம்மால், முடியாதம்மா!''

''ஓகோ!'' என்றான் உதயன். ''அப்படிப் பார்த்தால் அம்மையாரும் அப்படி ஒன்றும் கஷ்டப்படுகிற ரகம் மாதிரித் தெரியவில்லையே!'' என்றான் கேலியாக.

முறுவலித்துவிட்டு, ''கஷ்டம் என்று இல்லை. ஆனால் இந்தச் செருப்பைத் தூக்கி வீசுகிற அளவும் கிடையாது.'' என்றாள் அவள்.

'என்னிடம் இருக்கிறது, இதை வீசி எறிந்து விடு கிறாயா? புதிது வாங்கித் தருகிறேன்' என்று கேட்க வாயெடுத்துவிட்டு அந்த உந்துதலைச் சற்று சிரமப்பட்டே அடக்கிக்கொண்டான் உதயசந்திரன்.

அவனிடம் இருக்கிறது என்பது அவள் ஏற்கனவே ஊகித்ததுதான். ஆனால் அதை அவளுக்காகச் செலவழிக்கத் தோன்றியது அவனுக்கே ஆச்சரியம்! அத்தோடு அப்போதுதான் பார்த்த ஒரு புதிய பெண்ணிடம் புதுச் செருப்பு வாங்கித் தருகிறேன் என்று சொல்வது அநாகரீகம் அல்லவா.

அதுவும் சற்று விலை உயர்ந்த செருப்பு!.

ஆனால், அவளை அப்படியே போக விடவும் மனமற்று, ''என் கார் அருகில்தான் நிற்கிறது. நீங்கள் போக வேண்டிய இடத்தைச் சொல்லுங்கள் கூட்டிப் போய் விடுகிறேன்'' என்று அழைத்தான்.

இதுவும் அதிகப்படிதான். முன்பின் தெரியாத ஒருத்தியைக் காரில் அழைத்துப் போய் விடுகிறேன் என்பது ஆரோக்கியமான விஷயம் அல்ல இருவருக்குமே!

அவள் எப்படிப் பட்டவளோ என்னவோ?

அவள் நல்லவளாக இருந்தாலும், உதயன் நல்லவன் என்று அவள் நம்பக் காரணம் இல்லையே!



அவன் நல்லவன்தானா என்று கணித்துக் கொண்டிருக்கிறாள், பரவாயில்லை கெட்டிகாரத் தனத்தோடு நல்ல தன்மையும் இருக்கிறது என்று எண்ணினான் அவன்.

ஆனால் அவனது இந்தக் கணிப்பு வெகு விரைவிலேயே தவறாகிப் போகும் என்று அப்போது அவனுக்குத் தெரியாது!

எனவே, அவள் ஏற இறங்கப் பார்த்து முடிக்கும் வரை அசையாமல் நின்றுவிட்டு, ''என்ன? நான் நல்லவன் தானா தைரியமாக என் காரில் ஏறலாமா?'' என்று யோசிக்கிறீர்களா என இலகுவாகவே விசாரித்தான்.

ஒரு பெருமூச்சுடன், ''நல்லது கெட்டது பற்றி எனக்கு நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை... ஆனால், எதற்காக இந்த உதவி? உங்களுக்கு அனாவசியச் சிரமம்தானே?'' என்று கேட்டாள் அவள்.

''என்ன சிரமம்? நானா சுமக்கப் போகிறேன்? கார்தானே?'' என்றான் அவன் மேம்போக்காக.

''ரொம்பவும் சொல்லிச் சொல்லி அறுபட்ட வசனம்! சுமப்பது உங்கள் கார்தான் என்றாலும் கார் என்ன தண்ணீரிலா ஓடுகிறது? பெட்ரோலுக்குக் காசு கொடுக்க வேண்டும் அல்லவா? என் வீடு பத்து கிலோமீட்டர் தள்ளிக்கூட இருக்கலாமே, உங்களுக்கு வீண் செலவுதானே?''

'சரியான கேள்வி?' என்று உள்ளூர மெச்சியவன், சட்டெனச் சமாளித்து, ''மிரட்டிப் பார்க்கிறீர்களா? பத்து கிலோ மீட்டர் தூரத்தை இப்படி நடக்கத் துணிந்திருக்க மாட்டீர்கள் என்பதோடு அதிகத் தூரம் என்றால் ஓர் ஆட்டோவில் சென்றிருக்க மாட்டீர்களா? உங்கள்

இருப்பிடம் வெகு அருகில்தான் இருக்கும் என்பது எனக்கு நிச்சயம். ஒரு தெருவோ, அல்லது இரண்டோ? அதையும்தான் இப்படிக் கஷ்டப்பட்டு நடப்பானேன் என்று நினைத்தேன்...'' என்று இழுத்தான்.

''உண்மைதான்'' என்றாள் அவளும். ''நீங்கள் ஊகித்தது சரிதான். பக்கத்தில்தான் நான் தங்கியிருக்கும் விடுதி இருக்கிறது. அத்தோடு இன்னும் பத்தடி இப்படி நடப்பதுகூட முடியாது போலத் தோன்றுகிறது. அதனால், என்று குருவியைப் போலத் தலை சரித்து அவனை நோக்கி, ''நீங்கள் ஓர் உண்மையான பெரிய மனிதர் என்று நம்பி உங்களோடு காரில் ஏறுகிறேன்.''

''இங்கேயே நில்லுங்கள். காரை எடுத்து வருகிறேன்'', என்று காரைக் கொணர்ந்தவன் அவள் காரில் ஏறி அமர்ந்து நேரே போகச் சொல்லி, கார் கிளம்பியதும் கேட்டான். ''உங்கள் நம்பிக்கை பொய்யாகிப் போனால் என்ன செய்வீர்கள்?'' என்று.

''என்ன நம்பிக்...ஓ! உண்மையான பெரிய மனிதர் விஷயமா? காலம் ரொம்பவும் மாறிவிட்டது மிஸ்டர். தற்காப்புக்காக என்றேனும், பெண்கள் போர்க்கலைகளில் இப்போது மிக வல்லநர்கள் ஆகிவிட்டார்கள் தெரியுமா? மகாகனம் பொருந்திய நானும் அப்படித்தான். அவ்வளவு இலகுவாக, என்னிடம் யாரும் வாலாட்டிவிட முடியாது... அடுத்த திருப்பத்தில் இடது புறம் திரும்புங்கள்.'' என்றாள் அவள் சர்வ சாதாரணமாக.

உதயனின் வியந்த பார்வை தன் மீது படிவதை உணர்ந்து, ''கார் ஓட்டுகிறவர்கள் பார்வையைச் சாலையிலிருந்து எடுக்கவே கூடாது என்று என் அப்பா சொல்லுவார். உங்கள் விருப்பம் எப்படியோ, என்னைப் பொறுத்த வரையில் கை, கால்கள் எல்லாம் முழுசாக இருக்க



வேண்டும் என்று ஆசை! சார் அங்கே குல்மோகர் மரம் நிற்கிறதே அந்த வீடுதான். அங்கே நிறுத்திவிடுங்கள்.'' என்றாள் அவள்.

காரை நிறுத்தியபடியே, ''போர்க்கலையை விட வாயாடலில் வல்லமை அதிகம் என்று நன்றாகவே தெரிகிறது! இறங்கி கை, கால்கள் எல்லாம் முழுசாக இருக்கிறதா என்று சரி பார்த்துக் கொள்ளுங்கள்!'' என்று உதய சந்திரன் ஏளனமும் கிண்டலுமாக உரைக்க அவளும் சிரித்தபடியே இறங்கினாள்.

''தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்க்கக்கூடாது என்பார்கள். ஐயோ பாவம் என்று உதவி செய்தவரைக் கிண்டலடித்திருக்கக் கூடாதுதான்! சரி சார்! கொண்டு வந்து விட்டதற்கு மிக்க நன்றி!'' என்று பளீரென ஒரு புன்னகை செய்தாள் அவள்.

மின்னலடித்தாற் போல இருந்தது அவனுக்கு.

தன் புன்னகையின் வலிமை பற்றி அவளுக்கு நன்றாகவே தெரிந்திருக்க வேண்டும் என்று இப்போது உதயனுக்குத் தோன்றியது.

ஆனால், அன்றைக்கு அந்தப் புன்னகையில் முழுதாகவே மயங்கிப் போனான், அவன்! மற்றபடி, தொடர்ந்த சில பல சம்பவங்கள் எப்படி நேர்ந்திருக்கக்கூடும்.

ஆனால், அன்றைக்கு ஆகா, என்ன அழகு இந்தப் பெண் என்று வியந்தவனுக்கு தொடர்ந்து உள்ளே தோன்றிய எண்ணங்கள் பிரமிப்பை ஊட்டின.

நினைப்பது அவனேதானா?!

நம்ப முடியவில்லை அவனுக்கு!




இருபத்தைந்து வயதில் ஓர் ஆண்மகனுக்கு ஓர் அழகிய பெண்ணைப் பார்த்தால், என்னென்னவோ எண்ணத் தோன்றும்தான்.

மனதாலேயே துச்சாதனன் வேலை செய்து ரசிக்கத் தோன்றும். அப்புறம் இன்னும் அவளை என்னென்னவோ செய்யத் தோன்றும்.

ஆனால், உதய சந்திரன் இதற்கு விதி விலக்கு.

சிறு வயதிலிருந்தே பெண்களைப் பார்த்தால் ஒன்று வணங்க வேண்டும் அல்லது ஒதுங்க வேண்டும் என்றே பயிற்றுவிக்கப் பட்டிருந்தவன் அவன்.

அதிலும், அவன் வயதை ஒத்த பெண்களிடம் அவன் பேசினாலே அவன் பெற்றோர்க்குப் பிடிக்காது.

பதினாறு வயதில் ஒருமுறை நண்பனுடைய தங்கையோடு பேசிக் கொண்டிருந்தான் என்று அவனுடைய தந்தை, தாய், பாட்டி மூவருமாக அவனைத் திட்டியது உதயனுக்கு ஒருநாளும் மறவாது!

அப்போது பாட்டி உயிருடன் இருந்த காலம்.

பாட்டி பழங்காலம். அவர்களுக்குப் பயந்து, அப்பா அம்மாவும் மிரட்டுகிறார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தான் அவன்.

ஆனால், பாட்டியின் காலம் முடிந்த பிறகும் அவனுக்கு அதே கெடுபிடிதான்.



எரிச்சலுற்றுக் கேட்டபோது, பொருத்தமற்ற காதலால் உதயனுடைய சித்தப்பா தற்கொலை செய்து கொண்டதாகவும், அதனால் குடும்பமே காதலுக்கு எதிரியாகி விட்டதாகவும், உதயசந்திரனுடைய தாயார் ஒருதரம் விளக்கம் சொன்னாள்.

சித்தப்பாவின் வாரிசாக, உதயனும் ஆகிவிடக் கூடாது என்றுதான் இவ்வளவு எச்சரிக்கை!

உதயசந்திரனுக்கு அப்போது சிரிப்புதான் வந்தது.

காதலாவது மண்ணாங்கட்டியாவது? அந்த அளவுக்கு இந்தப் பெண்களை யாருக்குப் பிடிக்கிறதாம்.

அதிலும் சிறு வயதிலேயே மணம் புரிந்த மூர்த்தி படுகிற பாட்டைப்' பார்த்த பிறகு அந்த எண்ணமே அற்றுப் போயிற்று. என்றைக்குமே திருமணம்கூடச் செய்து கொள்ளக் கூடாது என்று இருப்பவனிடம் போய் என்ன, அனாவசியக் கெடுபிடி?

தன் மனதை வெளிப்படையாக மகன் கூறவும், சாவித்திரிக்கு வேறு விதமான கவலை வந்தது. மகன் திருமணத்தையே வெறுத்து விட்டால் குடும்பம் தழைப்பது எப்படி?

அப்படியெல்லாம் இருக்கக் கூடாது. உரிய வயதில் திருமணம் செய்து பிள்ளை பெற்று நல்லபடியாக குடும்ப வாழ்வு வாழ வேண்டும் என்று வாதாடி வாக்குப் பெற்றுக் கொண்ட பிறகே, அவள் அமைதியடைந்தாள். அப்போது காதல் கீதல் என்று சொல்லிக்கொண்டு எந்தக் காலத்திலும் வந்து நிற்கக் கூடாது. அதை அப்பா ஒத்துக்கொள்ளவே மாட்டார் என்று எச்சரிக்கவும் தவறவில்லை.

''அனாவசியமான எச்சரிக்கை!'' என்று உதயசந்திரன் அலட்சியமாகச் சொன்னதோடு அந்த விஷயம் முற்றுப்பெற்றது.

அது மூன்று ஆண்டுகளுக்கு முன்பு.

அப்புறமும், ராகவன் ஒரேயடியாக மகனை நம்பி விடாமல் அவ்வப்போது அவனைக் குறுக்கே கேள்விகள் கேட்கத்தான் செய்தார் எனினும், அதைப் பொருட்படுத்தாமல் இருக்க அவனால் முடிந்தது.

ஏனெனில், இப்போது அவனுக்குக் காரணம் தெரியுமே! எனவே, முடிந்த அளவு அவர் மனம் கலங்கத் தேவை இராமல் பார்த்துக் கொண்டதால் பெரும்பாலும் பிரச்சினை இல்லாமலேயே இருந்தது.

இந்த மூன்று ஆண்டுகளாக, அவன் தொழிலில் முழுக் கவனத்தையும் செலுத்தி வந்ததால், தொழிலும் வளர்ச்சி அடைய ராகவன் மகனை நம்பிப் பொறுப்புக்களைக் கொடுக்கலானார்.

அவற்றுள் ஒன்றுதான் இந்த விரிவாக்கத்துக்கான சாத்தியக் கூறுகளை ஆராய்வதும் வேலை பாதி முடிவடைந்த நிலை!

வந்து ஒரு மாதமாக இல்லாத சலனம்... என்று எண்ணும்போதே அவனுள் விளக்கமும் தோன்றிவிட்டது.

சென்னையில் என்றால், தந்தையுடனேயே வீடு திரும்பி, காஃபி டிஃபன் முடித்து டென்னிஸ் ஜிம் என்று போவதும் வருவதுமாக, அவனுக்குப் பொழுது சரியாக இருக்கும். அதற்கு மேலாகச் சில தொழில்முறைச் சந்திப்புகளும் இருக்கும். சில சமயங்களில் ராகவனும்,



அவனும் பேச உட்கார்ந்தார்கள் என்றால் பேச்சு முடிய இரவு பன்னிரண்டு கூட ஆகிவிடும்! அதுவும் சாவித்ரி வந்து நாலைந்து தரம், விரட்டிய பிறகுதான்!

இப்போது, ஐந்து ஐந்தரைக்கு வேலை முடிந்தால் அப்புறம் ஒன்றுமில்லாத தனிமை வெறுமை! அன்றன்றைய வேலை விவரம் பற்றிய அறிக்கை தயாரிக்க எவ்வளவு நேரம் ஆகிவிடப் போகிறது? சற்று நேரம் புத்தகம், கொஞ்சம் டீ.வி... ஊகூம் அவனுக்குப் போதவே போதாது!

சோம்பியிருந்து பழக்கப்படாத மனது இரை தேடுகிறது!

இவளுடன் பேசுவது நன்றாகத்தான் இருக்கிறது!

அவள் உள்ளே சென்றுவிடுமுன் பேச்சைத் தொடங்கிவிட எண்ணிய உதயனுக்கு ஒரு கணம் என்ன பேசுவது என்றே தெரியவில்லை!

இதுவும் புதிதுதான். பேசத் தோன்றாமல் திகைப்பது! லேசாகத் தொண்டையைச் செறுமியவாறு என்ன பேசுவது என்று அவன் யோசிக்கையில் அவள் சிரித்தாள்.

''குடிப்பதற்கு ஏதாவது வேண்டும் என்றால் நேரடியாகக் கேட்பதுதானே? தொண்டையைக் கனைத்துக் காட்ட வேண்டுமா?'' என்று மேலும் நகைத்தாள்.

''கேட்கத்தான் நினைத்தேன். ஆனால், பெயர் தெரியாமல் எப்படிக் கூப்பிட்டுச் சொல்வது?'' என்று சமாளித்தவன், சந்தடி சாக்கில் அவள் பெயரை அறிந்து கொள்ளவும் அடி போட்டான்.

''ஒருவரைப் பெயர் சொல்லித்தான் கூப்பிட வேண்டும் என்பது இல்லை தெரியுமா? மேடம், ஹல்லோ ஒன்று

சொல்ல வேண்டும், ஒரு விஷயம்... இப்படி எத்தனையோ! ஆனால் பெயரைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால், அதையும் நேராகவே கேட்கலாம்.'' என்று சிரித்துவிட்டு, ''என் பெயர் மதுரிமா.'' 'ஆகா, என்ன இனிமையான பெயர்' என்று சொல்லிவிடாதீர்கள். கேட்டுக்கேட்டு அலுத்துவிட்டது என்று அவள் கூறவும் அவளது பாவனையில் இப்போது அவனுக்குச் சிரிப்பு வந்தது.

''அப்படிச் சொல்லவில்லை. ஆனால் பொருத்தமான பெயர் என்று சொல்லலாமா?''

''ஊகூம். அதுவும் கூடாதுதான்! நான் எப்படிப்பட்ட பெண் என்று உங்களுக்கு இப்போது தெரியாதே!' என்றாள் அவள் நகை முகமாகவே, ''நான் ரொம்பக் கோபக்காரி, தெரியுமா?'' என்றாள் மிரட்டுவது போல.

''ஐயோ! அப்படியானால் உங்களிடம் பயந்துதான் நடக்க வேண்டும்! இப்போது... வந்து... ஏதோ, 'டீ' என்று சொன்னீர்களே, அது பற்றி நினைவூட்டலாமா? அல்லது அதற்கும் கோபப்பட்டு விடுவீர்களா?'' என்றான் அவன் பயந்த பாவனையுடன்.

''ரொம்பத்தான் நடுங்குகிறீர்கள்!'' என்றாள் அவள் கேலியாக.

''பின்னே? போர்க்கலையோடு, கோபமும் அல்லவா சேர்ந்திருக்கிறது? 'இம்' எனுமுன் எதிராளியைப் பந்தாடி விடமாட்டீர்களா? அதனால்தான் இந்த நடுக்கம் இந்த நடுக்கம் தீரவாவது கொஞ்சம் டீ கிடைக்குமா?''

கண்ணால் சிரித்தாலும், கூடவே அவனைக் குறுகுறுவென்று பார்த்தாள் அவள். பிறகு, ''டீ



கிடைக்கும். ஆனால், வராண்டா வரை வருவதற்குத்தான் உங்களுக்கு அனுமதி. ஆண் விருந்தினர் அதற்கு மேல் உள்ளே வரக் கூடாது! வராண்டாவில் கிடக்கும் பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்து டீயைக் குடிக்கலாம். வாருங்கள்.'' என்று அவனை அழைத்துச் சென்றாள்.

அவ்வப்போது அவனை அளவிடுவது போல, மதுரிமா பார்த்தது உதயசந்திரனுக்குப் பிடித்துத்தான் இருந்தது.

அனுபவம் இல்லாததால் அவன் நல்லவன் தான் என்று உறுதி செய்து கொள்வதற்காக, அவள் தன்னை அளவிடுகிறாள் என்று எண்ணிக் கொண்டான் அவன்.

இதில், அவனுக்கு இரண்டு வகை சந்தோஷம். ஒன்று அவள் நல்லவளாக இருந்தால்தான் அவன் எப்படி என்று அளவிடத் தோன்றும்! அடுத்தது, அவன் தன்னைப் பற்றி ஆராயும் அளவுக்கு அவனிடம் அவளுக்கு ஈடுபாடு இருக்கிறது!

அவனைத் தன் காலடியில் விழ வைப்பதற்காக அளவிட்டிருக்கிறாள் என்பதை அவன் அறிந்து கொண்டது அவன் முழு முட்டாளான பிறகுதானே!

டீயுடன் மதுரிமா திரும்பி வர ஐந்தே நிமிடங்கள்தான் ஆகியிருந்தன என்றபோதும் அதற்குள் அவள் முகம் கழுவி வேறு சுரிதாருக்கு மாறியிருந்தது உதயனுக்கு மகிழ்ச்சி அளித்தது.

ஏதோ, அவனுக்காக அவள் தன்னை அலங்கரித்துக் கொண்டதுபோல, ஒரு நினைப்பு, அதனால் மனதில் ஒரு துள்ளல்.

[illegible] இருந்தது.

அதை, அவன் சொன்ன போது, ''சமையல்கார அம்மாளிடம் சொல்கிறேன்.'' என்று குறுநகை செய்தாள் அவள். அவர்கள் கைப் பாகம்தான் இந்த டீ! 'போற்றலோ, தூற்றலோ போகட்டும் கண்ணனுக்கே' என்பார்களே, அதுபோல உங்கள் புகழ்ச்சியும் அவர்களுக்கேதான் உரியது!''

அவளது கண்ணின் சிரிப்பு உதயனின் ஐஸ் வைப்பு முயற்சியைக் கண்டுகொண்டதைப் பறை சாற்றியது.

அவனும் உடனேயே, ''இப்படித் தெரிந்திருந்தால், நன்றாகத் திட்டியிருப்பேனே! அவசரமாகத் தயாரித்து வந்தவர்களின் மனம் வருத்தப் பட்டுவிடக் கூடாதே என்றல்லவா, புகழ்ந்தேன்!'' என்று சமாளிக்கவும் சிறு கவலையுடன், ''டீ சகிக்கவில்லையா சார்?'' என்று விசாரித்தாள் அவள்.

''போகிறது போற்றலைப் போலத் தூற்றலும் அந்த அம்மையாருக்கு உரியதுதானே? உங்களைச் சாராதவரை விட்டுத் தள்ளுங்கள்.'' என்றான் அவன்.

''அதில்லை சார், உதவி செய்தவர் கஷ்டப்பட்டு நன்றாயில்லாததைக் குடிப்பானேன்? காஃப்பி வாங்கி வரட்டுமா?'' என்று கேட்டபோது அவள் குரலில் அக்கறை தெரிந்தது.

புருவம் உயர்த்தி, ''காஃபி இதைவிட மோசமாக இருந்தால்? அதைவிட இதையே குடித்துவிடுவது மேல்!'' என்று கடைசி மடக்கைக் குடித்துவிட்டுக் காலி கப்பை வைத்தான் அவன்.

கப்பை எட்டிப் பார்த்தவள் கலீர் என்று நகைத்தாள்.



கூடவே தொடர்ந்து, ''ஒட்ட ஒட்ட அடிமண்டி தவிர அவ்வளவையும் குடித்துவிட்டுக் குறையா சொல்லுகிறீர்கள்? ஓர் உண்மையைச் சொல்லட்டுமா? டீ நானே போட்டதுதான். சமையல்காரம்மாள் தலையில் எண்ணை தேய்த்துக் கொண்டிருந்தார்கள். அவசரம் என்றதும் நீயே போட்டுக் கொள் என்று சொல்லி விட்டார்கள். தண்ணீரைக் கொதிக்கப் போட்டுவிட்டு துணிமாற்றிவிட்டு வந்து அவர்கள் சொல்லச் சொல்ல அதே மாதிரி செய்து எடுத்து வந்தேன். அதனால்தான், புகழ் இகழ் இரண்டிற்கும் அவர்களே உரியவர்கள் என்றேன்'' என்று கலகலப்பாகப் பேசினாள் மதுரிமா.

என்னவோ பெரிதாகச் சிரிப்பு வந்தது உதயசந்திரனுக்கு!

பொதுவாகப் பெண்களுடன் பேச, உதயனுக்கு விஷயம் தேட வேண்டியிருக்கும்! ஆனால், மதுரிமாவுடன் பேச்சு இயல்பாக வந்தது. வேலை பார்க்கும் பெண்கள் தங்கும் விடுதியின் சட்ட திட்டங்களிலிருந்து ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்குத் தாவி செருப்புக்குப் போய் சினிமாவை அலசி... என்று இருவருமாக என்னென்னவோ பேசினார்கள்!

பலவற்றில் இருவருக்கும் இருந்த ஒத்த கருத்து, இருவரையுமே வியப்படையச் செய்தது!

வேறுபாடும் இருக்கத்தான் செய்தது. ஆனால் அதைப் பெரிது படுத்திக் கொள்ள இருவருக்குமே பிடிக்கவில்லை. எனவே பேச்சு இலகுவாகச் சென்றது.

வைரம் பதித்த கழுத்தாரம் போல, அங்கங்கே சிரிப்பு விரவிய உரையாடல்!

நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருந் தவர்களுக்கு மற்ற பெண்களும் வரத் தொடங்கிய பிறகுதான் சுற்றுப் புறம் நினைவுக்கு வந்தது.

முதலாவதாக வந்தவள் நின்று உதயசந்திரனை வெறித்துப் பார்த்துவிட்டு போனாள்.

அடுத்தவள் வந்து ஓரக் கண்ணால் நோக்கியதும், உதயன் தானாகவே எழுந்து விட்டான்.

தன் 'விசிட்டிங்கார்ட்' ஒன்றை எடுத்துக் கொடுத்தவன் அவன் தங்கியிருந்த ஹோட்டலின் பெயர், அறை விவரங்களைத் தெரிவித்துவிட்டு தேவைப்பட்டால், தொடர்பு கொள்ளுமாறு கூறி விடை பெற்றுச் சென்றான்.

தேவைப்பட்டால்... என்ன தேவை ஏற்படக் கூடும்?

மதுரிமா, டெலிஃபோன் பண்ணவில்லை.

பிகு பண்ணி, அவனது ஆவலைத் தூண்டியிருக்கிறாள் என்பது பிற்பாடு, அவன் ஊகித்து அறிந்தது!

ஆனால், அன்றைக்கு ஆவலை அடக்க மாட்டாமல் அவளைச் சந்தித்த இடத்தில் காருடன் சென்று நின்றான்.

அவளது முகத்தில் பூரிப்பைக் காணவும் மேலும் அசடனாய் அகமகிழ்ந்து போனான்.

அன்றும் இருவரும் பேசினார்கள்.

மறுநாளும், அதற்கு மறுநாளும்.

பத்தே நாட்களில் இருவருக்குமே தாங்கள் ஒருவருக்கொருவர் என்பது உறுதிப்பட்டுப் போயிற்று.

அவனுக்கு அப்படித்தான் இருந்தது.



அவளும் அப்படித்தான் சொன்னாள்! அவள் சொன்னதை அன்று அவனும் நம்பினான்.

இருவரும் திருமணத்தைப் பற்றி யோசித்தனர்.

தன் வீட்டில் தடை இராது என்றாள் மதுரிமா.

அவளுடைய பெற்றோரே வீட்டை எதிர்த்துக் காதல் திருமணம் செய்தவர்களாம்.

அவளுடைய அண்ணன், தாய் தந்தையரின் நேர் வாரிசு காதலித்துத் திருமணம் செய்து கொண்டு மனைவியோடு ஆஸ்திரேலியாவுக்குச் சென்று விட்டான்.

ஆனால் ஒன்று. அவனுக்கு அவனுடைய பெற்றோரின் ஆசி இருந்தது. உதவும் கூட.

அந்த உதவிக்கு நன்றிக் கடன் போல, ஐந்தாண்டு ஒப்பந்தமாக தந்தைக்கும் ஒரு வேலை ஏற்பாடு செய்து பெற்றோரையும் அங்கேயே அழைத்துக் கொண்டான்.

மதுரிமாவுக்குக் கடைசி ஆண்டுப் படிப்பு என்பதால் கல்லூரி ஹாஸ்டலிலேயே தங்கிப் படித்து முடித்தாள். காம்பஸ் செலக்ஷனில் ஓரளவு நல்ல வேலையும் கிடைக்கவும், அங்கேயே தங்கிவிட்டாள்.

எப்படியும் இன்னும் நாலு ஆண்டுகளில் பெற்றோரும் திரும்பி வர வேண்டியவர்கள்தானே? அப்படி வந்த பின் வேலை தேடுவதைக் காட்டிலும் கிடைத்த வேலையைப் பற்றிக்கொள்வது நல்லது என்று மதுரிமா மட்டும் அங்கேயே தங்கிவிட்டாள்.

''தங்கியது நல்லதாகிவிட்டது பார்த்தீர்களா?'' என்று கடைக்கண்ணால் பார்த்து சிரித்தாள் அவள்.

''அப்படித்தான் தோன்றுகிறது'' என்று அவள் கன்னத்தை வருடினான் உதயசந்திரன். ''ஆனால் நாம் இப்போது அதைப்பற்றியோ பேசிக் கொண்டிருக் கிறோம்? ம், முக்கியமான விஷயம் பேசிக்கொண்டிருக் கும்போது வேறு பேசிக் கவனத்தைக் கலைக்கிறாயே! அப்படியானால் உன் வகையில் நம் திருமணத்துக்கு எதிர்ப்பு இராது சரிதானே?''

''ஆமாம்! துரை வீட்டில் எப்படியோ?''

''நிச்சயமாக அனுமதி கிடைக்காது! என்றான் அவன்.

''உதி!'' என்று திகைத்து கவலையோடு அவனைப் பார்த்தாள் அவள்!

அப்போதுதான் அவனுக்கு அந்த ஐடியா தோன்றியது!




'இந்தப் பெண்ணைக் காதலிக்கிறேன். அவளைத் திருமணம் செய்துகொள்ள அனுமதி தாருங்கள்' என்று கேட்டால்தானே முடியாது அது இதென்று குதிப்பார்கள்.

அவளைத் திருமணமே செய்து கொண்டுவிட்டேன் என்று போய் நின்றால்?

அதிர்ச்சியாகத்தான் இருக்கும்! ஆத்திரமும் வரும்தான். அவமதிப்பாகவும் எடுத்துக் கொள்ளலாம்.. நிச்சயமாக, அப்படித்தான் எண்ணத் தோன்றும்! சொல்லப்போனால், அவனுடைய பெற்றோர் மட்டும் இவ்வளவு தீவிரமான



காதல் விரோதிகளாக இல்லாவிட்டால் உதயசந்திரன் இப்படி ஒரு வழியை நினைத்துக்கூடப் பார்த்திருக்க மாட்டானே!

ஆனால், இப்போது அது தவிர இந்தத் திருமணத்துக்கு வேறு வழியிருப்பதாகவே உதயனுக்குத் தோன்றவில்லை.

இப்போது அதிர்ச்சியாக இருக்கக்கூடும்.

'கூடும்' என்ன? நிச்சயமாகப் பெரும் அதிர்ச்சியாகத்தான் இருக்கும்! ஆனால் திருமணத்தைத் தடுப்பதற்கான முயற்சிகளில் ஈன்றவர்களால் ஈடுபட முடியாது.

சொத்தில் நயாபைசா தர மாட்டேன் என்று இப்போதும் சொல்ல முடியும்தான். ஆனால், ''எங்களை மீறிக் கல்யாணம் நடந்தால் செத்து விடுவோம்,'' 'அப்படி, இப்படி, என்று மிரட்ட முடியாது. மிரட்டிப் பணிய வைக்கவும் முடியாது!

நடந்து முடிந்த ஒன்றை நடக்க விடாமல் எப்படித் தடுக்க முடியும்? திருமணம் நடந்தது நடந்ததுதானே?

தொழில் விஷயமாக ராகவன் ஒன்று சொல்லுவார். 'நமக்குப் பிடிக்கிறதோ, இல்லையோ. இது இப்படித்தான் இருக்கும் என்றால் அதற்கேற்றப்படி நாம் வளைந்து கொடுத்துத்தான் ஆக வேண்டும்' என்பார்.

ஒழுங்காக நடக்கும்போதே சிலரைக் கவனிக்க நேரும்போது தொடக்க நாட்களில் கொதித்த மகனை ஆறுதல்படுத்த இப்படிக் கூறுவார். கூறிக் கொடுக்கவும் வைப்பர்.

அதனால், மற்ற முடியாததை அவர் ஏற்றுக் கொள்வார் என்பது உதயனின் கணிப்பு.

மதுரிமாவிடம் சொன்னபோது திருமணம் எப்படியும் நடக்கும் என்பதில் அவளுக்கு மகிழ்ச்சிதான். ஆனால், உதயனுடைய பெற்றோர் அனுமதியோடு நடந்தால் நன்றாயிருக்கும் என்றிருந்தது அவளுக்கு.

அவளுடைய பெற்றோர்தான் வர முடியாது. அவனைப் பெற்றவர்களாவது இருக்க வேண்டாமா என்பது அவளுக்கு.

அதற்குப் பார்த்தால் திருமணம் நடக்காமல் போய்விடலாம் என்ற பிறகு, அவள் மேலே பேசவில்லை!

உதயன் திருமண ஏற்பாடுகளைத் தொடங்கினான்.

இடையிடையே சென்னைக்குச் சென்று வந்த போதும் காதல் கல்யாணம் பற்றியெல்லாம் அவன் அங்கே வாயே திறக்கவில்லை!

மதுரிமா, ஒரு தரம் ஆஸ்திரேலியாவுக்கு டெலிஃபோன் செய்து பேசினாள்.

விஷயம் அறிந்தபோது தாய் தந்தை இருவருமே திகைத்ததாகவும் நன்கு யோசித்து முடிவு செய்யச் சொன்னதாகவும் அவனிடம் கூறினாள்.

இருவருமாகவும் ஒருமுறை அவள் பெற்றோருடன் பேசினர்.

'மது கொஞ்சம் படபடவென்று பேசுவாளே தவிர, மிகவும் நல்ல பெண்' என்று பெற்றோருக்கே உரிய முறையில் கூறிவிட்டு, ''நாம் பாராமல் நம் மகளுக்கு திருமணமா என்று இருக்கிறது. ஆனால், ஒப்பந்தத்தை உடைத்து நாங்கள் அங்கே வருவதும் முடியாத காரியம்.



அதே சமயம் எங்கள் வரவுக்காக இன்னும் நாலு ஆண்டுகள் திருமணத்தைத் தள்ளிப் போடுங்கள் என்பதும் சரியல்ல. அத்தோடு எங்கள் மருமகளுக்கு வேறு இது பிரசவ சமயம். எனவே, நீங்கள் நல்லபடியாக நடத்துங்கள். எங்கள் ஆசி உங்களுக்கு எப்போதும் உண்டு.'' என்று ஆசீர்வாதத்துடன் பேச்சை முடித்துக் கொண்டனர்.

எவ்வளவு உணர்ந்து நடந்து கொள்கிறார்கள்! என்று உதயசந்திரன் அப்போது நினைத்தான்.

ஆனால், இவை எல்லாமே நாடகத்தின் ஒவ்வொரு பகுதிகள் என்று பிறகுதான் அவனுக்கே தெரிந்தது.

அவர்கள் மெய்யாகவே மதுரிமாவுடைய தாய், தந்தைதானா என்பதில்கூட பிற்பாடு அவனுக்கு ஐயம் உண்டாயிற்று!

இன்று வரை அந்த ஐயம் மறையவே இல்லை!

அதைத் தெளிவு படுத்திக் கொள்ள வழியும் இல்லை!

மூன்றாண்டு காலத்துக்கு முந்தைய முட்டாள் தனத்துக்காகவும் அதை இப்போதும் எண்ணி மனம் உளைவதற்காகவும், தன்னையே நொந்து கொண்டபடி உதயசந்திரன் நடப்புக்குத் திரும்பினான்.

வெளியே, காலை மாற்றி மாற்றி நின்று கொண்டிருந்த ஆபீஸ் பையனை அழைத்து, கதவைப் பூட்டச் சொல்லிச் சாவியை வாங்கிக் கொண்டு கிளம்பினான்.

தூக்கி வந்த கைப்பெட்டியை, டிரைவரிடம் கொடுத்துவிட்டு ஆபீஸ் பையன் விடை பெற்றுச் சென்றுவிட டிரைவர் கார் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு பவ்யமாக நின்றான்.

கார் கிளம்பியதும், உதயனின் மனம் மீண்டும் பழைய வாழ்வை நினைத்து அலை பாய்ந்தது.

மெய்யாகவே ஒரு மகளின் திருமணத்தை இவ்வளவு சாதாரணமாக விட்டுவிட, உண்மையான பெற்றோர் களால் முடியுமா?

தங்கை கல்யாணத்தின்போது மாப்பிள்ளை எப்படி மாமியார் எப்படி என்று தாயார் திரும்பத் திரும்பக் கவலைப்பட்டது நினைவு வந்தது. தொழில் பற்றித் தந்தை!

இவர்கள் ஒன்றுமே கேட்கவில்லையே!

மகள் பிடித்திருப்பது புளியங்கொம்பு என்பதே போதுமானதாகிவிட்டது போலும்!

ஆனால், அப்போது இப்படியெல்லாம் உதயனுக்கு எண்ணத் தோன்றவில்லை. ஏதோ மதுரிமாவுடைய பெற்றோராவது ஆதரவாக இருக்கிறார்களே என்று மகிழ்ச்சியாகத்தான் இருந்தது! அவனைப் பெற்றவர்கள் இப்படி இல்லையே என்று கொஞ்சம் குறையாகவும் இருந்ததால் முடிந்தவரை, அது பற்றி நினையாதிருக்கவே முயன்றான். அப்படியே இருக்கவும் செய்தான்.

மணமுடித்து அடுத்த இரு வாரங்களும் எப்படிப் பறந்தன என்பதே இருவருக்கும் ரியவில்லை. சென்னைக்குச் செல்லவேண்டிய நாள் வந்தபோது முதலில், அதைத் தள்ளிப் போடத்தான் உதயன் எண்ணினான்.

ஆனால், எவ்வளவு நாள் தள்ளிப் போட்டாலும் பெற்றோரின் கோபத்தை ஒருநாள் எதிர் கொண்டுதான் ஆகவேண்டும்! என்ன என்ன என்று யோசித்துக் கொண்டிராமல் அதைச் சீக்கிரமாக முடித்துவிட்டால் என்ன என்று தோன்றவும், சென்னைப் பயணத்தைத் தள்ளிப் போடாமல் உடனே கிளம்பிவிட்டான்.



கூடவே, இவ்வளவு சந்தோஷமான வாழ்வைத் தாய், தந்தைக்குத் தெரியாமல் மறைத்து வாழ்வதும் அவனை உறுத்தத் தொடங்கியிருந்தது.

மதுரிமாவைப் பங்களூரிலேயே விட்டுவிட்டுத்தான் உதயன் சென்னைக்குச் சென்றான்.

விஷயம் அறியும்போது, அந்த அதிர்ச்சி கோபத்தில் மனைவியின் மனம் நோகும்படியாகப் பெற்றோர் ஏதேனும் சொல்லிவிடக் கூடாதே என்பது அவனுக்கு.

முதல் கோபத்தை அவன் ஏற்றுக் கொண்டால் அப்புறம் சீற்றம் குறைந்த பிறகு அவளை அழைத்துச் செல்லலாம் என்று அவன் எண்ணினான்.

மதுரிமாவுக்கு வேறுவிதமான கவலை!

மாமன், மாமியார் ஏதாவது சொல்ல கணவன் திருப்பிக் கொடுக்க பேச்சு மிகவும் தடித்துவிடக் கூடாதே என்று, அவள் கவலைப்பட்டாள். எனவே, பொறுமையோடு இருக்கும்படிக் கணவனிடம் மிகவும் கேட்டுக் கொண்டாள்.

''நான் ஒன்றும் ரொம்பப் பொறுமைசாலி அல்ல'' என்றான் அவன் சுருக்கமாக.

''பொறுத்துத்தான் ஆக வேண்டும்!'' என்றாள் அவள். ''இந்தக் காரெல்லாம் போய், பஸ்சுக்குக் கால் கடுக்க நிற்பதைக் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள், பொறுமை தானாக வந்துவிடும். அத்தோடு ஹைய்யோ எவ்வளவு

பணம்! சும்மா, அதைப் போய் வீணடிப்பானேன்? அவர்கள் என்ன சொன்னாலும் வாயை மூடிக்கொண்டு கேட்டுக் கொண்டு இருந்துவிட்டு வாருங்கள்.'' என்று அறிவுரை கூறிக் கணவனை அனுப்பி வைத்தாள் அவள்.

அவள் சிரித்துக்கொண்டே கண் சிமிட்டிச் சொன்ன விதத்தில், பண விஷயம் வெறும் வேடிக்கைப் பேச்சு என்றுதான், உதயசந்திரன், அப்போது நினைத்தான்.

கூடச் சேர்ந்து சிரித்தபடி, ''கூடச் சேர்ந்து நீயும் தானே நிற்பாய்? உன்னோடு ஒட்டி உரசி நிற்கும்போது காலாவது கடுப்பதாவது?, மது அந்த சுகம் அனுபவிப்பதற்காக இன்று ஒருதரம் பஸ்சில் சென்று வருவோமா? ப்ளீஸ்டா?'' என்று அவன் கொஞ்ச வேறு செய்தானே!

''சுகமா?'' என்று அவன் வாயைப் பொத்தி, ''சொல்லாதீர்கள். அந்த மாதிரி நிலைமை உங்களுக்கு ஒரு காலத்திலும் வரவே கூடாது!'' என்று மதுரிமா அவனை அணைத்துக் கொண்ட போதும், மனைவி தனக்காகத்தான் பார்க்கிறாள் என்று எண்ணினானே தவிர, அவளது சொந்த சுகத்துக்காகச் சொன்னாள் என்று அவன் நினைக்கவே இல்லையே!

அதையெல்லாம் அவன் அறிந்து கொண்டது அப்புறம்தானே!

தந்தை, தாய் விஷயம் உதயன் எதிர்பார்த்தது போலத்தான் நடந்தது.

முதலில் ரொம்பவுமே ஆத்திரப்பட்டார்கள். ''நாங்களெல்லாம் இருக்கிறோம் என்று நினைத்தாயா அல்லது செத்துவிட்டோம் என்று முடிவு கட்டி இந்தக் காரியம் செய்தாயா?'' என்று கூட ராகவன் கேட்டார்.



'என்ன இப்படிப் பேசுகிறீர்கள்? நான் என்ன காரண காரியம் தெரியாத முட்டாளா? மூன்று ஆண்டுகளாக, உங்களுக்கு நல்லபடியாகத் தொழிலை நடத்திக் காட்டவில்லை?' என்று கேட்கத் துடித்த நாவைக் கட்டுப்படுத்திக் கொண்டு உதயசந்திரன் பேசாமலே நின்றான்.

மனைவி பொறுமை காக்கச் சொன்னது பசுமரத்தாணியாக மனதில் பதிந்திருந்ததே! அவள் அவ்வளவு சொன்ன பிறகு தன் பேச்சால் பிளவு ஏற்படக் கூடாது என்பதில் உதயன் உறுதியாக இருந்தான்.

சற்றுப் பொறுத்து, தானாகவே இறங்கி வந்து ''ஏண்டா இப்படிச் செய்தாய்? ஒரு வார்த்தை எங்களிடமும் கேட்டிருக்கலாமல்லவா?'' என்று கேட்டார் தந்தை.

''கேட்டால் கூடாது என்பீர்களே அப்பா? அப்படி நீங்கள் சொல்லி அதை நான் மீற வேண்டாம் என்று நினைத்தேன்'' என்று மகன் பணிவாகக் கூறவும் ராகவனுக்குச் சிரிப்பு கூட வந்து விட்டது.

லேசாக முறுவலித்து, ''சொல்லி மீறுவதை விடச் சொல்லாமலே தப்புப் பண்ணிவிடலாம் என்று எண்ணினாயாக்கும்?'' என்று ஏளனமும் கிண்டலுமாகக் கேட்டார் அவர்.

''தப்பு இல்லையப்பா!'' என்று மகன், சலுகை கலந்த குரலில், ''மதுரிமா மிகவும் நல்ல பெண். நீங்கள் மட்டும் காதலை இந்த அளவு வெறுக்காதவராக இருந்திருந்தால் கட்டாயமாக உங்கள் முன்னிலையில்தான் இந்தக் கல்யாணம் நடந்திருக்கும் தெரியுமா? மதுவுக்கு கூட அதுதான் ஆசை! ஆனால் ஏன் ஏது என்று கேளாமலே

மறுத்து விடுவீர்களோ என்றுதான் இப்படிச் செய்யும்படி ஆயிற்று'' என்று விளக்கினான்.

''ம்ம்ம்...'' என்று யோசனையோடு மகனைப் பார்த்தார் ராகவன். பிறகு ''என்ன ஏது என்று நான் கேட்பது இருக்கட்டும். அதெல்லாம் நீ தெரிந்து கொண்டாயா? அவள் யார் அவளுடைய பெற்றோர் உற்றார், உறவினர்.. குடும்பத்தார் எப்படிப்பட்டவர்கள் என்று எதையாவது தெரிந்து கொண்டு, அதன் பின் தாலி கட்டினாயா? அல்லது 'கண்ணொடு கண்' நோக்கியதே போதும் என்று, அவளிடம் சரணாகதி அடைந்து விட்டாயா?'' என்று கேட்டபோது அவர் குரலில் ஏளனம் முழுதாக மறைந்திருக்கவில்லை.

''அப்படியெல்லாம் இல்லைப்பா. மதுவைப் பற்றி முழு விவரமும் எனக்குத் தெரியும். அவள் அப்பா ஆஸ்திரேலியாவில்...'' என்று உதயன் தொடங்கியபோது, ''சற்றுப் பொறு...'' என்று அவனைத் தடுத்து நிறுத்தினார் அவர். ''முதலில் குளித்து எதையாவது சாப்பிட்டு விட்டு வா. நீ பட்டினியாக இதுவரை இருந்ததே உன் அம்மாவுக்கு வருத்தமாக இருக்கும். சாப்பிட்ட பிறகு நிதானமாக மற்ற விவரம் சொல்லு.'' என்று பணித்தார்.

எண்ணி வந்தபடியே காரியம் நிறைவேறியதில் உற்சாகம் அடைந்தவனாக உதயன் குளிக்கச் சென்றான்.

மகனுடன் கூடவே வந்த சாவித்ரி, ''மருமகள் எப்படியடா? பார்க்க நன்றாயிருப்பாளா?'' என்று விசாரித்தாள்.

பைக்குள் வைத்திருந்த மதுரிமாவின் படத்தை எடுத்துக் கொடுத்துவிட்டு, விசிலடித்தபடியே குளிக்கப் போனான் உதயசந்திரன்.



குளித்துச் சாப்பிட்டு முடித்து வந்தபோது தந்தை தாய் இருவர் முகத்திலும் புன்னகையைக் காணவும் உதயனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

இறுமாப்பாகவும்! அவனுடைய மதுரிமாவை யாருக்குப் பிடிக்காமல் போக முடியும்?

அவளது நேர்ப்பார்வையும் குறும்புப் புன்னகையுமே போதுமே!

உள்ளம் துள்ள உட்கார்ந்தவனிடம், ''மற்றது எப்படியோ? காரியத்தைச் சாதிப்பதில் நீ கெட்டிக்காரன் தான். நீ ஊகித்தது போலவே, முதலிலேயே கேட்டிருந்தால் நாங்கள் மறுத்துத் தான் இருப்போம். இப்போது மணமும் நடந்துவிட்டது நாங்களும் வேறு வழியில்லாமல், அதை ஏற்றுக்கொண்டு விட்டோம், பார்'' என்று மகனைச் சிலாகித்த ராகவன், மதுரிமாவுடைய குடும்பத்தைப் பற்றி விசாரித்தார்.

அப்போதுதான், அங்கே பூகம்பம் வெடித்தது. எல்லாம் கெட்டுப் போயிற்று!



மதுரிமாவைப் பற்றிய விவரங்களைப் பெற்றவர் மகனிடம் சொல்லத் தொடங்கியபோது, உதயசந்திரனுக்கு உள்ளூரக் கொஞ்சம் பெருமைதான்.

மற்றவரைப் போல காதலி பெயரைத் தவிர, ஒன்றும் தெரியாத அளவுக்கு மயக்கத்தில் இருக்க

வில்லையே! அவளுடைய தாத்தாக்களின் பேர், ஊர் எல்லாம் தெரிந்து வைத்திருக்கிறானே!

சொல்லப்போனால் அவர்களைப் பற்றியெல்லாம் பேச, மதுவுக்கு விருப்பம் கிடையாதுதான். காதல் திருமணம் புரிந்தது ஏதோ மகாப் பாவம் போல, குடும்பத்தை விட்டு விலக்கிவிட்ட இருவழி மூத்தோர் மேலும் அவளுக்கு மிகுந்த கோபம். எனவே அவர்களைப் பற்றி பேசவே அவளுக்குப் பிடிக்காது!

ஆனால், தந்தையின் குணம் தெரிந்திருந்ததால் அவர் இந்த விவரங்களை அறிய விரும்புவார் என்று ஊகித்து, உதயன் மனைவியிடம் இதையெல்லாம் கேட்டு வைத்திருக்கிறான். எனவே, அந்த விவரங்களை இப்போது தந்தையிடம் எடுத்து விடுவதில் அவனுக்கு ஒரு சிரமமும் இருக்கவில்லை.

பெருமையுடன் அவன் கூறியதைக் கேட்டிருந்த ராகவன் சற்று நேரம் ஒன்றுமே பேசவில்லை.

பிறகு, ''இங்கிருந்து பங்களூர் வரை சென்று, இருந்திருந்து நீயும் இந்த குழியில்தானா விழ வேண்டும்?'' என்றார் கசந்த குரலில்!

''என்னப்பா சொல்லுகிறீர்கள்? என்று திகைத்தான் மகன்.

''வேறென்ன, உன் சித்தப்பனை நாசம் செய்த அதே குடும்பத்திடம்தான் நீயும் சிக்கியிருக்கிறாய்'' என்று அவர் கூறவும் உதயசந்திரன் மேலும் திகைத்தான்.

''அப்பா..!''

'உச்சு'க் கொட்டிவிட்டு அவர் பேசாதிருக்க, ''அப்பா சொல்வது சரிதான், உதயா. செங்கல்பட்டிலிருந்து வந்து



வில்லிவாக்கத்தில் வசித்ததாகச் சொன்னாயே, அந்த வேதமூர்த்தியுடைய மகள்தான் உன் சித்தப்பாவின் வாழ்வை அழித்தவள். அவள் உன் மதுரிமாவுடைய தாயாக அல்லது தாயுடன் பிறந்தவளாக இருக்க வேண்டும்'' என்று கவலையோடு சாவித்ரி கூறினாள்.

''நம்ப முடியவில்லையே, அம்மா!'' என்று குழம்பினான் பிள்ளை.

''இதுவும் பழைய வசனம்தான். ரகுவும் இப்படித்தான் திரும்பத் திரும்ப சொன்னான்.''

''ஆமாம், கண்ணா. ரகுத் தம்பியை ஏமாற்றிய அந்தப் பெண்ணின் பெயர்கூட சு...சு... ஏதோ 'சு'வில் தொடங்கும்'' என்றார் தாயார். ''மதுரிமாவுடைய தாயார் பெயர் என்ன?''

''சுகுணா'' என்றான் மகன் மறத்த குரலில்.

''இருக்கலாம். சுகுணாவோ.. இல்லை, அது சுலேகா என்று நினைக்கிறேன்'' என்றாள் சாவித்ரி.

''மதுரிமாவுக்கு ஒரு பெரியம்மா உண்டு. அந்த அம்மாவின் பெயர் சுலோகாவாக இருக்கலாம்'' என்றான் உதயன் அவசரமாக.

''பெரியம்மாவோ, சித்தியோ அன்று அவளேதானோ! எல்லாமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்! வசதியுள்ள பையன்களை மயக்கி, வலை போட்டுப் பிடித்து, குடும்பத்திலிருந்து பிரித்து விடுவது! அந்தப் பெண் சுலோகா, ரகுவைக் குடும்பத்திலிருந்து பிரித்து அப்புறம் அவனது உயிர், உடலைக்கூடப் பிரித்து சாகடித்துவிட்டாள்! இந்த மதுரிமாவுடைய தாய், அவள்

தகப்பனைக் குடும்பத்திலிருந்து பிரித்துத்தானே மணந்து கொண்டிருக்கிறாள்? அடுத்து இந்த மடையன் தாலிகட்டி வைத்திருக்கிறானே. இந்தப் பெண்ணைப் பார்! இவளும் அதைத்தானே செய்திருக்கிறாள்?! இல்லாவிட்டால், இவன் இப்படிப்பட்ட பிள்ளையா? இப்படி நம்மை அலட்சியப்படுத்திவிட்டுக் கல்யாணம் செய்வானா?'' என்றார் தந்தை.

''மதுரிமா உங்களையெல்லாம் கூப்பிட வேண்டும் என்றுதான் சொன்னாளப்பா'' என்று மனைவிக்காக வக்காலத்து வாங்கினான் உதயன்.

''அதெல்லாம் சும்மா மாய்மாலம்! வாயால் வேண்டாம், வேண்டாம் என்று சொல்லிக்கொண்டே மறுபக்கம் சாவி கொடுப்பது!'' என்றார் ராகவன். ''வழிவழியாகக் குடும்பத்துப் பெண்கள் எல்லாருமே ஒரே ரகம்!'' என்றார் அழுத்தமான குரலில்.

இல்லையென்று கூற முடியவில்லை, அவனால்!

''அதைவிடு. எதிர்காலம் எவ்வளவோ நீண்டது. ஐம்பதோ, அறுபதோ ஆண்டு காலம் சேர்ந்து வாழ வேண்டும். அப்படி வாழப் போகிற உன்னிடம் அவள் ஒளிவுமறைவின்றி இருக்கவில்லையே! அவளுடைய பெரியம்மா கதையை அடியோட மறைத்திருக்கிறாளே! அவளுடைய பெரியம்மாவும் மாமனும் சேர்ந்து ரகுவை எப்படி வளைத்துப் பிடித்தார்கள் தெரியுமா? நாங்கள் யார் சொல்லியும் ரகு கேட்கவில்லை. சொத்தைப் பிரித்துத் தரச் சொல்லி, அப்பாவிடம் - உன் தாத்தாவிடம் மரியாதையின்றி எப்படிக் கத்தினான்? பிரித்துக்கொண்டு போன சொத்துக்களை அப்படியே உறிஞ்சுவிட்டுச்



சக்கையாக வெளியே விரட்டிவிட்டார்கள்! மடையன்! பேசாமல் வீட்டிற்குத் திரும்பி வந்திருக்கலாம். தவறே செய்யாத மகான்களாக எல்லா மனிதர்களும் இருக்க முடியுமா? பிள்ளையாவது திரும்பி வந்தான் என இருகை நீட்டி வரவேற்றிருப்போம். முட்டாள்! வருவதற்கு வெட்கி உயிரையே மாய்த்துக்கொண்டு விட்டான்!

''உன் சித்தப்பா கதையை இப்போது உனக்கு ஏன் சொன்னேன் தெரியுமா? அவனைப் போன்றதொரு நிலைமை உனக்கு ஏற்படும்போது அவனைப் போல அசட்டுக் கௌரவம் பார்த்துக்கொண்டு என்னமாவது அசட்டுத்தனம் பண்ணி வைக்காமல், நீ நல்லபடியாக வீட்டுக்கு உயிரோடு வந்து சேர வேண்டும்! அதற்காகத்தான்!'' என்றார் ராகவன் சலிப்பாக.

''நான் அந்த மாதிரி...'' என்று தொடங்கிவிட்டு, மாற்றி ''நீங்கள் என்னை அந்த மாதிரி வளர்க்கவில்லையே, அப்பா'' என்றான் மைந்தன்.

''என்னத்தை வளர்க்கவில்லை?'' என்றார் பெற்றவர் எரிச்சலாக, ''காதல் கண்ராவி எல்லாம் கூடாது, கூடாது என்று சொல்லிச் சொல்லித்தான் வளர்த்தோம். இப்போது கல்யாணமே பண்ணிக்கொண்டு வந்து நிற்கிறாயே. அதிலும் அதே குடும்பத்துப் பெண்ணை!'' என்றார் வெறுப்புடன்.

பதில் சொல்ல முடியாது வாயடைத்து நின்றான் மகன்.

கணவன், பிள்ளை இருவரையும் ஒருதரம் பார்த்து விட்டு, ''ஆனது ஆகிவிட்டது. இனி என்ன செய்வது என்று யோசியுங்கள்'' என்றாள் சாவித்ரி.

''என்ன செய்ய முடியும் என்கிறாய்? மாற்ற முடியாத முடிச்சையல்லவா போட்டுவிட்டு வந்திருக்கிறான்! அல்லது அந்தப் பெண்ணை விரட்டிவிடச் சொல்லலாம் என்கிறாயா? முடியுமா? அவள் எப்படிப்பட்டவள் என்றாலும் நமக்கு என்று ஒரு தரம் இருக்கிறதே, அப்படிச் சொல்ல முடியுமா?''

தந்தை படபடக்கும்போதே, அப்படியே பெற்றோர் சொன்னாலும்கூட, மதுரிமாவை அவனால் எப்படிவிட முடியும் என்று எண்ணினான் உதயன்.

நினைக்கவே முடியாத காரியம்! தந்தை சொன்ன குற்றங்களோடு அவளை நினைத்துப் பார்க்கவும் அவனால் முடியவில்லைதான்.

மதுவின் குடும்பம் அப்படி இருக்கலாம். 'லாம்' என்ன? அது அப்படித்தான் என்பது உண்மையே. ஆனால் மதுரிமா அதே போல மோசமானவளாக இருந்தாக வேண்டும் என்று என்ன கட்டாயம்?

அவள் சேற்றில் மலர்ந்த செந்தாமரையாக இருக்கலாமே!

தந்தை சொன்ன மாதிரி, அவள் தன் பெரியம்மா, மாமா பற்றிய விவரங்களை வேண்டும் என்று மறைத்திருக்கமாட்டாள். அவசியம் இல்லை என்றே அலட்சியப் படுத்தி இருப்பாள்!

ஆம். அப்படித்தான் இருக்கும்!

அவளுடைய உறவினர் பற்றிய முழு விவரங்கள் அவளுக்கே கூடத் தெரியாமலே இருக்கலாம். இப்போது கணவன் சொல்லி அந்த விவரங்களை அறிந்துகொண்டு



விட்டாளானால் அப்புறம் அவளே அவர்களைத் துறந்துவிடுவாள்!

ஆம், அதுதான் சரி.

அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று உதயசந்திரனுக்குத் தெரிந்துவிட்டது.

மற்றவர்களோடு மதுரிமாவுக்கே நெருக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. எப்படிப்பட்டவளாக இருப்பினும் பெற்ற தாயை துறப்பது கடினம்தான்! ஆனால் சேற்றின் தொடர்பை அடியோடு அறுத்துக்கொண்ட பிறகுதானே தாமரைஇறைவன் தாளை அடைகிறது.

உதயசந்திரன் கடவுள் அல்லதான். ஆனால், இந்தக் குடும்பம் என்கிற கோயிலுக்குள் ஒட்டியிருக்கும் சேற்றை அடியோடு கழுவாமல் தாமரையைக் கொண்டு வர முடியாது!

ராகவன் தம்பதிக்கு இந்தச் சேறு, செந்தாமரையை அவ்வளவாக ஒத்துக்கொள்ள முடியவில்லைதான். ஆயினும், மகனின் மனநிம்மதிக்காக அது பற்றி அதிகம் பேசாமல் விடுத்தார்கள். சஞ்சலம், சங்கடம் எது நேர்ந்தாலும் சிறிய தந்தை போலன்றி நேராகப் பெற்றவர்களிடம் வந்துவிட வேண்டும் என்ற வாக்குறுதியை மட்டும் பெற்றுக்கொண்டு அவனை மீண்டும் பங்களூருக்கு அனுப்பி வைத்தார்கள்.

பங்களூரை அடையும் வரையில், உதயசந்திரனுக்குச் சஞ்சலம் என்று பெரிதாக எதுவும் இல்லை.

பெற்றவர்களைத் துறப்பது கடினமே என்றாலும், நடந்தது அனைத்தையும் அறிந்த பின்னர், மதுரிமா

தானாகவே பிறந்த வீட்டை உதறிவிடுவாள் என்று உதயன் நிச்சயம் நம்பினான். ஏற்கனவே, இரண்டு ஆண்டுகளாகப் பெற்றோரைப் பிரிந்து இருந்து பழகிவிட்டதாலும் பெற்றோர் வழி உறவினருடன் அதிகத் தொடர்பு இல்லாததாலும் அது இலகுவாகவே இருக்கும் என்றும் அவன் எதிர்பார்த்தான்.

அந்தத் தொடர்பு அறுந்துவிட்டால், அதன்பின் மருமகளை ஏற்கத் தன் பெற்றோர்க்கு எந்தத் தடையும் இருக்காது! அப்புறம் வாழ்க்கையின் இனிமைக்குக் கேட்பானேன்?

ஏதேதோ கற்பனைகளுடன் பங்களூருக்கு வந்தவனுக்கு முதல் அதிர்ச்சி... 'அதிர்ச்சி' என்று பெரிதாக அதைச் சொல்ல முடியாது. சாதாரணமான நிலைமையில் அலட்சியமாக உச்சுக்கொட்டிவிட்டுப் போகக் கூடியதுதான். ஆனால், பெற்றோர் சொன்ன செய்திகளின் பாதிப்பால் இது கொஞ்சம் உறுத்தியது.

அவன் ஊரில் இல்லாதபோது நடுத்தர வயது மனிதர் ஒருவர் வந்து உதயனைப் பற்றி விசாரித்ததாக ஹோட்டல் வரவேற்பில் சொன்னார்கள். அறையைக் காலி செய்துவிட்டுப் போய்விட்டதாகக் கூறவும், மேலே ஒன்றும் கேளாமல் போய்விட்டதாகவும் தெரிவித்தார்கள்.

'லிஃப்ட் ஆபரேட்டர்' இன்னும் கொஞ்சம் சொன்னான்.

உதயனுக்கு என்ன தொழில், எப்படிச் செலவு செய்வான் என்றெல்லாம் நுணுக்கி, நுணுக்கிக் கேட்டதாகக் கூறினான்.



பேரரும் அதையே கூறினான். கூடவே அவன் எப்படி சாமர்த்தியமாக விசாரித்தவனின் பெயர் 'மோகன்' என்பதைக் கேட்டறிந்தான் என்பதையும் எடுத்துரைத்தான்.

பொதுவாக ஹோட்டல்களில் தங்கும்போது, அங்குள்ள பணியாட்களிடம் உதயன் சற்றுத் தாராளமாகவே நடந்து கொள்வான். அதன் பயனாக, அவர்கள் எல்லோருமே உதயனுக்குச் சாதகமாகவே நடந்து கொண்டிருந்தார்கள்.

யாரிந்த மோகன்?

தொழில் - அதுவும் வெற்றிகரமாக நடக்கும் தொழில் என்றால், தொழில்முறை உளவு நடப்பதுதான். அதே துறையில் சம்பாதிப்பவர்கள் அடுத்தவரின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதைத் தவிர்க்க முடியாது. கண்காணித்து போட்டித் தயாரிப்பாளர்கள் புதிதாக என்ன செய்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து அதற்குச் சரியாக அவரவரும் ஏதாவது செய்யாவிட்டால் தொழில் படுத்துவிடும். 'முப்பது ஆண்டுகளாக இதையே செய்கிறேன். இதையே செய்வேன்' என்றால் மற்றவர்கள் பத்தாவது மாடியில் உட்கார்ந்திருக்கும்போது இவர்கள் அடித்தளத்திலேயே நிற்க வேண்டியதாகிவிடும்!

எனவே, ஒருவன் தன்னைப் பற்றி விசாரித்தான் என்ற அளவில் உதயசந்திரன் அதைப் பெரிதாக நினைக்கவில்லை.

ஆனால், அந்த 'மோகன்' என்ற பெயர்தான் அவனை உறுத்தியது.

மதுரிமாவின் தாய் மாமனின் பெயரும் அதுதான் அல்லவா?

அந்த ஆள், அவளைப் பற்றி அறிய வந்தது ஏன்?

யோசித்துவிட்டு, இது வெறும் 'காக்கை' உட்காரப் பனம்பழம் விழுந்த கதையாகத்தான் இருக்கும் என்ற முடிவுக்கு உதயசந்திரன் வந்தான்.

அந்த உளவாளியின் பெயரும் மோகனாக இருக்க வேண்டும்! அல்லது தன்னை மறைத்து அவன் சொன்ன பொய்ப் பெயர் அதுவாக அமைந்திருக்கவேண்டும்.

அந்த மோகனைப் பற்றிய எண்ணங்களை ஒருவாறு ஒதுக்கிவிட்டு உதயன் மனைவியை அழைத்து வரச் சென்றான்.

உதயசந்திரன் பங்களூருக்குச் செல்லும் ஒவ்வொரு முறையும் அவன் தங்குவது இதே ஹோட்டலில்தான். பிரச்சினையற்ற விருந்தாளி என்பதாலும், பிற்பாடு ஒரு பெரிய வாடிக்கையாளன் ஆகக் கூடும் என்பதாலும் ஹோட்டல் நிரம்பி வழியும் நேரத்திலும் நிர்வாகத்தின் தனி அறைகளில் ஒன்றையேனும் அவனுக்குக் கொடுத்து விடுவார்கள்.

திருமணத்துக்குக் சாட்சிக் கையெழுத்துப் போட ஹோட்டல் நிர்வாகியைத்தான் உதயன் அழைத்திருந்தான்.

அப்படியிருந்தும் கணவன் ஊரில் இல்லாதபோது தனியே அங்கே தங்க விரும்பாமல் மதுரிமா தன் விடுதிக்கே திரும்பிச் சென்றிருந்தாள்.

விடுதிக்குச் சென்றால் அங்கே மற்ற பெண்கள் காதலர்கள் என்று எண்ணிக் கேலிச் செய்வார்கள். அந்தப்



பேச்சை ஏற்கும் மனநிலை இல்லாததால் உதயன் மதுரிமாவின் அலுவலகத்திற்கே சென்றான்.

அலுவல் நேரம் முடியும்வரை வெளியே காரிலேயே காத்திருந்தவனுக்கு அவள் ஓர் இளைஞனுடன் சிரித்துப் பேசியவாறு வந்தது மனதை உறுத்தியது. குடும்பக் குணமோ என்று சட்டெனத் தோன்றிவிட்டது!

ஆனால், அதற்காக அவன் உடனேயே தன்னைத்தானே கடிந்தும் கொண்டான்.

மதுரிமாவுடன் வேலை பார்ப்பவனாக இருக்கலாம். அவனோடு சிரித்துப் பேசுவதில் பெரிய தப்பு என்று என்ன இருக்கிறது? சென்னைக்குச் செல்லும் வரை அவள் யாரிடம் பேசியதையும் அவன் குற்றமாகக் கருதியதே இல்லையே! இன்று மட்டும் என்ன என்று புத்தியைத் திருத்திக்கொண்ட போதும் அவள் தனியாகவோ, ஒரு பெண்ணுடன் பேசிக்கொண்டோ வந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும் என்று எண்ணாதிருக்கவும் அவனால் முடியவில்லை!

காரைக் கண்டுவிட்டு மதுரிமா அவனிடம் ஓடி வந்தாள்.

''உதீ!'' என்று உற்சாகத்துடன் கூவியவள் அவனது சற்று இறுகிய 'ஹல்லோ'வில் நிதானித்தாள்.

காரில் ஏறி, அருகே அமர்ந்து கணவன் முகத்தைப் பார்த்தாள்.

கிண்டல் போல ''என்ன? சொத்து பத்தெல்லாம் ஒன்றுமே உங்களுக்குக் கிடையாது என்றுவிட்டார்களா?'' என்று வினவிக் கண்சிமிட்டினாள்.

சொத்து! இவளுக்கு முதலில் தோன்றுவது இதுதானா?

மனம் கசந்து போயிற்று உதயனுக்கு.




ஒருவார்த்தை, 'பயணம் சுகமாக இருந்ததா?', 'உங்கள் பெற்றோர் நலமா?' என்கிற வகையில் மதுரிமா கேட்டிருந்தால்... கேட்டுவிட்டு அதன் பிறகு பணத்தைப் பற்றிப் பேசியிருந்தால் கூட, உதயசந்திரனுக்கு மனம் ஆறியிருக்கும். ஆனால் அவளுக்கு அந்த நாகரிகம் கூடப் பார்க்கத் தோன்றவில்லையே. காசு, பணத்தின் மீதுள்ள ஆசை வேறெதையும் நினைக்க விடவில்லையே!

சட்டென மனம் கசந்து, ''உனக்கு அதுதான் முக்கியமா?'' என்றான் அவன்.

''பின்னே?'' என்றாள் அவள் விளையாட்டு போலவே. ''இந்தக் கார், பங்களாவுக்காகத்தானே நான் உங்களை மணந்ததே!'' என்று ஓரக் கண்ணால் அவனைப் பார்த்தாள். ''சொல்லுங்கள் என்ன ஆயிற்று?''

சில வினாடி பேசாதிருந்துவிட்டு ''உன் பெரியம்மா, மாமா எல்லோரும் இப்போது எங்கிருக்கிறார்கள், என்ன செய்கிறார்கள்?'' என்று விசாரித்தான் உதயன்.

விழி மலர நோக்கிவிட்டு, ''எதற்கு இந்த விவரம்? புதிதாகக் கல்யாணப் பத்திரிகை அச்சடிக்கப் போகிறீர்களா? அதில் நல்வரவை ஆவலுடன் விரும்பும் வரிசையில் போட வேண்டுமா?'' என்று நகைத்தாள் மதுரிமா.



உதயசந்திரன் கூடச் சேர்ந்து சிரிக்கவில்லை. மாறாக ''ஒரு சாதாரண விவரம் அதைச் சொல்ல ஏன் இந்தத் தயக்கம்? ஒரு வேளை சொல்லத் தகாததாக ஏதும் இருக்கிறதா?'' என்று சற்று ஏளனமான குரலில் கேட்டான்.

''அப்படித்தான் என்று என்ன? நம் வாழ்க்கைக்கு அது அவசியமற்றதாகவும் இருக்கலாமில்லையா? அவசியம் இல்லாததைப் போய் ஏன் வீணாக அலசிக் கொண்டிருக்க வேண்டும்?'' என்று தர்க்கம் செய்தாள் அவள்.

குதர்க்கமாகத் தோன்றியது அவனுக்கு.

உண்மையைச் சொன்னால் விபரீதம் ஆகிவிடக் கூடும் என்று மனைவி மறைப்பதாகத்தான் உதயன் எண்ணினான்.

சொந்தத் தாய்மாமனும், பெரியம்மாவும் வாழ்க்கைக்கு அவசியம் இல்லையாமே!

ஒரு வகையில் அது சரிதான். கணவன், மனைவி என்று பார்க்கும்போது இருவருடைய பெற்றோர்கூட அடுத்தவர்கள்தான்.

ஆனால், அதற்காக அவர்கள் வாழ்க்கைக்கே அவசியம் அற்றவர்கள் என்று எப்படிச் சொல்லலாம்?

பெற்றோரை அடுத்த உறவை இப்படிச் சொல்லுகிறவள், நாளைக்குப் பெற்றவர்களையும் இதே போலத்தான் பேசுவாள்!

எண்ணம் ஓட ஓட, உதயசந்திரனுக்கு உள்ளம் நொந்து போயிற்று.

இப்படி ஒரு பெண்ணை பத்து நாள் மயக்கத்தில் திருமணமே செய்து கொண்டுவிட்டானே!

ஒருவரைப் பார்த்ததுமே துல்லியமாக எடை போட்டுவிடுவான் என்று அவனுக்குத் தொழில் வட்டாரங்களில் பெயர். ஆனால், பெண்ணைப் பார்த்தால் எவனுக்கும் புத்தி மழுங்கிவிடும் போலும்!

குறைந்தபட்சமாக அவனுக்கு!

ஆனால் இதற்காக வெறுமனே வருத்தப்பட்டுக் கொண்டிருப்பது அடுத்த மடத்தனம்!

சிறு அமைதியின் பின் ''பார், மதுரிமா. உனக்கு நான் தாலி கட்டியிருக்கிறேன். அதனால் உன்னை நான் அடியோடு விட்டுவிட முடியாது. உன் பிறந்தவீட்டு உறவை முழுமையாக அறுத்துக்கொண்டு வந்தாயானால் என் வீட்டில்... என் காதல் மனைவியாக இல்லாவிட்டாலும், ஏதோ ஓர் இடம் கிடைக்கும். என்ன சொல்லுகிறாய்?'' என்று கேட்டான்.

அவள் அப்போதும் அவன் பேச்சைப் பெரிதாக எடுத்துக் கொள்வதாக இல்லை. ''ஓர் இடம் என்றால் எப்படியான இடம்? வேலைக்காரி, சமையல்காரி இப்படியா? ஆனால் எனக்குச் சமையலே தெரியாதேப்பா!'' என்று நகைத்தாள்.

கணவன் பேசாமலே உட்கார்ந்திருக்கவும் ''என்ன விளையாட்டு இது, உதி?'' என்று அப்போதும் சாதாரணமாகத்தான் கேட்டாள்.

உதயனுக்கு மேலே மேலே ஆத்திரம் அதிகரித்தது. அவன் எவ்வளவு மனம் நொந்து பேசுகிறான், இவள்



விளையாட்டாகவே முடித்துவிட முயற்சிக்கிறாளே!

''விளையாடிய காலம் முடிந்துவிட்டது. இது முழு உண்மை. என் பெற்றோர் இருக்கும் வீட்டில் வசிக்க நீ கொடுக்கும் சிறு விலை!''

பெற்றோரின் பெருந்தன்மையை எண்ணும்போது அது சிறுவிலையாகத்தான் உதயசந்திரனுக்குத் தோன்றியது.

ஆனால் சரேல் எனத் தலையுயர்த்தி, மதுரிமா அவனைப் பார்த்தாள். ''விலையா? ஏன், அங்கே உங்களுக்கு யாரேனும் கோடீசுவரப் பெண்ணைப் பார்த்து வைத்திருந் தார்களா?'' என்றாள் சற்று உதாசீனமான குரலில்.

''ஏய்! யாரைப் பற்றிப் பேசுகிறாய் என்று யோசித்து மரியாதையாகப் பேசு! அவர்கள் கால் செருப்பாக இருக்கவும் தகுதியற்றவள் நீ! அப்படியிருக்க.. இதோ பார், நான் சொன்ன மாதிரி, உன் வகை உறவை அடியோடு வெட்டிவிட்டு வருவதானால் என் வீட்டுக்கு வா. இல்லாவிட்டா..''

அவனை நேராகப் பார்த்தாள் மது. ''இல்லா விட்டால்?'' என்று தளராத பார்வையுடன் கேட்டாள்.

''அதை நீதான் சொல்ல வேண்டும்'' என்றான் அவன். ''என் வீட்டுக்கு வருவதற்கான வழியை மட்டும்தான் என்னால் காட்ட முடியும்!'' என்றான் எடுப்பாக.

''யாருக்கும் செருப்பாக - உங்களுக்கு கூடச் செருப்பாகக் கிடந்து வாழும் வாழ்க்கை எனக்கு அவசியம் இல்லை!'' என்று கம்பீரமாய் அறிவித்தவள், சட்டெனக் காரின் கதவைத் திறந்து காரிலிருந்து இறங்கினாள். ''உங்கள் கருத்து மாறினால் நான் இருக்குமிடம் உங்களுக்குத்

தெரியும்'' என்றுரைத்துக் கார்க் கதவை அறைந்து சாத்தினாள்.

அவன் முகத்தில் அறைவதாக எண்ணினாளோ, என்னவோ?

மேலே ஒரு கணம் கூடத் தயங்கி நில்லாமல், மடமடவென்று நடக்கலானாள்.

அன்றுதான் உதயன் மதுரிமாவைக் கடைசியாகச் சந்தித்தது.

மதுரிமா இருக்குமிடம் அவனுக்குத் தெரியும்தான்.

வேலை பார்க்கும் பெண்கள் விடுதி!

ஆனால் அங்கே சென்று அவளைப் பார்க்கவோ, பார்த்துப் பேசி அழைத்து வரவோ உதயனுக்கு விருப்பமில்லை.

அப்படிப் பார்த்தால், அவன் இருப்பிடம் அவளுக்கும் தெரியும்தானே? வர வேண்டியதுதானே?

அவளுக்கு இவ்வளவு இருக்கும்போது அவனுக்கு எவ்வளவு இருக்கும்?

இதை எண்ணும்போது அவள் பெண் என்பதால் தனக்குப் பணிந்தாக வேண்டியவள் என்ற எண்ணம் உதயனுக்குச் சற்றும் இருக்கவில்லை. அந்த மாதிரி முன்னுதாரணத்தை அவன் பெற்றோர் அவனுக்குக் காட்டியதும் இல்லை.

தப்பு செய்த குடும்பத்தைச் சேர்ந்தவளுக்கு இவ்வளவு பிடிவாதம் இருக்குமானால், பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த அவனுக்கு எவ்வளவு இருக்க வேண்டும்?



ஒரு நல்ல குடும்ப அமைப்பில் விருப்பம் இருக்குமானால், அவனது நிபந்தனைக்குக் கட்டுப்பட்டு அவளாகவே வரட்டும். அன்றி, அவளுடைய பெரியம்மா புத்தி இருக்குமானால் எப்படியோ போய்த் தொலையட்டும்! அவளைப் பற்றி அவன் நினைக்கவே போவதில்லை!

அந்த அளவுக்கு மனம் கசந்துவிட்டிருந்தது அவனுக்கு!

மதுரிமாவும் கணவனைத் தேடி வரவே இல்லை!

அதன்பின் பலமுறை உதயசந்திரன் தொழில் நிமித்தமாகப் பங்களூருக்கு சென்று வந்தான். திட்டமிட்டது போல அங்கேயே ஒரு கிளையைத் தொடங்கவும் செய்தார்கள். அது பற்றிய விளம்பரங்கள் செய்தித்தாள்களிலும் டீவியிலும் வந்தன.

ஆனால் மதுரிமா எட்டிக் கூடப் பார்க்கவில்லை!

முடிவாக என்னதான் சொல்லுகிறாள் என்று கேட்டுவிடலாம் என்று உதயசந்திரன் அவளுக்கு டெலிஃபோன் செய்து பார்த்தான்.

வேலையை விட்டுவிட்டுப் போய்விட்டதாக அலுவலகத்தில் சொன்னார்கள். கிட்டத்தட்ட அதே சமயத்தில் விடுதியை விட்டு கிளம்பி விட்டதாக அங்கேயும் சொன்னார்கள்.

எங்கே போனாள்?

தாலிகட்டிய கணவன்! அவனிடம் ஒரு வார்த்தை சொல்லாமல் அவள் எங்கேதான் போயிருப்பாள்.

திடுமென ஒன்று தோன்றவும், சற்று நேரம் உதயன் அப்படியே ஆடிப் போய்விட்டான்!

A-PDF Merger DEMO : Purchase from www.A-PDF.com to remove the watermark

எளிதில் உணர்ச்சி வசப்படுகிறவள் மதுரிமா. கோபம், சிரிப்பு, அன்பு, ஆசை எல்லாமே அதிகமாகவும் அதே சமயம் சட்டெனவும் பொங்கி வரும்.

இப்போது கணவன் இப்படிச் சொன்னான் என்று ஆத்திரத்தில் தப்பாக ஏதேனும் செய்து கொண்டிருப் பாளோ? அவள் நல்லவளாக இருந்து, 'நம்மைப் போய் கணவன் செருப்பாய்க் கிடக்கச் சொன்னானே' என்ற சோகத்தில் வாழ்க்கையையே முடித்துக்கொண்டிருந்தால்?

இந்த எண்ணம் தோன்றவும் உள்ளம் பதற உடல் பதற உதயசந்திரன் சற்று நேரம் அப்படியே உட்கார்ந்து விட்டான்! ஐயோ, ஐயோ, ஐயோ என்பது தவிர வேறு எதையும் யோசிக்கவே அவனால் முடியவில்லை.

வெகு நேரம் அப்படியே இடிந்து போய் அமர்ந்திருந்தவனுக்கு மெல்ல மெல்லச் சுரனை வந்தது. சுரனையோடு சிந்திக்கும் ஆற்றலும் வந்தது.

அந்த மாதிரித் தப்பு முடிவு எடுப்பதானால் அவள் அந்த முடிவை உதயன் அவளை நிராகரித்துப் பேசிய உடனேயே எடுத்திருப்பாள். இப்படி ஒரு மாதத்திற்கு மேலாக நாட்கள் கடந்த பிறகு செய்யமாட்டாள்.

இந்த எண்ணம் தோன்றிய பிறகு உதயன் சற்று ஆசுவாசமாகச் சிந்தித்துப் பார்த்தான்.

மதுரிமா எளிதில் உணர்ச்சி வசப்படுகிறவளே தவிர, உணர்ச்சி வேகத்தில் முட்டாள்தனமாக நடந்து கொள்கிறவள் அல்ல! கோபம் வந்தால் தனியே போய் உட்கார்ந்து கொள்வாள். கோபம் அடங்கியதும் தானாகவே திரும்பி வருவாள்.



கோபத்தில் அவள் விசுக் விசுக்கென்று நடந்து போவதும், சற்று நேரத்தில் திரும்பி வந்து அந்தச் சிறுபிணக்கை ஈடுகட்டுகிறவள் போலக் கொஞ்சுவதும் அப்போது நடப்பது போலத் தோன்றி உதயனின் நெஞ்சைக் கனக்க வைத்தன.

இல்லை. இந்த நினைவுகள் எல்லாம் இப்போது கூடாது. மதுரிமாவைப் பற்றி அறிவு பூர்வமாகச் சிந்திக்க வேண்டும். இனியொருதரம் இது போன்ற கலக்கங்களுக்கு இடம் தரக்கூடாது.

அன்றையச் சந்திப்பின் பின்னர், சுமார் நாற்பது நாட்களுக்குப் பிறகுதான் மதுரிமா பழைய இடங்களில் இருந்து வெளியேறியிருக்கிறாள்.

அவளது கோபம் தணியவும் கணவனிடம் திரும்பி வந்து சமாதானம் பேசவும் இந்த நாற்பது நாட்கள் தாராளமாகப் போதும்! ஆனால் அவள் வரவில்லையே! அதாவது அவன் வீட்டில் வெறுமனே, 'ஓர் இடம் மட்டும்' என்ற நிலையில் வாழ அவளுக்கு விருப்பமில்லை!

அவளுக்குக் கைநிறையப் பணம் வேண்டும்! அதற்காகத்தான் அவள் உதயனை மணந்ததே!

காலடியில் பணத்தைக் கொட்டாத கணவனால் என்ன பிரயோஜனம்?

இந்த நாற்பது நாட்களில் வேறு இளிச்சவாயன் எவனாவது கிடைத்தானோ என்னவோ?

அவளுடைய குடும்ப வழக்கப் படி நல்ல பழமரம் தேடிப் பட்சி பறந்து விட்டது!

'இல்லை, இல்லை' என்று அலறிய இதயத்தின் ஓலத்திற்காகப் பலமுறை சிந்தித்துப் பார்த்த உதயசந்திரனுக்கு, வேறு எந்த முடிவுக்கும் வரவே முடியவில்லை.

உள்ளூரப் பெண் என்றாலே மனம் வெறுத்துப் போயிற்று.

தனிமை அடியோடு கசந்தது.

பொதுவாக எதிலுமே ஓர் அலுப்பும் வெறுப்பும் காரணமின்றியே வந்தது.

அதை, வெளிக்காட்டாமல் மறைக்க அவன் அரும்பாடு பட வேண்டியிருந்தது.

வேலை வேலை என்று வேறு நினைப்பின்றிச் செய்யும்போது மட்டும் கொஞ்சம் நன்றாக இருந்தது. வேலை முடிந்துவிட்டால் அதே அலுப்புதான்!

மகனை உணர்ந்தாற்போல அவனுடைய பெற்றோர் எப்போதும் இவனிடம் ஒரு கவனம் வைத்திருந்ததை உணர்ந்தபோது அவனுக்கு மிகவும் அவமானமாக இருந்தது.

மகனும், அவனுடைய சிற்றப்பாவைப் பின்பற்றி விடுவானோ என்று அவர்கள் அஞ்சுவது அவனுக்குப் புரியவும் ஒருநாள் அவர்களிடம் நேரிலேயே பேசினான்.

மதுரிமாவை அவன் காதலித்தது உண்மைதான். ஆனால், அவளைப் பிரிந்ததற்காக உயிரை விடும் அளவுக்கு அவன் கோழையில்லை. அப்படி உயிரை விடவும் மாட்டான்!



சித்தப்பன் விவகாரத்தில் அவனும்தான் பாடம் கற்றிருக்கிறான்.

அதனால், பெற்றோர் இருவரும் நிம்மதியாக இருக்கத் தொடங்கினார்கள்.

உதயன்... அவனுக்குத்தான் நிம்மதி ஒரு நாளும் இனிக் கிடையாதே!

ஆனால், அதை வெளிகாட்டிக் கொள்ளாமல் அமைதியாக இருந்தான்.

ஆனால் அதுவும் தவறோ என்ற ஐயம் ஏற்பட்டது. மகனுக்கு வேறு திருமணம் செய்து வைக்கலாமா என்று ஆசை தாய்தந்தைக்கு ஏற்பட்டு விட்டதே.

தேவதாஸ் மாதிரி ஜிப்பாவும் புட்டியுமாக இருந்திருந்தால் அவர்களுக்கு இந்த எண்ணம் உண்டாகியிருக்குமா?

இரண்டாம் திருமணம் நடக்கிறபோது இவர் எனக்குத் தாலி கட்டியவர் என்று மதுரிமா போலீசோடு வந்து நின்றால் என்னம்மா செய்வது என்று அன்றைக்கு அன்னையின் வாயை அடைத்திருந்தான் உதயசந்திரன்.

உடனே, சாவித்ரி அதற்கொரு தீர்வுடன் மகனிடம் வந்து நின்றாள். சட்டபூர்வமாக அந்தத் திருமணத்தை ரத்து செய்துவிட்டால் அப்புறம் எந்தப் பிரச்சினையும் இராதல்லவா?

பிரச்சினை வெளியில் மட்டுமாக இருந்தால் அதை இப்படியெல்லாம் தீர்த்துவிடக் கூடும்தான். ஆனால், உதயனின் பிரச்சினை அவன் உள்ளேயல்லவா இருந்தது!

இன்னொரு பெண்ணைத் தன்னால் அந்தமாதிரி நெருங்க முடியாது என்பது அவனுக்கு நிச்சயம். அப்படியிருக்க அடுத்தொரு திருமணம் எப்படிச் சாத்தியம்?

இதை வெளிப்படையாகச் சொன்னால் சித்தப்பா மாதிரி என்று கலங்கிவிடுவார்கள் என்பதால் உண்மையைச் சொல்லவும் முடியாமல் போய்விட தாயுடன் தனித்துப் பேசுவதையே தள்ளிப்போட்டுக் கொண்டிருந்தான் உதயசந்திரன்.

என்றைக்குச் சரியாக மாட்டப்போகிறானோ?

உள்ளூரச் சலிப்பான எதிர்பார்ப்புடன் யோசித்துக் கொண்டே வந்த உதயசந்திரனை, அன்றே அவன் அன்னை ஒரு பிடிவாதத்துடன் எதிர்கொண்டாள்.

''உட்கார் உன்னிடம் பேச வேண்டும்.'' என்று தொடங்கிச் சொன்னாள்.

''திருமணமாகி ஓர் ஆண்டு ஆகிவிட்டால் மணவிலக்குக்கு மனுக் கொடுக்கலாம். அவள் - மதுரிமா வரவில்லை என்றால் 'எக்ஸ் பார்டி'யாகத் தீர்ப்பு வாங்கி வேறு திருமணம் செய்யலாம். அந்த முயற்சியைத் தொடங்கினால் என்ன?'' என்று கேட்டாள் தாயார்.

சற்று அழுத்தத்துடன் கேட்கப்பட்ட கேள்வி.

வெறுமனே பார்க்கலாம் என்று தட்டிக் கழிக்கத்தான் உதயசந்திரன் முதலில் நினைத்திருந்தான். ஆனால், தாயின் குரல் அவனை வேறு எண்ண வைத்தது.

இது அந்த மாதிரி வெறும் சாக்குப் போக்குகளில் திருப்தி அடைந்து விட்டுவிடுகிற குரல் இல்லை. இதற்குத் தெளிவான உறுதியான பதில் தேவை!



பெற்றவர்கள் முயன்று இதைப் பேசுவதை நிறுத்திவிட வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கும் தோன்றிவிட்டது. சித்தப்பாவோடு ஒப்பிட்டு வருந்துவார்களோ என்று பூசி மெழுகி வீண் ஆசையை வளர்ப்பதும் சரியில்லைதான்! இந்தப் பேச்சை இன்றோடு முடித்துவிடவேண்டும்.

இந்த முடிவுக்கு வந்து கவனத்துடன் வார்த்தைகளைப் பொறுக்கி எடுத்துப் பேசினான் உதயன்.

''நீங்கள் சொல்வது அவ்வளவாகச் சரியில்லை அம்மா. மனைவி பற்றி ஒன்றும் தெரியவில்லை என்றால் விவாகரத்துக்கு ஏழு ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்! ஆனால் அம்மா, அந்த ஏழு ஆண்டுகள் சென்ற பிறகும் கூட என்னால் ஒரு பெண்ணோடு குடும்பம் நடத்துவது இயலாத காரியம். உடனே சித்தப்பா மாதிரி என்று எண்ணிவிட வேண்டாம். பெண்ணுறவுதான் எனக்கு வெறுத்திருக்கிறதே தவிர உலகம் அல்ல. நீங்கள், தங்கை நீபாவுடைய பிள்ளைகள், நண்பர்கள், தொழில் என்று வாழ்க்கை எனக்குப் பிரியமானதாகத்தான் இருக்கிறது..''

''ஆனால் உனக்கொரு மனைவி வேண்டுமே? எங்கள் பேரன் பேத்திகளை அவள் பெற்றுத் தந்து நம் வம்சம் வளர வேண்டாமா?''

''பொல்லாத வம்சம்! அந்த ராஜராஜசோழன் பரம்பரையே போன இடம் தெரியவில்லை. நமக்கு வம்சம் வளர்ந்தாக வேண்டுமாக்கும்? என்னம்மா நீங்கள் கூடப் படிக்காத பாமர மக்கள் போலப் பேசுகிறீர்கள்?

''பையனுக்குப் பிறந்தால்தான் வம்சம் வளருமா? பெண்ணுக்குப் பிறந்தால் ஆகாதா? நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள் அம்மா. எனக்கு மனைவி, பிள்ளை என்ற

பேச்சுக்கே இந்த வீட்டில் இனி இடம் கிடையாது. தீபாவுடைய பிள்ளைகள்தான் உங்களுக்கு பேரக் குழந்தைகள். அத்தோடு திருப்தி அடையுங்கள்.'' என்று தீர்மானமான குரலில் கூறி முடித்தான்!

''என்னடா...'' என்று மகனிடம் வாதாடத் தொடங்கிய சாவித்ரி வேலையாளின் வருகை கண்டு பேச்சை நிறுத்தினாள்.

திரும்பிப் பார்த்துவிட்டு, ''என்ன?'' என்றான் உதயன் சற்றுக் கடுமையான குரலில்.

வீட்டினர் தனித்துப் பேசிக் கொண்டிருக்கும்போது வேலையாட்கள் அங்கே செல்லக்கூடாது என்பது அந்தவீட்டின் எழுதாத சட்டம்!

தயக்கத்துடனேயே வந்த பணியாளுக்குக் குரல் நடுங்கியது!'' ஒ.ஒருத்தங்க ஒரு அம்மா உங்களைத் தேடி வந்திருக்காங்கய்யா. இப்பப் பார்க்க முடியாதின்னு எவ்வளவோ சொன்னேங்கய்யா. ஆனா பேர் சொன்னா அவங்களே கூப்பிடுவாங்க போய்ச் சொல்லுன்னு பிடிவாதம் பிடிக்கிறாங்க... பேருகூட என்னமோ, மதுரிம்மாவோ என்னவோ இன்னு..''

திகைப்புற்று மகனைப் பார்த்தாள் சாவித்ரி. அவன் முகத்திலும் திகைப்புதான். ஆனால், திகைத்து தாய் முகத்தைப் பார்க்கும்போதே அவனது கால்கள் மாடிப்படியை நோக்கி வேகமாக நகரத் தொடங்கியிருந்தன.

மதுரிமா என்றால்...?''

குழப்பமும் கலக்கமுமாக சாவித்ரியும் பிள்ளையைப் பின்தொடர்ந்தாள்.



சாவித்ரியும் வேகமாகவே சென்றபோதும் அவள் மாடிப்படி வளைவை அடைந்தபோது உதயன் படியிறங்கி முடித்திருந்தான்.

அவனை வெறித்து நோக்கிய ஓர் இளம்பெண், ''உதி!'' என்ற கதறலுடன் ஓடி வந்து உதயனின் மார்பில் புதைந்தாள். ''உதி, விபுவைத் தேடிக் கொடுங்கள் உதி, என்னால் முடியவில்லை உதி. தயவுபண்ணி விபுவை எப்படியாவது தேடிக் கண்டுபிடித்துக் கொடுங்கள் உதி. உதி, ப்ளீஸ் உதி. என்னால் தாங்க முடியவில்லை. உதி எப்படியாவது என் விபுவை எனக்குத் தேடித் தாருங்கள் உதி!'' என்று பதறித் துடித்தாள்.

கைகள் தன்னிச்சையாக அவள் தோளை ஆறுதலாகத் தட்டிக் கொடுக்க உதயசந்திரன் கேட்டான். ''விபு? யார் அந்த விபு?''

என்ன இப்படிக் கேட்கிறாய் என்பது போலத் திகைப்புடன் அவனை நோக்கிவிட்டு பிறகே விஷயம் புரிந்தவள்போல அவள் விளக்கம் சொன்னாள். ''விபு என் பிள்ளை! நம் மகன்.!''



## 6

தாயும் மகனும் பிரமித்து நோக்கியதை மதுரிமா கவனிக்கக்கூட இல்லை. தேவைப்பட்ட விவரம் சொல்லி முடித்து விட்டாற்போல, அவள் மீண்டும் தன்

துன்பத்திலேயே மூழ்கி, ''விபுவைக் காணவில்லை உதி. என்னால் ஆனமட்டும் தேடிவிட்டேன் உதி. யாரோ, அவனைத் தூக்கிப் போய்விட்டார்கள். போலீஸில் சொன்னால் அலட்சியம் செய்கிறார்கள். இரண்டு நாட்கள் ஆகிவிட்டன. அவனைப் பாராமல்... ஐயோ, என்னால் முடியவில்லையே உதி! நான் என்ன செய்யட்டும்?'' என்று மறுபடியும் தவித்தாள் அவள்.

ஆனால், இப்போது அவளது தவிப்பை விடவும் அவளது சொற்களால் விளைந்த பிரமிப்பு அதிகமாகி விடவே, ''என்ன உளறுகிறாய்?'' என்று கேட்டபடி அவளை விலக்கி நிறுத்தி அவள் முகத்தைப் பார்க்க முயன்றான் உதயன்.

''உளறல் இல்லை, உண்மைதா...ன்'' என்றவள் சரியாக நிற்க முடியாமல் தடுமாறவும் அவளை அழைத்துச் சென்று சோஃபாவில் உட்கார வைத்தான். அவளை ஒருதரம் கூர்ந்து நோக்கிவிட்டு, ''நீ எப்போது சாப்பிட்டாய்?'' என்று கேட்டான்.

''நான்...'' என்று பதிலைத் தொடங்கியவள் விடை அறியாதவளாய் மலங்க விழித்தாள்.

''தெ... தெரியவில்...லையே'' என்று இழுத்தவள் சட்டெனக் கோபமுற்று, ''என் கண்ணன் காணாமல் போய் மூன்று நாட்கள் ஆகின்றன. என்னால் எப்படிச் சாப்பிட முடியும்?'' என்று ஆத்திரமாகக் கேட்டாள்.

உடனேயே முகம் கலங்க, ''விபு.. விபு ஏதாவது சாப்பிட்டானோ என்னவோ தெரியவில்லையே! சில சமயம், சாப்பிட ரொம்பவும் அடம் பிடிப்பான் ஐயோ, அம்மா! அவனுக்கு என்னமும் ஆகிவிடுமா? என்னால்



ஒன்றும் செய்யமுடியவில்லையே! அந்த இன்ஸ்பெக்டர் வேறு... கடவுளே அப்படியெல்லாம் இருக்கக் கூடாதே! தயவு பண்ணி நீங்களாவது ஏதாவது பண்ணுங்களேன்!'' என்று கண்ணீருடன் கெஞ்சினாள்.

''மதுரிமா நீ சொல்வது ஒன்றும்...'' என்று தொடங்கியவன் மேலே பேசுமுன் சரேலென நிமிர்ந்தவளின் கண்களில் மின்னல் வெட்டியது. உதயனின் பேச்சில் அவள் ஆத்திரத்துடன் குறுக்கிட்டாள்.

''ஒன்றும் நம்ப முடியவில்லையாக்கும்? எப்படி நம்ப முடியும்? மூன்று ஆண்டுகளுக்கு முன்பே சந்தோஷமாக எல்லாவற்றையும் முடித்து விட்டுப் போனவர் ஆயிற்றே! தொல்லையின்றி முடிந்தது என்று இத்தனை நாள் நிம்மதியாக இருந்திருப்பீர்கள்! அய்யோ! இப்படி நேர்ந்திராவிட்டால் நானும் உங்கள் முகத்தில் விழித்திருக்க மாட்டேனே! கடவுளே! இதோ உங்களை நம்ப வைக்க இது போதுமா? பாருங்கள்.'' என்று பாதிக் காற்றாய் போன குரலில் படபடத்தவள் நடுங்கும் விரல்களால் கைப்பையைத் திறந்து கண்ணாடித் தாளால் அட்டையிட்டு வைத்திருந்த ஒரு காகிதத்தை எடுத்து அவனிடம் நீட்டினாள்.

அதை வாங்காமல் உதயன் அசையாது நிற்கவும் சாவித்ரி முன்னே வந்து அந்தக் காகிதத்தை வாங்கிப் பார்த்தாள்.

அது ஒரு குழந்தையின் பிறப்புப் பதிவேடு! பிறந்த தேதிவரை தெளிவாகப் பார்க்க அவளுக்குக் கண்ணாடி வேண்டும். ஆனால் அது சரியானதாக இல்லை என்றால் இந்தப் பதிவேட்டை இந்தப் பெண் கையோடு கொண்டு வந்திருக்க மாட்டாள்.

தன்னை நம்ப மாட்டார்களோ என்று மதுரிமா இந்தச் சான்றை கையோடு எடுத்து வந்திருக்கிறாள்!

சட்டென அந்தத் தாயின் நெஞ்சினுள் ஏதோ சங்கடம் செய்தது. அவளும் பெற்று வளர்த்தவள் ஆயிற்றே!

''உட்காரம்மா!'' கதவருகே சென்று உட்புறம் நோக்கி ஏதோ சைகை செய்தாள்.

உடனேயே ஒரு பெண் கண்ணாடித் தம்ளரில் குளிர்பானம் கொணர்ந்து வைத்துவிட்டுப் போனாள்.

''குடித்துவிட்டுப் பேசு'' என்றான் உதயசந்திரன்.

''ஒன்றும் வேண்டாம்.'' என்ற அவள் அலட்சியமாகத் தலை திருப்ப முயன்றபோது தலை தன்னிச்சையாக எங்கோ சென்றது. சமாளித்துக்கொண்டு, ''முதலில் நீங்கள் அந்த இன்ஸ்பெக்டருக்கு ஃபோன் செய்து விபுவைத் தேடச் சொல்லுங்கள். எனக்கு அது போதும்.'' என்றாள் தவிப்புடன்.

அருகில் வந்து டம்ளரை எடுத்து அவள் கையில் திணித்தான் உதயன்.

திகைப்பும் குழப்பமுமாக நிமிர்ந்தவளிடம், ''மூன்று நாள்ப் பட்டினியில் உன் பேச்சில் பாதி காதிலேயே விழவில்லை. அதனால் நீ என்ன சொல்லுகிறாய் என்றும் புரியவில்லை. உனக்கு என்ன உதவி செய்வதென்றாலும் உன் பேச்சுப் புரிந்தால்தான் அதைச் செய்ய முடியும்? எடுத்துக் குடித்துவிட்டு விஷயம் என்னவென்று கொஞ்சம் தெளிவாகச் சொல்லு.'' என்றான் சற்று அதட்டலான குரலில்.



ஒரு கணம் புரியாமல் பார்த்தவள் சட்டெனக் கையிலிருந்த பழச்சாறை மடமடவென்று குடித்து முடித்து டம்ளரைக் கீழே வைக்கும்போதே கேட்டாள். ''விபுவை, என் மகனை இரண்டு நாட்களாகக் காணவில்லை. அவனை, யாரோ கடத்திப் போயிருக்க வேண்டும். அவனைகண்டுபிடித்துத் தர வேண்டும்.'' என்றாள் முடிந்த அளவு தெளிவாக.

''அதாவது உனக்கு ஒரு மகன் இருக்கிறான். அவன் இரண்டு தினங்களுக்கு முன்பாகக் காணாமல் போய்விட்டான் என்கிறாய்.''

''ஆமாம், ஆமாம். அப்படித்தான். அதைத்தான் இவ்வளவு நேரமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆனால், என்னால் அவனைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை.'' என்றாள் அவள் மிகுந்த வருத்தத்துடன்.

''போலீஸில் சொன்னாயா?''

மீண்டும் அவள் முகம் கசங்கியது. ''சொன்னேன். ஆனால் அங்கே அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவே மாட்டேன் என்கிறார்கள். பக்கத்தில் கிணறு குளம் இருந்தால் அதில் தேடிப் பார் என்று...'' என்றவள், மேலே பேச முடியாமல் கைகளால் முகம் புதைத்து விம்மி அழுதாள். ''ஆனால், அப்படியெல்லாம் இராது அப்படி இருக்காதுதானே உதி?'' என்று கலக்கத்துடன் அவன் முகத்தைப் பார்த்தாள்.

முகம் இறுக, ''ஆமாம். அப்படி எதுவும் நேர்ந்திராது'' என்றான் அவன் அழுத்தமான குரலில். ''ஆனால் யாரோ கடத்தித்தான் போயிருக்க வேண்டும் என்று எப்படிச் சொல்கிறாய்?''

''மற்றபடி விபுவை அங்கே எங்கேயும் காணவே இல்லையே! யாரோ தாடிக்காரன் அவனுடன் விளையாடிக் கொண்டிருந்துவிட்டுக் கூட்டிப் போனதாக கூட விளையாடிய பிள்ளைகள் சொல்லுகிறார்கள்..''

''தாடி! ஒட்டு தாடியாக இருக்கும். முக அடையாளத்தை மறைப்பதற்காக ஒட்டியிருப்பான்.''

நீர்த்திரையிட்ட விழிகள் விரிய, ''நானும் அப்படித்தான் நினைத்தேன் உதயன். ஆனால்... ஆனால் இன்ஸ்பெக்டர் ஒத்துக் கொள்ள மாட்டேன் என்கிறார். மாதச் சம்பளக்காரி உன்னிடம் என்ன தேறும் என்று ஒருவன் மெனக்கெட்டு உன் பிள்ளையைப் போய் கடத்துவான் என்று கேட்கிறார். ஆனால் சிலபேர் சொல்லுகிறார்கள், பிச்சையெடுப்பதற்காகப் பிள்ளை களைப் பிடித்துப் போய்க் கையைக் காலை உடைத்து அம்மா!'' என்று மேலே சொல்ல முடியாமல் அந்தக் கற்பனையிலேயே அஞ்சிக் கலங்கினாள்.

''அதெல்லாம் இராது'' என்றான் உதயனும் அவசரமாக.

ஒரு சிறு அமைதியின் பின், ''விபு காணாமல் போனது எந்த இடத்தில்?'' என்று கேட்டான்.

அவள் விளங்காமல் நோக்கவும், ''உன் இருப்பிடம் எங்கே என்று கேட்டேன்'' என்றான்.

''போரூர்'' என்றாள் அவள்.

உதயனின் கூரிய பார்வையைத் தவிர்த்து, ''அங்கே, அபார்ட்மெண்ட் ஒன்றில் இருக்கிறேன்'' என்றாள் சிறு தடுமாற்றத்துடன்.



''எவ்வளவு நாளாக?''

இதெல்லாம் எதற்கு என்று அவள் கேட்குமுன் அவனாகவே, ''மற்ற வீட்டார் எல்லாம் நன்கு பழக்கமானவர்கள்தானா என்று தெரிந்து கொள்ளக் கேட்டேன்'' என்றான் உதயன்.

''ரொம்பப் பழக்கம் என்று சொல்ல முடியாது. பார்த்தால் பேசுகிற அளவுதான். ஆனால், அங்குள்ள பிள்ளைகள் எல்லோருமே விபுவைத் தூக்கிப் போய் விளையாடுவார்கள்...''

''பிள்ளைகளா? அவர்களை நம்பி விட்டுவிடுவாயா? அல்லது இடையிடையே எட்டிப் பார்ப்பது உண்டா?''

'தொல்லை விட்டது என்று உட்கார்ந்திருப்பாயா?' என்று கேட்கிறான்.

கணவனை வெறித்து நோக்கினாள் மதுரிமா.

அவளா பிள்ளையை எட்டிப் பாராமல் விட்டுவிடுகிறவள்.

விபு, அவளது கண்ணின் மணி அல்லவா? முடிந்தால் அவனை இமைக்குள்ளேயே மூடி வைத்துக் கொண்டுவிடுவாளே! வயிற்றுப் பாட்டுக்காகத்தானே அவனைப் பிரிந்து அவள் வேலைக்குப் போவதே! அங்கே கூட... எவ்வளவு கடுமையாக வேலையிருந்தபோதும் மகனை அவள் ஒரு கணம்கூட மறக்கமாட்டாளே!

பகவான் ராமகிருஷ்ணர் சொன்ன கதையில் வருகிற வேலைக்காரி என்னென்ன வேலை செய்தாலும் எஜமான் வீட்டுக் குழந்தையைக் கொஞ்சினாலும், அடி மனதில் தன் பிள்ளையை நினைத்துக் கொண்டே இருக்கிற மாதிரிதான்

அவளும்! ஒவ்வொரு வினாடியும், விபுவின் நினைவு தானே அவளுக்கு உயிரூட்டுவதே!

நாலு சிறுவர்களோடு பழகுவது அவனுக்கு நல்லது என்பதால்தானே, மற்ற ஃப்ளாட்காரர்களுடைய பிள்ளைகளோடு விளையாட அவனை அவள் அனுப்புவதே! அப்போதும் எட்டி எட்டிப் பார்ப்பதும், லேசாக இருட்டத் தொடங்குமுன் வீட்டுக்குக் கூட்டிவந்து விடுவதும்... அதெல்லாம் இவனுக்கு எங்கே தெரியும்?

கட்டிய மனைவியோடு ஒழுங்காகக் குடும்பம் நடத்தியிருந்தால் குழந்தை எப்படி, மனைவி எப்படி என்று கொஞ்சமேனும் தெரிந்திருக்கும்!

ஓர் எதிர்ப்பில் விட்டுப் பிரிந்தவனுக்கு அவளைப் பற்றி என்ன தெரியக்கூடும்?

மூன்று ஆண்டுகளாகத் தொட்டுத் தாலி கட்டியவளை எட்டியும் பாராதவன் கேட்கிறான். அவள் பிள்ளையை இடையிடையே எட்டிப் பார்ப்பது உண்டா என்று விசித்திரம்தான்! வேதனையான விசித்திரம்!

மதுரிமாவின் வெறித்த பார்வையில், எதையோ உணர்ந்து, ''என்ன கேள்வி கேட்கிறாய் உதய்? சின்னப் பிள்ளைகளை நம்பிச் சின்னக் குழந்தையை எப்படி விட்டுவிடுவாள்? எல்லாம் பார்த்துக் கொண்டுதான் இருந்திருப்பாள். மேலே, குழந்தை காணாமல் போன விவரம் மட்டும் கேள்'' என்றாள் சாவித்ரி.

''அதைத்தான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவன் எந்த மாதிரிச் சூழலில் காணாமல் போனான் என்று தெரிய வேண்டாமா?'' என்று முணுமுணுத்தான் உதயன்.



''சொல்லு. விபு எப்படிக் காணாமல் போனான்? அவன் காணாமல் போனதை, எப்போது கண்டுபிடித்தாய்?'' என்று மதுரிமாவிடம் கேட்டான்.

மீண்டும் மதுரிமாவுக்குத் தொண்டைக்குள் விக்கியது. ''முந்தாநாள் மாலை கிட்டத்தட்ட இதே நேரம் விபு மற்ற பிள்ளைகளோடு விளையாடப் போயிருந்தான். ஒரு தாடிக்காரன் சும்மா தெருவோடு போய்க் கொண்டிருந்தவன், இவர்கள் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் காம்பவுண்டுக்குள் வந்தானாம். கொஞ்சம் பெரிய பிள்ளைகள் இருவர் உண்டு. அவர்கள் அவனை யார் என்று கேட்கவும் வெளியூரில் ஒரு பள்ளியில் பி.டி. மாஸ்டர் என்று சொல்லி ஏதோ புது விளையாட்டுக் கற்றுக் கொடுத்தானாம். விபுவைத் தூக்கிக் கொண்டே அவனும் சேர்ந்து விளையாடினானாம்.''

''அவ்வளவு நேரம் நீ பார்க்கவில்லையா?''

குரல் குற்றம் சாட்டியதோ? ஆனால், அதற்காகப் பலமுறை மதுரிமா தன்னையே நொந்து கொண்டபோதும் அவள் தப்பே செய்யவில்லையே!

அப்போதும், உள்ளூர வேதனைப் பட்டபடி, 'இல்லை' என்பது போல தலையாட்டினாள், மதுரிமா. டெலிபோன் வந்திருப்பதாகப் பக்கத்து ஃப்ளாட்டில் கூப்பிட்டார்கள். போய்க் கேட்டால், சும்மா ஒரு சந்தேகம் கேட்பதற்காக ஒரு மாணவன் கூப்பிட்டிருந்தான். அதை, அவனுக்குப் புரியும்படி விளக்கிவிட்டு வந்தால்... பாதி விளையாட்டில் நெஞ்சு வலிப்பதாகச் சொல்லி, அந்தத் தாடிக்காரன் மாத்திரை சாப்பிடத் தண்ணீர் கேட்டானாம். தண்ணீர் கொண்டுவர பெரியவர்களில் ஒருவன்

சென்றதும்... சென்றதும் வெளியே பை வைத்திருக்கிறேன். அதிலிருந்து மாத்திரை எடுத்து வருகிறேன் என்று வெளியே போனானாம். விளையாட்டின்போது விபுவை கையில் வைத்திருந்தவன், அப்படியே சென்றிருக்கிறான். அவனும் திரும்ப வரவில்லை. வி... விபுவும்...'' என்று நெஞ்சை அழுத்தியபடி நீர் வடியும் கண்களால் அவனை நோக்கி, ''இரண்டே வயதுதான் உதி என் பிள்ளைக்கு! என்னை விட்டு எப்படி இருப்பான்? வேலைக்குப் போகும்போது, 'கிரஷ்'ஷில் விட்டுவிட்டுப் போகிறேன்தான். ஆனால், இரவு தூங்கும்போதும், காலையில் விழிக்கும்போதும் நான் பக்கத்தில் இல்லாவிட்டால் ரொம்பவும் அழுவானே! இப்போது என்ன செய்வான்? அவன் அழுதால் தூக்கிப் போனவன் அடிப்பானோ? அல்லது அபின் மாதிரி எதையாவது கொடுத்து... ஐயோம்மா, என் பிள்ளை என்ன ஆகும்? எண்ணிப் பார்க்கக் கூட முடியவில்லையே!'' என்றாள், கதறலாக.

கை முஷ்டிகள் இறுக, ''அப்படித்தான் என்று என்ன கணக்கு? எதற்கு இந்த அனாவசியக் கற்பனை?'' என்று உதயசந்திரன் அதட்டும்போதே, ''பயப்படாதேம்மா அப்படி எதுவும் நடக்காது'' என்று அவளுக்கு தைரியம் சொன்னாள், சாவித்ரி.

அந்தத் திடமூட்டலின் பலன்தான் விபரீதமாக இருந்தது.






பல ஆண்டுகள் ஒரு மேல் மட்டக் குடும்பத் தலைவியாக இருந்து, சொந்த பந்தம் பார்த்து குடித் தனத்தைச் செவ்வனே நடத்தி வந்ததன் பலனாக, சாவித்ரியின் குரலில் ஓர் அமைதியான அழுத்தம் இருந்தது.

ஒரு சில கணங்கள், அந்தக் குரலிலும் சொல்லிலுமாய் அமைதியுள்ளவள் போலத் தோன்றிய மதுரிமா, திடுமென உடல் விறைப்புற்று நிமிர்ந்தாள்.

''அதெப்படிச் சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்ட குரலில் ஐயம் நிறைந்திருந்தது.

திடுமென எழுந்து நின்று சாவித்ரியைக் கூர்ந்து பார்த்தாள்.

பிறகு, ஆத்திரமுற்ற குரலில், ''அப்படி எதுவும் நடக்காது என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? அப்படியானால் கடத்தியது நீங்கள்தானா? உதியுடைய பிள்ளை என்று தெரிந்ததும் கடத்தி வந்து விட்டீர்களா? சொல்லுங்கள் நீங்கள்தானே? நீங்கள்தானே?'' என்று வெறி பிடித்தவள் போலக் கேட்டபடி பெரியவளை நெருங்கினாள்.

சாவித்ரி திகைத்து நிற்க, உதயசந்திரன் சட்டெனக் குறுக்கே வந்து மனைவியைப் பிடித்து நிறுத்தினான், ''முட்டாள், என்ன உளறுகிறாய்?'' என்று அதட்டினான்.

திமிறிக்கொண்டு, ''பின்னே அவர்களுக்கு எப்படித் தெரியும்? ஒன்றும் செய்ய மாட்டார்கள் என்று எப்படிச் சொன்னார்கள்?'' என்று வெறி அடங்காமலே கேட்டாள் மதுரிமா.

தோளைப் பற்றியிருந்தவன் அவளை லேசாக உலுக்கி, ''மதுரிமா! சற்று யோசித்துப் பேசு! ஒருவர் கவலைப்படும்போது ஆறுதலாக ஒரு பேச்சு பேசுவது இல்லையா? நீ கலங்குகிறாயே என்று உன்னை அமைதிப்படுத்த அம்மா கூறிய வார்த்தை அது. கண் முன்னே ஒருத்தி கலங்கும்போது அது கூடச் சொல்ல மாட்டார்களா? அதற்குப் போய் இப்படியெல்லாம் பேசிவிட்டாயே?'' என்று உதயன் விளக்கி முடிக்கும்போதே மதுரிமா தொய்ந்துவிட்டாள்.

''வெறும் ஆறுதல் வார்த்தையா?..'' என்று சோர்வுடன் முணுமுணுத்தவள், வாடிய தாமரையாய் முகம் தழைய, கனத்த இமைகளைப் பிரயாசையுடன் உயர்த்தி,

''சா... சாரிம்மா, நான் தப்பாக நினைத்துவிட்டேன். மன்னித்து விடுங்கள்'' என்று மெல்லிய குரலில் மொழிந்துவிட்டு மெதுவாகப் பழைய இடத்திற்கே சென்று அமர்ந்தாள். நெற்றிப்பொட்டை அழுத்தி விட்டபடி, என் மகளைக் காணோமா, எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அ... அதுதான் என்னென்னவோ பேசிவிட்டேன்.. தயவு பண்ணிக் கோபித்துக் கொள்ளாதீர்கள் அம்மா. எப்படியாவது என் பிள்ளையை எனக்கு தேடித் தரச் சொல்லுங்கள்.'' என்று கேட்டுக் கொண்டாள். ''உதி தயவு பண்ணி என்மேல் கோபப் படாமல் என் மகளைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யுங்கள். உதி ப்ளீஸ்!'' என்றாள் கணவனிடமும்.



''என்னவோ, உன்பிள்ளை உன்பிள்ளை என்கிறாயே, நீ மட்டும் தனியாகவா அவளைப் பெற்றாய்'' என்றான் உதயன் சுள்ளென்று.

மதுரிமா திகைத்து அவனைப் பார்க்க, ''என்ன நேரத்தில் என்ன பேச்சு இது?'' என்று சாவித்ரி மகனைக் கண்டித்தாள். ''குழந்தையைக் கண்டுபிடிக்க இப்போது என்ன செய்யப் போகிறாய்? அதை முதலில் சொல்லு.''

திகைப்பு அடியோடு மாறி ஆவலும் ஏக்கமுமாய் உதயனைப் பார்த்தாள் மதுரிமா.

''அப்பாவுடைய சிநேகிதர் பிரபு உங்களுக்குத் தெரியுமல்லவா? இப்போது டிஐஜியாக இருக்கிறார். அவரைக் கொண்டு பார்க்கலாம் என்று நினைக்கிறேன்'' என்று தாயிடம் சொல்லிவிட்டு, ''விபுவின் போட்டோ ஏதாவது இருக்கிறதா?'' என்று மனைவியிடம் கேட்டான் உதயசந்திரன்.

''இருக்கிறது, இருக்கிறது'' என்று அவசரமாகக் கைப்பையைத் திறந்து சில புகைப்படங்களை மதுரிமா எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

கவனத்துடன் மாறாத முக பாவனையுடன் அவற்றைப் பார்த்துவிட்டு இரண்டை மட்டும் வைத்துக்கொண்டு மற்றதைத் தாயிடம் கொடுத்தான்.

''பார்த்துக் கொண்டிருங்கள், நான் அப்பாவிடம் பேசி தேட ஏற்பாடு செய்துவிட்டு வருகிறேன்'' என்றுரைத்துச் சென்றான்.

படங்களைப் பார்த்த சாவித்ரி, ஏதோ யோசித்துவிட்டு, ''இதோ வருகிறேன்'' என்று மதுரிமாவிடம்

மொழிந்துவிட்டு அவளும் மகனைத் தொடர்ந்து உட்புறம் சென்றாள்.

அவள் சென்ற திசையை வெறித்து நோக்கினாள் மதுரிமா. இதே உரிமையோடு அவளும் உள்ளே சென்றிருக்கக் கூடும்தான். இப்படித் தனித்திருந்து தவிக்கத் தேவையே இல்லை. ஆனால், அதற்கும் கொடுப்பினை இருக்க வேண்டும் அல்லவா? அது இல்லாதபோது அவள் தானாக வந்து, இந்த ஹாலில் அமர்ந்திருப்பதே கேவலம்தான்.

ஆனால், இதைவிடக் கேவலத்தைக் கூட அவள் அனுபவிக்கத் தயார்தான். அவளுடைய செல்லமகன் மட்டும், நல்லபடியாகக் கிடைத்துவிட்டால் அதற்கு இந்த விலை வெறும் தூசு!

தலையை இரு கைகளாலும் அழுந்தப் பற்றியபடி மதுரிமா தவிப்புடன் காத்திருந்தாள்.

தந்தையின் அறைக்கதவைத் தட்டிவிட்டு அவர் அனுமதியின் பேரில் உதயசந்திரன் அறையினுள் சென்றான்.

''அப்பா...'' என்று அழைத்துப் பேசத் தொடங்கியவனின் பேச்சைக் கையுயர்த்தி ராகவன் நிறுத்தினார்.

''நீ சொல்ல வருவது என்னவென்று எனக்குத் தெரியும்!'' என்றார் அவர்.

''அப்பா... ஓ அங்கே வந்தீர்களா?''

அவர் ஒப்புதலாகத் தலையசைத்து விட்டு, ''சும்மா கொஞ்சம் நடக்கலாமே என்று வந்தேன் காதில் விழுந்தது''



என்றார் எதையும் காட்டாத குரலில்.

''ஏதாவது சீக்கிரம் செய்ய வேண்டும் அப்பா. பிரபு அங்கிளிடம் சொல்லி நடவடிக்கை எடுக்கச் சொல்லுகிறீர்களா?'' என்று கேட்டபடி 'செல்'லை எடுத்தான்.

''அவர் நம்பர் என்ன அப்பா?''

''பிரபுவை அழைக்கு முன் பிள்ளை இருப்பதை உறுதி செய்து கொள்'' என்றார் தந்தை.

''அப்பா, அவள் துடியாய் துடிக்கிறாள் அப்பா!''

''அந்தக் குடும்பத்தில் இதைவிட அதிகம் துடித்து நான் பார்த்திருக்கிறேன். விட்டுப் பிரிந்தால் தூக்குப் போட்டுச் செத்துவிடுவதாகக் கழுத்தில் கயிறு அழுந்துகிற வரை தொங்கி நடித்து உன் சித்தப்பாவைப் பிடித்தவள் இவளுடைய பெரியம்மா. இவளை எப்படி நம்புவது?''

''அப்பா!'' என்றபடி தொப்பென அமர்ந்தான் உதயசந்திரன். ''சும்மாவே நான் உள்ளூர ஆடிப் போய் இருக்கிறேன். தயவு பண்ணி நீங்கள் வேறு என்னைக் குழப்பாதீர்கள் அப்பா. தாங்க முடியவில்லை!'' என்றான் களைத்த குரலில்.

''உன்னைக் குழப்புவது என் நோக்கமல்ல உதயா. நீ நன்றாக சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதுதான் என் நோக்கமும். ஆனால் ரகு போல நீயும் ஏமாந்து விடக்கூடாதே என்றுதான் பார்க்கிறேன்.'' என்றார் தந்தை.

''என்னத்தைப் பார்த்தீர்கள்? முதலில் இந்தப் படங்களைப் பாருங்கள். தீபா ஜாடை - உங்களைப் போலச் சாயல் தெரியவில்லை?...'' என்று அவரது

பேச்சைக்கவனித்திருந்துவிட்டுப் படபடத்த மனைவியின் பேச்சில் ராகவன் குறுக்கிட்டார்.

''இன்றைய கம்யூட்டரை வைத்துக்கொண்டு எத்தனையோ சாயல்களை உருவாக்கிவிடலாம்'' என்றார் வறண்ட குரலில்.

''செய்யலாம். ஒத்துக் கொள்கிறேன். இது உதயனுடைய பிள்ளைதான் என்று நானும் உறுதியாகச் சொல்லவில்லை. ஆனால், எப்படியும் ஒரு தாய் பிள்ளைக்காகத் தவிக்கிறாள். உதவி கேட்கிறாள் செய்ய வேண்டாமா? அவள் சொல்வதெல்லாம் மெய்யாகவே இருந்துவிட்டால்? உதயன் பிள்ளையைக் காப்பாற்றாமல் விட்டு விட்டோமே என்று பின்னொரு காலத்தில் மனம் வெகுவாக மறுகும்படி ஆகிவிடாதா? கடவுளே என் பேரன்! அவனை ஒருதரம் கண்ணால் பார்க்கக் கூட இல்லையே! முருகா!'' என்று ஒரு வேதனையான முனகலில் பேச்சை முடித்தாள் சாவித்ரி.

''நீ வக்கீலுக்குப் படித்திருக்க வேண்டும். சரியான பாயிண்டில் பிடிக்கத் தெரிகிறது'' என்றார் ராகவன் வறண்டதொரு குரலில். பிறகு, மகனிடம் திரும்பி, ''பிரபுவைக் கூப்பிடுமுன் அவனிடம் என்ன என்ன சொல்ல வேண்டும் என்று தெளிவுபடுத்திக் கொண்டாயா?'' என்று கேட்டார்.

''உண்மையைச் சொல்லவேண்டியதுதானே அப்பா! என் திருமணம் தோல்வியில் முடிந்தது அவருக்குத் தெரிந்த விஷயம். இப்போது மது, மதுரிமா சொன்னதையும் அப்படியே தெரிவித்துவிட வேண்டியதுதான்!''

''இம்.'' என்று ராகவன் நண்பருடன் தொடர்பு



கொண்டார்.

பேசி முடித்துவிட்டு, ''முதலில் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தாரை அனுப்பி விசாரிக்கச் சொல்கிறாராம். அதற்குள் நமக்கு முக்கியமான சந்தர்ப்பங்களில் 'செக்யூரிட்டி'க்கு ஏற்பாடு பண்ணுவோமே, அவர்களைக் கூப்பிட்டு அந்தப் பெண் சொன்ன இடத்திற்குப் போய் விசாரித்துவிட்டுத் தகவல் கொடுக்கச் சொல்லு. அதன்பிறகு, மேலே நடவடிக்கை எடுக்கலாம்'' என்றார் மகனிடம்.

மறுத்துப் பேசாமல் அவர் சொன்னதைச் செய்துவிட்டு எழுந்தான் உதயன்.

ஹாலில் காத்திருப்பவளிடம் போய்ச் சொல்ல வேண்டும்.

அப்புறம்?

அவளது தவிப்பை எண்ணும்போது 'உன் வீட்டிற்குப் போ' என்று அவளைத் தனியே அனுப்புவது அரக்கத்தனமாகப்பட்டது.

ஆனால், வீட்டில் தங்க வைப்பது என்னவோ வேறுபாடாகப் பொருத்தமற்றுத் தோன்றியது.

மூன்றாண்டுப் பிரிவு அவளை மிகவும் அன்னியமாக்கி விலக்கி நிறுத்தியது.

யோசித்த வண்ணமே, தாயைப் பார்த்தபோது அவளும் அதே குழப்பத்தில் இருப்பதை அவனால் உணர முடிந்தது.

எப்படியும் என்ன நடக்கிறது என்று கூடத் தெரியாமல் மதுரிமாவைத் தனியே காக்க வைத்திருப்பது சரியல்ல என்று உணர்ந்து எழுந்தான்.

பாவம்! என்னமாய்த் தவித்துக் கொண்டிருக்கிறாளோ!

அவன் ஓர் எட்டு எடுத்து வைக்குமுன் ராகவன் லேசாகத் தொண்டையைக் கனைத்தார்.

நின்று பார்த்த' மகனைக் கூர்ந்துவிட்டு, ஒன்றும் சொல்லாமலே தலையசைத்துவிட்டு மனைவியைப் பார்த்தார். ''இரவு சாப்பாடு எனக்கு இங்கே அறைக்கே அனுப்பிவிடு'' என்றவர் அத்துடன் பேச்சு முடிந்தது என்பதுபோல அடையாளமிட்டு வைத்திருந்த புத்தகத்தைக் கையில் எடுத்தார்.

அவரது பேச்சின் பொருள் மனைவி மகன் இருவருக்குமே புரிந்தது. அவ்வளவு நேரம் ஆனபின், உணவு கொடுக்காமல் வீட்டுக்கு வந்த ஒருவரை வெறும் வயிற்றோடு சாவித்ரி அனுப்பமாட்டாள். ஆனால் அந்தப் பெண் மதுரிமாவோடு அமர்ந்து சாப்பிட அவருக்கு விருப்பம் இல்லை என்று சொல்லாமல் சொல்லுகிறார்.

சாவித்ரிக்குக் கணவரின் போக்குப் பிடிக்கவும் இல்லை. அதே சமயம் அவரைக் குறை கூறவும் அவளால் முடியவில்லை. ஏனெனில் ஒரே தம்பியிடம் அவர் உயிரை வைத்திருந்தது அவளுக்கு நன்றாகவே தெரியும்!

பேசாமல் தலையாட்டிவிட்டு சாவித்ரி செல்ல, அதுவரை தயங்கி நின்ற மகனும் கூடச் சேர்ந்து வெளியேறினான்.

அவர்கள் இருவரையும் பார்த்ததுமே அவசரமாக எழுந்து, ''உங்கள் அதிகாரி என்ன சொல்லுகிறார்? என் பிள்ளை கிடைத்து விடுவானா?'' என்று உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு என்பார்களே அது போலக் கண்ணில் வைத்துக்கொண்டு கேட்டாள்.



''பிரபு அங்கிள் மூலமாக உன் பகுதி காவல் நிலையத்திலிருந்து விசாரணை தொடங்க ஏற்பாடு செய்திருக்கிறது.'' என்று அவன் சொல்லி முடிக்கும்முன் மதுரிமா கைப்பையை எடுத்துக்கொண்டு கிளம்ப ஆயத்தமானாள்.

''ரொம்ப நன்றி உதயன், நான் உடனே கிளம்புகிறேன். அங்கே காவல் நிலையத்திலிருந்து வரும்போதே விபுவின் ஃபோட்டோ கொடுக்க மற்ற விவரங்கள் தர நான் அங்கே இருக்கவேண்டுமே...'' என்று சொல்லிக் கொண்டே கைப்பையைத் திறந்து ஒரு காகிதத்தை எடுத்து என்னவோ எழுதத் தொடங்கினாள்.

''எப்படிப் போவாய்?''

''ஆட்டோவில்தான் இங்கிருந்து அங்கே போக அதிகச் செலவுதான். ஆனால் பஸ்சுக்கு நின்றால் ரொம்பவும் தாமதமாகிவிடும்.''

காரில் போனால்?

சீக்கிரமாக அவளுக்குச் செலவின்றிப் போய்விடலாம். ஆனால் அவள் அதைக் கேட்கவில்லையே! பால்பென்னை மூடிக் கைப்பையுள் திணித்தவள் காகிதத்தை கணவனிடம் நீட்டினாள். ''பக்கத்து வீட்டு ஃபோன் நம்பர். நான் லேசில் பயன்படுத்துவது இல்லை. ஆனால் இந்தச் சமயத்தில்...'' என்றவள் கீழுதட்டைப் பற்களால் அழுத்தி நடுக்கத்தைச் சமாளித்து, ''கூப்பிட்டால் சொல்லுவார்கள். இங்கே... இங்கே நடப்பதை எனக்குச் சொல்லுங்கள் வந்து ரொம்ப தாங்க்ஸ் வருகிறேன்.'' என்று வாயில்புறம் திரும்பியவள் லேசாகத் தடுமாறினாள்.

ஆனால், விரைவிலேயே அதைச் சமாளித்து கால்களை அழுந்தப் பதித்து முடிந்த அளவு வேகமாக நடக்கலானாள்.

இறுகி நின்ற மகனின் புறம் ஒரு பார்வையைச் செலுத்திய சாவித்ரி சட்டென முன்னே வந்து ''சற்றுப் பொறு மதுரிமா!'' என்றாள்.

உதயன் கண்ணை மூடித் திறப்பதை ஓரக் கண்ணால் கவனித்துவிட்டு, ''அங்கே உன் இடத்தில் கெட்டுப் போகிற சாமான்... சாப்பாடு ஏதும் செய்து வைத்திருக்கிறாயா?'' என்று வினவினாள்.

சாப்பாடா? அப்படி ஒன்று இருப்பதே அவளுக்கு எங்கே நினைவு வந்தது?

மறுப்பாய் மதுரிமா தலையசைக்கவும், ''பின்னே இங்கேயே தங்கிவிடேன்.'' என்றாள் சாவித்ரி.

உதயனும்கூட இதை எதிர்பார்க்கவில்லை. தந்தை அவ்வளவு வெளிப்படையாக, வெறுப்பைக் காட்டியதால் அவனே தயங்கிக் கொண்டிருந்தான். அவனுக்கே அவளை எந்த அளவுக்கு நம்புவது என்று தெரியாத நிலையும்கூட.

ஆனால், இந்த நிலைமையில் மதுரிமாவைத் தனியே விடவும் அவனுக்கு மனமில்லை. இருதலைக் கொள்ளி எறும்பாய், அவன் தவித்துக் கொண்டிருந்தபோது தாயார் கை கொடுத்தது அவனுக்கு மிகுந்த ஆறுதலை அளித்தது.

தந்தைக்கு விருப்பம் இராதுதான். ஆனால் விஷயத்தை எடுத்துச் சொல்லி ஏற்க வைக்கத் தாயால் முடியும். தந்தையும் நாகரீகம் அற்றவர் அல்ல.

ஆனால், மதுரிமா அங்கே தங்குவதற்கு லேசில் ஒத்துக் கொள்ளவில்லை.



கடைசியாக அவ்வப்போது நடப்பதை உடனுக்குடன் தெரிவிக்கவும் அவசரத்துக்கு ஏதும் தகவல் அறியவும் அவள் அங்கே இருப்பதுதான் வசதி என்று உதயசந்திரன் எடுத்துக் கூறியதை அவளால் ஏற்க முடியவில்லை.

டெலிஃபோனில் சொல்ல முடியாததா?

''சொல்லலாம். ஆனால், என் மனைவியைக் கூப்பிடு. கூப்பிடு என்று அடுத்தவரிடம் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டிருக்க என்னால் முடியாது. அங்கே, அடிக்கடி வந்து போவது என்றாலும் அங்கே சூழ இருப்போரின் வம்பு வாய்க்கு அவலாக இருக்க எனக்கு விருப்பம் இல்லை. ஒன்று என் சொல் கேட்டு நடந்து விபுவைத் தேடும் பொறுப்பை என்னிடம் விடு. இப்படித் தட்டித் தட்டிப் பேசுவதானால் அவன் பிறந்ததைக் கூடத் தெரியாமல் இவ்வளவு காலம் நீயே வளர்த்தது போல இதையும் நீயேதான் பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கும்'' என்றான் அவன் கடுமையான குரலில்.

அவள் திகைத்து நோக்கவும், ''இதோ பார் இந்த நிலையில் உன்னிடம் இப்படிக் கடுமையாகப் பேச எனக்குப் பிரியம் இல்லை. ஆனால் நீயும் கொஞ்சம் உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். காரணம் இல்லாமலா அம்மா உன்னை இங்கே தங்கச் சொல்வார்கள்? ஒவ்வொன்றுக்கும் என்னிடம் வாதாடிக் கொண்டு இருப்பதானால் பிறகு, அதற்குத் தான் நேரம் இருக்கும். முக்கியமானதைப் பற்றி யோசிக்கக் கூட முடியாது'' என்று மறத்த குரலில் கூறவும், அதற்குமேல் மதுரிமா வாதாடவில்லை.

ஒருவேளை அன்றைய நிலையில் வீடு சென்று தன்னந்தனியே பிரச்சினையை எதிர்நோக்கும் தெம்பு

தனக்கு இப்போது இல்லை என்பதை உணர்ந்ததாலும் அவள், இச்சமயம் கணவன் வீட்டில் இருக்க ஒத்துக் கொண்டிருக்கலாம். ஆனால், உரிமை இருந்தும், அந்த உரிமையை அடுத்தவர் பரிதாபப்பட்டு பிச்சையாக இட அதை ஏற்று அங்கே தங்குவதும் அவளுக்கு மிகவும் வெறுப்பாகத்தான் இருந்தது.



## 8

மதுரிமா இந்த வீட்டு மருமகள். அவள் விரும்பி யிருந்தால் அவளை அந்த வீட்டை விட்டு வெளியேற்ற அவள் கணவன் உட்பட யாருக்கும் உரிமை கிடையாது. ஆனால் ரோஷத்தோடு, அதை அலட்சியம் செய்து விலகிப் போனவள், இன்று பிச்சைக்காரி மாதிரி அந்த வீட்டினரின் உதவி கேட்டு வர நேர்ந்ததும், அவர்கள் 'ஐயோ பாவம்' என்று அவளை அங்கேயே தங்கச் சொல்வதும் அதை ஒத்துக் கொள்ளும்படி ஆனதும் அவளுக்கு சகிக்க முடியாத அவமானமாக இருந்தது.

ஆனால், மிஞ்சி மிஞ்சி நாலைந்து நிமிஷங்கள்தான் அதெல்லாம் அவள் நினைத்து அவள் குன்றியது. அதற்குள்ளாக விபுவின் நினைவு அவளை மறுபடியும் அலைக்கழிக்கத் தொடங்கிவிட்டது.

பிள்ளை நினைவில் தவித்துக் கொண்டிருந்தவளுக்கு உணவு எப்படி இறங்கும்? அன்றி அதுதான் உரிமையும் பிரியமுமாக அளிக்கப்பட்ட உணவா?



உணவருந்த வருமாறு அழைத்ததே அவளுக்கு வெறுப்புதான். விபுவைக் கடத்திச் சென்ற ராட்சசர்கள் அவனுக்கு உண்ண ஏதும் கொடுத்தார்களோ இல்லையோ? அந்த அரக்கர்கள் கொடுத்தாலும் அவன் அதை உண்டானோ என்னவோ?

பிள்ளை உண்டானோ இல்லையோ என்று தெரியாமல் அவளுக்கு மட்டும் இங்கே தொண்டைக்குள் என்ன இறங்கும்? எப்படி இறங்கும்?

ஆனால், வேண்டாம் என்றால் அதற்கு ஏதேனும் சொல்லுவானோ என்றஞ்சி மறுக்காமல் தட்டின் முன் அமர்ந்துகொண்டாள் மதுரிமா.

அவள் உணவை அளைந்தபடி உட்கார்ந்திருந்ததைக் கவனித்த உதயசந்திரன் வேறு கோபம் கொண்டான்.

''ஏன்? நீ பட்டினி கிடந்தால் பிள்ளை வந்து விடுவானா? அப்படி ஏதும் விரதம் கிரதம் இருந்தால் சொல்லு நானும் சேர்ந்து பட்டினி கிடக்கிறேன்.'' என்றான் எரிச்சலாக.

நீர்த் திரையிட்டிருந்த விழியுயர்த்திப் பார்த்துவிட்டுப் பேசாதிருந்தாள் அவள்.

ஒரு வினாடி தயங்கிவிட்டு, ''இதோ பார் இங்கேயும் யாரும் இப்போது உணவில் ஆசைப்பட்டு உண்ணவில்லை மதுரிமா. செயல்படச் சக்தி வேண்டும். சக்திக்கு உணவு வேண்டும் என்பதுதான். அப்படி நினைத்துச் சாப்பிடு'' என்றான் அவன் சற்றுத் தணிவாக.

''முடியவில்லை'' என்றாள் அவள் தடைப்பட்ட குரலில்.

பெற்றவள் வேதனை அதிகம்தான். ஆனால் அதற்காக அவள் பட்டினி கிடக்குமாறு விடமுடியாதே!

போரூர் வரை சென்று காவல் நிலையத்தில் நேரடியாக விசாரித்து வரலாம் என்று எண்ணினேன். நீ இப்படிப் பட்டினி கிடந்து உயிரைவிட முயற்சிக்கும்போது எப்படிப் போவது?'' என்றான் அவன் அலுப்புடன்.

''அப்படி ஒன்றும் செத்துவிட மாட்டேன் நீங்கள் போங்கள்'' என்றாள் அவள் அவசரமாக.

''நீ சாப்பிட்டு முடித்த பிறகு போகிறேன்'' என்றான் உதயன் அசையாமல்.

அவனது இளக்கமற்ற முகத்தை ஒருதரம் பார்த்துவிட்டு அவசரமாக இட்டிலியைப் பிட்டு வாயில் அடைத்துக் கொண்டாள் மதுரிமா.

அது தொண்டையில் விக்கவும் தண்ணீரைக் குடித்து விழுங்கினாள்.

தட்டிலிருந்த மூன்று இட்டிலிகளையும் இவ்வாறே வேகமாக விழுங்கி முடித்துவிட்டு, ''இப்போது கிளம்புகிறீர்களா?'' என்று கேட்டாள் அவள்.

''கிளம்புகிறேன்'' என்று அவன் எழவும் ''அவளைச் சொல்லிவிட்டு நீ செய்கிறாய் பார். முதலில் உட்கார்ந்து தட்டில் மீதி இருப்பதைச் சாப்பிட்டு முடித்துவிட்டு அப்புறம் கிளம்பு'' என்று தாய் சொன்ன பிறகே, அவன் தட்டிலும் உண்ட மீதம் இருந்தது மற்ற இருவர் கண்ணிலும் பட்டது.

அவசரமாய் அள்ளிப் போட்டுக் கொண்டவனிடம், ''மதுரிமாவையும் கூட அழைத்துப் போ'' என்றாள் சாவித்ரி.



மகனும் மருமகளும் வியந்து நோக்கவும், ''அவளுக்கு மாற்று உடைகள் சீப்பு பிரஷ் எல்லாம் வேண்டுமில்லையா? அந்த இன்ஸ்பெக்டர் சொல்வதையும் நேரில் கேட்டால் உன் மனைவிக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருக்கக் கூடும்.'' என்றாள் சாவித்ரி.

எப்படியும் அவர்களுக்குப் பேரன் என்பதால் அவனைத் தேடுவதற்கு உதயசந்திரனுடைய பெற்றோர் உதவுவதை மதுரிமா ரொம்பவும் உயர்வாக மதிப்பிட்டுவிடவில்லை. ஆனால் மகனோடு வேண்டாத மருமகளை உடன் அனுப்புவது மதுரிமாவுக்கு வியப்பை அளித்தது. பேரனைத் தேடித் தந்தாலும் கணவன் மனைவியைப் பிரித்து வைக்க எண்ணுவதுதானே மருமகளை விரும்பாத மாமன், மாமியாருக்கு இயல்பாக இருக்க முடியும்?

இந்த மாமியார் மருமகளைக் கூட்டிப் போகச் சொல்லுகிறாளே! அத்தோடு மருமகளின் நிம்மதி பற்றி வேறு பேசுகிறாள்!

சாவித்ரி பேசும்போது தோன்றிய வியப்பும் தொடர்ந்த எண்ணங்களும் தோன்றிய வினாடியிலேயே மதுரிமாவின் மனதில் பின்னிடத்துக்குப் போயின.

மகனைத் தேடித் தருமாறு காவல் நிலையத்துக்கு அலைந்தது நினைவுக்கு வந்தது.

அந்த இன்ஸ்பெக்டர்! அன்னாடம் காய்ச்சி! உன் பிள்ளையைப் போய் மெனக்கெட்டு எவன் கடத்துவான் என்று கேட்டாரே! அதைவிட அநியாயம் பக்கத்தில் ஏரி, குளம், குட்டை இருந்தால் அதில் தேடிப்பார் என்று அவர் கூறியது.

அதில் நடுங்கிப் போய்த்தானே மதுரிமா கணவரிடம் ஓடியது!

கடவுளே! அப்போது எப்படிக் கலங்கிப் போனாள்!

மேலதிகாரியின் உத்தரவோடு போகிறார்களே இப்போதும் அப்படியே பேசுவாரா?

நல்லவேளை! உதயன் கூட இருப்பான். அந்த அதிகாரி அப்படிப் பேசினால் தட்டிக் கேட்பான். ஆனால், ஆதரவற்ற பெண்களிடம் வீரம் பேசும் இந்தப் பேடிகள் உதயனைப் போன்ற ஆண்களிடம் வாலை ஆட்டி வழிவதுதான் வழக்கம்! இந்த அதிகாரி எப்படி என்று பார்க்க வேண்டும்.

எப்படி இருந்தாலும் விபுவைக் கண்டு பிடித்துத் தந்துவிட்டால் அதுபோதும் அவளுக்கு.

இந்த இரு தினங்களாக அவளை உதாசீனப் படுத்தியதையெல்லாம் அடியோடு மறந்து விடுவாளே!

முதலில் வேகமாகக் காரை ஓட்டிய உதயசந்திரன் சாலையின் இரு புறமும் மதுரிமா கூர்ந்து நோக்கித் தேடுவதைக் கண்டதும், வேகத்தை வெகுவாகக் குறைத்தான். இரண்டு மூன்று வயது சின்னக் குழந்தைகளைக் காணுகையில் கார் ஊர்ந்தது எனலாம்.

ஆயினும் தேடல் பயனற்றுப் போய்விடக் கரித்துக் கொண்டு வந்த கண்களைக் கணவன் அறியாமல் துடைத்தாள் மதுரிமா. முகம் இறுகக் காரைக் காவல் நிலையத்தின் முன் நிறுத்தினான் உதயன்.

கிணறு, குளம், குட்டைகளில் தேடச் சொன்ன அந்த போலீஸ் அதிகாரி பொது விதிகளுக்குச் சற்றும் முரண்பாடாக இருக்கவில்லை.



காரைக் கண்டதுமே எட்டிப்பார்த்த மனிதர் வந்திருப்பது இன்னார் என்று அறிந்ததும் ஏகப்பட்ட உபசாரம் செய்தார். 'நெஸ்கஃபே' காஃப்பி வரை வந்தது.

''உங்கள் விஷயமாகத்தான் முழு மூச்சில் வேலை செய்து கொண்டிருக்கிறேன். சார், 'ட்யூட்டி' நேரமும் முடிந்தும் உட்கார்ந்திருக்கிறேன் பாருங்கள். கவலைப் படாதீர்கள். உங்கள் பிள்ளையைக் கண்டுபிடித்துத் தர நானாயிற்று. மேடத்தையும் பயப்படாமல் இருக்கச் சொல்லுங்கள். அவர்கள், முதலிலேயே முழு விவரத்தையும் ஒழுங்காகச் சொல்லியிருந்தால் இப்போது மகனைக் கையில் கொடுத்திருப்பேன். ஆனால் அதற்கென்ன? எங்களை மீறி எவன் எங்கே கொண்டு போய்விடுவான்?'' என்று உரத்த குரலில் அளந்தார்.

கெஞ்சிக் கதறியதைக் காது கொடுத்துக் கேட்கக்கூட நேரமில்லை என்று விரட்டிவிட்டு என்ன பேச்சு பேசுகிறான் என்று மதுரிமாவுக்குக் கொதித்துக் கொண்டு வந்தது. ஆனால் அதைச் சொல்லி இந்த ஆளை விரோதித்துக் கொள்வதால் விபுவைக் கண்டுபிடிப்பதில் ஏதாவது தடை ஏற்பட்டுவிடக் கூடுமோ என்ற எண்ணத்தில் அவள் அது பற்றி ஒன்றுமே பேசாமல் இருந்து விட்டாள்.

உதயனும் அதைப் போலவே எண்ணியவன் போன்று முன் நடந்தது எதையும் பற்றிக் குறிப்பிடாமல், ''பையனைக் கண்டுபிடிக்க இப்போது என்னென்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறீர்கள்?'' என்று மட்டும் கேட்டான்.

''தாடியையும் குழந்தையையும் பற்றி, எல்லா போலீஸ் ஸ்டேஷனுக்கும் தகவல் கொடுத்தாகிவிட்டது.

தாடிக்காரன் எவனாவது இரண்டு வயதுப்பிள்ளையோடு இருந்தால் பிடித்துக்கொண்டு வரும்படிச் சொல்லிவிட்டேன். வெளியில் தலை காட்ட முடியாது. அவனால்!'' என்று தன் திறமை குறித்துப் பெருமை பேசிக் கொண்டார் அந்த அதிகாரி.

ஒட்டுத்தாடி என்று பேசிக் கொண்டதை நினைத்துக் கவலையுடன் மதுரிமா கணவனைப் பார்த்தாள்.

மேஜை மறைவில் அவள் கையைப் பற்றி லேசாக அழுத்திவிட்டு, ''சரி உங்களால் முடிந்தவரை பாருங்கள். நான் அங்கிளிடம் விவரம் கேட்டுக் கொள்கிறேன்.'' என்று எழுந்தான் உதயசந்திரன்.

கூடவே எழுந்து, ''அங்கிள் கிட்டே எதற்கு? அப்பப்போ நானே உங்களைக் கூப்பிட்டுச் சொல்கிறேன். ஆனால் சார், பையன் உங்கள் குழந்தை என்று மேடம் முதலிலேயே சொல்லியிருந்தா.. அம்மா நிலைமைக்கு ஏன் கடத்தப் போறானுங்க என்று நான் நினைத்தது சரியாகிப் போயிற்று. எப்பவும் இந்தப் பால்ராஜ் ஒன்று சொன்னால் அது சரியாகத்தான் சார் இருக்கும். இப்ப கூட என்ன? கீழே உள்ளவர்கள் கொஞ்சம் விட்டேத்தியாக இருந்து விட்டார்கள். ஆனாலும், ஒன்றும் பயமில்லை சார். கடத்திக்கொண்டு போன பயல் பணம் கேட்டு ஃபோன் பண்ணட்டும். சுற்றி வளைத்துக் கட்டாயம் பிடித்து விடுகிறேனா இல்லையா பாருங்களேன்!'' என்று ஜம்பம் அடித்தார் அதிகாரி.

வறட்டு ஜம்பம் என்று கசப்புடன் எண்ணினாள் மதுரிமா.



கார் வரை வந்து அதிகாரி வழியனுப்பி வைக்க கார் கிளம்பிச் சிறிது தூரம் செல்லும்வரை மதுரிமா ஒன்றுமே பேசவில்லை.

பிறகு, ''இவரால் விபுவைக் கண்டு பிடிக்க முடியும் என்று எனக்கு தோன்றவில்லையே உதி.'' என்றாள் கண்ணீர்க் குரலில்.

'ஸ்டியரிங் வீலில் இருந்து ஒரு கையை எடுத்து அவள் கரத்தைத் தட்டிக் கொடுத்தான் உதயன். பிறகு, ''கட்டளைகள் சொல்லும்போது அதன் விளைவே இவரிடம் கூட வேறு மாதிரி இருக்கும்'' என்று அவளைத் தேற்றினான். ''அங்கிள் வீடு கூட வழியில்தான் இருக்கிறது. அவரைப் பார்த்துவிட்டே போகலாம்'' என்று அவர் வீட்டுக்குக் காரை ஓட்டினான்.

சிறு மௌனத்தின் பின், ''நம் வீடு பற்றி யாரிடமும் சொன்னாயா?'' என்று கேட்டான். ''அதாவது விபு என் பிள்ளை, யார் பேரன் அதெல்லாம்?''

'என் பிள்ளையாம்.'

சுள்ளென்று துளிர்த்த கோபத்தை முடிந்தவரை அடக்கிக் கொண்டு, ''இல்லை!'' என்றாள் அவள் சுருக்கமாக.

''யாரிடமுமே சொன்னதில்லையா. ரொம்பவும் நெருக்கமாகப் பழகும் சினேகிதிகளிடம்... ஏதாவது...''

இன்னார் மனைவி என்று பெருமையடித்தாயா என்று கேட்கிறானா?

''அதென்ன பெருமைப்படுகிற விஷயமா?'' என்றாள் அவள் வெறுப்புடன். ''என் கணவர் என்னை விரும்பவில்லை என்பது எனக்குக் கேவலம்தானே? விபு அப்பா

மிலிட்டரியில் இருப்பதாகத்தான் எல்லோரும் நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதற்கு மேல் நான் எதுவும் சொன்னதில்லை. ஆண்டுக்கு ஒருதரம் லீவு போட்டுவிட்டு விபுவோடு எங்காவது போய்வருவேன். விபு அப்பா ஊருக்குப் போய் வருட விடுமுறையில் வந்திருக்கும் அவரோடு லீவைக் கழித்துவிட்டு வருவதாக எல்லோரும் எண்ணிக் கொள்வார்கள். நான், அவர்களை திருத்துவதில்லை. அப்படியே நினைத்துக் கொள்ளட்டும் என்று விட்டுவிடுவேன்...'' என்று சொல்லிக்கொண்டே வந்தவள் சட்டென உடல் இறுகி, ''பணத்துக்காக இல்லை என்றால் கை, காலை உடைத்து ஊ.. ஊனமா... க்கத்தானே? ஊனமாக்கிப் பிச்சை எடுக்க வைக்க... அம்மா கடவுளே, முருகா,'' என்று தவிப்புடன் முனகினாள்.

போலீஸ் அதிகாரி பிரபு படுக்கப் போகிற நேரம்.

அந்த நேரத்தில் தொந்தரவு செய்வதற்காக உதயன் மன்னிப்புக் கேட்டபோது, ''போலீஸ்காரன் வைத்தியனுக்கெல்லாம் தூங்குகிற நேரம் என்று தனியாகக் கிடையாதுப்பா. கிடைத்த நேரத்தில் தூங்கிக் கொள்ள வேண்டியதுதான்'' என்றார் அவர்.

மதுரிமாவை ஒருதரம் கூர்ந்து நோக்கிவிட்டு, ''இரண்டுபேரும் உள்ளே வாருங்கள் என்ன சாப்பிடு கிறீர்கள்?'' என்று உபசாரம் செய்தார்.

''இருக்கட்டும் அங்கிள், ஆன்ட்டியை வேறு தொந்திரவு செய்ய வேண்டாம். இங்கே வராண்டாவிலேயே இருந்து பேசிவிட்டுப் போகிறோம். இவள்...''

''உன் மனைவி தெரிகிறது. உன் பிள்ளை இன்னும் கிடைக்கவில்லையே என்ற தவிப்பு அவளுக்குத் தாங்க முடியவில்லை அதுதானே?''



''அது மட்டும் அல்ல அங்கிள். இவள் இருந்த பிரியா நகர் காவல் நிலையத்துக்குப் போய்விட்டுத் தான் வந்தோம்... அங்கே...''

''ஓகே! அங்கே அந்தக் கிறுக்கன் பால்ராஜைப் பார்த்துப் பேசினீர்களாக்கும். கொஞ்சம் பேதி மருந்து சாப்பிட்ட மாதிரி இருக்குமே!'' என்றார் இலகுவாக.

சட்டென்று மதுரிமா அவர் காலில் விழுந்தாள்.

''ஷ்ஷ் என்னம்மா இது?'' என்று அவர் பின்னே நகரவும் அவரை அண்ணாந்து பார்த்து, ''சார் நீங்கள்தான் என் விபுவை எப்படியாவது கண்டுபிடித்துக் காப்பாற்றித் தரவேண்டும் சார். என் வாழ்வின் ஒரே ஆதாரம் அவன்தான். அவன் இல்லாவிட்டால் அப்புறம் எனக்கு ஒன்றுமே இல்லை சார். நான் உயிரோடு இருப்பதிலேயே அர்த்தம் இல்லை சார்!'' என்றாள் கண்ணீர் பொங்கி வழிய.

பிரபு யோசனையோடு உதயனைப் பார்க்க அவன் அவளைக் கைபற்றி எழுப்பிவிட்டான்.

''இரண்டு நாட்களாகப் படாதபாடு பட்டுவிட்டாள் அங்கிள். உங்களுடைய கிறுக்கன் பால்ராஜ் வேறு'' என்றான் மனைவியின் நடத்தைக்கு விளக்கமாக.

தலைகுனிந்து நின்றவளும் மெல்ல விழி உயர்த்தி பிரயாசையோடு பேசினாள். ''மன்னித்துக் கொள்ளுங்கள் சார். நா...ன்... என்னால் தாங்க முடியவில்லை. சார் விபு என்....'' என்றவள் மேலே பேச முடியாமல் உதட்டைக் கடித்துக் கொண்டு நின்றாள்.

''பரவாயில்லை, இருவரும் உட்காருங்கள்'' என்று அங்கே கிடந்த பிரம்பு நாற்காலிகளைக் காட்டி விட்டுத் தானும் ஒன்றில் அமர்ந்தார் அவர்.

''உதயா ம.... மதுரிமாதானே பெயர்? இருவரும் கவனியுங்கள். உங்கள் மகனை அந்தத் தாடிக்காரன்தான் கடத்திப் போயிருக்கிறான். ஆட்டோவில் அவன் பையனோடு செல்வதை ஓரிருவர் கவனித்திருக்கிறார்கள். ஆனால், பையன் சிரித்துக் கொண்டு இருக்கவும் யாரும் சந்தேகப்படவில்லை. எனவே ஆட்டோ நம்பரையும் குறித்து வைக்கவில்லை.''

''அப்படியென்றால், க... க... வந்து கண்டுபிடிக்க முடியாது என்கிறீர்களா?'' என்று பயந்த குரலில் மதுரிமா கேட்டாள்.

''முடியாது என்று இல்லையம்மா, கண்டுபிடிப்பதில் சிரமம் கொஞ்சம் அதிகம். பையனுக்கு ஒரு வயது கூடுதலாக இருந்திருந்தால் வேற்று ஆளோடு போக மறுத்து அழுதிருப்பான். மற்றவர்கள் கவனித்திருப்பார்கள். துப்புக் கிடைப்பது இலகுவாக இருந்திருக்கும். ஆனால், அதற்காக உடனே பயந்துவிட வேண்டாம். உதயன் மகனுக்கு வயது இரண்டு என்பதில் ஒரு நன்மையும் இருக்கிறது. பிள்ளையைக் காட்டிப் பிச்சை எடுக்க இன்னும் சின்னப் பிள்ளை என்றால்தான் வசதி. தூக்குவதற்குச் சிரமமாக இருக்கும். அதேபோலப் பிச்சை எடுக்கப் பழக்கவும் இன்னும் ஓரிரண்டு வயது கூடுதலாக இருப்பதுதான் வசதி. இப்படிச் செய் என்றால் புரிந்து கொள்ள வேண்டும் அல்லவா?''

''அப்படியானால் ஊனமாக்கி அந்த மாதிரிக்



கொடுமையெல்லாம் நடக்காது என்கிறீர்களா?'' என்று நம்பிக்கையில் கண்கள் மலர அவசரமாகக் கேட்டாள் மதுரிமா.

''அப்படியென்று ஒரேயடியாக உறுதியாகச் சொல்ல முடியாது'' என்றார் பெரியவர்.

மதுரிமாவின் முகம் மீண்டும் வாடிக் கூம்பியது.




பிரபு தொடர்ந்து பேசினார்.

''நூறு சதவீதம் அப்படித்தான் என்று எதையுமே சொல்லிவிட முடியாதும்மா. விதி விலக்கு எதிலேயும் இருக்கத்தான் செய்யும். அதனால், அந்த மாதிரியான சந்தேகம் உள்ள இடங்களிலும் தேடலைத் தீவிரப்படுத்தியிருக்கிறேன். ஆனால் நீ சற்று நன்றாக யோசித்துச் சொல்லு. பையனுடைய அப்பா குடும்பம் பற்றி நீ யாரிடமும் சொன்னதே இல்லையா?'' என்று கேட்டார் பிரபு. ''ஏனென்றால், பணம் பறிப்பதுதான் கடத்தலின் காரணமாக இருக்கும் என்பதுதான் எங்களின் பெரும்பான்மை அபிப்பிராயமாக இருக்கிறது'' என்றார் தொடர்ந்து.

கணவனைத் திரும்பிப் பார்த்தாள் மதுரிமா.

காரணம் புரிந்தவனாக, ''அங்கிளுக்கு நம் கதை, கிட்டத் தட்டத் தெரியும்'' என்றான் அவன் உணர்ச்சியற்ற குரலில்.

ஒரு கணம் மதுரிமாவின் முகத்தில் சீற்றம் தெரிந்தது.

தனியாக இருந்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கைவிட்ட கதையை தம்பட்டம் அடித்தார்களாக்கும்! எத்தனை பேரிடம்.

உடனேயே அந்த எண்ணத்தைப் போக்குபவள் போன்று தலையை உலுக்கி விட்டுக் கொண்டாள்.

பிறகு, ரொம்பவும் யோசித்து விட்டு, ''நான் யாரிடமும் சொன்னதில்லை, சார்'' என்றாள் உறுதியாக.

''நீ?'' என்று உதயனிடம் விசாரித்தார் பிரபு.

''என்ன அங்கிள் நீங்கள்? எனக்கு ஒரு குழந்தை இருப்பதே இவள் இன்று வந்து சொன்ன பிறகுதானே தெரியும்? இருப்பதே தெரியாததைப் போய் நான் யாரிடம் எப்படிச் சொல்ல முடியும்?''

''ம்ம்ம், இங்கேதான் எல்லோரும் குழம்புகிறோம்!'' என்றார் பிரபு யோசனையாக. ''பணத்துக்காக என்பதும் அடிபட்டுப் போனால் வேறு எதற்காக விபுவைக் கடத்த வேண்டும்?'' என்றவர் மதுரிமாவைப் பார்த்து, ''உனக்கு யாரேனும் விரோதிகள் இருக்கிறார்களா அம்மா?'' என்று வினவினார்.

''மூன்று ஆண்டுகளாக நான் யாரிடமும் அதிகப் பேச்சே வைத்துக் கொள்வதில்லையே சார், விரோதம் எங்கிருந்து வரும்?'' என்றாள் அவள்.

''அதற்கு முன்னால்?''

''இந்த ஊருக்கே வரவில்லை; பங்களூரிலும் பழகிய எல்லோருமே நண்பர்கள்தான். யாரிடமும் சாதாரண மன வேறுபாடு கூட வந்ததில்லை.''



''உதயனைத் தவிர'' என்று அவள் எண்ணியதை மற்ற இருவராலும் ஊகிக்க முடிந்தது.

''ம்ம்ம்... இது நாசுக்குப் பார்க்கிற நேரமில்லையம்மா, நீ தனியாய் இருக்கிறாய் மெலிவாக இருந்தாலும் அழகாகவும் இருக்கிறாய். உன்னிடம் யாரேனும் வாலாட்டி... அப்படி யாரேனும் இருந்தால் மறைக்காமல் சொல்லிவிடு. உன்னைப் பழிவாங்கவென்று அப்படிப் பட்டவர்கள் பிள்ளையைக் கடத்தவும் வாய்ப்பிருக்கிறது'' என்றார் அவர்.

முகம் கன்றிச் சிவந்த போதும் மதுரிமா நிமிர்வுடனே பதில் சொன்னாள். ''நான் தனியாக இருந்த போதும், திருமணமானவள். அதிலும் மிலிட்டரிக்காரர் மனைவி என்றுதான் எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கிறார் கள். அப்படிப்பட்டவளிடம் யாரும் வாலாட்டுவார்கள் என்று எண்ணுகிறீர்களா சார்? நம் நாடு இன்னும் அவ்வளவு கெட்டுப் போகவில்லை என்றுதான் நான் நினைக்கிறேன்'' என்று கம்பீரமாகக் கூறியவளின் முகம் உடனே கசங்கியது. 'ஆனால், பச்சைப் பிள்ளையைக் கடத்திப் போய் விட்டார்களே!' என்றாள் தீனமாக.

உதயன், அவள் கையை இறுகப் பற்ற, 'ஊகூம்' என்றார் பிரபு. ''எவ்வளவோ கெட்டிக்காரத்தனமாகச் செயல்பட் டிருக்கிறாய் என்று மனதில் நினைக்குமுன் கோழை போலக் கலங்குகிறாயே! தைரியமாக இரம்மா, உன் பிள்ளை கிடைத்து விடுவான்'' என்று உறுதி கூறினார்.

முதல் தடவையாக, 'உன் பிள்ளை' என்று அவளிடம் குறிப்பிடுகிறார் என்று அடிக்கோடிட்டது மதுரிமாவின் மனது.

அதுவரை மொத்தமாக உங்கள் பிள்ளை என்றார். அல்லது உன் மகன் என்று உதயனிடம் கூறினார். இப்போதென்ன புதிதாக அவள் உயர்ந்து விட்டாள் என்று ஒரு புறம் ஏளனமாக எண்ணிய போதும் மறுபுறம் மகனைப் பற்றிய தவிப்பே மேலோங்கியது.

''ஒன்றும் புரியாத நிலை என்கிறீர்களே?'' என்று கவலையோடு அந்தப் பேச்சை விடாமல் தொடர்ந்தாள்.

''புரியாத நிலை என்றால் அத்தோடு விட்டுவிடுவோமா என்ன? வேறு கோணத்தில் இருந்து ஆராய வேண்டியதுதான். இப்போது மூன்று ஆண்டுகளுக்கு முந்திய கதையை ஆராயலாம். அப்போது உங்கள் பழக்கம் யார் யாருக்குத் தெரியும்?'' என்று விசாரித்தார் போலீஸ் அதிகாரி.

உதயசந்திரனும் மதுரிமாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

திரை விழுந்த முகத்துடன், ''என் பெற்றோரும் சகோதரனும் அப்போது ஆஸ்திரேலியாவில் இருந்தார்கள். இப்போதும் அங்கேதான். அவர்களுக்கு விஷயம் தெரியும். வேறு உறவினர்கள் எனக்குப் பழக்கம் இல்லை. தொடர்பும் இல்லை. மற்றபடி யாருக்கும் மறைத்துப் பழக வேண்டிய தப்புக் காரியமாக நான் நினைத்ததில்லை. அதனால் ஒளிவு மறைவுக்கு முயற்சித்ததும் இல்லை'' என்றாள் உணர்ச்சியற்ற குரலில் மதுரிமா.

''பங்களூரில் என்னை யாருக்கும் தெரியாது அங்கிள். அம்மா, அப்பாவிடம் சொல்லிச் சமாதானப்படுத்தி விட்டுத்தான் மற்றவர்களிடம் சொல்ல வேண்டும் என்று இருந்ததால் பெரிதாக விளம்பரப்படுத்திக் கொண்டது



இல்லை. திருமணத்துக்கு சாட்சிக் கையெழுத்து ஹோட்டல் நிர்வாகி போட்டார். அவர் இன்னமும் அங்கேதான் வேலை பார்க்கிறார். அவர் இந்த மாதிரிக் காரியம் செய்யக் கூடியவர் அல்ல என்பதோடு விபு விஷயம் அங்கேயும் யாருக்கும் தெரிய வாய்ப்பில்லையே!'' என்று உதயன் தன் விளக்கமாகச் சொல்லிவிட்டு, ''என்ன அங்கிள் ஒரு துப்பும் கிடைக்கக் காணோமே!'' என்றான் கவலையோடு.

''கிடைக்கும்'' என்றார் பிரபு நம்பிக்கையோடு. ''எப்படியும் பையனைக் கடத்திப் போனவர்கள் எதற்காகக் கடத்திப் போனார்களோ, அந்த நோக்கத்தை நிறைவேற்ற முயற்சி செய்யாமல் சும்மாவே இருந்து விட மாட்டார்கள். மற்ற முயற்சியைத் தொடங்கும்போது நிச்சயமாகப் பிடித்து விடலாம். பழி வாங்குவது வாரிசை அழிப்பது என்ற எதுவும் இல்லாததால் குழந்தை உயிருக்கு ஆபத்து இல்லை என்று நிம்மதியாக இருங்கள்'' என்றவர் மதுரிமாவைப் பார்த்து, ''பாரம்மா பிள்ளை கைக்கு வரும்வரை, கவலைப்படாமல் இருக்க முடியாதுதான். ஆனால், உண்ணாமல் உறங்காமல் கிடந்து உடம்பைக் கெடுத்துக் கொள்வது முட்டாள்தனம். நாளைக்குப் பிள்ளை கிடைக்கும் போது அதைக் கவனிக்கக் கூடத் தெம்பில்லாமல் போய்விடும். அத்தோடு மகன் சாப்பிட்டானா இல்லை பட்டினியே போட்டு விட்டார்களா என்றெல்லாம் அவசியமற்றுக் கவலைப் படாதே. பிள்ளையைப் பட்டினி போடவென்று யாரும் கடத்திப் போக மாட்டார்கள். அவனை வைத்துக் காரியம் சாதிக்கக் கடத்தியவர்கள் அவனது ஆரோக்கியம் கெட விட்டு விடவும் மாட்டார்கள். எனவே, அந்த மாதிரிக் கலங்குவதை விடுத்து சற்று அமைதியாக இருந்து நன்றாக

யோசித்துப் பார். வழக்கத்துக்கு மாறாக சமீப காலத்தில் ஏதாவது நடந்ததா, வேற்று ஆட்கள் யாராவது உன்னுடன் பேசினார்களா, யாரேனும் பின் தொடர்ந்த மாதிரி தோன்றியதா.. இதுபோல் எதுவானாலும் அது மிகவும் சின்ன விஷயமே. ஆனாலும் ஒன்றுமில்லை என்று அலட்சியப் படுத்தாமல் என்னிடம் சொல்லு. வீட்டுக்குப் போன பிறகு நினைவு வந்தால் இவனிடம் சொல்லு'' என்று கூறி முடித்தார்.

மதுரிமா யோசனையில் ஆழ்ந்தாள்.

பிறகு நிமிர்ந்து, ''வேற்று ஆட்கள் என்று யாரும் இல்லை அங்கிள். ஆனால் பல ஆண்டுகளுக்குப் பிறகு என் உறவினர் ஒருவரைப் பார்த்தேன். ஆனால் அவரிடமும் நான் விபுவுடைய அப்பா பற்றிப் பேசவில்லை. மற்றவர்களிடம் சொன்ன மாதிரி ராணுவத்தில், இருப்பதாகத்தான் சொன்னேன். அப்புறம் அவரையும் நான் பார்க்கவில்லை. இது நடந்து சில... நாலு மாதங்களேனும் இருக்கும். ஆனால் சமீப காலத்தில் சுமார் பத்து நாட்களாக, நீங்கள் சொன்ன மாதிரி யாரோ பின் தொடருகிற உணர்வு எனக்கு ஏற்படத்தான் செய்தது. திரும்பிப் பார்த்தால் குறிப்பிடும்படியாக என்னைப் பார்த்தபடி யாரும் இருக்க மாட்டார்கள். அதனால் சும்மா வெறும் பிரமை என்று எண்ணிக் கொண்டேன்... நீங்கள் சொல்லுவதைப் பார்த்தால்... அங்கிள் யாரோ நிறைய நாள் திட்டம் போட்டு விபுவைக் கடத்தியது போலல்லவா தோன்றுகிறது?''. என்று கவலையுடன் மதுரிமா கேட்டாள்.

''அப்படித்தான். சரியாக, அந்த நேரத்தில் டெலிஃ போன் செய்தானே அந்தப் பையனும் வில்லனுக்கு



உதவியிருக்கிறான்...''

''யார்? வாசுவா? கொஞ்சம் கஷ்டப்பட்ட குடும்பம்! ரொம்பத் தீவிரமாகப் படிப்பான்! இருந்திருந்து அவனா? ஆனால் அங்கிள் இப்போது அவனைப் பிடித்துவிட்டால் விபுக் குட்டியையும் சீக்கிரம் கண்டு பிடித்துவிடலாம் தானே?'' என்று ஆவலுடன் கேட்டாள், மதுரிமா.

''அவனைப் பிடித்து நாலு உதை உதைத்தால் விஷயம் தானாக வெளிவந்து விடுமல்லவா அங்கிள்?'' என்று உதயனும் வினவினான்.

அவன் தோளில் ஆறுதலாய்த் தட்டி, ''அவன் வெறும் கருவிதான் உதயா. 'சந்தேகம் கேள், பணம் தருகிறேன்' என்றிருக்கிறார்கள். கஷ்டப்பட்ட குடும்பம் என்றாளில்லையா? தேவை! மசிந்து விட்டான். அதற்கு மேல் அவனுக்கும் ஒன்றும் தெரியவில்லை. முடிந்த அளவு நீ சொன்ன மாதிரிகூட விசாரித்தாயிற்று. நாடிக்காரன் வந்து குறிப்பிட்ட நேரத்தில் சந்தேகம் கேட்பது போலப் பேச்சுக் கொடுக்கச் சொன்னான் என்பது தவிர அவனால் ஒன்றும் விவரம் சொல்ல முடியவில்லை'' என்றார் அவர்.

''ஐயோ! கஷ்டப்பட்ட குடும்பம் முன்னேறத் துடிக்கிறான் என்று அவனுக்கு எத்தனை முறை எவ்வளவு சொல்லிக் கொடுத்திருப்பேன்? பாவி! என் தலையிலேயே நெருப்பைக் கொட்டி விட்டானே! என்ன அநியாயம்!'' என்று குமுறினாள் மதுரிமா.

நல்லது என்று எண்ணிச் செய்யப் போய், மரணகாயம் பட்டுவிட்ட கொதிப்பு!

அவளை இரக்கத்துடன் பார்த்துவிட்டு, ''உலகம் நியாயத்தின் வழியில் இயங்குவதாக உனக்கு யாரம்மா சொன்னார்கள்? அப்படி இயங்குவதானால் மான் என்ன தப்பு செய்து புலிக்கு ஆகாரமாகிறது? இதெல்லாம், 'கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்' மாதிரி சமாசாரம்தான். தேவையற்று இதை நினைத்து மனதைக் குழப்பிக் குமுறி, மேலும் உன்னைத் துன்புறுத்திக் கொள்ளாமல் நம்பிக்கையோடு காத்திரு'' என்றார் பிரபு.

பேச்சு முடிந்து விட்டது என்பது புரிந்து மதுரிமா மெல்ல எழுந்து நின்றாள்.

கூடவே எழுந்து, ''நாங்கள் உங்களைத்தான் நம்பியிருக்கிறோம் அங்கிள்'' என்றான் உதயசந்திரன்.

''இன்றைக்குச் சென்னையில் எத்தனை போலீஸ்காரர்கள் உங்கள் பிள்ளையைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்கிற விவரம் தெரிந்தால் அவன் கிடைப்பது பற்றி நீ கவலையே படமாட்டாய்'' என்றார் பிரபு.

அந்தப் பால்ராஜின் நினைவு வர, ''தாடிக்காரனோடு இருக்கும் விபுவை அல்லவா தேடுகிறார்கள் அங்கிள்! அவன் தாடியை எடுத்திருந்தால்? அப்போது எப்படிக் கண்டுபிடிப்பது?'' என்று உதயன் கேட்டான்.

''அதற்குக் கூட சலூன்கள் எல்லாவற்றுக்கும் ஆள் அனுப்பியிருக்கிறோம். ஆனால் அது ஒட்டுத் தாடியாக இருந்தால்தான் கஷ்டம்! சலூன் வழி பயன்படாது. ஆனால், நாம் அந்த ஒரு வழியை மட்டுமாக நம்பிக் கொண்டிருக்கவில்லையே! தைரியமாக இருங்கள்'' என்று வழியனுப்பி வைத்தார் பெரியவர்.



ஒட்டுத் தாடியாக இருந்தால் அவர்களுக்குக் கஷ்டம் என்று தன் பல ஆண்டு அனுபவத்தை அடிப்படையாக வைத்துத்தான் பிரபு சொன்னார். ஆனால் அந்த ஒட்டுத் தாடியே அவர்களுக்குப் பெரும் உதவி செய்யப் போகிறது என்பது அவர் உள்பட அப்போது யாருக்குமே தெரியாது!

இருவரும் திரும்பி வந்தபோது சாவித்திரி அவர்களுக்காகக் காத்திருந்தாள்.

விவரங்கள் அறியவும் கைகளிலேயே இருந்த புகைப்படத்தை ஒரு தரம் பார்த்துவிட்டு, ''கவலைப் படாதேம்மா. பிரபு சும்மா விட்டு விட மாட்டார். எப்படியும் குழந்தை கிடைத்துவிடுவான்'' என்று தேற்றிப் பேசி லேசாக முறுவலித்தாள்.

முறுவலின் பொருள் புரிந்தாற்போல மதுரிமாவின் முகம் சற்றே சிவந்தது. தலை குனிந்தவாறு, ''சாரி அப்போது நான் மிகவும் கலங்கிப் போயிருந்தேன்'' என்றாள் மெல்லிய குரலில்.

''சேச்சே. அதைக் குறிப்பிடுவதற்காக நான் சிரிக்கவில்லை மதுரிமா. உன்... உங்கள் இருவர் முகங்களுமே சற்றுத் தெளிந்தாற்போல இருக்கவும் எனக்கும் மனதுக்கு நன்றாக இருந்தது. அவ்வளவுதான்'' என்று சாவித்ரி இதமாகப் பேசியதும் சின்னவளுக்கு ஆறுதலாகவே இருந்தது.

''விபு கிடைத்துவிடுவான் என்பதில் பிரபு அங்கிள் நிச்சயமாக இருக்கிறார் அம்மா'' என்றான் உதயசந்திரன்.

''இங்கேயும் ஃபோன் செய்தார் மதுரிமா. மகனைக் 'க்ரெஷ்'ஷில் விட்டுப் பழகியதால் விபு மற்றவரிடம்

சாப்பிடக் கஷ்டப் படமாட்டான் என்றார். அதுவும் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது'' என்றாள் சாவித்ரி.

மெய்தானே என்று மதுரிமாவும் மனதுள் அமைதியடைந்தாள்.

அதனாலேயே, ''அப்போது சாப்பிட்டது இருவருக்குமே வயிற்றுக்குப் போதாது. உணவருந்தி வெகு நேரமும் ஆகிவிட்டது. இரண்டு பேரும் கொஞ்சம் பால் குடியுங்கள்'' என்று சாவித்ரி கொடுத்தபோது மறுக்காமல் குடிக்கவும் மதுரிமாவால் முடிந்தது.

இரவில் படுத்து உறங்குவது பற்றிய பேச்சு எழுகையில் மீண்டும் மதுரிமாவின் முகம் கலங்கலாயிற்று.

ஆனால், அதை எதிர்பார்த்து பிரபுவின் திறமை பற்றிப் பேசி எப்படியும் விபுவை அவர் கண்டு பிடித்து விடுவார் என்று சாவித்ரி கூறவும் மதுரிமா மறுபடியும் அமைதியானாள்.

''விபுவைப் பற்றி ஏதாவது தகவல் வந்தால் இரவில் எந்த நேரமானாலும் என்னை எழுப்பிச் சொல்லுங்கள்'' என்று கேட்டுக் கொண்டவளுக்குப் படுக்கையில் படுக்கக் கூட மனம் வரவில்லை.

மகன் அருகில் இல்லாத இரண்டு நாள்த்தனிமை இவளை அரள வைத்திருந்தது.

இன்று மூன்றாவது நாள்! எப்படி சமாளிப்பது?

அதற்காக, யாராவது துணையிருங்கள் என்று கேட்டால் தவறாக நினைக்க மாட்டார்களா?

கணவனைப் பிடிக்க முயற்சிக்கிறாள் என்று கூட எண்ணலாம்!



உள்ளூரத் தவித்தபடி மதுரிமா நிற்கையில் சாவித்ரி உள்ளே வந்தாள்.

''படுத்துக் கொள்ளம்மா. நானும் உன்னோடு இங்கேயே தூங்கப் போகிறேன்'' என்று அவள் கூறவும் மனப்பாரம் குறைந்தவளாய்ப் படுக்கையில் அமர்ந்தாள் மதுரிமா.

சும்மா பெயருக்காகக் கூடப் 'பரவாயில்லை நான் தனியே இருந்து கொள்வேன்' என்று அவள் கூறவில்லை!

முன் இரு தினங்களைப் போல முழு விழிப்பும் நடுக்கமுமாக இரவு கழியவில்லை என்றாலும் நன்றாகத் தூங்கவும் மதுரிமாவால் முடியவில்லை.

கொஞ்ச நேரம் தூங்குவதும் இடையிடையே எழுந்து சற்று நேரம் உட்கார்ந்திருப்பதுமாக அவளது அன்றைய இரவு கழிந்தது.

மறுநாள் காலை பதினோரு மணி வரையும் கூட மதுரிமாவால் பெருமளவு சாதாரணமாகவே இருக்க முடிந்தது. குறைந்த பட்சமாக அப்படிக் காட்டிக் கொள்ள முடிந்தது.

அதன் பிறகு, 'இன்னும் ஒரு தகவலையும் காணோமே!' என்று வெளிப்படையாகவே அலைபாயத் தொடங்கி விட்டாள்.

''உங்கள் பிரபு அங்கிளுக்கு ஃபோன் செய்து கேட்டால் தப்பாகத் தோன்றுமா?'' என்று உதயனிடம் முதல் முறை தயக்கத்துடன் கேட்டவள், அடுத்த ஒரு மணி நேரத்தில் மூன்று தரம் கேட்டுவிட்டாள்.

A-PDF Merger DEMO : Purchase from www.A-PDF.com to remove the watermark



ராகவன் வழக்கம்போலக் காலையில் அலுவலகம் சென்றிருந்தார்.

அவருக்கு வேலைப் பளு அதிகரித்து விடாமல் தலைமை நிர்வாகியிடம் தன் அலுவலையும் சேர்த்துக் கவனித்துக் கொள்ளச் சொல்லிவிட்டு வீட்டிலிருந்த உதயசந்திரனுக்கு உள்ளூரக் கவலைதான். ஆனால் பிரபு இயன்றவரை எல்லாம் செய்வார் என்றும் அறிந்திருந்த தால் அவரைத் தொந்தரவு செய்யவும் அவனுக்குப் பிடிக்கவில்லை.

அத்தோடு இன்னொன்றும், -

இரண்டு ஆண்டுகளாக அந்தக் குழந்தையின் பேச்சு, சிரிப்பு, விளையாட்டு எதையுமே பார்த்து ரசிக்க பெற்ற தந்தை அவனோடு அந்த வீட்டில் யாருக்கும் கொடுத்து வைக்காமலே போய்விட்டதே!

அவன் மகனுக்கும் அது நஷ்டம்தானே?

எவ்வளவோ அருமை பெருமைகளோடு வளர வேண்டியவன்! அவனைக் 'கிரஷ்'ஷில் விட்டு சரியான பாதுகாப்பின்றி வெளியே விளையாடவிட்டு... அப்படியெல்லாம் அவன் வளர வேண்டுமா?

இப்போது அவனைப் பார்க்க முடியாமலே போய்விடுமோ என்ற எண்ணம் வேறு அவ்வப்போது தோன்றி அவனைக் கதி கலங்கச் செய்தது.

இங்கே வளர்ந்திருந்தால் இப்படி நடந்திருக்குமா? இப்படிச் செய்து விட்டாளே என்றும் எண்ணி எண்ணி உள்ளூரத் தவித்தான்.



ஆத்திரம் கூட வந்தது.

ஆனால் அவள் இருக்கும் நிலைமையில் இதையெல்லாம் அவளிடம் கேட்க எண்ணுவது கூடப் பாவம்தான்!

கணவன் மனைவி இருவரும் ஒவ்வொரு விதமாகத் தவித்துக் கொண்டிருந்தபோது, இன்ஸ்பெக்டர் பால்ராஜ் அங்கே வந்து சேர்ந்தார். ''இந்தப் பால்ராஜ் ஒன்று சொன்னால் சொன்னது அப்படியே நடக்கும் என்றேனே! நடந்ததா இல்லையா?'' என்றார் தடாலடிப் பேச்சுடன்.

நல்ல சேதி சொல்லப் போகிறார் என்று அறைக்குள்ளிருந்து மதுரிமா ஓடி வர அதே எண்ணத்தில் உதயசந்திரனும் ஆவலாக அதிகாரி பால்ராஜைப் பார்க்க அவர் அணுகுண்டு வெடித்தார்.

''அன்றைக்கே நான் அம்மாவிடம் சொன்னேன். முதலிலேயே பலான இடங்களில் தேடிவிட்டு அப்புறம் எங்களிடம் வாருங்கள் என்று! அதே மாதிரி இப்போது ஒரு சின்னப் பிள்ளையின் உடம்பு கிடைத்திருக்கிறதாம். அடையாளம் காட்ட வாருங்கள்'' என்றார் தெளிவாக.

மதுரிமா மயங்கி விழுந்த விதத்தில் அலங்காரமாய் வைக்கப்பட்டிருந்த சிறு உலோக மேஜையின் முனையில் அவள் தலை மோதியது.

அந்தச் சலவைக்கல் தளம், அவள் விழுந்த இடத்தில் செந்நிறமாக மாறத் தொடங்கியது.




சற்று நேரம் அந்த வீடு அல்லோல கல்லோலப் பட்டது.

மயங்கி விழுந்த மனைவியிடம் ஓடி வந்து அவள் தலையை நேராக வைத்துவிட்டு பூஜாடியில் இருந்த பூக்களை எடுத்து எறிந்துவிட்டு அதிலிருந்த தண்ணீரை அவள் முகத்தில் தெளித்தான்.

சுரீலென நீர் பட்ட வேகத்தில் கண் திறந்த மதுரிமா, ''விபு..'' என்று ஈனஸ்வரத்தில் முனகிவிட்டு மீண்டும் கண்மூடி மயக்கத்தில் ஆழ்ந்தாள்.

செய்வதறியாமல் திகைத்து நின்ற வேலையாளிடம், ''அம்மாவைக் கூப்பிடு'' என்று அதட்டிவிட்டு மதுரிமாவைத் தூக்கி நீண்ட சோஃபாவில் கிடத்தினான் உதயன்.

''சார் சார் சோஃபா எல்லாம் ரத்தக் கறையாகி விடுமே'' என்று அவனைத் தடுக்க முயன்ற பால்ராஜைத் தோளால் ஒதுக்கிவிட்டு மனைவியைப் படுக்க வைத்தவன் பாண்ட் பாக்கெட்டிலிருந்த ஒரு வெண்ணிறக் கைக்குட்டையை எடுத்து மதுரிமாவின் நெற்றிக் காயத்தில் வைத்து அழுத்தி ரத்தப் பெருக்கை நிறுத்த முயன்றான்.

வேலையாள் மூலம் விவரம் அறிந்தபடி உள்ளிருந்து வேகமாக வந்த சாவித்ரி உள்ள நிலைமையை ஒருதரம்



கண்காணித்துவிட்டு டெலிஃபோனை எடுத்துப் பேசினாள்.

குடும்ப மருத்துவரை வரச் சொல்லிவிட்டு தரையைத் துடைக்குமாறு ஏவிய பிறகே இன்ஸ்பெக்டரை உட்காரச் சொன்னாள் சாவித்ரி.

நன்றாக உட்கார்ந்து கொண்டு, ''ஊம் என்றால் மயக்கம் போட்டு விழுந்து விடுவது இப்போது ஃபேஷன் ஆகிவிட்டது. விழுகிறவர்கள் கொஞ்சம் பார்த்து விழக் கூடாது? தலையில் வேறு அடி பட்டுவிட்டது. இந்த அம்மாள் எப்போது எழுந்து, எப்போது வந்து அடையாளம் காட்டப் போகிறார்கள்?'' என்று அலுத்துக் கொண்டார் அவர்.

''என்ன அடையாளம்?'' என்று கேட்ட சாவித்ரி மகனின் சுருக்கமான விளக்கத்தில் முகம் வெளுத்த போதும் கவலையைக் காட்டிக் கொள்ளாமல் வேலையாளை அழைத்து இன்ஸ்பெக்டருக்குக் காபி டிபன் கொண்டு வரச் சொன்னாள்.

அவர் அதை நொறுக்கிக் கொண்டு இருந்தபோது மென் குரலில், ''என்னடா செய்வது? இவள் தாங்கமாட்டாள் போல இருக்கிறதே!'' என்று அவள் கூறிக் கொண்டு இருக்கும்போதே டெலிஃபோன் மணி அடித்தது.

ராகவன்தான். 'யூனிவர்சலி'ல் இருந்து 'ரிப்போர்ட்' கொண்டு வந்திருக்கிறார்கள் என்றார் அவர்.

அவர்களிடம் மகனுக்கு ஏதாவது வேலை இருக்கிறதா என்று விசாரிக்கவே ஃபோன்!

அத்தோடு மதுரிமா பற்றிய விவரங்கள் வந்துவிட்டதையும் அறிவிக்கிறார்.

என்ன விவரம் வந்ததோ?

ஆனால், அப்போதைய மன நிலையில் அதெல்லாம் யோசிக்கத் தோன்றவில்லை அவனுக்கு.

மாறாக, வேறு நினைத்து, ''வழக்கமாக நமக்காக வருகிறவர்கள்தானே? அவர்களை வீட்டுக்கு வரச் சொல்லுங்கள் அப்பா. ஒரு... சிறு வேலை இருக்கிறது. உடனே வரச் சொல்லுங்கள். என்ன விஷயம் என்று பிறகு சொல்கிறேன்'' என்றான் மைந்தன்.

'யூனிவர்சல்' துப்பறியும் நிறுவனத்து ஆட்கள் வந்து சேர்ந்த போது வைத்தியர் மதுரிமாவுக்கு சிகிச்சையைத் தொடங்கியிருந்தார்.

இரு துப்பறிவாளர்களும் வந்ததும் அவர்களிடம் பல புகைப்படங்களை உதயசந்திரன் கொடுத்தான். ''சுந்தர், நாதன்! நீங்கள் இருவரும் இப்போது எனக்கு ஒரு பெரிய உதவி செய்ய வேண்டும். இந்தப் படங்களை எடுத்துக் கொண்டு இன்ஸ்பெக்டருடன் போங்கள். அங்கே அவர் காட்டும் உடல் இந்தப் படத்தில் உள்ள குழந்தையாக இருக்க முடியுமா என்று பார்த்து எனக்குத் தகவல் தெரிவியுங்கள்'' என்றான்.

சற்று திகைத்து நோக்கியபோதும் எந்தக் கேள்வியும் கேளாமல் இருவரும் புறப்படத் தயாரானார்கள்.

ஆனால், ''அதெப்படி சார் முடியும்? தாயோ தகப்பனோ பார்த்துச் சொல்லாமல் அதை நாங்கள் எப்படி அதிகாரப் பூர்வமாகப் பதிவு செய்ய முடியும்? அதிலேயும் நீங்கள் பிள்ளையைப் பார்த்ததே இல்லை என்கிறபோது அந்தம்மாதான் வந்தாக வேண்டும். 'பாடி' வேறு



தண்ணீரிலே ஊறிப் போய் இருக்கிறது! மற்றவர்களுக்குக் கண்டு பிடிக்கிறது கஷ்டம்'' என்று ஆட்சேபித்தார் பால்ராஜ்.

ஆத்திரமுற்றவனாக, ''அதிகார பூர்வ அறிக்கை தயார் செய்யும்போது அந்த அம்மா வர ஏற்பாடு செய்கிறேன். இப்போது இவர்களை அழைத்துக் கொண்டு போங்கள். வேண்டுமானால் டிஜிபியிடம் அனுமதி வாங்கித் தரட்டுமா?'' என்று பிரபுவின் பெயரை, அவன் பயன்படுத்தவும் இன்ஸ்பெக்டர் அடங்கிவிட்டார்.

மூவரையும் அனுப்பிவிட்டு உதயசந்திரன் தலையைப் பிடித்துக்கொண்டு சற்று நேரம் அங்கேயே உட்கார்ந்திருந் தான்.

விஷயம் என்னவாக இருக்கும்?

அந்தக் 'கிறுக்கன் பால்ராஜி'ன் ஊகம் மெய்யாகி விடக் கூடுமா?

பையன் கடத்தப்பட்டது உறுதியாகி விட்டது. கொன்று தண்ணீரில் வீச என்று கடத்துவார்களா?

காரணமின்றி அதுவும் ஒரு குழந்தையை?!

மாட்டார்கள் என்று தன்னைத் தானே அவன் திடப்படுத்திக் கொண்டிருக்கும்போதே கடத்தியவன் மனநிலை சரியில்லாதவனாக இருந்தால் என்ற எண்ணம் தோன்றி அவனைப் பதற வைத்தது.

இருக்காது. அப்படி இருக்காது. மனநிலை சரியில்லாதவனால் அத்தனை சிறுவர்களுக்கும் ஈடு கொடுத்து விளையாட - விளையாட்டுக் கற்பிக்க எல்லாம் முடியாது. முடியவே முடியாது என்று பலமுறை

உருப்போட்டு மனதை அமைதிப் படுத்திக் கொள்ள முயன்றான்.

ஒருவேளை உண்மை அப்படி இருந்தால் மதுரிமா என்ன ஆவாள்?

மதுரிமாவின் சிகிச்சையை முடித்துவிட்டு டாக்டர் விடை பெற்றுச் சென்ற பிறகு சாவித்திரி மகன் அருகே வந்து உட்கார்ந்தாள்.

மகன் லேசாகத் தலை திருப்பவும், ''தூங்குகிறாள். தூக்கத்துக்கு ஊசி போட்டிருக்கிறது! குறைந்தது இரண்டு மணி நேரமேனும் நன்றாகத் தூங்குவாள் என்று டாக்டர் சொன்னார்'' என்றதோடு மௌனத்தில் ஆழ்ந்தாள்.

பதுமைகள் என இருவரும் அசையாமல் அமர்ந்திருக்கையில் ஹால் கடிகாரத்திலிருந்து ஒரு குயில் வெளிவந்து இரண்டு முறை கூவியது.

''இது அதிகம் போக்குவரத்து இல்லாத நேரம். ஆனாலும், அங்கே போய்ச்சேர எப்படியும் ஒரு மணி நேரம் பிடிக்கும்...''

''அந்த பால்ராஜ் இடையில் எங்கேயும் நிறுத்தாமல் இருக்க வேண்டுமே!'' என்றாள் தாயார்.

''கடைசியில் அங்கிள் பெயரைக் கொஞ்சம் சொன்னீர் வந்திருக்கிறேன். அதனால் 'இறுக்குத்தனமும்' செய்யமாட்டார் என்று நினைக்கிறேன். எப்படியும் அங்கே போகவே, குறைந்தது இன்னும் பத்து நிமிஷங்கள் ஆகிவிடும். அப்புறம் சுந்தரும் நாதனும்... ஆராய்ந்து காட்! என்..னம்மா, இது!'' என்றான் அவன் தவிப்புடன்.



''[illegible] தைரியமா இரு கண்ணா'' என்று மகனுக்கும் தனக்குமே தைரியமூட்ட முயன்று தோற்று,

''என்னாலும் பொறுக்க முடியவில்லையடா'' என்று! சாவித்திரியும் கலங்கினாள்.

ஆனால், தொழிலால் மட்டுமின்றி பழக்கத்தாலும் உதயசந்திரனுடன் நல்லுறவு வைத்திருந்த சுந்தரும், நாதனும், இன்ஸ்பெக்டரைச் சீண்டி, வேகமாக ஓட்டச் செய்து, செல்ல வேண்டிய இடத்தைச் சீக்கிரமே சென்றடைந்து விட்டனர். அவ்வாறே தங்கள் ஆய்வையும் விரைந்து முடித்துவிட்டு உதயனுக்கு டெலிஃபோன் செய்தனர்.

ராமாயணத்தில் ஓர் இடம் சீதையைக் கண்டுவிட்டுத் திரும்பிய அனுமன் ராமனிடம் முதல் வார்த்தையாகக் 'கண்டேன் சீதையை' என்றானாம். 'சீதையை' என்று தொடங்கினால் கண்டுவிட்டதான அடுத்த வார்த்தை வரும் வரை ராமன் கலங்கிக் கொண்டிருப்பான் இல்லையா? அதனால் 'கண்டேன்' என்று ஆஞ்சனேயர் பேசத் தொடங்கியதாகக் கூறுவார்கள்.

அதையே பின்பற்றி, ''வேறு குழந்தை சார் அது'' என்றான் சுந்தர்.

அளவற்ற நிம்மதியால் ஒரு கணம் பேச்சிழந்து நின்ற உதயசந்திரன் தாயின் முகத்தைக் கண்டதும் சுந்தரைப் [illegible], 'யாரோ அம்மா அது'' என்றான்.

'அப்பாடி' என்று சாவித்ரியும் நல்லபடி மூச்சு விட உதயசந்திரன் டெலிஃபோனில் பேச்சைத் தொடர்ந்தான்.

''இன்ஸ்பெக்டர் பால்ராஜ் கொஞ்சம் நிதானித்திருந்தால் நீங்கள் இடம் வரவே தேவையில்லை சார். அது ஒரு மாதிரி

மோசமான கேஸ், புருஷன் குடிகாரன். அவளையும் தப்பாகத்தான் சொல்லுவார்கள். குடித்துவிட்டு வந்து இவன் அடிக்கவே பிள்ளையை வீசிவிட்டு அவளும் குதித்து விட்டாள். அவள் உடம்பு இப்போதுதான் வெளியே வந்திருக்கிறது. அதற்குள் இந்த ஆள் இவ்வளவு கூத்தடித்து விட்டார்.'' என்றான் துப்பறிவாளன்.

''முழு நிச்சயம்தானே சுந்தர்?''

''சர்வ நிச்சயம் சார். அந்தக் கேசில் விஷயம் முடிந்தே குறைந்தது நாலு நாட்கள் ஆகியிருக்க வேண்டும். நாதனும் அடித்துச் சொல்லுகிறான். நீங்கள் கவலையை விடுங்கள்'' என்றான் சுந்தர்.

''இவ்வளவு சீக்கிரம் விவரம் சொன்னதற்கு நன்றி சுந்தர். இதை ஒரு தனிக் கேசாக பில் போட்டு அனுப்பி விடுங்கள்'' என்றான் உதயசந்திரன்.

அதெல்லாம் எதற்கு என்று உபசார வார்த்தை ஏதும் சொல்லாமல் ''ஓகே, சார்'' என்றுரைத்து ஃபோனை வைத்தான் சுந்தர்.

நிம்மதிப் பெருமூச்சுடன் உதயசந்திரன் சோஃபாவில் சாய்ந்தான்.

சூடாக ஒரு காஃபியை நீர்க்கக் கலந்து சாவித்ரி கொண்டு வர அதை மெல்ல அருந்தியவாறு தாயும் மகனும் உட்கார்ந்திருந்தபோது ராகவன் அலுவலிலிருந்து திரும்பி வந்தார்.

வழக்கத்துக்குத் தாமதம்தான்.

அப்படித் தாமதமாகத் திரும்பும்போது பட்டினியாய் இராது. மதியத்துக்கு ஏதாவது இலகுவாக வாங்கி உண்டு விடுவது அவரது வழக்கம்.



அந்த வழக்கப்படி நாலு இட்டிலிகளை உண்டு விட்டதாகக் கூறியவர் தமக்கும் காஃப்பி கொண்டுவரச் சொன்னார்.

கலந்து வந்த காஃப்பியைக் கணவன் கையில் கொடுத்துவிட்டு, ''என்ன? உங்கள் 'யூனிவர்சல் ரிப்போர்ட்' என்ன சொல்லுகிறது?'' என்று வினவினாள் சாவித்ரி.

ஒரு மிடறு விழுங்கிவிட்டு, ''எல்லாம் உங்கள் பக்கம்தான் பேசுகிறது'' என்றார் அவர்.

''அப்படியானால் பெண் நல்லவள்தான் இல்லை?'' என்று சாவித்ரி கேட்டாள்.

''நல்லவள், கெட்டவள் தெரியாது. ஆனால் மூன்று ஆண்டுகளாக அவள் சொன்ன அதே இடத்தில்தான் வசிக்கிறாள். தனியாக இருக்கிறாள். குழந்தையும் அவளுடையது தான்...'' என்று மேலே காஃப்பியை அருந்தினார் அவர்.

''அப்படியானால் இனிமேல் மதுரிமாவைப் பற்றிச் சந்தேகப்படத் தேவையில்லைதானே?'' என்றாள் சாவித்ரி.

ஆனால், ராகவன் அதை ஒப்பவில்லை, ''மகன் இருப்பது உண்மைதான். ஆனால் பிள்ளையை அவளே மறைத்து வைத்துவிட்டுப் பணம் பிடுங்குவதற்காக நம்மிடம் நாடகம் ஆடியிருந்தால்?'' என்று கேட்டார் அவர். ''அப்படியில்லை என்று என்ன நிச்சயம்?''

''அப்பா ப்ளீஸ்..'' என்றான் மகன். ''நீங்கள் சொல்லுகிற நாடகத்தை நடத்த இவ்வளவு நாள் மதுரிமா

எதற்காகக் காத்திருக்க வேண்டும்? யோசியுங்கள்! அந்தக் குடும்பத்தைப் பிடிக்கவில்லை என்பதற்காக ஏதாவது சொல்லாதீர்கள் அப்பா. இன்றைக்கு வீட்டில் என்ன நடந்தது என்று தெரிந்தால்...

''எல்லாம் அம்மா சொன்னாள்'' என்றார் தந்தை அசுவாரசியமாக, ''எனக்கு என்னவோ எல்லாம் டிராமா மாதிரிதான் இருக்கிறது.''

வெறித்து நோக்கிவிட்டு, ''உங்களுக்கு அப்படித்தான் இருக்கும்.'' என்றாள் சாவித்ரி சற்று வெறுத்த குரலில்.

அன்று வரையும் அறிந்திராத அந்தக் குரலில் திகைப்புற்று, ''சாவித்ரி!'' என்றார் ராகவன்.

மகனும் அதே திகைப்புடன் நோக்க, ''ஆமாம். அப்படித்தான். அவள் தவிப்பு ஒரு தாய்க்குத்தான் புரியும். நீங்கள் என்ன உடம்பு நோகாமல் பிள்ளை பெறுகிறவர்கள்தானே? உயிரைக் கொடுத்துப் பிள்ளையை நாங்கள் பெற்றால், 'என் பிள்ளை என்று பெருமை மட்டும் பேசிக் கொள்ளுவீர்கள். நொந்து பெறுகிற எங்களுக்கல்லவா, பிள்ளை அருமை தெரியும்?'' என்றாள் உதயனைப் பெற்றவள்.

''எனக்கும் புரிகிறது. அம்மா மது நடிக்கவில்லை. விபு எங்கே எப்படி இருக்கிறானோ என்று எனக்கும் வேதனையாகவே இருக்கிறது'' என்றான் உதயசந்திரன்.

''எனக்கும் தவிப்பாகத்தான் இருக்கிறது'' என்று சொல்லி மற்ற இருவரையும் தன் பங்குக்குத் திகைக்க வைத்தார் ராகவன்.

''அப்பா?!''



''ஆமாமடா. ஒரு வேளை நம் குடும்ப விளக்காக இருந்தால் அதற்கு என்ன ஆயிற்றோ என்ற கவலை எனக்கும்தான். ஆனால், அவள் பெரியம்மாவிடம் பட்ட பாட்டில் அவளுடைய தங்கை மகளை நம்புவது கடினமாக இருக்கிறது. 'உன் தம்பி வந்தால் கூட்டிப் போயேன்! என்று என்னிடமே என்ன இளக்காரமாகச் சொன்னாள் தெரியுமா? பிறகு தம்பியைக் காணோம் என்று போய்க் கேட்டபோது, 'அந்த உதவாக்கரை எங்கே போச்சோ! என்று அலட்சியமாகச் சொன்னாள். ''கண்ட நாய் பேரைச் சொல்லிக்கெண்டு உள்ளே வந்தால் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுவேன்' என்று வேறு சொன்னாள். அதுவும் அவன் கொடுத்த வீட்டிலேயே இருந்துகொண்டு!''

''அவளைச் சும்மாவா அப்பா விட்டீர்கள்?'' என்றான் உதயன் ஆத்திரத்தோடு.

''வேறே என்னடா செய்வது? அதுதான் சட்டப் பிரகாரம் பக்காவாக உன் சித்தப்பன் எழுதிக் கொடுத்திருந்தானே! அதற்கு மேல் நின்று பேசி அவள் சொன்ன அந்த அவமானம் வேறு அனுபவிக்க வேண்டுமா என்று வாயை மூடிக் கொண்டு வந்து விட்டேன். சரி, அதை விடு எனக்குக் கேவலப்படுகிற நேரம் பட்டேன். திரும்பவும் நினைக்கக் கூடாது என்று ஒதுக்கி வைத்திருந்ததுதான். ஆனால், இப்போது... இப்போது நினைக்கக் கூடாதுதான் சொல்லு. என் பேரனை எப்படிக் கண்டு பிடிப்பது? அதை யோசி.'' என்றார் கவலையோடு.

''புரியவில்லையே அப்பா!'' என்றான் உதயன் கவலையுடன். ''விபு கடத்தப்பட்டது தெரிகிறது. ஆனால், கடத்தியவன் இன்னும் தொடர்பு கொள்ளாமல் இருப்பதைப் பார்க்கும்போதுதான் கவலையாக

இருக்கிறது. கடத்தலின் நோக்கம் பணம் இல்லாவிட்டால் வேறு என்னவாக இருக்கும்? இதுவோ அதுவோ என்று ரொம்பவும் பயமாக இருக்கிறது'' என்று கலங்கியபோது அவன் பெற்றோருக்கு அவனே சிறு பிள்ளையாகத்தான் தோன்றினான்.

விளையாட்டில் அடிபட்டு வந்து கண்கலங்கி நிற்கிற சிறுவன்!

ஒரு வித்தியாசம், விளையாட்டில் அடிபட்டபோது அது ரத்த காயமே ஆனாலும் அதற்கு மருந்திட்டு ஆற்ற முடிந்தது.

ஆனால் இப்போது அவர்களும் சேர்ந்து கலங்கினார்கள்.




பெற்றவர்களுக்கும் கலக்கம்தான் என்றாலும் நல்ல வேளையாக இன்ஸ்பெக்டர் மிரட்டின மாதிரி எதுவும் இல்லை என்பது எல்லோருக்குமே ஓரளவு ஆறுதலாகவும் இருந்தது.

ஆனால் மருந்து வேகத்தில் நன்கு உறங்கி எழுந்த மதுரிமாவுக்கு அந்த ஆறுதல் ஏற்பட்டது போலத் தெரியவில்லை.

அவனுக்கு விவரம் தெரிய வந்தது போலவே மதுரிமா கண்விழித்ததும் அவளிடம், ''அது நம் விபு இல்லை...'' என்று அறிவித்தான் உதயன்.



மூடிய இமைகளினூடே கசிந்து வந்த நீரைத் துடைத்துக் கொண்ட போதும், உதயனைப் போலவே அவன் அன்னையைப் போலவே, அப்பாடி என்று மதுரிமா தொய்ந்து விழவில்லை.

தூக்கத்துக்குப் போட்ட ஊசி மருந்து உணர்ச்சிகளைச் சற்று மழுங்கடித்திருக்கும் போல என்று எண்ணிக் கொண்டான் கணவன்.

ஆனால் நடந்தது வேறு.

இன்ஸ்பெக்டர் பால்ராஜின் பேச்சு மதுரிமாவை வேறு மாதிரி பாதித்திருந்தது.

மகன் நல்ல படியாகத் தன்னிடம் வந்து சேரக்கூடும் என்ற நம்பிக்கையையே அது ஆட்டம் காணச் செய்திருந்தது.

இன்று அது போன்ற விபத்துக்கு விபு தப்பியிருக்கலாம். ஆனால், நாளையே அதுபோல நேராது என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது.

அவளைப் போல ஒரு துருதிருஷ்டசாலிக்கு விபு போல ஒரு தங்கக் குழந்தை எப்படி நிலைக்கும்?

கெடுதலையே எதிர்பார்க்கத் தொடங்கிவிட்ட மனதால் நல்லதை முழுதாக ஒத்துக்கொண்டு மகிழ முடியவில்லை!

உடலும் உள்ளமும் கெடுதலைக் கேட்கவே தயாராகத் தொடங்கின.

ஒரு காகத்தின் கத்தல் கூட அந்தக் கெட்ட சேதியின் முன்னறிவிப்பாகவே அவளுக்குத் தோன்றித் தூக்கி வாரிப் போட்டது.

நண்பரைப் பார்த்து உள்ள நிலவரம் சொல்வதற்காகவும் தன் துறையைச் சேர்ந்த ஒருவர் செய்துவிட்ட கலாட்டாவால் கலங்கிப் போயிருக்கக்கூடியவர்களுக்குத் தெம்பூட்டவும் விரும்பி பிரபு நேரிலேயே வந்திருந்தார்.

ஆனால் அவரை நேரில் கண்டதாலேயே மதுரிமா மிகவும் கலங்கிப் போனாள்.

விபுவுக்கு ஏதோ ஆகிவிட்டால் ஆறுதல் சொல்வதற்காக அவர் நேரில் வந்திருப்பதாக எண்ணிய அவளுக்குக் கை கால்கள் நடுங்கவே தொடங்கிவிட்டன.

அவளது வெளுத்த முகத்தைப் பார்த்ததுமே விஷயத்தை ஊகித்து, ''உன் மகனுக்குப் புதிதாக எந்தக் கெடுதலும் நேர்ந்தது விடவில்லையம்மா. பயப்படாதே'' என்று அவளைத் தேற்றி விட்டுத்தான் பிரபு மற்றது பேசவே தொடங்கினார்.

''அன்றைய அளவில் பிரபுவால் குழந்தை பற்றிய எந்தத் தகவலையும் தர முடியவில்லை என்றாலும் மதுரிமா பணி புரிந்த கம்ப்யூட்டர் பயிற்சி நிறுவனத்திற்கு அவளைக் கேட்டு ஒரு ஃபோன் கால் வந்ததாகவும் அது விபுவைக் கடத்தியவனின் முயற்சியாக இருக்கும் என்று எண்ணுவதாகவும் கூறினார்.

எனவே, அடுத்து அவனது முயற்சியைத் தொடங்கக் கூடும் என்று எதிர்பார்ப்பதாகவும், அதனால் கவனத்தோடு இருக்குமாறும் எச்சரித்தார்.

''விபு இந்த வீட்டுப் பையன் என்று தெரியாதபோது அவனது அடுத்த நடவடிக்கை என்னவாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறீர்கள் அங்கிள்?'' என்று உதயன் வினவினான்.



''அப்படி ஒரேயடியாக அவனுக்குத் தெரிந்திராது என்று உறுதியாகச் சொல்ல முடியாது உதயா. ஏனென்றால் மதுரிமா வேலைக்கு வரவில்லை என்றதும், ''அப்படியானால் புருஷன் வீட்டுக்குப் போய்விட்டாளா? என்று அவன் கேட்டிருக்கிறான்'' என்று அவர் கூறவும் எல்லோரும் திகைத்தனர்.

''மதுரிமாவின் கணவன் வீடு இங்கிருப்பது அவனுக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டவர் அவளைப் பார்த்து, ''திரும்பத் திரும்பக் கேட்கிறேனே என்று நினைக்காதேம்மா. ஏதாவது ஒரு வகையில் இந்த வீட்டு விஷயம் வெளியாக வாய்ப்பு இருக்கிறதா என்று நன்றாக யோசித்துச் சொல். ஏனென்றால் அந்த விபரம் தெரிந்தால் உடனே உன் பிள்ளையையே கண்டுபிடித்தவிட்ட மாதிரிதான். பதட்டமின்றிக் கொஞ்சம் நன்றாக யோசித்துச் சொல்லம்மா'' என்றார் பிரபு. ''இங்கு வந்து மூன்று ஆண்டு ஆகிறது என்கிறாய். அந்த மூன்று ஆண்டுகளில்... எப்போதாவது...ம்?''

சற்று நேரம் கண் மூடி யோசித்துவிட்டு மறுப்பாய் தலையசைத்தாள் மதுரிமா.

அவர் யோசனையாக நோக்கவும், ''பாருங்கள் அங்கிள். என் மகனைக் காணோம் என்றதிலிருந்து என் மனம் படும்பாடு அந்தக் கடவுளுக்குத்தான் தெரியும்! அவன் திரும்பக் கிடைப்பதற்கு ஒரு சிறு வாய்ப்பு இருக்கும் என்றால் என் உடல் உறுப்பு ஒன்றை வெட்டிக்கொடு என்றால்கூட உடனே கொடுத்து விடுவேனே, இப்படி ஒரு விவரம் தெரிந்தால், நான் சும்மா இருப்பேனா? அங்கே உங்களுக்கு நேரில் நான் பெரிதாக மறைத்து ஒன்றும் உதயனோடு பழகவில்லை. ஆனால், திருமணத்தை டமாரம்

அடிக்கவும் இல்லை. அவர் பெற்றோரிடம் சொல்லி... அதன் பிறகு மற்றவர்களுக்குச் சொல்லலாம் என்றுச்சு'' என்றவள் ஒரு பெரிய மூச்சை உள்ளிழுத்துக் கொண்டு மேலே பேசினாள்.

''உங்களுக்கு எல்லா விவரமும் தெரியும் என்று உதயன் சொன்னார்... அன்றையப் பிரிவின் பிறகு ஒரு மாதம் நான் அங்கேயே காத்திருந்தேன். நாளுக்கு நாள் நம்பிக்கை குறைந்து கொண்டே போயிற்று. குழந்தை என்று தெரிந்த பிறகு அங்கே இருக்கப் பிடிக்கவில்லை. இந்த வேலை விளம்பரம் பார்த்து முயற்சி செய்தேன். நேர்முகத் தேர்வுக்கு வரும்போதே யோசித்து கணவர் ராணுவத்தில் பணி புரிவதாகச் சொல்லிவிட்டேன். வேலை கிடைத்தது. இவ்வளவு நாள் அதே நிறுவனத்தில்தான் இருக்கிறேன். குடியிருப்பதும் ஒரே இடத்தில்தான். கணவர், மிலிடரிக்காரர் எனும்போது மரியாதையோடு கேட்கும்போது உதவியும் கிடைக்கும். விபு பிறந்தபோது, அக்கம்பக்கத்தார் நன்றாகவே உதவினார்கள். ஆனால், அதற்கு மேல் நான் ஒட்டிப் பழகாததால், குடும்பம் பற்றி யாரிடமும் பேசும்படி நேரவில்லை.

''விபு பிறந்தபோது தந்தை பெயர் உதயசந்திரன் என்று கொடுத்திருப்பது உண்மைதான். ஆனால், உலகில் உதயசந்திரன் இவர் மட்டும்தான் என்று இல்லையே! எனவே அந்தப் பெயரைக் கொண்டு உதயனை இனம் கண்டு பிடித்திருக்க முடியும் என்று நான் நினைக்க வில்லை. மற்றபடி... மற்றபடி இந்த வீட்டுத் தொடர்பு பற்றி நான் வாய் திறந்ததில்லை அங்கிள். இது சத்தியம்!'' என்று முடித்தாள் மதுரிமா.

''பின்னே இந்த வீட்டு விஷயம் பிள்ளையைப் கடத்தியவனுக்கு எப்படித் தெரிந்தது?'' என்றார் ராகவன்.



''அதுவும் நிச்சயமில்லையே ராகவா! கணவன் வீட்டைப் பற்றி கடத்தல்காரன் அவன்தான் விபுவைக் கடத்தியவன் என்பது கூட நமக்கு நிச்சயமில்லை. இன்று ஃபோன் செய்தவன் இப்படிக் குறிப்பிட்டானே தவிர அது இந்த வீடு என்று அவன் சொல்லவில்லையே! அவனுக்கு தெரிந்திருக்கும் என்று எதிர்பார்க்கிறோம் அவ்வளவே!'' என்றார் பிரபு.

மீண்டும் எதையோ சொல்ல வாயெடுத்துவிட்டு வாயை மூடிக் கொண்டார் ராகவன்.

பிரபு உதயன் புறம் திரும்பினார்.

''உன் விஷயம் எப்படிப்பா?''

கையை விரித்தான் அவன் ''என் பக்கம் வாய்ப்பே, இல்லை அங்கிள். அது உங்களுக்கே தெரியும்'' என்றான். ''ஆனால் மதுரிமா சொன்னது போல முன்பு பங்களூரில் நாங்களாக விளம்பரப் படுத்திக் கொள்ள வில்லையே தவிர ஒரேயடியாக ஒளிவு மறைவாகவும் நடந்து கொள்ளவில்லை. ஆனால், எப்படியும் எங்கள் இருவருக்கும் ஒரு குழந்தை உருவானது அங்கே யாருக்குமே தெரிய வாய்ப்பில்லை'' என்றான் தொடர்ந்து.

''ம்ம்ம்.. சரி பார்க்கலாம். சரக்கு மலிந்தால் தானாகச் சந்தைக்கு வந்து விட்டுப் போகிறது. எப்படியும் அவன் வேலையைத் தொடங்கிவிட்டது தெளிவாகி விட்டது. அடுத்து என்ன செய்கிறான் என்று பொறுத்திருந்து பார்ப்போம். ஆனால், அவன் இங்கே ஃபோன் செய்தால் என்ன ஏது என்று மட்டும் கேட்டு வைத்துக் கொள்ளுங்கள். நீங்களாக எந்த உறுதியும் கொடுக்க வேண்டாம். எதையும்

தள்ளிப் போட முயற்சி பண்ணுங்கள்.'' என்று எழுந்தார் காவல்துறையைச் சேர்ந்த அதிகாரி.

''ஏன் அங்கிள்? அவகாசம் கிடைத்தால் அதில் அவனைப் பிடித்துவிடலாம் என்று எண்ணுகிறீர்களா?'' என்று கூடவே எழுந்தபடி உதயன் கேட்டான்.

எல்லோருமே எழுந்துவிட்டிருந்தனர்.

''அங்கிள்...'' என்று விழியகல அவரை நோக்கினாள் மதுரிமா. ''நீங்கள் குற்றவாளியைப் பிடிப்பதற்காக, விபுவுக்கு ஆபத்து வரவிட்டு விடமாட்டீர்களே?'' என்று உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வினவினாள். உடனேயே, ''தப்பாக நினைத்துக் கொள்ளாதீர்கள் அங்கிள்'' என்று தன் கேள்விக்காக மன்னிப்பும் கேட்டாள்.

லேசாக முறுவலித்து, ''பயப்படாதேம்மா, குற்றவாளிக்குக் கூடச் சேதம் இல்லாமல் பிடிப்பதுதான் எங்களுக்கு இடப்பட்டுள்ள கட்டளை. குழந்தைக்கு ஆபத்து வரவிட்டுவிடுவோமா?'' என்றார் அவர். ''அந்தக் குற்றவாளியைப் பிடிக்காமல் விட்டுவிட்டால் என்றைக்கும் உன் மகனுக்கு ஆபத்துதானே? தைரியமாயிரு. வரட்டுமா?'' என்று விடைபெற்றுக் கிளம்பினார்.

கூடவே சென்றனர் ஆண்கள் இருவரும்.

வெளியே சென்றதும், ''என்ன அங்கிள்? ஏதாவது எதிர்பாராத பிரச்சினையா?'' என்று உதயன் கேட்டான்.

''ஏன் அப்படிக் கேட்கிறாய்?'' என்று பதில் கேள்வி கேட்டார் பிரபு.



''உண்டு இல்லை என்று நேரடியாகப் பதில் சொல்ல முடியாதபோது பிரச்சினை இருக்கிறது என்றுதான் அர்த்தம். என்ன விஷயம் அங்கிள்? விபுவுக்கு ஏதேனும் ஆபத்து என்று தோன்றுகிறதா?'' என்று உதயசந்திரன் கவலையுடன் கேட்டான்.

''ஊகூம் அப்படியெல்லாம் இல்லை ஆனால்...''

''ஆனால் என்ன அங்கிள்?''

''அது... 'பாணி' என்று ஒன்று உண்டு. ஒவ்வொரு விதக் குற்றத்துக்கும், ஒவ்வொரு குற்றவாளிக்கும் ஒவ்வொரு பாணி உண்டு. அதன்படி இவ்வளவு சிறு பையனை இவ்வளவு திட்டமிட்டுக் கடத்துகிறவர்களின் பாணி இதுவல்ல. அத்தோடு குற்றத்தை முழுவதுமாகத் திட்டமிட்டு வைத்திருப்பார்கள். இவனைப் போல பெற்றவள் எங்கே என்று கடத்தி மூன்று நாட்களுக்குப் பிறகு விசாரித்துக் கொண்டிருக்க மாட்டார்கள்'' என்று பிரபு சொல்லிக் கொண்டிருக்கும்போதே ராகவன் குறுக்கிட்டுப் பேசினார்.

''என்ன போலீஸ்காரனப்பா, நீ? திட்டம் எல்லாம் முழுசாகத் தீட்டித்தான் இருக்கிறார்கள். அவள் இங்கு வந்த பிறகு கேட்டால்தானே பணம் கிடைக்கும்? அதனால்தான் இந்த விசாரிப்பு!'' என்றார் ராகவன்.

''அதாவது மதுரிமா தனியாகவே சமாளிக்க முயன்று தவித்து முடியாமல் உதயனின் உதவி தேடி வருமளவு அவகாசம் கொடுத்து அதன்பின் அவள் அப்படி வந்துவிட்டாளா என்று விசாரிக்கிறான் என்கிறாயா?''

''கொஞ்சம் வித்தியாசம்!'' என்றார் ராகவன்

மற்ற இருவரும் அவர் முகத்தைப் பார்க்க, ''தனியாகவே சமாளிக்க முயன்று என்றாயில்லையா?''

'சமாளிக்க முயல்வது போல நடித்து' என்று சொல்லவேண்டும் என்றார் தொடர்ந்து.

உதயசந்திரன் எங்கோ பார்க்க, ''பையன் முன் என்னப்பா?'' என்றார் பிரபு.

''பையனுக்கு தெரிய வேண்டும்தான் பிரபு. அந்தக் குடும்பம் எந்த அளவுக்குப் போகும் என்று எனக்கு மிக நன்றாகத் தெரியும்பா. கழுத்தில் சுருக்கு மாட்டிக்கொண்டு ஏறி நின்ற ஸ்டூலைத் தள்ளி விட்டுத் தொங்கியே காட்டியவள் இவள் பெரியம்மா. அதில்தானே ரகு அடியோடு வீழ்ந்ததும்!'' என்றார் ராகவன் கசந்த குரலில்.

''ஆனால் அந்தக் குடும்பத்தில் பிறந்தது தவிர, இவள் என்ன செய்தாள் என்கிறாய்? அதாவது இப்போது! இது நடிப்பு என்று முடிவுக்கு எப்படி வந்தாய்?''

''என்னிடம் கேட்கிறாயே! போலீஸ்காரன்னா உனக்குத் தெரியவில்லையாக்கும்? பிள்ளைக்குத் தீமை நேர்ந்து விடும் என்பதால் பிள்ளை கடத்தியவனை ஒன்றும் செய்துவிடக் கூடாது என்பதுபோலப் பேசவில்லை? என்ன அர்த்தம்? கடத்தியவன் பணம் கேட்பான். அவனைப் பிடிக்க முயற்சிக்காமல் உடனே பணத்தைக் கொடுத்துவிடு என்பதுதானே? அதாவது கூட்டாளியைப் பிடித்துவிடாதே! அதுதானே பொருள்?

சிறு முறுவலை அடக்கிக்கொண்டு, ''உன் மனைவியைக் கேட்டால் அவர்களும் இதே போலத்தான் சொல்லுவார்கள்! அவர்களும் கடத்தலில் கூட்டாளி



என்றுவிடுவாயா?'' என்று பிரபு கேட்கவும் ராகவனுக்கு எரிச்சல் வந்தது.

''ஏன்? உதயன் பிள்ளை என்பதால் நான்கூட அப்படித்தான் சொல்லுவேன். அதற்காக என்னையும் குற்றவாளிப் பட்டியலில் சேர்ப்பாயா? இது பாசத்தின் பதற்றம்! இதையும் அதையும் ஒன்றாக எப்படிக் கணிப்பாய்?'' என்று ஆத்திரப்பட்டார்.

நண்பரின் தோளில் கைவைத்து அழுத்தி, ''அதையும் பாசத்தின் பிரதிபலிப்பாகவே நீ ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது ராகவா? பார் நான் ஒரு போலீஸ்காரன். ஒரு நாளைப் போலப் பொழுது விடிந்தால் நாள் முழுவதும், பலதரப்பட்ட குற்றவாளிகளிடையேதான் கழிகிறது. முகமூடி போட்ட குற்றவாளிகளும் இருக்கிறார்கள். இத்தனை குற்றவாளிகளோடு பழகுகிற எனக்கு அவர்களுள் ஒருத்தியை ஓரளவேனும் இனம் கண்டு கொள்ளத் தெரியாதா? ஏன்? ரகுவைப் பேய் பிடிக்கப் போவதாக உன்னிடம் முதலில் சொன்னவனே நான்தானே? உன் மருமகள் அவர்களுள் ஒருத்தியாக எனக்குத் தோன்றவில்லை ராகவன். அதிலும் இப்போதைய அவளது கண்ணீரைச் சந்தேகப்படாதே. அவளை நீ முழுக்க முழுக்க நம்பித்தான் ஆக வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால், 'சந்தேகத்தின் பலனைக் குற்றம் சாட்டப்பட்டவருக்குக் கொடு' என்பார்களே அது போல மதுரிமாவை நடத்தச் சொல்கிறேன். அவ்வளவுதான்'' என்றார் பிரபு.

''ஆளாளுக்கு எனக்கு அறிவுரை கூறத் தொடங்கி விட்டீர்களாக்கும்? அங்கே வீட்டம்மாள். இப்போது நீயா? இருக்கட்டும் பார்ப்போம்.'' என்று ராகவன் இறங்கி வர பிரபு கிளம்பினார்.

ஆண்கள் இருவரும் வெளியே சென்று போலீஸ் அதிகாரியுடன் அவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்ததை மதுரிமா வேறு விதமாக எடுத்துக்கொண்டு பயந்து போனாள்.

திரும்பி வந்த உதயனிடம் விபுவைப் பற்றி என்ன சொன்னார் கிடைப்பானா? கிடைக்கவே மாட்டான் என்று விட்டாரா என்றெல்லாம் அவனிடம் கேட்டுத் துளைத்துவிட்டாள்.

உன்னைப் பற்றிப் பேசினார்கள் என்று உண்மையைச் சொல்ல முடியாமல், ''அப்பாவும் அங்கிளும் பழைய கதைகள் பேசினார்கள்'' என்று சமாளிக்க முயன்றான்.

''இப்போதா?'' என்றாள் அவள் நம்பாமல்.

விபு காணாமல் போயிருக்கிற இந்தச்சமயத்தில் யாரால் பழைய கதைகளைப் பேசிக்கொண்டிருக்க முடியும் என்று கேளாமல் கேட்கிறாளாம்.

அது சரியும்கூட, 'பழங்கதை பேசி வம்படிக்க முடியாதுதான்!

''பழைய கதை என்றால் முன்பு இது போல நடந்த ஆள் கடத்தல்களைப் பற்றி சின்னச் சின்னத் துப்புகளைக் கொண்டு குற்றவாளிகளைக் கண்டு பிடித்த விவரங்கள் பற்றி அங்கிள் சொல்லிக் கொண்டிருந்தார். அதுபோல விபுவைக் கடத்தியவனையும் கண்டுபிடித்து அவனைப் பத்திரமாக மீட்டுவிடலாம் என்றார்'' என்று அவன் விளக்கியதை மறுத்துப் பேசாவிட்டாலும் அவளால் முழுமையாக ஒத்துக் கொள்ளவும் முடியவில்லை.

ஏதோ மறைக்கிறான் என்ற சந்தேகம் மறைய மறுத்தது.



விபு சம்பந்தமான கெட்ட சேதி தவிர வேறு எதை அவன் அவளிடமிருந்து மறைக்க வேண்டும்?

'என் கண்ணைப் பார்த்துச் சொல்லுங்கள்.' 'என் முகத்தை நேராகப் பார்த்துக் கூறுங்கள்' 'அன்பின் மீது ஆணையிட்டு உண்மையைத் தெரிவியுங்கள்' என்றெல்லாம் உரிமையோடு கேட்க முடியாத கொடுமை. சந்தேகத்தை உள்ளேயே வைத்துக் குமைய வேண்டியதாயிற்று.

வெறும் குமைச்சல் மட்டுமின்றி மகனைப் பற்றிய கவலையும் சேர்ந்துகொள்ள அது அவளது உறக்கத்தைப் பாதித்தது.

அன்றையப் பாதிப்பின் விளைவாக இரவுத் தூக்கத்துக்கும் மதுரிமாவுக்கு வைத்தியர் மருந்து கொடுத்திருந்தார்.

ஆனால், தூக்க மாத்திரையை விழுங்கிய பிறகும் அவளால் அயர்ந்து உறங்க முடியவில்லை.

நல்ல வேளையாக கட்டில் பெரியது அல்லது அவளது அரற்றல்களுக்கும் உருளல் புரளல்களுக்கும் மதுரிமா பலமுறை கட்டிலில் இருந்து கீழே விழுந்திருப்பாள்.

நெற்றியை வருடி தட்டிக்கொடுத்த கையைப் பிடித்து ஆறுதலாகப் பேசி... என்று பலனற்றுப் போய்விட சாவித்ரி சென்று மகனைக் கூப்பிட்டு வந்தாள்.

மதுரிமாவின் தவிப்பைப் பார்த்த உதயனுக்கு ''ஏதாவது செய்யேன்'' என்ற தாயின் தூண்டுதல் தேவையாக இருக்கவில்லை.

சட்டென்று அவளது கட்டிலில் ஓரமாக உட்கார்ந்து அவள் கையைப் பற்றி அழுத்தி, ''மதும்மா பார் உதி

வந்திருக்கிறேன். விபுவுக்கு ஒன்றும் இல்லை. அவன் பத்திரமாக இருக்கிறான். நீ தூங்கும்மா'' என்று ஆறுதலாகக் கூறியவாறே மறு கரத்தால் அவளது நெற்றியை மெல்ல வருடிக் கொடுத்தான்.

மெல்ல மெல்ல மதுரிமாவின் அலட்டல்கள் குறைந்து அமைதியாக உறங்கத் தொடங்கினாள் அவள்.

கண்ணைத் துடைத்துக் கொண்டு, ''உதயா இனி நீ இந்த அறையிலேயே தூங்கம்மா. நான் என் பழைய அறைக்குப் போகிறேன்'' என்று வெளியேறினாள் சாவித்ரி.

ஓய்ந்து கிடந்த மனைவியையே பார்த்துக் கொண்டு படுத்திருந்த உதயசந்திரனால் வெகு நேரம் கழித்துத்தான் உறங்க முடிந்தது!


12

தூக்க மாத்திரை காரணமோ அன்றி அவளது உடம்பே சோர்ந்து போயிருந்ததோ காலையிலும் மதுரிமா தாமதமாகத்தான் எழுந்தாள்.

எனவே, அந்த அறைக்குள் நடந்த ஆள் மாற்றம் பற்றி அவளுக்கு அன்று தெரியாமலே போயிற்று.

தெரிந்திருந்தாலும் அவள் அதைப் பொருட்படுத்தி யிருப்பாளோ என்னவோ?

அதைவிடப் பெரிய விஷயமாக அவளுடைய மகனைக் கடத்திக்கொண்டு போனவன் பிள்ளைக்குப் பணயத்



தொகையாகப் பத்து லட்ச ரூபாய் கேட்டு ஃபோன் செய்தான்!

காலையில் ஒரு ஃபோன்கால் அதுவும் மதுரிமாவுக்கு என்றதுமே எல்லோருமே விழிப்புற்றனர்.

எல்லோரும் ஓசையற்று ஹாலில் குழுமினர்.

பிரபுவின் ஆலோசனைப்படி டெலிஃபோன் கருவியில் இணைக்கப்பட்டிருந்த 'டேப்'பை ஓடவிட்டுவிட்டு ரிசீவரை எடுத்துப் பேசுமாறு மதுரிமாவுக்குச் சைகை செய்தான் உதயசந்திரன்.

மூச்சு விடும் சத்தம் கூட, எதிர் முனையில் இருப்பவருக்குக் கேட்டுவிடக் கூடாது என்று மூக்கின் முன் கையை வைத்து தன் மூச்சுக் காற்றைத் திசை திருப்பியவண்ணம் மனைவியை ஒட்டி நின்று ஃபோன் பேச்சைக் கவனித்தான்.

ஒரு பெரிய மூச்செடுத்து தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, ''யார் பேசுவது?'' என்று கேட்டாள் மதுரிமா.

எதிர் முனையில் ஏளனச் சிரிப்புச் சத்தம் கேட்டது. ''ஆமாம்மா நான் யார்? எந்த ஊர்? முகவரி என்ன? என்று எல்லாவற்றையும் உன்னிடம் விலாவாரியாக விளக்கி விடுகிறேன். நீ அதைப் போலீஸில் சொன்னால் இலகுவாக என்னைப் பிடித்து விடுவார்கள். சொல்லட்டுமா?'' என்றான் அவன் கிண்டலாக.

உதட்டைக் கடித்துத் தன்னை சுதாரிக்கும்போதே மதுரிமா யோசித்தாள்.

போனில் பேசியவன் குரல் கம்மியிருந்தது. குரல் அடையாளம் தெரியாமல் இருப்பதற்காக வாய்க்கும்

போன்கருவிக்கும் இடையே துணி போட்டு மறைத்திருக்க வேண்டும்.

தொண்டையில் அடைத்ததை விழுங்கிக் கொண்டு, ''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? சரியாகக் கேட்கவில்லை டெலிஃபோனில் ஏதோ கோளாறு என்று தோன்றுகிறது'' என்றாள் மதுரிமா.

மெச்சுவது போல உதயன் பார்க்கும்போதே எதிர் முனையில் ரீசிவரை வைக்கும் ஒலி கேட்கவும் இருவருமே பதறிப் போயினர்.

சந்தேகப் படுகிறானா, என்று அவர்கள் கலங்குகையில் மீண்டும் மணியடித்தது.

அவசரமாக மதுரிமா எடுத்துக் கேட்டால் அவனேதான், ''இப்போது நன்றாகக் கேட்கிறதா?'' என்று கேட்டுக் கொண்டிருந்தான்.

ஆக அவன் சந்தேகப் படவில்லை. மெய்யாகவே, 'லைனில் கோளாறு' என்று நினைத்துத் திரும்ப 'டயல்' செய்திருக்கிறான்.

அதைப் பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்து, ''இல்லையே! இன்னமும் கிணற்றுக் குள்ளிருந்து பேசுவது போல என்னவோ மாதிரித்தானே கேட்கிறது. கொஞ்சம் உரக்கப் பேசுகிறீர்களா?'' என்று கேட்டு அதற்கேற்ப அவன் உரக்கப் பேசியபோதும், சரியாகக் காதில் விழாத மாதிரியே மதுரிமா நடிக்க அந்த நடிப்பு பலன் தந்தது.

இடையில் வைத்திருந்த துணியை அந்த வில்லன் அகற்றி விட்டான்.



ஆனால், அவனும் கெட்டிக்காரனாகக் குரலை மாற்றியே பேசினான்.

மாற்றிப் பேசிய அவன் சொன்னது இதுதான்.

''உன் பிள்ளை என்னிடம் இருக்கிறான். அவன் நல்லபடியாகத் திரும்பக் கிடைக்க வேண்டும் என்றால்'' என்று சற்று நிறுத்திவிட்டு, ''என்ன செய்யவேண்டும் என்று உனக்குப் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்'' என்று சற்று அதட்டலான குரலில் கூறினான்.

உள்ளம் பதறியபோதும், முடிந்த அளவு அமைதியாகக் காட்டி ''என்ன செய்ய வேண்டும்?'' என்று மதுரிமா கேட்டாள்.

''வேறு என்ன? பணம் தர வேண்டும். இரண்டு பத்து லட்ச ரூபாய்!''

அவ்வளவு நேரம் காட்டிய அமைதி பறந்துவிட, ''இருபது லட்சமா? அவ்வளவு பணத்துக்கு நான் எங்கே போவேன்? பார். பாருங்கள், நான் சம்பளத்துக்கு வேலை செய்கிறவள். அவ்வளவு பணத்துக்கு நான் எங்கே போவேன்? இவ்வளவு நாளாகச் சேர்த்து வைத்தது எல்லாம் சேர்த்தே ஒரு லட்சம் தாண்டாதே! அது முழுவதையும் வேண்டுமானாலும் தந்து விடுகிறேன். எடுத்துக் கொண்டு என் பிள்ளையை என்னிடம் திருப்பிக் கொடுத்து விடு'' என்று கெஞ்சத் தொடங்கினாள்.

அவளது தோளைப் பற்றி, லேசாக உலுக்கி, அடக்கிக் கொள்ளுமாறு உதயன் ஜாடை காட்ட, தன்னை அடக்கும் முயற்சியாக அவள் உதட்டில் பற்களை வைத்து அழுத்திய இடத்தில் ரத்தம் கசிந்தது.

பெரிய பெரிய மூச்சுகளையும் கூட அடக்க முயன்றபடி அவள் தவித்துக் கொண்டு நிற்க, டெலிஃபோனில் அவன் கொக்கரித்தான். ''யாரிடமடி கதை விடுகிறாய்? நீ எங்கே இருந்துகொண்டு பேசுகிறாய் என்று எனக்குத் தெரியாது என்று எண்ணினாயா? அது தெரியாமலா, உனக்கு நான் அங்கே ஃபோன் செய்தேன்?... ஆகா! இதற்கு மேல் பேசிக்கொண்டிருந்தால் எனக்கு ஆபத்து. குறுக்கே பேசாமல் நான் சொல்லுவதைக் கவனி. ராகவன் பேரன் அந்த வீட்டிற்குப் பத்திரமாக வந்து சேர வேண்டுமானால், இருபது லட்சம் தயார் பண்ணி வைக்கச் சொல்லு. அதை எங்கே, எப்படித் தர வேண்டும் என்று பிறகு சொல்லுகிறேன் அவ்வளவுதான்'' என்று வேகமாகப் பேசி, அத்துடன் பேச்சை முடித்துவிட்டான் அவன்.

மலைத்து நின்றாள் மதுரிமா!

இருபது லட்சம்!

எங்கே போவாள் அவள்?

விபுவுக்காக, அவன் தந்தையின் உதவியை நாடி அவள் இங்கு வந்தது உண்மைதான்.

ஆனால், தேடுவதில் உதவும்படிதான் கேட்டாளே தவிர இப்படிப் பெரும் பணம் கொடுத்து அவனை மீட்டுத் தருமாறு அல்ல.

அதுவும் எவ்வளவு பணம்!

இவ்வளவு பணத்தைத் தருமாறு உதயனிடம் அவளால் எப்படிக் கேட்க முடியும்?

அப்படியானால், அவள் மகனின் கதி?



ஒரு சாதாரண கம்யூட்டர் சென்டர் டீச்சரால், இந்தத் தொகையைக் கொடுக்க முடியும் என்று அந்தப் பாவி எப்படி எண்ணினான்?

'ராகவன் பேரன்' என்று அவன் ஏதோ சொன்னது மதுரிமாவுக்கு நினைவு வந்தது.

இந்த உறவு அந்தப் பாவிக்கு எப்படித் தெரியும்?

இந்த உறவு இன்னமுமா அவளுக்கு வேதனையைத் தர வேண்டும்?

இன்னோரன்ன பதிலறியாக் கேள்விகள், மதுரிமாவின் மனதுக்குள் முட்டி மோதிக்கொண்டு இருந்தபோது உதயசந்திரன், ஃபோன் பேச்சுப் பதிவான டேப்பை ஓட விட்டான்.

மதுரிமாவின் கவனமும் அதில் சென்றது.

சொந்தக் குரலை மாற்றியே பெரும்பாலும் அவன் பேசிய போதும் ஒரு சில இடங்களில் அவனது சொந்தக் குரல் தலை நீட்டவே செய்தது. ஆனால் இனம் கண்டு பிடிக்கிற அளவுக்குத் தெரிந்த குரலாக அது இல்லை.

தெரிந்த குரலை அவள் எதிர்பார்க்கவும் இல்லை. ஏனெனில், அவளுக்குத் தெரிந்த யாருக்கும் அவளது இந்த உறவு தெரிந்திருக்க வாய்ப்பே இல்லையே.

பொதுவாக ஒரு கட்டைக் குரல். நடுத்தர வயதாக-நாற்பதிலிருந்து ஐம்பதுக்குள் வயது இருக்கலாம்.

டேப்பை பார்த்துவிட்டுத் தலையசைத்தார் அவர்.

''என்ன அங்கிள்?'' என்று உதயசந்திரன் கேட்டான்.

''இதிலும் வேறுபாடு. குழந்தையை அப்படிச் செய்வேன், இப்படிச் செய்வேன் என்று மிரட்டி கிள்ளி, அடித்து, அழவிட்டு, உங்களை நடுங்க வைக்க அவன் எதையுமே பண்ணவில்லையே! சும்மா பணம் கேட்கிறான். அவ்வளவுதான்.'' என்று அவர் கூற, மதுரிமா நடுங்கிப் போனாள்.

''விபுவை அப்படியெல்லாம் செய்யக் கூடுமா அங்கிள்?'' என்று குரல் நடுங்கக் கேட்டாள்.

''நிதானமாக யோசிக்க முடியாத அளவுக்கு உன்னைப் பயப்பட வைக்க வேண்டும் அல்லவா? வேறு எப்படி அதைச் சாதிக்க முடியும் சொல்லு, ம்ம்...ஆனால், இவன் விபுவைக் கடத்தியவனே அல்ல என்றும் தோன்றுகிறது அல்லது.. எதற்கும் அவசரப்பட்டுப் பணத்தைக் கொடுத்துவிட வேண்டாம் ராகவா'' என்றார் பிரபு.

''விபு காணாமல் போன விவரம் தெரிந்த யாரோ, அதில் பணம் பண்ணப் பார்க்கிறார்கள் என்கிறீர்களா அங்கிள்? ஆனால், எங்கள் வீடு பற்றி எப்படி... ஓகோ, மதுரிமா இங்கே வந்த பிறகு அதுவும் எல்லாருக்கும் தெரிந்திருக்கும்தானே?'' என்றான் உதயன்.

அதிர்ச்சியுற்று, ''சாரி உதயன். இப்படியெல்லாம் நேரக் கூடும் என்று நான் யோசிக்காமல் வந்து விட்டேன். ஆனால், அப்போது எனக்கு வேறு வழி ஒன்றுமே தோன்றவில்லை'' என்று மதுரிமா மன்னிப்புக் கேட்டாள்.

தொண்டையைச் செருமிக் கொண்டு, ''இப்போதும் தோன்ற வேண்டாம்'' என்றான் உதயசந்திரன் சற்றுக் கரகரத்தக் குரலில். ''நீ என்னிடத்தில் வந்ததில் ஒரு தப்பும்





இல்லை. நீயும், அம்மாவும் போய்க் காரில் உட்கார்ந்திருங்கள். இதை, இன்னொரு டேப்பில் ரிக்கார்டு பண்ணி, அங்கிளிடம் கொடுத்துவிட்டு நான் வருகிறேன்'' என்று இருவரையும் அனுப்பினான்.

மகனை நிமிர்ந்தே பாராமல், ''வாம்மா'' என்று மருமகளை அழைத்துக் கொண்டு சாவித்ரி கிளம்பினாள்.

அவர்கள் இருவரும் காது எட்டாத தூரம் சென்றதும், ''அல்லது என்று என்ன சொல்ல வந்தீர்கள் அங்கிள்?'' என்று உதயன் அவசரமாக வினவினான்.

நண்பரையும், நண்பன் மகனையும், பிரபு ஒரு பார்வை பார்த்தார். பிறகு, ''குழந்தை அவன் கையில் இல்லையோ என்று சந்தேகமாக இருக்கிறது உதயா.'' என்றார் மெதுவாக.

''பிரபு!'' என்றார் ராகவன் பதற்றத்துடன்.

''என்ன ஆகியிருக்கும் என்று சந்தேகப்படுகிறீர்கள் அங்கிள்?'' என்று உதயன் இறுகிய குரலில் கேட்டான்.

''உன் மனைவியிடம் பேச்சுக் கொடு உதயா. குழந்தை கெட்டிக்காரன் என்றால் அம்மாவைத் தேடி அவனே, இந்தக் கடத்தல்காரனுக்கு கடுக்காய் கொடுத்துவிட்டுக் கிளம்பியிருப்பான். இரண்டு வயதில் இப்போதெல்லாம் பிள்ளைகள் வெகு புத்திசாலிகளாகவே இருக்கிறார்கள். ஆனால், அம்மாவிடம் வரும் வழி தெரிவதுதான் கஷ்டம். அதனால், தனியாக ஏதேனும் குழந்தைகள் அலைந்தாலும் கவனிக்கச் சொல்லி எல்லா ஸ்டேஷன்களுக்கும் தகவல் அனுப்பி விடுகிறேன். அப்போதைக்கு நம் வில்லனே விபுவைத் தேடுகிற நிலையில் இருக்கிறானோ

என்னவோ? நோட்டம் பார்ப்பதற்காகவே, அவன் மதுரிமாவின் கம்ப்யூட்டர் சென்டருக்கு ஃபோன் பண்ணியிருக்கலாம்...''

அவரை நேராகப் பார்த்து ''அல்லது?'' என்று கேட்டான், இளையவன்.

''அது பற்றி இப்போது யோசிக்க வேண்டாம்'' என்றார் அதிகாரி.

''மதுரிமா தாங்கவே மாட்டாள் அங்கிள்'' என்றான் உதயசந்திரன் தவிப்புடன்.




மகனின் பிரிவையே தாங்க மாட்டாமல் தவியாய் தவிக்கிறவள், அவனை அடியோடு இழப்பதைத் தாங்குவாளா?

தாங்க மாட்டாள் என்று உதயசந்திரன் நிச்சயமாக நினைத்தான்.

''தாங்க வேண்டிய அவசியம் இல்லாமலே போய் விடலாம் உதயா. அனாவசியமாக அவளையோ, அம்மாவையோ பயமுறுத்த வேண்டாம். இப்போது நீங்கள் இருவரும் கிளம்புங்கள். நேரம் ஆக, ஆக அவர்கள் இருவரும் சந்தேகப்படக்கூடும். அடுத்தமுறை அவன் ஃபோன் செய்யும்போது குழந்தையோடு பேச வேண்டும் என்று மதுரிமாவைச் சொல்லச் சொல்லுங்கள். அல்லது



உதய் நீயே பேசு. மதுரிமா பிள்ளையோடு பேசிய பிறகுதான், பணயத் தொகை பற்றிப் பேச முடியும் என்பதில் கறாராக இரு. என்ன செய்கிறான் என்று பார்க்கலாம். இன்னொரு விஷயம் நாளைக்குள், விபு பற்றித் தெரிய வரவில்லை என்றால் பத்திரிகை டீவியில் விபு படம் போட்டு விளம்பரம் கொடுக்கலாம் என்று ஓர் ஐடியா'' என்றார் பிரபு.

''அதை முதலிலேயே செய்திருக்கலாமேப்பா'' என்று ஆதங்கத்துடன் ராகவன் கேட்டார்.

''செய்திருக்கலாம். ஆனால், சம்பந்தம் இல்லாத பல பேர் இப்படி வருவார்கள். அதைத் தவிர்ப்பதற்காகத்தான் தள்ளிப் போட்டேன். இப்போது, அவன் தலையைக் காட்டிவிட்டான் இல்லையா? இனிமேல் தப்பிக்க முடியாது. மேற்கொண்டு நாளை பார்ப்போம்'' என்று வழியனுப்பி வைத்தார் பிரபு.

பிரபு வாய்விட்டுச் சொல்லாத ஒரு சந்தேகம் உதயசந்திரனுள் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

மதுரிமா தந்த படங்களில் ஒன்றை அவன் தன் பர்சில் வைத்திருந்தான். அதை அவன் அவ்வப்போது எடுத்து மகன் முகத்தைப் பார்ப்பது உண்டு.

அப்படிப் பார்க்கும் போதெல்லாம், தங்கை, தங்கைமகனின் சாயலைக் கண்டு ஆச்சரியப்படுவான். கூடவே, இந்த என் மகனின் இரண்டாண்டு வளர்ச்சியை நான் கண்டு களிக்க விடாமல் கெடுத்துவிட்டாள் என்று மதுரிமா மேல் அவனுக்குக் கோபமும் உண்டாகும்.

அதை, அவளிடம் காட்டாமல் இருப்பதற்கே அவன் சற்று சிரமப்படுவான். இந்த நிலையில் அவளைக்

கோபித்துக் கொள்ளக்கூடாது என்று முயன்று, தன்னை அடக்கிக் கொள்வான்.

ஓரோரு சமயம், விபுவின் பிறப்பே அவனுக்கு வியப்பாகத்தான் இருக்கும்.

மதுரிமாவின் குணத்துக்கு அவன் அறிந்த அளவில் அவளது குணத்துக்கு விபுவை அவள் பெற்றுக் கொண்டதே, சற்று அதிசயமாகத்தான் அவனுக்குத் தோன்றியது. கலைப்பதற்குப் பயந்து கூடப் பெற்றிருக்கலாம்.

விபுவிடம், அவளது இன்றையப் பாசம் அவனுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. மிருகங்கள்கூடக் குட்டியை மிகுந்த பாசத்தோடுதான் வளர்க்கின்றன.

அத்தோடு, விபுவின் முகம் வேற்று மனிதர்களைக் கூடக் கவரக்கூடியது.

அப்படிப்பட்ட குழந்தை பற்றிச் சொல்லாமலே இருந்துவிட்டாளே என்று உள்ளூரக் குறைப்பட்டுக் கொண்டிருந்தவன் அவன்.

ஆனால், அவள் படும் வேதனையைக் கண்ணால் பார்க்கும்போது, அந்தக் கோபம் மறந்து பரிதாபமும் கூடவே, பிள்ளையைப் பார்க்க முடியாமலே போய்விடுமோ என்ற பரிதவிப்பும் தான் நிலைக்கும்.

இன்று, பரிதாபம் இன்னும் அதிகமாக இருந்தது.

அவரது சந்தேகம் சரியாகிவிட்டால் இவள் எப்படித் தாங்குவாள்?

இதுவரை கண்ணால் கண்டிராத தனக்கே வேதனை என்றால், அம்மா சொன்னது போல உயிரைக் கொடுத்துப்



பெற்று இரண்டாண்டு காலம் உயிராக வளர்த்தவளுக்கு எப்படி இருக்கும்?

உயிருடன் இருப்பாளா?

நினைக்கவே முடியாமல் நெஞ்சுக்குள் பிசைந்தது உதயனுக்கு.

இப்போதே, பிடிக்காமல் மற்றவர்களுக்காகவே உண்ணுகிறவள், விபுவுக்கு ஏதாவது ஆகிவிட்டால் அப்புறம் எங்கே சாப்பிடப் போகிறாள்?

சும்மாவே மெலிந்திருந்தவள், இந்த இரண்டே நாட்களில், 'எலும்பு தோல் போர்த்த உடம்பு' என்பார்களே, அதுபோல எலும்பின் மீது வெறும் தோல் மட்டும் மூடியிருப்பது போல, மேலும் ஒல்லியாகிவிட்டிருந்தாள்!

கண்ணும், முகமும் பளபளக்க, எழிலே உருவாய்ச் சிரித்த அந்த மதுரிமாவின் நினைவு வந்தது.

இவள் இன்னும் நோவதா?

நோக விடக் கூடாது என்று நினைத்தாலும் அதற்காக எதுவும் செய்ய முடியாமல் மறுகினான் உதயசந்திரன்.

பிரபு சொன்னதற்கிணங்க, மதுரிமாவிடம் போய்ப் பேச்சுக் கொடுத்தான்.

மகனைக் கண்டதும் அதுவரை மருமகளுக்குத் துணையாகப் பேசிக் கொண்டிருந்த சாவித்திரி பூஜை பண்ணப் போவதாகக் கூறி எழுந்தாள்.

''என்னம்மா, இந்த நேரத்தில்?'' என்று வியந்தான் மகன்.

ஏனெனில், மகனும் மருமகளும் சேர்ந்து பேசும்போது பானகத் துரும்பாகக் கூடவே இருக்கக் கூடாது என்கிற இங்கிதம் தேவைப்படுகிற நிலை ஒன்றும் இப்போது இல்லையே! ஒரு பொதுக் காரணத்துக்காக, ஒரே வீட்டில் இருக்கிறார்கள் என்பதுதானே? இப்போது, எதற்காக அம்மா இங்கிருந்து போகவேண்டும்?

எண்ணியதை மகன் கேட்க, சாவித்ரி மெய்யாகவே பூஜை அறைக்குத்தான் கிளம்பியிருந்தாள்.

''என்னவோ தோன்றியது. கடவுளும் சேர்ந்து உதவி செய்யட்டுமே'' என்று சன்னமாக முறுவலித்தாள் தாயார்.

சாவித்ரி, எப்போதுமே அப்படித்தான். சங்கடமான நேரங்களில் கூட கஷ்டத்தை அதிகரிப்பது போலப் பேச மாட்டாள். செயல் ஆறுதல் அளிப்பதாகவும், பேச்சு இலகுவாகவுமே இருக்கும்!

அவள் வணங்க வேண்டப் போவது விபுவுக்காக.

ஆனால், அதை விம்மி, விசும்பி மற்றவரையும் பயப்பட வைக்காமல் எவ்வளவு எளிமையாக அழகாகச் செய்கிறாள்!

மதுரிமாவும் அதை உணர்ந்தவள் போன்று நீர்த்திரையிட்ட விழிகளை உயர்த்தி, ''விபுவின் ஆரோக்கியத்துக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள் அம்மா'' என்று மெல்லிய குரலில் கேட்டுக் கொண்டாள்.

தலையசைத்துவிட்டு சாவித்திரி அகன்றாள்.

மாமியார் சென்ற திசையை வெறித்தபடி ஒரு பதுமை போலப் பேசாமல் உட்கார்ந்திருந்த மதுரிமாவைப் பார்க்கையில், உதயசந்திரனுக்குக் கஷ்டமாக இருந்தது.



வாய் ஓயாமல், கலகலவென்று எப்படிப் பேசுகிறவள்! அலுவலகத்தில், விடுதியில் போக வரப் பார்த்தது, பார்க்கிறது என்று சொல்வதற்கு அவளுக்கு எத்தனையோ விஷயங்கள் கிடைத்துக் கொண்டே இருக்குமே!

'கொஞ்ச நேரம் வாயை மூடிக்கொண்டு இருக்க, உன்னால் முடியாதா?' என்று கூடக் கேட்டிருக்கிறான்!

'முடியாதே!' என்று சிரிப்பாள்.

இப்போது, மௌனச் சிலையாக உட்கார்ந்து கொண்டிருக்கிறாளே!

உதயசந்திரன் லேசாகத் தொண்டையைக் கனைத்துக் கொள்ளவும் 'என்ன' என்பது போலத் திரும்பி அவனைப் பார்த்தாள் மதுரிமா.

அப்போதும் வார்த்தை வரவில்லை.

''ஒன்றும் இல்லை. சும்மா விபுவைப் பற்றி பேசிக்கொண்டு இருக்கலாமே என்று நினைத்தேன். அவ...ன் நன்றாகப் பேசுவானா?''

பெற்ற குழந்தை பற்றி, இப்படிக் கேட்க நேருவதும் கொடுமைதான். ஆனால், அதற்குக் காரணம் ஆனவளிடம் இப்போது கோபம் வர மறுத்தது.

அடுத்து, என்ன விதி காத்திருக்கிறதோ என்கிற அச்சம் கோபத்தை அழித்துவிட்டது.

ஆனால், மகன் நினைவில் மதுரிமாவின் முகம் கொஞ்சம் பிரகாசமுற்றது. ''இம். பேசுவானே! நன்றாக, நமக்கு புரிகிற அளவுக்குத் தெளிவாகவே, பேசுவான். வேண்டும், வேண்டாம் எல்லாம் கணீர் என்று

சொல்லுவான். சின்னச் சின்னதாய் வாக்கியங்கள் கூடப் பேசுவான்....'' என்று பெருமையாகப் பேசியவளின் முகம் மெல்ல வாட்டம் கண்டது.

அவளை மேலே யோசிக்கவிடாமல், ''ஆச்சரியமாக இல்லை? பொதுவாக முதல் குழந்தை, அதிலும் ஆண் குழந்தை பேசநாள் ஆகும் என்பார்களே! இரண்டு வயதில், இவன் இவ்வளவு பேசுவது அதிசயம் தான்'' என்று அவசரமாகச் சொன்னான் உதயன்.

ஆனால், அதுவும் தவறாகிப் போயிற்று.

உதயன் எதிர்பார்த்தது போலவே, முதலில் முகம் மலர, ''பொதுவாக அப்படித்தான். ஆனால் விபுவுக்குக் கூடப் பேசி விளையாட நிறையச் சிறுவர்கள் இருந்தார்கள் அல்லவா? நடக்கப் படித்த நாளில் இருந்தே... அவன் ஒன்பது மாதத்திலேயே ஓடுவான். அப்போதிலிருந்தே யாராவது கூட்டிப் போய் விடுவார்கள். ஃப்ளாட் பிள்ளைகள் எல்லோரும், அவனுக்கு நன்கு பழக்கம். அவர்களும் பார்த்துக் கொள்ளுவார்கள்... அப்படி நம்பித்தான்...'' என்றவளால் மேலே பேச முடியவில்லை.

அவளது மௌனக் கண்ணீரைக் காணுகையில், ஏன் இந்தப் பேச்சை எடுத்தோம் என்றாகிவிட்டது. உதயனுக்கு, அப்படிப் பேச்செடுத்த காரணம் நினைவு வர, ''பார் மது, விபு பற்றி நான் இதையெல்லாம் கேட்கக் காரணம் இருக்கிறது. குழந்தை புத்திசாலியாக இருந்தால் கடத்தியவனிடமிருந்து அவனாகவே தப்பிப் போக வாய்ப்பு இருக்கிறது என்கிறார் அங்கிள்...'' என்று விளக்கினான்.



பரபரப்புற்று, ''விபு ரொம்பக் கெட்டிக்காரன் உதி. அவனுக்குப் பிடிக்காததை அவனைச் செய்ய வைக்கவே முடியாது. ஒன்று வேண்டாம் என்றால், வேண்டாம்தான். சாப்பாடு வேண்டாம் என்றால் கூட... அதுதான் பெரிய கவலை உதயன். எங்கே, பட்டினியாகக் கிடக்கிறானோ என்று.. பிடித்துத் திணிக்கக் கூட முடியாது. ஒரு மாதிரி நெளித்து, வழுக்கிக் கொண்டு இறங்கி ஓடி விடுவான்... அவனுக்குப் பயந்தே நான் வாசல் 'கிரில்' லைப் பூட்டியே வைத்திருப்பேன்... கடவுளே! அவன் அப்படித் தப்பி ஓடினால், எங்கே என்று போவான்? போகும் வழியில் எத்தனை கார்கள், லாரிகள், மாடுகள், தெரு நாய்கள்! இத்தனைக்கும் தப்பி என் பிள்ளை எப்படிப் பிழைப்பான்?'' என்று, கலக்கமும் அச்சமுமாகக் கணவன் கையை இறுகப் பற்றி, ''உதி, எனக்கு இப்போது முன்னைவிடப் பயமாக இருக்கிறதே!'' என்று நடுங்கினாள்.

எதிர் சோஃபாவில் உட்கார்ந்திருந்த உதயன், மனைவியின் கையைத் தட்டிக் கொடுத்தவாறே எழுந்து அவள் அருகில் வந்து அமர்ந்தான்.

மழையில் நனைந்த கோழிக் குஞ்சாய் வெடவெடத்தவளைத் தோளோடு அணைத்து, ''பார் மது. நீ பயப்படுவது போல் எதுவும் நடந்து விடாது. யோசி. தெருவில் செல்லும்போது, 'ஓரம், ஓரம்' என்று அவனை ஓரமாகத்தானே, நடத்திச் சென்றிருப்பாய்? நம் புத்திசாலிப் பையன், அதைப் பின்பற்றாமலா இருப்பான்? அத்தோடு, பெரியவர்களிடம் எப்படியெப்படி நடந்தாலும் சின்னப் பிள்ளைகளிடம் பரிவும், பிரியமும் காட்டுவதுதான் மனித இயல்பு. அதனால், நீ கவலைப்படுகிற மாதிரி எதுவும்

நடக்க யாரும் விட்டுவிட மாட்டார்கள். பயப்படாதே'' என்று ஆறுதல் கூறினான்.

அவன் சொன்னதை யோசித்து உணர்பவள் போல, மதுரிமா சற்று நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

பின்னர் ஒரு பெருமூச்சுடன் மெல்ல விலகி, ''நான் உங்களுக்கு ரொம்பத் தொந்தரவு கொடுக்கிறேன். இல்லை? ஆனால், விபு விஷயத்தில் எனக்குச் சில சமயம் மூளை வேலை செய்யவே மாட்டேன் என்கிறது உதி. காரணம் இல்லாமல் கூடப் பயந்துப் போகிறேன். சாரி'' என்றாள் மெல்லிய குரலில்.

''அதெல்லாம் இல்லை'' என்று கரகரத்த குரலில் மறுத்தான் கணவன். ''இந்த மாதிரிச் சூழ்நிலையில் இதைவிடத் தெளிவாக யாராலும் இருக்க முடியாது. நீ எவ்வளவோ கெட்டிக்காரத்தனமாகச் சமாளிக்கிறாயே! அன்றைக்கு அந்த வில்லனைச் சொந்தக் குரலில் பேச வைத்தாயே! அங்கிள் கூட அதைப் பாராட்டினார்'' என்று மெச்சுதலாகப் பேசி அவளைத் தேற்ற முயன்றான் அவன்.

ஒரு கணம் பேசாதிருந்துவிட்டு, ''என்ன பிரயோசனம் உதயன்? அவன் யாரென்று கண்டு பிடிக்க முடிய வில்லையே'' என்றாள் அவள் சோர்வுடன்.

''அவனுக்கு முழுக்க முழுக்கக் கிரிமினல் மூளை. எந்த நிலையிலும், தன்னைக் காட்டிக் கொள்ளக்கூடாது என்று ரத்தத்திலேயே ஊற வைத்திருக்கிறான். உடனே குரல் மாற்றிப் பேசிவிட்டான் பார். போகட்டும். ஒரு வழி இல்லாவிட்டால், இன்னொன்று. இப்போது, நான் வந்ததுகூட அது பற்றிப் பேசத்தான். காலையில் மிரட்டினானே, அவனிடம் பணம் பற்றி பேசுமுன், விபு



அவனிடம் இருப்பதை உறுதிப் படுத்திக் கொள்ளச் சொன்னார். விபுவின் குரலைக் கேட்க வேண்டும். அவனோடு பேசவேண்டும். இப்படி ஏதாவது கேட்டு, விஷயத்தை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்'' என்று நிச்சயப்படுத்திக் கொள்ளும் முறையையும் விளக்கினான்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த மதுரிமாவுக்கு ஒரு விஷயம் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது.



## 14

விபுவைக் கடத்திச் சென்றவன் கேட்ட, அந்த இருபது லட்சம் மதுரிமாவைக் குடைந்து கொண்டே இருந்தது. எவ்வளவு பணம்!

ஆயிரம்... பத்தாயிரம்... ஒரு லட்சம் என்றால்கூட, எப்படியோ ஏற்பாடு செய்து விடலாம்.

ஆனால் இந்த இருபது லட்சம்?

என்ன உழைத்தாலும், அவளால் இவ்வளவு பணம் சம்பாதித்துச் சேர்த்து முடிப்பதற்குப் பல ஆண்டுகள் ஆகிவிடும்.

அந்தப் பல ஆண்டுகளில் கூட, இந்தத் தொகையை அவளால் ஈடுகட்ட முடியுமோ என்னவோ.

அது முடியாது எனும்போது, எல்லோரும் என்ன நினைப்பார்கள்?

தயக்கத்துடன், ''இதைக் கேட்கிறேனே என்று கோபப்பட்டு விடாதீர்கள், உதயன். இப்போது.... ஒரு வேளை விபு அந்த ஆளிடம் இருப்பதாக உறுதியாகிவிட்டால் அப்புறம்... பிறகு, அவன் கேட்கும் பணத்தைக் கொடுத்து விபுவை மீட்பீர்கள்தானே? என்... என்னால், அவ்வளவு பணத்தை இந்தப் பிறவியில் திருப்பித் தர முடியுமோ, என்னவோ? ஆனால், இயன்ற வரை உழைத்து, இந்தக் கடனில் என்னால் முடிந்ததை நான் திருப்பிக் கொடுத்து விடுவேன். அதனால்...'' என்று சொல்லிக் கொண்டே போனவளை, உதயசந்திரன் இடை மறித்தான்.

''கோபப்பட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டாய். அதனால், பொறுமையை இழுத்துப் பிடித்து வைத்துக்கொண்டு, அமைதியாகப் பேசுகிறேன். ஆமாம், விபு என்ன உனக்கு மட்டும்தான் பிள்ளையா? அவனை மீட்கும் பொறுப்பு அவனுடைய தந்தைக்கு இல்லையா? யாருக்காக, யார் கொடுப்பதை யார் திருப்பித் தருவது? கடன் என்றுவிட்டாயே! நல்ல வேளை! அப்பா, அம்மா காது கேட்க, நீ இதைச் சொல்லவில்லை'' என்று தணிந்த குரலிலேயே வேகமாகச் சொன்னான் அவன்.

கத்தினால்தானா, கோபம்?

குனிந்த முகத்திலிருந்து முத்து முத்தாக நீர் உதிர, ''அதில்லை, உதி. முதலில், உங்களிடம் உதவி கேட்டபோது, இந்த மாதிரி ஒரு நிலைமையை ஒருவனுக்குப் பணயமாகப் பணம் கொடுத்து, விபுவை



மீட்கும்படியான நிலைமையை எதிர்பார்த்து, நான் இங்கே வரவில்லை. ஆனால் இப்போது இவ்வளவு பணம்... இவ்வளவு பணம் என்கிறபோது, என்னவோ நான் பணத்துக்காக... இந்த மாதிரி ஒரு நிலைமையை எதிர்பார்த்தே, இங்கு வந்த மாதிரித் தோன்றுகிறது. ஆனால், நிச்சயமாக அது அப்படியில்லை, உதயன். அதை... அதைத் தெளிவு படுத்தத்தான்...'' என்று முடிக்காமலே நிறுத்தினாள் மதுரிமா.

தந்தையின் சந்தேகங்கள் நினைவு வரவே, ஒரேயடியாக அவளிடம் அடித்துப் பேசி மறுக்க உதயனால் முடியவில்லை.

எனவே, ''சரிசரி இந்தமாதிரி கவைக்குதவாத பேச்சுக்கள் எல்லாம், இனிமேல் இங்கே வேண்டாம். நம்மைப் பொறுத்தவரையில் இப்போதைக்கு, விபுவை மீட்பதுதான் மிகமிக முக்கியமான ஒரே வேலை. அதற்கான வழி முறைகளை ஆலோசித்து, அதே கவனமாக இருக்கலாம். இப்போதைக்கு நம் எதிரி பேரத்தை, உன் மூலம் நடத்தத்தான் பிரியப்படுவான். ஏனென்றால், பெற்று வளர்த்தவள் என்கிறபோது பாச மிகுதியில் நீதான், அதிக அளவில் பலவீனமாக இருப்பாய் என்று கணக்கிட்டிருப்பான்...'' என்று முக்கியமான பிரச்சினையில் அவள் மனதை ஈடுபடுத்தினான்.

இருவரும் சாதாரணமாகப் பேசிக் கொண்ட போதும், உள் மனதில் விபுவைக் கடத்தியவன் மீண்டும் தொடர்பு கொள்வதை எதிர்பார்த்துக் கொண்டே இருந்தனர்.

அவனுக்கும் பணம் தேவைதானே?

இவர்களை, அதிக நேரம் காக்க வைக்காமல்

டெலிஃபோன் ஒலித்தது.

கட்டைவிரல் உயர்த்தி, உதயசந்திரன் தெம்பூட்டும் விதமாகச் சைகை செய்யவும், உள்ளூரச் சற்றுத் தைரியத்துடனேயேதான் மதுரிமா, ரிசீவரை எடுத்தாள்.

''யார் என்று தெரிகிறதா?'' என்றது கடத்தல்காரனின் கரகரத்த கட்டைக் குரல்.

''ஆமாம்'' என்றாள் மதுரிமா சுருக்கமாக.

''பணம் தயாராகி விட்டதா?'' என்று அவன் நேரடியாக விஷயத்துக்கு வந்தான்.

உதட்டைக் கடித்துக் கொண்டு மதுரிமா அவள் கணவனைப் பார்த்தாள்.

அவன், மேலே பேசு என்பது போல, ஜாடை செய்யவும், ஒரு பெரிய மூச்சை எடுத்துக்கொண்டு, 'பணம், பணம் என்று என்னவோ கொடுத்து வைத்த மாதிரிக் கேட்கிறாயே! பணத்தைப் பற்றி பேசுமுன் உனக்கு நாங்கள் எதற்காகப் பணம் தர வேண்டும்? அதைச் சொல்லு'' என்றாள் எடுப்பாக.

அவன் கொஞ்சமேனும் திகைத்துப் போயிருக்க வேண்டும்.

ஏனெனில் எதிர் முனையில் சற்று நேரம் சத்தம் இல்லை.

பிறகே, தொண்டையைக் கனைத்துக்கொண்டு, ''என்ன மகனைப் பிரிந்த ஏக்கத்தில் உனக்குப் பைத்தியம் ஏதும் பிடிக்கவில்லையே? எதற்குப் பணம் தர வேண்டுமா? உன் மகன் என் கையில் சிக்கிக் கொண்டு இருப்பது உனக்கு



மறந்து போய் விட்டதா? அவனை, உருப்படியாக நீ அடைவதற்காகத்தான், இந்தப் பணம் நீ தருவது! இப்போதாவது புரிந்ததா?'' என்றான் ஏளனம் போலக் காட்டி.

''இன்னும் ஒரு விஷயம் தெளிவாகவில்லையே!''

''என்ன அது?'' என்றான் அவன் சினக்குரலில்.

''என் மகன் உன்னிடம் இருக்கிறான் என்பதற்கான சான்று, அவன் உன்னிடம்தான் இருக்கிறான் என்று என்ன நிச்சயம்?''

மீண்டும், எதிர் முனையில் ஒரு சிறு மௌனம் நிலவியது.

பிறகு, ''உன் மகன் உன்னிடம் இல்லை என்பதுதான் அதற்குச் சான்று. அது, எனக்குத் தெரிந்திருக்கிறது என்பதுதான். இது போதாதா?'' என்று கேட்டான் அவன்.

வில்லனின் குரலில் இருந்த சிறு பதற்றம், உற்சாகமூட்ட, ''அதெப்படிப் போதும்? அவன் காணாமல் போனதை அறிந்த எத்தனையோ பேரில் நீயும் ஒருவனாகக்கூட இருக்கலாமே!'' என்றாள் மதுரிமா.

'வெரிகுட்!' என்று ஓசையின்றி உதட்டால் மட்டும் பாராட்டினான் உதயசந்திரன்.

ஒரு சில வினாடித் தயக்கத்தின் பின், ''வேறு என்ன வேண்டும்? அவன் துணிகளை அனுப்பட்டுமா?'' என்று டெலிஃபோனில் குரல் வரவும், மதுரிமா முகம் வெளுத்தாள்.

ஆனால், உதயன் மறுப்பாகத் தலையசைத்து பேசுவது போலச் சைகை செய்யவும், ''துணிகளை எப்படி

ஒப்புவது?... பிரியா நகர் காலனியில் விசாரித்து, அதே போலத் துணிகளை வாங்கி அனுப்பினால்? அதனால் விபுவைப் பேசச் சொல்லு'' என்றாள் மதுரிமா.

''அவன் இப்போது தூங்குகிறான்.''

''தூங்கி விழித்த பிறகு ஃபோன் பண்ணு. அப்புறமா, உன் பண விவகாரம் பற்றி யோசிக்கலாம்'' என்றவள், அதற்குமேல், அவன் பேச இடம் கொடாமல் ரிசீவரை வைத்துவிட்டாள்.

''பிரமாதம்!'' என்று உதயசந்திரன் கைகளைப் பற்றிக் குலுக்கியபோது, அவளுக்கும் எதையோ சாதித்துவிட்ட பெருமைதான்.

பொய் சொல்லிக் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முயன்ற ஒருவனை, விரட்டியாயிற்று.

பெருமைப் பட வேண்டிய விஷயம்தான்.

ஆனால்...

மதுரிமாவின் முகம் வாடத் தொடங்கவும், ''ஷ். இவ்வளவு தைரியமாகப் பேசிவிட்டு, அதற்குள், முகம் வாடக் கூடாது. எப்படியும், விபுவை விரைவில் கண்டுபிடித்து விடப் போகிறோம். அதற்கான அடுத்த முயற்சியாக அங்கிள்...'' என்று உதயன் சொல்லிக் கொண்டிருந்த போதே மீண்டும் டெலிஃபோன் மணியடித்தது.

எடுத்து யாரென்று கேட்டு, ''இதோ கூப்பிடுகிறேன்'' என்று சொல்லிவிட்டு ரிசீவரின் வாயைப் பொத்தியவாறு ''அவன்தான். திரும்பவும் ஏதாவது ஏமாற்ற முயற்சிப்பான் தைரியமாகப் பேசு.'' என்று கூறி



அவளிடம் ரிசீவரை நீட்டினான் உதயன்.

''என்ன விபு விழித்துவிட்டானா?'' என்று சாதாரணமாகக் கேட்டாள் மதுரிமா.

''அவன் விழிப்பதும், தூங்குவதும் உன் கையில்தானே இருக்கிறது?'' என்று பூடகமாகக் கேட்டு அவளைக் கொஞ்சம் கலக்கினான் அவன்.

கலக்கத்தைக் காட்டிக் கொள்ளாமல், ''என்ன உளறுகிறாய்?'' என்று அலட்சியமாகப் பேசினாள் மதுரிமா.

''உளறலா? பரவாயில்லை, துணிச்சலாகத்தான் பேசுகிறாய். பணம் கொடுக்கப் பிடிக்காமல், உன் புருஷன் வீட்டில் இப்படிப் பேசச் சொன்னார்கள் போல, இவ்வளவு நாள் பார்க்காத பேரன்தானே? செத்தால் சாகட்டும் என்று எண்ணினார்கள் போல''

சாவைப் பற்றி அவன் பேசியது பொறுக்காமல், ''ஏய், எதற்கு அனாவசியப் பேச்சு? விபு உன்னிடம் இருந்தால், அவனைப் பேசச் சொல். இல்லாவிட்டால் ஃபோனைக் கீழே வை'' என்று மதுரிமா அதட்டினாள்.

''அது சரி நமக்கு எதற்கம்மா, அனாவசியப் பேச்சு? தேவையில்லைதான் விடு. நம் விஷயம் மட்டும் பேசுவோம். ஆமாம், உன் பையன் ஃபோனிலே பேசினால் மட்டும் நீ எப்படி நம்புவாய்? எப்போதோ, எங்கேயோ எடுத்த டேப்பைப் போட்டுக் காட்டினால், என்ன செய்வாய்? அவனை மாதிரி வேறு ஒரு குழந்தையைப் பேச வைக்கிறேனோ என்று கூட சந்தேகப்படுவாய். எதற்கு வீண் வம்பு? அதைவிட,

ஆளையே காட்டினால் நம்புவாயல்லவா?''

இவன் என்ன சொல்லுகிறான்?!

வியப்பும் மகிழ்ச்சியுமாகக் கணவனை நோக்கி, ரிசீவரின் வாயைப் பொத்தி, ''ஆளைக் காட்டவா? என்று கேட்கிறான்'' என்றாள் அவள்.

யோசனையோடு, 'மேலே பேசு' என்று சைகை செய்தான் உதயன்.

அவன் தொடர்ந்து பேசினான். ''என்னம்மா. பேச்சையே காணோம்? அங்கே ஏதும் கலந்தாலோசனையோ. அல்லது பிள்ளையைப் பார்க்கப் போகிறோம் என்கிற பெரு மகிழ்ச்சியா? எதோ, இருக்கட்டும். இப்போது நம் விஷயத்துக்கு வருவோம். உன் பிள்ளையின் கை, கால் இப்படிப் பார்த்தால்கூட, உனக்கு நம்பிக்கை வராது. வராதில்லையா?''

''நீ என்ன சொல்லுகிறாய்?'' அவன் குரலில் இருந்த நக்கல் அவளைக் குழப்பியது.

''நிஜத்தைச் சொல்லுகிறேன். கைகால் ஒருத்தர் மாதிரி இன்னொருத்தருக்கும் இருக்கும்., அதனால், யாருடையதோ என்று விடுவாய். ஆனால், முகம் அப்படியல்ல பார்த்தால் உடனே, அடையாளம் தெரிந்து விடும். அப்போதுதான் நீ நம்புவாய். அதனால், அவன் தலையை மட்டும் வெட்டி எடுத்துப் பார்சலில் அனுப்புகிறேன். பார்த்து நிச்சயப்படுத்திக் கொள்!''

தீச்சுட்டது போல ரிசீவரை வீசிவிட்டு, இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு, ''ஐயோ! ஐயோ, ஐயோம்மா!'' என்று பதறிக் கதறினாள் மதுரிமா.



வீசியதைத் தூக்கிக் காதில் வைத்துப் பார்த்தான் உதயன்.

எதிர் முனையில் இருந்தவன் ஒரு பேய்ச்சிரிப்புடன் கருவியைக் கீழே வைத்துக் கொண்டிருந்தான்.

ரிசீவரைத் தாங்கியில் மாட்டிவிட்டு யோசனையோடு, மனைவியின் புறமாக உதயசந்திரன் திரும்பினான்.

டெலிஃபோன் பேச்சைக் கேட்டுக் கொண்டே இருந்ததால், எதற்காக மதுரிமா இப்படிப் பதறுகிறாள் என்பதை அவனும் அறிவான்.

'குழந்தையின் தலையை வெட்டி அனுப்புவேன்' என்றானே என்று அவனுக்கும் வருத்தம்தான்., கோபம்தான்., கலக்கமும்தான்.

ஆனால், கோழைத்தனமான வெறும் டெலிஃபோன் மிரட்டலுக்கு இப்படிக் கலங்க வேண்டுமா?

பாசம் மிகுகிற போது, பகுத்தறிவு குறைந்து போய் விடுமா?

சோஃபாவில் அமர்ந்திருந்து கவனித்துக் கொண்டிருந்த சாவித்ரி எழுந்து வந்து, ''மதுரிமா, மதுரிமா!'' என்று மதுரிமாவின் தோளைப் பற்றி அழைத்துப் பார்த்தாள்.

ஆனால், அவளது குரல் சின்னவளின் காதில் விழுந்த மாதிரியே தெரியவில்லை!

மகனிடம் திரும்பி, மெல்லிய குரலில், ''ரொம்ப மிரட்டிவிட்டானா?'' என்று சாவித்ரி கேட்க, 'ஆம்' என்பதுபோலத் தலையசைத்தான் அவன்.

கழுத்தில் கை வைத்து ஃபோனில் மற்றவன் சொன்னதைச் செய்து காட்டினான்.

A-PDF Merger DEMO : Purchase from www.A-PDF.com to remove the watermark


அதிர்ந்துவிட்ட போதும், மருமகளிடம் திரும்பி, ''கடிக்கிற நாய் குலைக்காதும்மா. அப்படியெல்லாம், பச்சைக் குழந்தையை யாரும் செய்யமாட்டார்கள். கவலைப் படாதே'' என்று அவளுக்கு ஆறுதல் கூற முயன்றாள் சாவித்ரி.

கண் முன்னே, ஏதோ பயங்கரக் காட்சியைக் காண்பவள் போல மதுரிமா நடுங்கிக் கொண்டிருந்தாளே தவிர, மாமியாரின் பேச்சைக் கவனிப்பதாகவே இல்லை.

உதயசந்திரன் முன் வந்து, மதுரிமாவைத் தன் புறம் திருப்பினான்.

அவளைப் பலமாக, இருமுறை உலுக்கினான்.

மதுரிமா திகைத்து நோக்கவும், அழுத்தமான குரலில், ''நான் சொல்வதைக் கவனி. போனில் நீ கேட்டதெல்லாம், சுத்தப் பொய். உன்னை மிரட்ட வென்று சொன்னது. எல்லாம் பொய். நான் சொல்வது புரிகிறதா? அவன் சொன்னது எல்லாமே முழுப் பொய்! தெரிந்து கொள்'' என்று அவளை நேராகப் பார்த்தவாறு கூறினான்.

வெறித்து நோக்கியவள், ''பொய் என்று எப்படிச் சொல்லுகிறீர்கள்?'' என்று அவனை நம்பாத பார்வையுடன் கேட்டாள்.

''சற்று யோசித்தால் நீயும் அப்படித்தான் சொல்லுவாய்'' என்றான் அவன் அமர்த்தலாக.

மதுரிமா பேசாமல் பார்த்துக் கொண்டு நிற்கவும், ''யோசி. மது. விபு நல்லபடியாக உயிரோடு இருக்கும்வரைதானே அவனுக்கு லாபம்? அவனை, அப்படிச் செய்வேன், இப்படிச் செய்வேன், திருப்பித் தர



மாட்டேன் என்றெல்லாம் மிரட்டிப் பணம் பறிக்கலாம். ஃபோனில் அவன் சொன்ன மாதிரி, ஏடாகூடமாக ஏதாவது செய்துவிட்டால் அப்புறம் எதை வைத்து, அவன் நம்மை மிரட்ட முடியும்? சொல்லு?'' என்று கேட்டான் உதயசந்திரன்.

முகம் தெளிவுற, ஆசுவாசமாய் அவன் மீது சாய்ந்தவள், ''ஆமாம்... மிரட்டவே முடியாது!'' என்று மறுப்பாய்த் தலையசைத்தாள்.

''ஆனால், பின்னே ஏன் அவன் அப்படிக் கொடூரமாகப் பேசவேண்டும்?''

''இன்னும் கொஞ்சம் நிதானமாக யோசித்தால், அதுவும் உனக்கே புரியும்!'' என்று அவள் கூந்தலை நீவி விட்டான் அவன்.

உடனேயே நிமிர்ந்து, ''புரிகிறது'' என்றாள் அவள். ''பிரபு அங்கிள் சொன்னது போல, அவனிடம் விபு இல்லை! கலங்கிய குட்டையில் மீன் பிடிக்க என்று நீங்கள் சொன்னது சரியே. என்னை ஒரேயடியாகக் கலக்கி சற்றும் சிந்திக்கச் சக்தியற்றவளாகச் செய்வதற்காகவே, இந்தக் கொடூரப் பேச்சு!''

''அத்தோடு, அவன் இருப்பது தெரியாமல், பணம் தர மாட்டேன் என்ற உன் நிபந்தனையால் ஏற்பட்ட சீற்றம் வேறு, சேர்ந்து கொண்டது.''

''என்ன அநியாயம், பாரேன்!'' என்றாள், இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த சாவித்ரி. ''அப்படியானால், இப்போதைக்கு விபுவைப் பற்றி ஒரு கவலும் இல்லை அப்படித்தானே?'' என்று

கவலையுடன் கேட்டாள்.

சோர்வுடன் சென்று மீண்டும் இருக்கையில் சாய்ந்தாள் மதுரிமா.

நெஞ்சைப் பிளந்து சென்ற அவளது நெடுமூச்சைக் கவனித்துவிட்டு, ''விபு படத்தைப் போட்டு விளம்பரம் கொடுக்கலாம் என்கிறார் அங்கிள்'' என்றான்.

''நல்ல ஐடியா! இந்த ஐடியா, இது வரை, நமக்குத் தோன்றவே இல்லையே! பிரபு அண்ணனுக்கும், இப்போதுதானே தோன்றியிருக்கிறது! என்றாள், சாவித்ரி மகிழ்ச்சியும் கூடவே வருத்தமுமாக.

''அப்படியில்லை அம்மா. அப்புறம், இந்த மாதிரி நிறையப் பேர் வரக் கூடும் என்கிறார். வேறு சில சிக்கல்களும் ஏற்படக் கூடும். அதைவிட உண்மையாகக் கடத்தியவன் தானாக வெளியே வரக் கொஞ்சம் அவகாசம் கொடுக்கலாம் என்பது அவர் கருத்து!'' என்று உதயன் விளக்கினான்.

''என்ன அவகாசமா? இப்படி இருக்குமோ? அப்படி இருக்குமோ என்று மனம் அல்லாடுவதில் வாழ்க்கையே வெறுத்து விடும் போல இருக்கிறது'' என்றாள் சாவித்ரி.

'போல' என்ன? வெறுத்தே போய் விட்டதே , என்று எண்ணினாள் மதுரிமா.

இரு பெண்களையும் தேற்ற எண்ணி வாயைத் திறந்த உதயசந்திரன், ஒன்றும் சொல்லாமலேயே வாயை மூடிக் கொண்டான். அவனுக்கே மனம் சோர்ந்துதான் போயிருந்தது. அப்படியிருக்க, அவன் யாரைத் தேற்ற முடியும்?



தாய், தாரத்துக்குத் துணையாக, பிள்ளை விஷயமாக ஏதாவது பிரச்சினை எழுந்தால் கவனிக்க என்று வீட்டில் இருந்திராமல், தந்தையைப் போல அலுவலகம் சென்று வேலையைப் பார்த்திருக்கலாமோ, மனம் கொஞ்சம் மாறியிருக்குமோ என்று கூட, உதயனுக்கு ஒரு தரம் தோன்றியது.

ஆனால் அந்த டெலிஃபோன் பேச்சை, மதுரிமா தனியே தாங்கியிருக்க மாட்டாள்!

கேட்கும்போது, அவனுக்கே கஷ்டமாக இருந்ததே!

ஆனால், முடிவில் என்ன நடக்கும் என்று அறியாத இந்தக் காத்திருத்தல், அவனது நரம்புகளையும் பாதித்து, இறுக வைத்துக் கொண்டிருந்தது.

மூவரும் சேர்ந்து அமர்ந்திருந்தபோது, மீண்டும் டெலிஃபோன் மணி அடித்தது.

மூவரும் மின்சாரத்தால் தாக்குண்டவர்கள் போல, விறைத்து நிமிர்ந்தனர்.

மூவர் பார்வையும், டெலிஃபோன் கருவி மீது படிந்ததே தவிர, யாருமே இருந்த இடத்தை விட்டுச் சில கணங்கள் அசையவே இல்லை.

மதுரிமா அச்சத்துடன் விழிப்பதையும் சாவித்ரி கவலையுடன் பார்ப்பதையும் கவனித்துவிட்டு உதயசந்திரன் எழுந்து சென்று, ரிசீவரை எடுத்தான்.

பிரபுவின் உற்சாகக் குரல் கேட்டது. ''என்னப்பா ஃபோன் எடுக்க இவ்வளவு நேரம்? உன் வீட்டுக்குத்தான் வந்து கொண்டிருக்கிறேன். உங்கள் வீட்டுக்கு ஒரு விருந்தாளியையும் அழைத்து வருகிறேன். விருந்தாளி,

யார் தெரியுமா? உங்கள் வீட்டில் எல்லாருக்குமே மிகவும் பிடித்தமானவராகப் போகிறவர், உன் மனைவியின் உயிர் யார் என்று புரிகிறதா?'' என்று கேட்டார் அவர்.

உதயசந்திரனுக்குத் தன் செவிகளையே நம்ப முடியவில்லை!




''அங்கிள்!'' என்று உற்சாகமாகக் கூவியவன் உடனே, குரலைத் தணித்து, ''நிஜமாகவா, அங்கிள்? நீங்கள் சொல்வது நிஜம்தானே? நிஜமேதானே?'' என்று பரபரப்புடன் வினவினான்.

''சும்மா என்றால் என்னிடம் இந்தக் கேள்வி கேட்டதற்கு, உன்னை நன்றாக வாங்கியிருப்பேன். ஆனால், இப்போது உன் மனநிலை எப்படி இருக்கும் என்பதை என்னால் ஊகிக்க முடிவதால் பாவம் என்று விட்டு விட்டேன். ஃபோனை வைத்துவிட்டுப் போய், உன் அம்மாவையும், மனைவியையும், இந்த வரவுக்குத் தயார் பண்ணு. குழந்தைக்கு, ஒரு குறையும் இல்லை. கடவுள் அருளால் கவனித்துக் கொள்ள நல்ல குடும்பம் கிடைத்து, நன்றாகவே இருக்கிறான் என்று சொல்லு. வைத்துவிடட்டுமா? இன்னும், இருபது நிமிஷங்களில் அங்கே இருப்போம்'' என்று பேச்சை முடித்தார் போலீஸ் அதிகாரி.

அவனது ஃபோன் பேச்சை, மதுரிமா, சாவித்ரி



இருவருமே முதலில் பயமும், பிறகு ஆவலுமாக மிகுந்த தீவிரத்துடன் கவனித்துக் கொண்டிருந்தனர்.

உதயன் பேச்சை முடிக்கு முன்பே எழுந்துவிட்ட மதுரிமா, அவனிடம் ஓடிச் சென்று, ''விபு, விபுதானே? கிடைத்துவிட்டான் என்றுதானே... கடவுளே, உங்களிடம் பேசியது பிரபு அங்கிள்தானே, உதி?

''சொல்லுங்களேன், சீக்கிரம் சொல்லுங்களேன்! என் கண்ணன் கிடைத்துவிட்டான்தானே!'' என்று அவன் சட்டையைப் பிடித்து உலுக்கிக் கேட்டாள்.

சட்டையைப் பிடித்து உலுக்குகிறாளே என்றில்லாமல், அவனுக்குச் சிரிப்புதான் வந்தது.

அப்படியே அவளை இறுகப் பற்றித் தூக்கி ஒரு தட்டாமாலை சுற்றி இறக்கிவிட்டு ''கிடைத்துவிட்டான்! கிடைத்துவிட்டான்! கிடைத்துவிட்டான்!'' என்று உற்சாகத்துடன் கூவினான்!

பார்வையை உயர்த்தி, சோபாவிலிருந்து எழுந்து ஆவலே உருவாக நின்று கொண்டிருந்த தாயை நோக்கி, ''அம்மா, உங்கள் பேரன் கிடைத்து விட்டானாம். நன்றாக இருக்கிறானாம். எப்படியோ, அவனைக் கவனித்துக் கொள்ள ஒரு நல்ல குடும்பம் கிடைத்து அவர்கள் பராமரிப்பில், ஆரோக்கியமாக இருக்கிறானாம். எல்லோரையும் அழைத்துக்கொண்டு அங்கிள் இப்போது நம் வீட்டுக்கு வருகிறாராம். இது கிட்டத்தட்ட சாப்பாட்டு நேரம்தானே, அம்மா. எல்லோருக்கும் சாப்பாட்டுக்கு... செய்ய வேண்டாம் அம்மா. நல்ல ஹோட்டலில் வாங்கி வரச் சொல்லலாம். முதலில் பேரன் வருகிறான் என்று நான் அப்பாவிடம் சொல்லுகிறேன்'' என்று மகிழ்ச்சி

வேகத்தில் அவனே சிறுவன் போலப் பரபரத்தான்.

சந்தோஷமாகச் சிரித்தபடி அருகில் வந்த மகன், மருமகள் இருவர் தோளையும் பற்றி அழுத்திவிட்டு சாவித்ரி உள்ளே சென்றாள்.

செல்லும்போதே, ''அங்கிள், அப்பாவிடம் சொல்லியிருப்பார்.'' என்று சொல்லிவிட்டுப் போனாள்.

''எதற்கும்...'' என்று லேசாகத் திரும்பி, ராகவனை அவன் தேடியபோது அவர் வீட்டுக்கு வந்து கொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்தது.

''பேரனைப் பார்க்கும் ஆவல்!'' என்று பெருமிதமாய் உரைத்தவாறு மனைவியைப் பார்த்தான் உதயசந்திரன்.

பிள்ளை வரப் போகிறான் என்ற நிம்மதியில், அத்தனை நாள் அனுபவித்த கவலை, பயம், ஏக்கம், இறுக்கம் எல்லாம் அகல இதழ்களில் இளநகை மலரக் கண்மூடி நின்றாள் அவள்.

கணவன் சட்டையைப் பற்றிய கையை விலக்கவில்லை. அவனைச் சார்ந்தே நிற்கிறோம், அதுவும் வீட்டு நடுவில் என்பதெல்லாம் அவள் கருத்தில் உரைத்த மாதிரியே தோன்றவில்லை!

மகன் கிடைத்துவிட்டான்!

அவள் மனம் முழுவதும் நிறைந்திருந்தது. அந்த எண்ணம் ஒன்றுதான்!

மனைவியின் மனதைப் புத்தகமாகப் படித்த உதயனுக்குள்ளும், அந்த சுகம் இதமாகப் பரவலாயிற்று.

அவளை ஆதரவாக அணைத்த வண்ணம், அவனும் அப்படியே நின்றுவிட்டான்.



'மதிய உணவுக்கு, சைவம் வாங்கவா?' அசைவமா என்று கேட்க வந்த சாவித்ரி, இருவரையும் பார்த்துவிட்டுப் பேசாமலே திரும்பிச் சென்றாள்!

தெருவோடு சென்ற கார் ஒன்றின் ஹார்ன் சத்தம், கணவன் மனைவியின் மோன நிலையைக் கலைத்தது.

மெல்ல விலகிய மதுரிமாவை, உதயசந்திரனும் தடுக்கவில்லை.

மணிக்கட்டைத் திருப்பிப் பார்த்துவிட்டு, ''அவர்கள் இன்னும் ஐந்து நிமிஷங்களில் வந்து விடுவார்கள் மது. நீ முகம் கழுவ வேண்டுமானால், கழுவிக் கொண்டு வா... அப்புறம் விபுவுக்கு எதுவும் வாங்கி வைக்க வேண்டுமா? பால், வீட்டில் இருக்கும் ஐஸ்கிரீம், சாக்கலேட், இந்த மாதிரியில் அவனுக்குப் பிடித்தது சொன்னால், வாங்கிவரச் சொல்லுகிறேன்'' என்றான் உதயன்.

இயல்புக்குத் திரும்பியளாக, ''ஐஸ்க்ரீம் விபுவுக்குப் பிடிக்கும். ஆனால் நான் அதிகம் வாங்கிக் கொடுக்க மாட்டேன். அதிலும் பிக்கிமாக்ஸ் தான் அதிக விருப்பப்படுவான்'' என்றாள் அவள்.

''பிச்சிமாச்' என்று அவன் மழலையாகக் கேட்ட நினைவில் முகத்தில் முறுவல் மலர்ந்தது. அந்த முறுவலுக்கு இணையாகத் தானாகத் தோன்றிய புன்னகையுடன், அவன் பேசினான். ''அப்புறம், இன்னொரு விஷயம் மது. உனக்கே தெரியும் என்று நினைக்கிறேன். அவனைக் கண்டதும், அதிக உணர்ச்சி வசப்பட்டுக் காட்டிக் கொள்ள வேண்டாம். கட்டிப்பிடித்து, அழுது... என்று, அதெல்லாம் வேண்டாம். கண்ணீர் வரத்தான் செய்யும். ஆனால்,

எப்படியாவது கட்டுப்படுத்திக் கொள். இயல்பாக இருந்தால், அவனுக்கு நல்லது. தனக்கு என்னவோ நேர்ந்து விட்ட மாதிரி உணர்ச்சி ஏற்படாது''

அவன் சொன்னது சரியே என்று தாய் மனது உணர்ந்திருந்ததால், ஒத்துக்கொண்டு தலையாட்டினாள் அவள்.

தாயைக் கண்டதும் ஓடி வந்து, அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டான் விபு.

கண்ணீரை அடக்கிக் கொண்டு, அவள் மகனைத் தட்டிக்கொடுக்க, 'ஆன்ட்டீ, அம்மா காணாம போக வண்டாச்சு!' என்று கூட வந்த பெண்ணிடம் கதை சொன்னான் சிறுவன்.

மதுரிமாவை விட ஏழெட்டு ஆண்டுகள் மூப்பிருக்கலாம் அந்தப் பெண்ணுக்கு. களை பொருந்திய முகம் அமைதியாகவும் இருந்தது.

மதுரிமாவைப் பார்த்து முறுவலித்து, ''அவ்வப்போது, உங்கள் நினைவு வந்துவிட்டால், 'அம்மா காணோம்' என்று கதவு பின்னாலேயெல்லாம் தேடுவான். 'காணோம், பிடி' விளையாட்டு, இவனோடு நீங்கள் விளையாடுவீர்கள் போல என்று நினைத்து நாங்களும் அப்படியே விளையாடி சமாளித்து விடுவோம். பொதுவாக, அழுகிறவன் இல்லை என்பதால் பிள்ளைகளோடு விளையாடிக் கொண்டே இருந்து விட்டான். அடிக்கடி யாரோ ப்ரபா, இந்து, சங்கர், மணி என்றெல்லாம் சொல்லுவான். அண்ணா, அக்கா போல என்று முதலில் நினைத்தோம்... என்று அந்தப் பெண் சொல்லிக் கொண்டு போக, இடைமறித்து,



''அத்தனையுமா? தேவுடா!'' என்று உதயசந்திரன் கை விரிக்க எல்லோருக்கும் சிரிப்பு வந்தது.

சிரித்துவிட்டு ''முதலில்தான் அப்படி நினைத்தோம். பிறகு விபு மேலும் இரண்டு மூன்று பெயர்கள் சொல்லவும், அக்கம் பக்கத்தில் உள்ள பிள்ளைகள் என்று புரிந்து கொண்டோம்'' என்றாள் அவள்.

''நல்லவேளை! அவர்களையும் இன்னும் இரண்டு மூன்று அண்ணா, அக்காள்கள் என்று நினையாமல் விட்டீர்களே!'' என்று உதயன் திரும்பவும் வேடிக்கை பேசவும் மீண்டும் ஒரு சிரிப்பலை பரவியது.

''அச்சோ, உமாவுக்கு அதே அபிப்பிராயம் தான் சார். நான்தான், அப்படி இராது என்று சொல்லி நம்ப வைத்தேன்'' என்று அந்த உமாவுடைய கணவன் கூற, ''அய்யோ, என்ன அநியாயம்! 'பார்பார், உலகத்தில் ஒரோருத்தன் எத்தனை பெற்றுப் போட்டு வைத்திருக்கிறான்! நம் வீட்டில் பார். இரண்டு இரண்டு! என்று புலம்போ புலம்பென்று புலம்பியது யாராம்?'' என்று உமா கேட்க, மறுபடியும் எல்லோரும் நகைத்தனர்.

சிரித்து முடிக்கையில், ''நாலு நாட்களாக, வீட்டில் சிரிப்பே இல்லாமல் தவித்திருப்பீர்கள், பாவம்'' என்றார் உமாவுடைய கணவர்.

மகனைத் தொட்டுத் தடவியவாறே மடியில் வைத்திருந்த மதுரிமா, ''ரொம்ப நன்றி சார். விபுவைத் திரும்ப எங்களிடம் சேர்த்ததற்கும், அவனை நன்றாகப் பார்த்துக் கொண்டதற்கும்'' என்று உமாவை நோக்கிச் சொல்லி முடித்தாள்.

கையை நீட்டி, விபுவின் கன்னத்தை வருடி, ''இந்தக் குட்டியைப் பார்த்துக் கொண்டதற்கு நன்றி சொல்ல வேண்டுமா? அவன் துறுதுறுப்பும், சிரிப்பும் வீடே விளக்குப் போட்ட மாதிரி சந்தோஷமாக இருக்குமே! அவனை வீட்டில் வைத்துக் கொள்ள முடிந்ததற்கு நாங்கள்தான் நன்றி கூற வேண்டும்!'' என்றாள் உமா.

''இப்படியெல்லாம், உபசாரமாகப் பேசி, நீங்கள் செய்ததைக் குறைத்துக் காட்ட வேண்டாம் மிசஸ் தயாளன்'' என்று, இடைப் புகுந்து கூறிவிட்டு பிரபு எல்லோரையும் முறைப்படி அறிமுகம் செய்து வைத்தார்.

நடந்த கதையைப் பிரபுவும் தயாளன், உமா தம்பதிகளுமாகச் சொன்னார்கள்.

போரூரைச் சுற்றிலும் பல இடங்களில் தோன்றிவரும், புதிய குடியிருப்புப் பகுதிகளில் ஒன்றான பிரியா நகரிலிருந்து அந்தக் கடத்தல்காரன், வளசரவாக்கம் வரை, விபுவைக் கடத்திக் கொண்டு வந்து விட்டான்.

ஆட்டோ வளசரவாக்கத்தை அடைந்தபோது விபு ஐஸ்க்ரீம் கேட்டிருக்கிறான்.

விபுவின் சத்தம் உயரவே, வில்லனுக்கு பயம் வந்து விட்டது என்பது பிரபுவின் கணிப்பு.

தனியாக, ஒரு தாடிக்காரன் அழுகிற பிள்ளையோடு ஆட்டோவில் போகிறான் என்றால் நிறையப் பேர் கவனிக்கக்கூடும். யாராவது ஆட்டோ நம்பரைக் குறித்து வைத்துத் தொலைத்தால் ஆபத்துதானே?

பையனைக் கூட்டிச் செல்லவும் பயம். அவனை அறிந்தவர்கள் கண்டுவிட்டால் இன்னமும் ஆபத்து



எனவே, விபுவை ஆட்டோவில் வைத்துவிட்டு ஐஸ்க்ரீம் வாங்கப் போயிருக்கிறான்.

குழந்தை என்ன நினைத்ததோ புகை பிடித்துக் கொண்டிருந்த டிரைவர் அறியாமலே, வண்டியில் இருந்து இறங்கி நேராகப் பக்கத்துச் சந்தில் இருந்த ஐஸ்க்ரீம் பார்லருக்குப் போய்விட்டான்.

இந்த இடத்தில் மதுரிமா ஒரு சிறு விளக்கம் கொடுத்தாள். ''பொதுவாக மெயின் ரோடு ஐஸ்க்ரீம் பார்லரில் கூட்டம் அதிகமாக இருக்கும். முண்டியடித்து வாங்க வேண்டும். இந்தச் சந்துக்கடை மிகவும் சுத்தமாக இருக்கும். அதே சமயம் உட்கார்ந்து சாப்பிட வசதியாகப் பக்கத்து வீட்டில் ஒரு திண்ணை இருக்கும். அருகிலேயே ரெடிமேடு துணிக்கடை ஒன்று உண்டு. துணி, காய் மற்ற சாமான் வாங்கிக்கொண்டு அங்கே போய் விபுவுக்கு ஐஸ்க்ரீம் வாங்கிக் கொடுப்பது இரண்டொரு மாதங்களுக்கு ஒருதரம் நடப்பதுதான்''.

''சரிதான்! அதுதான் விபு நேராக அங்கே போயிருக்கிறான். நம் ஆள் ஐஸ்க்ரீமோடு திரும்பிப் போனால் அங்கே, பிள்ளையைக் காணோம். எப்படி இருந்திருக்கும்? உரக்கக் கூப்பிட்டுத் தேடவும் முடியாத நிலை! ஓசைப்படாமல் அங்கும் இங்கும் தேடியிருக்கிறான். ஆனால் அவன் தேடியது மெயின் ரோடு கடைப் பக்கமாக. இவன்தான் அந்தப் பக்கமே இல்லை!'' என்றார் பிரபு.

மேலே கதை தொடர்ந்தது.

சந்தில் இருக்கும் கடைக்குத்தான், தயாளன்

ஐஸ்க்ரீமுக்குப் போவதும்.

அன்றும் அங்கே சென்று பிள்ளைகளுக்கு வேண்டியது கேட்டுக் கொண்டிருந்த போதுதான், தனக்கொரு 'பிச்சி மாச்' வேண்டும் என்று கேட்டுக்கொண்டு விபு, அவர்களுக்கு அறிமுகமானான்.

கூட யாரும் இல்லாமல் இரண்டு வயதுப் பிள்ளை மட்டும் தனியே வந்தது எல்லோருக்கும் திகைப்புதான். சுற்றுமுற்றும் பார்த்தபோது, யாரையும் காணாததோடு விபுவும் பிக்கிமாச்சுக்காகக் கத்தத் தொடங்கவும் பக்கத்தில்தான் தாய் இருப்பாள், வந்து விடுவாள் என்று எண்ணி சளி இருக்கிறதா என்று மட்டும் பார்த்து இல்லை என்றதும் அவன் கேட்டதை வாங்கிக் கொடுத்து விட்டார்கள்.

ஆனால், பிள்ளைகள் மூவரும் ஐஸ்க்ரீமைத் தின்று முடித்த பிறகும், சிறுவனைத் தேடி யாரும் வராதது கணவன் மனைவிக்குக் கவலையையும் பயத்தையும் உண்டு பண்ணியது.

நன்கு இருட்டி விட்டது. அவர்கள் வீட்டுக்குப் போக வேண்டிய நேரமும் ஆகிவிட்டது. ஆனால், சின்னப் பிள்ளையைத் தனியாக விட்டுப் போகவும் மனம் வரவில்லை!

அக்கம்பக்கம் யாராவது பிள்ளையைத் தேடுகிறார்களா என்று சுற்றிப் பார்த்துவிட்டு வந்தான் தயாளன்.

அந்தத் தெருவில் யாரும் தேடவில்லை என்பதோடு எட்டு மணிக்கு மேல் ஆகிவிட்டதால் ஊரும் அடங்கத் தொடங்கிவிட்டது.



தன் பேர் விபு. அம்மா பேர் மதுரிமா என்பதற்கு மேல் குழந்தைக்கு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை..!

பார்லர் பொறுப்பாளர் அதன் தாயோடு ஓரிரு முறை சிறுவனைப் பார்த்திருப்பதாகச் சொன்னாரே தவிர, யார் என்ன என்ற மற்ற விபரம் அவருக்குத் தெரியவில்லை.

போலீஸில் ஒப்படைத்து விடலாமா என்றால் சமீபத்தில் ஒரு விபத்தைப் பற்றித் தெரிவிக்கப் போய்ப் படாதபாடு பட்ட அனுபவம் பசுமையாக மனதில் இருந்ததால் அதுவும் பிடிக்கவில்லை. பிள்ளை ஏதாவது நகைகள் அணிந்திருந்து அது தொலைந்து போயிருந்தால் தயாளன் கதி அவ்வளவுதான்?

''மன்னித்துக் கொள்ளுங்கள் சார். எல்லாப் போலீஸ்காரர்களையும் நான் அப்படிச் சொல்லவில்லை. ஆனால், எங்கள் அனுபவம் அப்படியாகிவிட்டது'' என்று விபுவிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டுக் கதையை மேலே தொடர்ந்தார்கள்.

அம்மா காணோம் என்று கையை விரித்து விட்டு விபுவும், இவர்கள் பிள்ளைகளோடு விளையாடத் தொடங்கிவிட்டான். சற்றுப் பெரியவர்களான சாணுக்கும், சாருவுக்கும் விபுவை மிகவும் பிடித்துப் போய்விட, ''தம்பியை நம் வீட்டுக்குக் கூட்டிப் போகலாம்பா'' என்று கெஞ்சத் தொடங்கினார்கள்.

சற்று யோசித்துவிட்டு உமா ஒரு யோசனை சொன்னாள்.

சரண், சாருவின் சின்னதான துணிமணிகளைக் கொண்டு

கொடுப்பதில் அனாதை இல்லத் தலைவி ஒருவருடன் அவர்களுக்கு நல்ல பழக்கம் இருந்தது. அந்த அம்மையாரிடம் சொல்லி அவர்களை அழைத்துக் கொண்டு காவல் நிலையத்துக்குச் சென்று விபுவை ஒப்படைக்கலாம்!

மரியாதைக்குரிய அந்தப் பெண்மணியோடு சென்றால், காவல் நிலையத்தில் அவர்களுக்குப் பிரச்சினை வராது!

அதுவரை விபு அவர்களோடு இருக்கட்டும்!

இந்த முடிவுக்கு வந்து யாராவது தேடி வந்தால் அனுப்பும்படி பார்லர் பொறுப்பாளரிடம் அவர்களது முகவரியைக் கொடுத்துவிட்டு விபுவைத் தங்களோடு அழைத்துச் சென்றனர் தம்பதியர்.

மறுநாள் காலையிலிருந்தே இல்லத்துக்கு ஃபோன் செய்தார்கள்.

இல்லத் தலைவி, அரபு நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் சென்றிருப்பதாகவும் திரும்பி வர நாலு நாள் ஆகும் என்றும் தகவல் கிடைக்கவும் இருவருமே முதலில் சற்று மிரண்டுதான் போனார்கள்.

இப்போது காவல் நிலையத்துக்குப் போனால், ''நேற்றே ஏன் வரவில்லை?' என்று வேறு வருமே!

சரி, ஆனது ஆகட்டும் அரை நாள் இருந்த பையன், இன்னும் நாலு நாட்கள் இருப்பதில் புதிய பிரச்சினை எதுவும் வந்துவிடாது என்று விபுவை வீட்டிலேயே வைத்துக்கொண்டார்கள்.

அன்றே காவல் நிலையத்துக்குப் போயிருந்தால்



அடுத்து மூன்று நாள் நரகம் இல்லாது போயிருக்குமே என்று மதுரிமாவால் எண்ணாதிருக்க முடியவில்லை.

ஆனால் பிரபு வேறு சொன்னார்.

எல்லோரையும் ஒரு தரம் பார்த்துவிட்டு, ''பல வகைகளில், நீங்கள் செய்ததே நல்லதாகிவிட்டது. நயாளன் நீங்கள் அன்றே காவல் நிலையத்துக்குச் சென்றிருந்தீர்கள் என்று வையுங்கள். மெயின் ரோடிலும் காவல் நிலையம் அருகிலுமாகச் சுற்றிக் கொண்டிருந்த தாடிக்காரன், உங்களை வழியிலேயே மடக்கி நம்ப வைத்துத் திரும்பவும் விபுவைக் கவர்ந்து சென்றிருப்பான். இது முறையான செயல்பாடு இல்லை என்றாலும் எதிலும் ஒரு விதிவிலக்கு உண்டு என்பார்கள். அது போல, விபு விஷயத்திலும் ஆகிவிட்டது. நல்ல வேளை!'' என்றார் அவர்.

'கடவுளே' என்று மடியில் இருந்த மகனை இறுக அணைத்துக் கொண்டாள் மதுரிமா.

ஆனால் அவர் 'பல வகைகளில்' என்றது, ஏனோ மதுரிமாவை உறுத்தியது. விபு காப்பாற்றப்பட்டது ஒன்றுதானே நன்மை.

தன்னையறியாமல் கணவனைப் பார்த்தவள், அவனது பார்வையைத் தொடர்ந்து மீண்டும் பிரபுவை நோக்கினாள். போலீஸ் அதிகாரியின் கண்கள் உதயசந்திரனிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தன.

பிறர் அறியாமல் விழி வழியே அவர் சொன்ன ரகசியம் என்னவாக இருக்கும்.



போலீஸ் அதிகாரியின் பேச்சைப் போலவே, அவளுடைய கணவனோடு அவர் நடத்திய பார்வைப் பரிமாற்றமும், மதுரிமாவுக்குக் குழப்பத்தையே ஏற்படுத்தியது.

ஆனால், அதைப் பற்றி அதிகம் நினைத்துக் கொண்டிருக்க முடியாமல் அவள் மகனின் கதை மறுபடி தொடர்ந்தது.

இரண்டு நாட்கள் பிரச்சினையின்றிக் கழிய மூன்றாம் நாள் மோப்பம் பிடித்துக் கொண்டு வில்லன் இவர்கள் வீட்டுக்கு வந்து விட்டான்! பார்லரில் விசாரித்தானாம், அவர்கள் முகவரி கொடுத்திருக்கிறார்கள்!

கேட்டுக் கொண்டிருந்த நால்வருக்குமே திக் கென்றது!

''அப்புறம்?'' என்றனர் ஆவலும் பயமாக.

ரொம்பவும் டிப்டாப்பான உடை, ஸ்டைலான நடை, தெளிவான உச்சரிப்பு பெயரை மதனமோகனன் என்று சொல்லிக் கொண்டான்.

என்ன, ஒரு தப்புப் பண்ணிவிட்டான் என்றால் தாடியை எடுத்து விட்டான்! தாடியை வைத்துக் கொண்டு கடத்தியதால் தாடிக்காரனைத் தேடிக் கொண்டிருப் பார்களோ என்ற பயம்!

அவன் தன் பாதுகாப்புக் கருதிச் செய்தது அவனுக்கே



நஷ்டமாகிப் போயிற்று.

விபு அவனை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை.

அவன் வந்தபோது விபு தூங்கிக் கொண்டிருந்தான். அவன் விழிக்கட்டும் என்று காத்திருந்தபோது, பெரிய கண்ணீர்க் கதையெல்லாம் சொல்லி தயாளன் தம்பதியை உருக வைத்தான்.

மனைவி இறந்து விட் டதாகவும், 'தாயுமானவனாக' அவன் கஷ்டப் பட்டுப் பிள்ளை வளர்ப்பதையும் மனமுருகச் சொல்லியிருக்கிறான்.

தூங்கும்போதே, பிள்ளையைத் தூக்கிச் செல்வதாக அவன் கூறியதை உமா ஒத்துக் கொள்ளவில்லை.

அவளுக்கு அப்போதே ஓர் உறுத்தல்.

விபு ஓர் அம்மாவோடு வருவான் என்றல்லவா, ஐஸ்க்ரீம் பார்லர்காரர் சொன்னார். இந்த ஆள் தாயே கிடையாது என்கிறாரே! ஒரு வேளை பார்லர்காரர்தான் குழம்பிவிட்டாரா என்று அவர்களுக்குக் குழப்பம்தான். ஆனால், இந்த ஆள் மோசக்காரனாக இருந்தால்?

விழித்து சரன், சாருவைத் தேடக் கூடும். அதை விட விழித்ததும், பிள்ளைகளுக்கு 'டாட்டா'காட்டி விட்டுக் கிளம்பட்டும் என்று அப்போதைக்குச் சொல்லி விட்டாள்.

நேரம் இல்லை, அது இதென்று அந்த மதனன் சொல்லிப் பார்த்தான். உமா ஒத்துக் கொள்ளவில்லை. அவன் பேச்சில் இருந்து எதையோ ஊகித்து 'முகவரி'

கொடுங்கள். நாங்களே கூட்டி வருகிறோம்' என்று தயாளன் கூறவும் அதற்கு மேல் அவன் வற்புறுத்தவில்லை.

''விளையாட்டுப் புத்தி!'' என்று வழிந்துவிட்டு, ''நாங்கள் கிளம்பட்டுமா?'' என்று விபுவைத் தூக்க முயன்றான் அவன். ஆனால், சிறுவன் வழுக்கிக் கொண்டு இறங்கி ஓடிவிட்டான்.

பிள்ளையைத் தூக்கிச் சென்றுவிட, அவன் துடிப்பது சந்தேகத்தை அதிகரிக்க அதைக் கொஞ்சமும் காட்டிக் கொள்ளாமல், ''குழந்தையை வைத்துக்கொண்டு தனியே சிரமம் தானே படுகிறீர்கள்? இந்தப் பிள்ளைகளுக்கு லீவு முடிகிறவரை, இங்கேயே இருக்கட்டும், இரண்டு நாள் கழித்துக் கூட்டிப் போங்கள்'' என்று உமா கூறச் சற்று யோசித்துவிட்டு அவனும் சரியென்று விட்டான்.

பிள்ளை இருக்குமிடம் தெரிந்துவிட்டது. அவனைப் பராமரிக்கிற சிரமம் செலவை இவர்கள் பார்த்துக் கொள்ளட்டுமே என்று அவன் எண்ணியிருக்கலாம்.

ஆனால், இல்லத் தலைவி திரும்ப வந்ததும் அவரை அழைத்துக் கொண்டு போலீஸுக்குப் போய் விடுவது, உமாவின் திட்டம் என்பது நல்லகாலமாக அவனுக்குத் தெரியாது.

அன்று காலையில் வந்தவன், மகனை உடனே அழைத்துச் செல்லப் போவதாகக் கூறி அவசரப்பட்டான்.

தயாளன் தயங்கவும் போலீஸோடு வரப் போவதாகக் கத்திக் கூப்பாடு போட்டான்.



விபு, அவனைக் கண்டு மிரண்டு ஒதுங்கவும் ''போலீசுடனேயே வந்து பிள்ளையைக் கூட்டிப் போ'', என்று தயாளன் சும்மா ஒரு தடாலடி அடித்து விட அந்த மதன் அப்படியே ஒடுங்கிப் போனான்.

''என் மகன். என்னுடன் அனுப்ப மாட்டேன் என்கிறீர்களே'' என்று கண்ணீர் வடித்தான். ''எதற்கும் பிறகு வருகிறேன். அப்போதாவது அனுப்புங்கள்'' என்று, அவன் பின் வாங்கவும், இவன் வேற்று ஆள் என்பது கணவன் மனைவிக்கு உறுதியாயிற்று.

நல்ல வேளையாக அனாதை இல்லத் தலைவியும் வந்துவிட்டதால் அவரையும் அழைத்துக் கொண்டு காவல் நிலையத்துக்குச் சென்றார்கள்.

அங்கிருந்து பிரபுவுக்குத் தகவல் சொல்ல, எல்லோருமாக நேரே இங்கே வந்து சேர்ந்தார்கள்.

மகிழ்ச்சியோடு மற்றவர்கள் பேசிக் கொண்டிருக்க, ''அந்த ஆளைப் பிடிக்க முடிந்ததா பிரபு?'' என்று ராகவன் நண்பரை வினவினார்.

''திரும்ப வந்தால் பிடிப்பதற்காக, 'மஃப்டி'யில் ஆள் போட்டிருக்கிறேன். ஆனால், அவன் இங்கே பேசியதைப் பார்த்தால் திரும்பத் தலைகாட்டுவது சந்தேகம்தான். ஏற்கெனவே, தயாளன் குடும்பத்துக்குச் சந்தேகம் வந்துவிட்டது என்பது அவனுக்குத் தெளிவு. அவர்கள் விபுவைப் போலீசில் ஒப்படைத்து, இங்கே விஷயம் தெரியுமுன் கிடைத்ததைச் சுருட்டலாம் என்று பார்த்தால் மதுரிமாவும் சான்று கேட்கவே, தன் பெரிய திட்டம் வெறும் புஸ்வானம் ஆகிவிட்டது என்று புரிந்து அந்த

ஆத்திரத்தை அப்படிக் காட்டியிருக்கிறான். ஆனால், இவனைப் போல் இன்னும் எத்தனையோ? பேரனுக்கு எப்போதும் நம்பகமான துணை இருக்கும்படி பார்த்துக்கொள்'' என்றார் போலீஸ் அதிகாரி.

பெரிய விருந்து வைத்து அமர்க்களப் படுத்திவிட்டாள் சாவித்ரி.

சரண், சாருமதிக்குப் பரிசுகள் வேறு.

எல்லோரும் சாப்பிடும்போது டிரைவரிடம் சொல்லியனுப்பி வாங்கி வரச் செய்திருந்தாள்.

நாலு நாட்கள் பாராமல் இருந்ததை ஈடு கட்டுபவன் போல விபு தாயின் கழுத்தைக் கட்டிக் கொண்டு விடாமல் தொங்கவே, பொதுவாக உபசரிப்பு வேலைகளில் மதுரிமா அதிகம் கலந்து கொள்ளாததை வந்தவர்கள் யாரும் தவறாக எண்ணிக் கொள்ளவில்லை.

விடைபெறும்போது வீட்டினர் எல்லோருமே வெகுவாக நன்றி தெரிவித்தனர்.

உமாவின் கையைப் பற்றி, ''என் உயிரை எனக்குத் திருப்பித் தந்திருக்கிறீர்கள், எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை'' என்று மதுரிமா உணர்ச்சியோடு கூறினாள்.

சிரித்துவிட்டு, ''எங்கள் இரண்டு பிள்ளைகளுக்கும், சேர்ந்தார் போல நாலு நாள் லீவு இருந்தது. சும்மா என்றால், எனக்குப் பைத்தியம் பிடிக்கிற அளவுக்கு லூட்டி அடிப்பார்கள். குறைந்தது ஒரு கிலோவாவது குறைந் திருப்பேன். விபு இருந்ததால் அவனோடு விளை



யாடுவதில் என்னோடு மல்லாடுவதை மறந்து விட்டார்கள். அதற்காக, நான்தான் உங்களுக்கு நன்றி செலுத்த வேண்டும் தெரியுமா?'' என்று உமா வேடிக்கையாகப் பதிலிறுக்கவும் விடை பெறல் சிரிப்பிலேயே நடந்தேறியது.

கடைசியாக, ''உங்களுக்கு நிறையச் செய்ய வேண்டும் என்று ஆவலாக இருக்கிறது. ஆனால், நல்ல மனதோடு நீங்கள் இருவரும் செய்ததற்கு விலை போட்ட மாதிரித் தோன்றி விடுமோ, என்றுதான் தயக்கமாக இருக்கிறது. நீங்கள் எங்களிடம் கேட்கலாம். செய்வதற்காக, ஆவலோடு காத்துக் கொண்டிருப்போம்!'' என்று அவ்வளவு நேரம் அதிகம் பேசாமல் இருந்த ராகவன் ஆழ்ந்த குரலில் கூறியது எல்லோருக்கும் சற்றுத் திகைப்பாகத்தான் இருந்தது.

மதுரிமாவுக்குச் சற்று அதிகமாக!

''கட்டாயமாக, ஏதாவது கேட்க வேண்டும். உங்களை எதிர்பார்த்துக் கொண்டே இருப்போம்'' என்று உதயசந்திரனும் வலியுறுத்திக் கூறி அவர்களைக் கார்வரை சென்று வழியனுப்பி வைத்தான்.

தயாளன் குடும்பத்தை வீட்டுக் கார் சுமந்து செல்ல, போலீஸ் கார் பிரபுவுக்கு வந்து நின்றது.

மற்றவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு அவர் மதுரிமாவிடம் வந்தார்.

கண்கள் நனைய, ''என் வாழ்வின் சகலத்தையும் எனக்கு மீட்டுத் தந்தீர்கள் அங்கிள். மிக்க நன்றி'' என்றாள் அவள்.

''விபுவின் மீட்பில் என் பங்கு அதிகம் இல்லை மகளே. இருப்பினும் உன் நன்றியை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், உன் பேச்சு சரியில்லை மதுரிமா'' என்றார் அவர் சற்று அழுத்தமான குரலில்.

அவள் திகைத்து நோக்கவும், ''ஒரு பெண்ணின் சகலமுமாக, அவளுடைய ஒரு குழந்தை மட்டுமே இருக்கக் கூடாது. உன்னைப் பார்த்த முதல் நாளும் இதையேதான் சொன்னாய்! இப்போதும் சொல்கிறாய்! இந்த மனநிலை மாற வேண்டும்'' என்றார் அவர்.

மாறி? இங்கே ஒரு செருப்புப் போலக் கிடக்க வேண்டுமா? இந்தக் குடும்பத்தின் நண்பரல்லவா? இப்படித்தான் சொல்லுவார் என்று எண்ணியபடி, ''எப்படி மாற வேண்டும் என்கிறீர்கள்?'' என்று சிறு கோபத்துடன் கேட்டாள் அவள்.

''அதை, நீதான் முடிவு செய்ய வேண்டும்'' என்றார் அவர். எதிர்பாராத பதிலாக, ''விபு இல்லாவிட்டால் உனக்கு ஒன்றுமே இல்லை என்றால் எப்படி? ஏன், உனக்கு நீ இல்லையா? உன்னை உனக்கே பிடிக்காதா? உன் வேலை இருக்கிறதே அதில் ஈடுபாடு இல்லாமல் கடனே என்றா குப்பை கொட்டுகிறாய்? கணவனோ, குழந்தையோ இன்னொன்றோ ஏதோ ஒன்று மட்டும்தான் உலகம் என்று இருக்கக் கூடாது மதுரிமா? அப்புறம் அந்த ஒன்று இல்லாமல் போனால் வாழ்க்கை ஒன்றுமே இல்லாததாக ஆகி விடுகிறது. ஓர் இழப்பில் வருத்தம் இருக்கலாம். அது தவிர்க்க முடியாதது. ஆனால், அந்த இழப்பினால் நம் உலகமே அழிந்து விடக் கூடாது. அந்த அளவுக்கு நீ உன் மனதை வலுப்படுத்திக் கொள்ளவும்



வேண்டும். விசாலப் படுத்திக் கொள்ளவும் வேண்டும்.''

சொல்வது சுலபம் என்று நினைத்தாள் அவள்.

ஆனால், அந்த மட்டும் கணவன் காலடியே சொர்க்கம் என்று கிடக்க வேண்டும் என்று அவர் சொல்லவில்லை. அதை நினைத்துச் சந்தோஷப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான்.

ஆனால், அந்தக் கணவனே எல்லாம் என்று அவன் கையணைப்பில் உலகம் மறந்து கிடந்த காலம் நினைவு வருவதை மதுரிமாவால் தடுக்க முடியவில்லை!

மூன்று ஆண்டு காலமாக முயன்று அப்போதும் மறக்க முடியாவிட்டாலும் ஒதுக்கி வைக்க முடிந்த நினைவுகள்!

எவ்வளவு பிரியமாக இருந்தான்!

இல்லை, பிரியமாக இருப்பது போல நடித்தான்!

அவளைப் பிரிந்து சற்று நேரம் இருப்பது கூட இயலாது என்றானே!

அப்புறம், ஒரு தரம் ஊருக்குப் போய் வருமுன்...

பழைய நினைவுகளைத் தடுப்பவள் போன்று மதுரிமா தலையை உலுக்கிக் கொண்டு பார்த்தபோது விபு அருகில் இல்லாதது கண்டு ஒரு கணம் அப்படியே பதறிப் போனாள்.

கடவுளே! இப்போது தானே அவன் திரும்பக் கிடைத்தான்?

பயமும் பரபரப்புமாக அவள் எழும்போதே மகனின் சிரிப்புச் சத்தம் கேட்கவும் நிதானித்து, கவனித்தாள்.

பிரபுவிடம் பேசியபின், அவள் கண்டதையும் யோசித்துக் கொண்டிருக்கையில் அவன் அவளிடமிருந்து இறங்கிச் சென்றிருக்கிறான்.

அவனாகச் சென்றானோ, உதயன் அழைத்துச் சென்றானோ உதயன் அவன் பெற்றோரின் நடுவே நின்று அவர்களைப் 'பூபூ' என்று பயமுறுத்தி அவர்கள் பயந்த மாதிரி நடிக்கவும் சிரித்துக் கொண்டிருந்தான்.

எப்போதுமே இது அவனுக்குப் பிடித்த விளையாட்டு களில் ஒன்று.

அதை எப்படி இவர்கள் கண்டுபிடித்தார்கள்?

எப்படிக் கண்டு பிடித்தாலும் இங்கிருக்கிற வரை இவன் இப்படிச் சிரித்துக் கொண்டு இருப்பது நல்லதுதான்.

இல்லாவிட்டால் எப்படி அழுகுணியாகப் பிள்ளை வளர்த்திருக்கிறாள் பார் என்று அவளை அல்லவா குற்றம் சொல்லக் கூடும்!

இப்போதே பிள்ளையைத் தொலைத்து விட்டு வந்து நிற்கிறாளே என்று அவளை மகா மட்டமாகத்தான் நினைத்திருப்பார்கள் என்று எண்ணமிடும் போதே அந்த மாதிரி அங்கே யாரும் குறிப்பு கூடக் காட்டியது இல்லை என்பது நினைவு வந்தது.

பொதுவாக, உதயனுடைய தந்தையை மதுரிமா அதிகம் பார்த்தது இல்லை.

மதுரிமாவைப் பிடிக்காமல் அவள் இருக்குமிடத்துக்கு வராதபடி ஒதுங்கிக் கொண்டாரோ அல்லது முழு ஆரோக்கியம் இல்லாதவர் என்பதால் தன்



அறைக்குள்ளேயே ஓய்வெடுத்தாரோ?

எது காரணமாயினும் அவர் இதுவரை அவளிடம் பேசியதும் இல்லை. அவளைப் பற்றி அவர் பேசி அவள் கேட்டதும் இல்லை!

அடுத்து சாவித்ரி!

அவளும், மதுரிமாவைக் குறை கூறியது இல்லை!

அவ்வப்போது விபுவைப் பார்த்ததே இல்லையே, பார்க்குமுன் இப்படி ஆகிவிட்டதே என்று வருத்தப்பட்டிருக்கிறாள். ஆனால், இப்படிப் பண்ணி விட்டாயே என்று மருமகளைக் குற்றம் சாட்டியது இல்லை.

மனதுக்குள் நினைத்திருக்கலாம். ஆனால், அதை வாய்விட்டுச் சொல்லி சின்னவளின் மனதைப் புண்படுத்தியது இல்லை!

மாறாக, உண்ண அருந்த என்று ஏதாவது கொடுத்து மருமகளின் வயிறு வாடாமல் கவனித்துக் கொண்டாள். கூடவே, மதுரிமாவைத் தனித்திருக்க விட்டால் இடமிழந்து தவிக்கக் கூடும் என்று பெரும்பாலும் அவளுக்குத் துணையிருந்தாள்.

அதற்காக, அவள் கலந்து கொள்வதாக இருந்த ஒரு சில நிகழ்ச்சிகளுக்கு வர முடியாது என்று சாவித்ரி போன் செய்தது மதுரிமாவுக்கு தெரியும்.

வெறும் மனிதாபிமானம் காரணமாக இருந்திருக்க லாம். ஆனால், அதுவே பெரிதுதான்.

உதயசந்திரனை நினைக்கையில் மதுரிமாவுக்கு நெஞ்சை அடைத்தது.



உதயசந்திரன் அவளுடைய கணவன்!

காதலித்து மணந்தவன் உடனே கைவிட்டவனும் கூட!

பழைய கதையை எண்ணுகையில் அவன் மீது கோபம் வந்த போதும், இந்த நாலு நாட்களை அவன் இல்லாமல் அவள் தாங்கியிருக்கவே முடியாது. இரண்டாம் நாளே ஒன்றும் முடியவில்லையே! முதலில் அவன் கொஞ்சம் கோபம், குறையோடு பேசியது போலத்தான் தோன்றியது. ஆனால், தெளிவாக விவரம் அறிவதற்காக அப்படிப் பேசினானோ என்னவோ? ஏனெனில் அதன் பின் அவன் அந்த மாதிரி அவளிடம் பேசவே இல்லை.

சொல்லப் போனால்...

அதற்குள் தாயைக் கண்டுவிட்ட விபு, ''அம்மா வா, வா கம். உக்கா சிட்'' என்று அதிகாரமாக அழைக்கவும் மதுரிமாவுக்குச் சிரிப்பு வந்து விட்டது.

மற்ற ஃப்ளாட் பிள்ளைகளை விட, விபு சின்னவன் என்பதால் எல்லோரும் அவனுக்குக் கற்றுக் கொடுக்க முனைந்ததன் விளைவாக, இப்படிப் பல வார்த்தைகளுக்கு ஆங்கிலம் தமிழ் இரண்டையும் சேர்த்தே அடித்து விடுவான் அவன்.

கேட்பதற்கு அது ஒருவிதமான சந்தோஷமாக இருக்கவே மதுரிமாவும் அதைத் தடுப்பதில்லை.



சிரித்துக் கொண்டே வந்தவளிடமும், 'பூ' என்று அவன் பயமுறுத்தவும், ''அச்சோ! பயமாயிருக்குதே!'' என்று விளையாட்டில் கலந்து கொண்டாள் அவள்.

உடனேயே விபுவின் விளையாட்டு மாறிவிட்டது.

சோபாவின் பின்னே ஒளிந்து கொண்டு, ''விபு காணோம். அம்மா பிடி'' என்றான்.

அடுத்து, ''அப்பா பிடி, தாத்தா பிடி, பாட்டிம்மா பிடி'' எனவும் மதுரிமா திகைத்துப் போனாள்.

இந்த உறவெல்லாம், விபுவுக்கு எப்படித் தெரியும்?

அவள் திகைத்து நிற்பதைக் கவனித்து விட்டு அருகில் வந்து, ''நான்தான் கற்றுக் கொடுத்தேன்'' என்று முணுமுணுத்தான் உதயன்.

எதற்கு என்று உள்ளூர எண்ணிய போதும் மதுரிமா ஒன்றும் சொல்லவில்லை.

இந்த உறவு இல்லாமல் இருந்திருந்தால் விபுவை ஒருவன் தூக்கிச் சென்றிருக்கவே மாட்டானே என்று தோன்றிய எண்ணத்தை நன்றி கெட்டதனம் என்று அடக்கினாள்.

அவளது வீட்டுக்கு உடனே கிளம்புவது கூட அப்படித்தான் நன்றி கெட்டத்தனமாகத்தான் தோன்றியது.

என் பிள்ளை கிடைத்து விட்டான். இனி உன் வீட்டில் உட்கார்ந்திருக்கத் தேவையில்லை என்று தன் காரியம் முடிந்தவுடன் ஓடுவது போல ஆகாதா?

ஏதோ, ஓரிரு நாட்கள்! விபுவின் விளையாட்டுகளை இவர்களும் கண்டு ரசிக்கட்டும். பிள்ளையைத் தேடித்

தந்திருக்கிறார்களே! இந்த சந்தோஷமாவது இவர்களுக்குக் கொடுக்க வேண்டாமா?

அப்புறம் கிளம்புவது அநாகரீகமாகத் தெரியாது.

ஆனால், விபுவின் விளையாட்டுகள் யாருக்கேனும் அலுக்க முடியுமா, என்ன என்று எண்ணியவாறே மகனைப்பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள் மதுரிமா.

மதுரிமாவிற்கு முதல் அதிர்ச்சி மறுநாள் சுமார்பத்து மணியளவில் ஏற்பட்டது.

விபுவைக் கண்ணிலேயே காணோமே என்று தேடிய போது தோட்டத்தில் நிற்பதாக வேலைக்காரி சொன்னாள்.

முகத்தைப் பாராமல் எங்கோபார்த்தபடி, அவள் பதில் சொன்ன விதம் மதுரிமாவை உறுத்தியது.

இந்தப் பெண்ணுக்கு என்னைப் பிடிக்கவில்லை!

ஏன், என்று யோசித்த போது, பெரிய இடங்களில், வீட்டினரின் விருப்பு வெறுப்புகளை உணர்ந்து, முதலில் வெளிப்படுத்துகிறவர்கள், வீட்டு வேலைக்காரர்கள்தான் என்று படித்தது நினைவு வந்தது.

மதுரிமாவை இந்த வீட்டாருக்குப் பிடிக்காது என்பது சரித்திர உண்மை.

பிள்ளையைப் பறிக் கொடுத்துவிட்டு வந்து நிற்கிறானே என்று மனிதாபிமானம் காரணமாகக் கொஞ்சம் கனிவு காட்டினார்கள் என்றாலும், அடிப்படை உண்மை அதுதானே?

அது இப்போது வேலைக்காரி மூலமாக வெளிப்படுகிறது! இது அளவு மீறுமுன், இங்கிருந்து



வெளியேறி விட வேண்டும்.

எண்ணமிட்டபடியே தோட்டத்துக்குச் சென்ற மதுரிமா, அங்கே தன் தாத்தாவின் கையைப் பிடித்துக் கொண்டு விபு குதித்துக் கொண்டிருக்கவும் தயங்கி நின்றாள்.

திரும்பிப் போய் விடலாமா என்று அவள் யோசித்த போது, கடப்பாரையும், மண்வெட்டியும் வைத்துக் கொண்டு நின்ற சிலரிடம் ராகவன் சொன்னார்.

''அந்த மூலைதான் ராசு. பதினைந்துக்குப் பதினைந்து எடுத்துக் கொள். செடி, கொடி எல்லாம் எடுத்து சமப்படுத்தி விட வேண்டும். இந்த ஓரமாக ஊஞ்சல், அந்த மூலையில் ஜங்கிள் ஜிம், வலது பக்கமாய் சறுக்குமரம் எல்லாம் எனக்குப் பத்து நாட்களுக்குள் தயாராக வேண்டும்'' என்றார் அவர்.

அவளுக்கு மேல் அந்த 'ராசு'வுக்கு அதிர்ச்சி போலும்!

''அய்யா, அந்த மூலையிலே நீங்க குத்தாலத்திலே இருந்து கொண்டு வந்த செண்பகமில்லய்யா இருக்குது? இங்கே பிச்சி.''

ராசுவின் பேச்சில் குறுக்கிட்டு, ''அதெல்லாம் போனால் போகட்டுமடா. என் பேரன் வீட்டிலேயே சந்தோஷமாக விளையாட வேண்டும். அதுதான் முக்கியம், பேச்சில் நேரத்தை வீணாக்காமல் வேலையைத் தொடங்கு'' என்றார் ராகவன் அதட்டலாக.

அப்போதும், ''இல்லீங்கய்யா. செண்பகா மூலையிலே தானே இருக்குது? ரெண்டடி, இந்தாண்டையே வெட்டிரலாம். மத்ததெல்லாம் செடிங்க. எங்க வேணா, எப்ப வேணா வளர்த்துக்கலாம். அது இருக்கட்டும்யா.

வேணுமானாக்க, இீழே உள்ள கிளைங்களை வெட்டிக் கிடலாம்'' என்று யோசனை சொன்னான் ராசு.

ஒத்துக்கொண்டு வேலையைத் தொடங்குமாறு பணித்தார் வீட்டதிபர்.

ஓசையின்றித் திரும்பிச் சென்றாள் மதுரிமா.

இதற்கு என்ன அர்த்தம்?

விபு இங்கேயே இருக்கப் போகிறான் என்பதா?

இந்தத் திருப்பத்தை, அவள் எதிர்பார்க்கவில்லையே!

என்ன பைத்தியக்காரத்தனம்? விபுவோடு ஒரு நாளைக் கழித்தபின் அவனை விட்டு விடுவார்கள் என்று அவள் நினைத்தது, எவ்வளவு பெரிய முட்டாள்தனம்! அலுத்துவிடும் என்று கூட மட்டித்தனமாய் எண்ணினாள்!

ஆனால், விபு எங்கே இருக்க வேண்டும் என்பது பற்றி முடிவு செய்ய இவர்கள் யார் என்று ஆத்திரமும் அவளுக்கு வந்தது.

பெற்றவள் அவள் வேண்டாம். அவள் பெற்ற பிள்ளை மட்டும் வேண்டுமாம்?

பேரன் என்றவுடன் பாசம் வந்துவிட்டதாக்கும்?

வரட்டும். அவளிடம் வந்து இது பற்றிப் பேசட்டும்!

அப்போது நன்றாக நாலு வார்த்தை கேட்டு விட்டு விபுவை அழைத்துக் கொண்டு போய்விட வேண்டும்!

ஆனால் விபுவைத் தேடித் தந்திருக்கிறார்கள். நோகப் பேசுவது தப்பு. ஆனாலும் விபுவை விட்டுக் கொடுப்பது முடியாத காரியம்.



இப்படி முடிவெடுத்த பிறகுதான் மதுரிமாவுக்குச் சரியாக மூச்சுக் கூட விட முடிந்தது.

ஆனால், எடுக்கிற முடிவு எல்லாவற்றையும் மனிதனால் செயல்படுத்த முடிவதானால், அப்புறம் கடவுள் எதற்காக இருக்கிறார்?!

அன்று மதிய உணவுக்காக உதயசந்திரன் வீடு திரும்பி வந்தபோது கார் நிறைய விளையாட்டுச் சாமான்களும் சேர்ந்து வந்தன.

விபுவின் குதூகலத்தைப் பார்த்தபோது மதுரிமா பெரிதும் அடிபட்டுப் போனாள்.

எல்லாம் ஆயிரம் ஐநூறு என்று விலை உயர்ந்த பொருட்கள்! இது போலெல்லாம் வாங்கிக் கொடுக்க மதுரிமாவால் எப்படி முடியும்?

வீட்டுக்குள்ளேயே ஓட்டுகிற கார் கூட இருந்தது. ஆனால், அதன் விலையை அறியக் கூட அவள் விரும்பவில்லை!

இவைகளையெல்லாம் வைத்து விளையாட அவளது குட்டி ஃப்ளாட்டில் இடம் கூட இராதே!

''அம்மா, எலிஃபன்ட் மா. அம்மா, ப்ளாக்ஸ் பார், பஸ்சும்மா!'' என்று கத்திய வண்ணம் அவைகளைச் சுற்றி வந்து, விபு ஆர்ப்பரிக்கவும் புன்னகையைப் பூசிக் கொண்டு மதுரிமா அங்கே நின்றபோதும், அவள் உள்ளம் எரிமலையாய்க் குமுறிக் கொண்டுதான் இருந்தது.

உதயன் தன் பண பலத்தைக் காட்டுகிறானா? இது போலெல்லாம் மகனுக்கு வாங்கிக் கொடுக்க உன்னால்

முடியுமா என்று சொல்லாமல் சொல்லிக் காட்டுகிறானா?

சாவித்ரி வேறு, விபுவைக் கொஞ்சம் வெளியே கூட்டிப் போய் வருகிறேன் என்று போய் அவனுக்கு ஒரு சூட்கேஸ் நிறையத் துணிமணிகள் வாங்கி வந்தாள்.

அவற்றுள் ஒன்றை அணிந்தும் வந்து, ''அம்மா டைனாசர்!'' என்று அதில் இருந்த படத்தைக் காட்டி மகிழ்ந்தான் விபு.

அழகழகான ஆடைகள்! சிலது முன்பு பார்த்து விட்டு விலை அதிகம் கட்டு படியாகாது என்று மதுரிமா ஏக்கத்துடன் வாங்காமல் விட்டு விட்டு வந்த மாடல்களும் கூட.

சும்மாவே, மனம் குழம்பியிருந்தவளுக்கு இப்போது எப்படி இருக்கும்?

ஆனால், இவை அனைத்தையும் விடத் தாயன்பு மேலானது அல்லவா? இதை விடவும் இன்னும் எத்தனை மடங்கு இவன் வாங்கிக் கொடுத்தாலும் பெற்றவளின் அன்புக்கு அது ஈடாகுமா?

உள்ளூர வாதிட்டாலும், அவளுக்கே அதில் குழப்பமும் இருந்தது. வாதாடல் தனக்குத் தானே அல்லவா? அதில் பொய்மை இருக்க முடியாதே!

கடந்த நாலு நாட்களாக விபு தாயைப் பிரிந்து இருந்து விட்டுத்தானே வந்திருக்கிறான்?

அதுவும் நன்றாகவே!

கீழே விழுந்து அடிபட்டிருந்தாலோ உடம்பு சற்று சரியில்லாமல் போயிருந்தாலோ, அம்மா, அம்மா என்று



கதறித் தீர்த்திருப்பான்தான். ஆனால், அப்படி இல்லாத போது சும்மாதானே இருந்திருக்கிறான்?

தூங்கி விழிக்கும் வேளைகளில் தாயைத் தேடுகிறவன்தான். ஆனால், விளையாட்டுக்கு வேறு நண்பர்கள் கிடைத்த போது அதுவும் அவனுக்குப் பிரச்சினையாகி விடவில்லை தானே.

சின்னப் பிள்ளை, விளையாட்டு வேகத்தில் எதையும் மறந்துவிடும் பருவம் என்பது அவளுக்குப் புரியாமல் இல்லை.

ஆனால், இதில் விஷயம் என்னவென்றால் மகனும் மறக்கக்கூடியவன்தான். அதாவது, மகனுக்கு அவள் அப்படி ஒன்றும் கட்டாயத் தேவை அல்ல!

தேவையே இல்லை என்று சொல்லவே முடியாது. ஆனால், இன்றியமையாத தேவை என்பார்களே அதுபோல, அவள் இல்லாமல் முடியாது என்று கிடையாது!

விபுவின் தேவைகளைக் கவனிக்க என்றால் அதற்கு இங்கேயும் ஆட்கள் இருக்கிறார்கள்.

அன்பு காட்டுவதற்கும், அவள் ஒருத்திக்குப் பதிலாக இங்கே மூன்று பேர் அன்பைப் பொழிகிறார்கள்!

அப்படியானால்?

மாட மாளிகையும் கூட கோபுரங்களுமாகக் கட்டி வைத்திருந்த வீடு ஒன்று நொறுங்கி விழுவது போல உள்ளூர மதுரிமா உணர்ந்தாள்.

அது அவளும் அவளுடைய மகனும் என்று அவள் கட்டி வைத்திருந்த மாளிகை!




விபுவுக்குத் தூக்க நேரம் தாண்டுகிறதே என்று மகனை அழைத்துவர மதுரிமா சென்றபோது மடியில் உறங்கிய பேரனைப் பார்த்தபடி சாவித்ரி விபுவுக்கு அவனுடைய அத்தை தீபாவுக்கு உள்ள ஒற்றுமைகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

இதே வயதில் அவள் பேசிய மாதிரியே இவனும் பேசுகிறானாம்! விளையாடுகிறானாம்!

ஆனால், உதயனைப் போல விபுவுக்கும், தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ளும் மூளையாம். இப்போதே விளையாட்டுச் சாமான்களை ஸ்க்ரூ டிரைவரை வைத்துக் கழற்றிப் பார்க்கிறானாம். அவன் விரும்பும் துறையில், வெளிநாட்டுக்கெல்லாம் அனுப்பிப் படிக்க வைக்க வேண்டுமாம்!

தந்தையின் பெயரை உதயன் எடுத்திருப்பது போல, உதயன் பெயரை விபு நிலை நாட்டுவானாம்!

போன சுவடே தெரியாமல் மதுரிமா திரும்பி வந்துவிட்டாள்.

இந்த தந்தை பெயர் எப்போதுமே அவளை கலங்கச் செய்கிற ஒன்று.

இதுவரை எல்லாவற்றையும் அவள் ஒருவாறு சமாளித்து வந்திருக்கிறாள் என்றாலும் இன்னும் அதிக காலம் அது முடியாது என்பதையும், அவள் உணர்ந்தே இருந்தாள். சொல்லப் போனால் அதை எண்ணி அஞ்சிக் கொண்டிருந்தாள் எனலாம்.



கொண்டிருந்தாள் எனலாம்.

பேசத் தொடங்கிவிட்ட விபு மூலம், லீவுக்காக வெளியூர் செல்லுகிறபோது தந்தை என்று யாரையும் அவன் சந்திப்பதில்லை என்பது வெளியே தெரியத் தொடங்கும் போது, சுற்று வட்டாரத்தில் அவளுக்கு அளிக்கப்படும் மரியாதை என்ன ஆகும்?

விபுவே, தந்தை பற்றிக் கேள்வி கேட்பானல்லவா?

இப்படியெல்லாம் பலமுறை எண்ணிக் கலங்கியிருக்கிறாள்.

இப்போது, விபு காணாமல் போன பிரச்சினையில் அவள் இங்கே இருப்பது வேறு என்னென்ன விதமாகக் கயிறு திரிக்கப் பட்டு இருக்கிறதோ? 'கிறுக்கன்' என்றாரே பிரபு. அந்த பால்ராஜ் ஒருவர் போதுமே!

ஆனால், எப்படியும் இது போன்ற பிரச்சினைகளை அவள் எப்போதாவது எதிர் கொண்டுதானே தீர வேண்டும்?

சாவித்ரி சொன்ன, வெளிநாட்டுப் படிப்பு மதுரிமாவுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. அவளுடைய அண்ணனே வெளிநாட்டில் தானே இருக்கிறான்?

அப்படி அவனும் பெற்றோரும் வெளிநாடு போயிராவிட்டால் இத்தனைத் துன்பங்களும் நேர்ந்திராதோ என்ற எண்ணத்தை ஒதுக்கிவிட்டு மீண்டும் நிகழ்வுக்கு வந்தாள் மதுரிமா.

நன்றாகப் படித்தால் 'வெளிநாடு' ஒன்றும் சந்திர மண்டலத்தில் இருப்பதல்ல!

மதுரிமாவும் சம்பாதிக்கத்தான் செய்கிறாள். வயிற்றைக் கட்டி வாயைக் கட்டிச் சேர்த்தாள் என்றாள், விபுவை வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்க அவளாலும் முடியும்!

ஆனால், இங்கே வயிற்றை வாயைக் கட்டியாக வேண்டும். உதயன் வீட்டில் அப்படியல்ல. சகல வசதிகளையும் அனுபவித்துக் கொண்டே வெளிநாட்டுக்கும் போய்ப் படிக்கலாம்!

கார் பங்களா, ஏசி இன்னும் என்னென்னவோ?

இதெல்லாம் இல்லாமல் மனிதர்கள் வாழ முடியாது என்று இல்லை! ஆனால் இதெல்லாம் விபுவின் பிறப்புரிமையாக இருக்கிறபோது பெற்றவள் என்கிற ஒரே உரிமையால் மதுரிமா அதைத் தடுக்கலாமா?

தடுப்பது சுயநலம் இல்லையா?

ஆனால், அதற்காக விபுவை அவளால் பிரிந்திருக்க முடியுமா?

இருளை வெறித்தவாறு அவள் உட்கார்ந்திருக்கையில் சாவித்ரி பேரனைக் கிடத்த வந்தாள்.

மதுரிமாவைப் பார்த்துவிட்டு, ''நீ தூங்கவில்லையா, மதுரிமா? அப்படியானால் நீயும் அங்கே வந்திருக்கலாமே! அசதியில் படுத்துவிட்டாய் என்று எண்ணிக் கூப்பிடவில்லை'' என்றாள் எதையோ விளக்கும் முகமாக.

அழகான விளக்கம்தான். அன்று ஒரு தரம் வந்து போகுமுன் மகன் மனதை மாற்றியது இவளும் சேர்ந்துதானே?



பேரனைக் கிடத்திவிட்டு நிமிர்ந்தவளிடம் ''நாளைக்கு அங்கே போகலாம் என்றிருக்கிறேன்'' என்றாள் மொட்டையாக.

திகைப்புற்று நிமிர்ந்து, ''ஏன் மதுரிமா? இங்கேயே...'' என்ற சாவித்ரியின் பேச்சைக் கவனியாதவள் போன்று, ''எனக்கு அதிகம் லீவு எடுக்க முடியாது. அதனால், சீக்கிரம் போக வேண்டும்.'' என்றாள் அதே மரத்த குரலில்.

ஏதோ சொல்ல வாயெடுத்துவிட்டு ஒன்றும் சொல்லாமலே கவலை படிந்த முகத்துடன் சாவித்ரி வெளியே சென்றாள்.

இவள் இதைத் தனக்குள்ளேயே வைத்துக் கொள்ளப் போவதில்லை. என்ன நடக்கிறது என்று பார்க்கலாம் என்று மதுரிமா துணிச்சலைத் திரட்டி வைத்துக் கொண்டு காத்திருக்கையில் ராகவனின் குரல் கேட்டது.

''மீண்டும், விபுவை அந்தப் பொந்துக்கா? எதற்கு? ஒரு பாதுகாப்பு ஒரு மண்ணும் கிடையாது, பேசாமல் இங்கேயே இருக்கட்டும். இவ்வளவு பெரிய வீட்டில் விபுவைப் பெற்றவளுக்கும் இடம் இருக்கிறது என்று சொல்லு''

'என் வீட்டில் காதல் மனைவியாக இல்லாவிட்டாலும் ஏதோ ஓர் இடம் கிடைக்கும்'

இப்போது, அதே இடம் விபுவைப் பெற்றவள் என்பதற்காகத் தருகிறார்களாக்கும்!

அன்று மறுத்தவள் இன்று மட்டும் எப்படி இருப்பாள்? அல்லது பொறுப்பாள்.

ஆனால் விபு.

அவனைப் பற்றி அவள் சொன்னது சரிதானே?

அவனுக்குப் பாதுகாப்பு இல்லைதானே?

அதனால் பட்ட துன்பத்தை எண்ணுகையில் இப்போதும் அவள் உடல் நடுங்கியது.

அப்படியானால் இதற்கு என்னதான் முடிவு?

விபுவை நினைத்தால்...

மனதைப் போட்டு மதுரிமா உருட்டிப் புரட்டிக் கொண்டிருந்தபோது கதவைத் தட்டிவிட்டு உதயசந்திரன் உள்ளே வந்தான்.

இவன் என்ன சொல்லப் போகிறான்? பழைய வாசகத்தையா?

அவள் அசையாமல் உட்கார்ந்திருக்க, அவன் எதிர்க் கட்டிலில் தூக்கத்தைக் கலைத்து விடாமல் கவனத்துடன் லேசாகச் சாய்ந்தபடி அமர்ந்தான்.

ஒற்றை சோஃபாவில் அமர்ந்திருந்தால் கூட நெருக்கியடித்துக் கொண்டு ஒட்டி உட்காருகிறவன்!

அது நிலைத்தது, ஒரு பதினைந்து நாள் மட்டுமே அல்லவா?

''அம்மா சொன்னார்கள்'' என்று பீடிகை ஏதுமின்றித் தொடங்கினான். ''போரூர் போக வேண்டும் என்று சொன்னாயாம். வேண்டாம் மதுரிமா. இதற்கு மேல் அந்த வீட்டில் போய் இருப்பது உங்கள் இருவருக்குமே சிர... சங்கடமாக இருக்கும். அதைவிட இருவரும் இங்கேயே இருந்து விடுங்கள். அம்மாவும், அப்பாவும் இனி விபுவை விட்டு இருக்க மாட்டார்கள். என்னாலும்... எல்லாம்



இருக்கட்டும் மதுரிமா நாளைக்கு நான் பங்களூர் போக வேண்டியிருக்கிறது. நாளன்று திரும்பி விடுவேன். அதன் பிறகு இவையெல்லாம் பேசுவோம் சரிதானா?'' என்று நயந்த குரலில் கூறினான் அவன்.

இவன் என்ன சொல்லுகிறான்?

பிள்ளைக்காக, உனக்கும் சேர்த்துச் சோறு போடத் தயாராக இருக்கிறோம் என்கிறானா?

பேச முடியாமல் தொண்டை அடைக்க சரி என்றும் இல்லாமல் மறுப்பாகவும் தோன்றாதபடி மதுரிமா வெறுமனே தலையை மட்டும் அசைத்தாள்.

அவளது ஒப்புதலாகவே அதை ஏற்று எழுந்தவன் அவளை நோக்கி வந்து ஒரு கரத்தை உயர்த்தவும் மதுரிமாவுக்கு மூச்சடைத்தது.

சற்றும் அசைவற்று நேர் எதிரே பார்த்த வண்ணம் அவள் அமர்ந்திருக்க அவள் புறமாய் நீண்ட அவனது கை ஒரு கனம் தயங்கி அவள் முகத்தைப் பற்றித் திருப்ப அவன் அவளது நெற்றிக் காயத்தை ஆராய்ந்தான்.

''காயம் நன்றாகக் காய்ந்து விட்டது. வலி ஏதும் இல்லையே? வலி இருக்க வாய்ப்பு இல்லை அப்படித்தானே? உன் மகன் காயத்தைப் பார்த்துக் கவலைப் பட்டு, 'பூ' என்று ஊதி வலிக்கு மருந்தாக ஒரு முத்தமும் கொடுத்த பிறகு அதெப்படி வலிக்கும்? வலியே இல்லைதானே?'' என்று கேலியாகக் கேட்டு உதயன் சிரிக்கவும் அவளுக்கும் புன்னகை மலர்ந்தது.

'அம்மா, வலிக்குதா, வலிக்குதா?' என்று எத்தனை முறை கேட்டுவிட்டான் அவள் செல்வம்.

பூவால் வருடியது போல எத்தனை முறை முத்தமிட்டான்!

பெருமிதமாய் அவள் முறுவலித்தபோது சற்றும் எதிர்பாராத விதமாகக் குனிந்து அவள் நெற்றியில் இதழ் ஒற்றி நிமிர்ந்தான் உதயசந்திரன்.

அவள் திகைத்து விழிக்கும் போதே, ''மிச்சம் மீதியாகக் கொஞ்ச நஞ்சம் வலியிருந்தால், அதைப் போக்குவதற்காக'' என்றுரைத்து தன் வெண் பற்கள் தெரியப் புன்னகை செய்தபடி அறையை விட்டு வெளியே சென்றான் அவன்!

இதை என்னவென்று எடுத்துக் கொள்வது?

வேறு எந்த விதமாகவும் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று எச்சரிப்பதற்காகவே, அவன் விளக்கமும் சொன்னான் போலும்!

ஆயினும், உள்ளூர ஒரு சுகம் பரவுவதை அவளால் நிறுத்த முடியவில்லை!

இந்த சுகம் மறுநாள் வரையும்கூட, அவளுள் இதம் பரப்பிக் கொண்டேதான் இருந்தது.

இந்த சுகம் எப்படி வந்தது? அதைவிட யாரால் வந்தது என்பதுதான் சரியாக இருக்குமோ?

இரவின் பெரும் பகுதி தூக்கமற்றுக் கழிந்தது.

மதுரிமாவைத் தன்னை முழுமையாக உணர வைத்த இரவு அது.

உணர்ச்சிகளை வென்று விட்டதாகவும் வெறுத்து விட்டதாகவும் எண்ணியதெல்லாம் எவ்வளவு பெரிய பிசகு!



அப்படி, அவள் கணவனை வெறுத்துவிட்டிருந்தால் தாங்க முடியாத துன்பம் என்று வந்ததுமே அவனை ஏன் தேடி ஓடி வரவேண்டும்.

பிள்ளையைக் கண்டுபிடித்துத் தரும் சக்தி படைத்தவன் என்று அவனிடம் சென்றாள் என்றே வைத்துக் கொண்டாலும், அவன் மார்பில் விழுந்து ஏன் கதற வேண்டும்.

அப்போது மட்டுமா?

பின்னரும்கூட, ஒவ்வோர் இக்கட்டிலும் அவன் அருகாமையில்தானே அவளால் அமைதி அடைய முடிந்தது?

அன்று, அந்த இன்ஸ்பெக்டர் பால்ராஜ் அடையாளம் காட்ட அழைத்தாரே அன்றிரவு உறங்கவே முடியாமல் அவள் எப்படித் தவித்தாள்! என்னென்ன பயங்கரக் கனவுகள் வந்து அவளை அலைக்கழித்தன! கடைசியாக உதயன் அருகில் அமர்ந்து கையைப் பிடித்து ஆறுதல் சொல்வது போலவும் ஒரு கனவு வந்த பிறகுதானே அவள் நன்கு தூங்கியதே!

ஆகக் கனவிலாவது அவனது அருகாமை கிடைத்ததால் தானே அவளால் அமைதி பெற முடிந்தது.

இதிலிருந்தே அவள் மனம் இன்னும் கணவனுக்காக ஏங்கிக் கொண்டிருப்பது தெளிவாகத் தெரியவில்லையா?

ஆனால், அது கனவுதானா அல்லது நிஜமா? மறுநாள் அவனுக்கே உரிய மணத்தைக் கூட அந்த அறையில் அவளால் நுகர முடிந்ததே!

அல்லது எல்லாமே அவளது ஆசை கொண்ட மனதின் கற்பனைதானோ என்னவோ?

நல்ல வேளையாக உதயசந்திரனும் அவளை உதறித் தள்ளாமல் ஆதரவாகவே நடந்து கொண்டான்.

ஒருவேளை அவன் மனதிலும் பழையகனல் முழுதாக அணையவில்லையோ?

நீறு பூத்த நெருப்பாய் அவனுள்ளும் அந்த அன்பு இருக்கத்தான் செய்கிறதா?

விபு கிடைத்துவிட்டதும் அவளைத் தூக்கித் தட்டாமாலை சுற்றினானே! அதைக் கூட அவனும் உணர்ச்சி வசப்பட்டதால் என்று கூறலாம்தான்.

முதலில் ஆதரவாக இருந்ததையும் மனிதாபிமானம் என்று விட்டுவிடலாம்.

ஆனால் இந்த முத்தம்?

அவசியமே இல்லாமல் அளிக்கப்பட்ட இந்த இதழொற்றுதல் அன்பின் சின்னமாகத்தானே இருக்க முடியும்?

வேறு அர்த்தம் இல்லை என்பதாக உதயன் சொன்னதே, 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்பது போல இல்லையா?

அப்படித்தான் அப்படித்தான் என்று ஆருப்பரித்த மனதை முடிந்தவரை அடக்கிக் கொண்டு உறங்க முயன்றாள் மதுரிமா.

வெகுவாக முயன்று வெற்றியும் கண்டாள்.

பின்னிரவில் தூங்கியபோதும், மதுரிமா காலை யிலேயே கண் விழித்துவிட்டாள்.

உள்ளத்தின் கதகதப்பு உடம்புக்கு சுறுசுறுப்பூட்டியது போலும்!



யார் வீடோ என்று ஒதுங்கியிருந்தது மாறி விபுவோடு ஓடி விளையாடினாள்.

அருகில் வந்து அமர்ந்த மாமியாருடன் இரண்டொரு வார்த்தை சாதாரணமாகப் பேசினாள்.

இந்த இலகுவான மனநிலை மதிய உணவுக்குப் பின் விபுதூங்கும் வரையும் இருந்தது.

அதன்பின் கடுமையாகக் கலைக்கப்பட்டது! அப்போது தான் வீட்டு வேலைக்காரி அவளிடம் காட்டிய வெறுப்பின் காரணமும் அவளுக்குப் புரிந்தது.



விபு உறங்கிய பிறகும் மதுரிமாவின் உள்ளத்தின் துள்ளல் அவளை ஓய்வாக இருக்க விடவில்லை.

தூங்கும் மகனின் முகத்தைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு மெல்ல எழுந்து வெளிப்புறமாக நடக்கத் தொடங்கினாள் மதுரிமா.

வீட்டின் ஒவ்வொரு பகுதியும் கலை நயத்துடன் அலங்கரிக்கப்பட்டிருந்ததைப் பார்க்கையில் சாவித்திரியிடம் அவளுக்குத் தனி மரியாதை ஏற்பட்டது.

ஒவ்வொன்றாக ரசித்தவாறு அவள் சென்று கொண்டிருந்தபோது தான் மீண்டும் இடி விழுந்து விட்டது.

மனம் நன்றாக இருந்ததாலோ என்னவோ

மதுரிமாவுக்கு உலகமே அழகாகத் தோன்றியது.

ஒவ்வொன்றாகப் பார்த்து ரசித்தபடி, அவள் மெதுவாகவே சென்று கொண்டிருந்ததால் அவள் நடந்ததில் ஓசை எழ வாய்ப்பில்லை. எனவே, கண்ணால் பார்க்க முடியாத இடத்தில் இருந்தவர்களுக்கு அவள் வந்து கொண்டிருந்தது தெரியவும் வழியில்லை.

எனவே தான், அந்த வேலைக்காரி தனம் அவ்வளவு வெளிப்படையாகவும் சத்தமாகவும் பேசியிருக்க வேண்டும்! ''அதான்யா, எங்க சின்னய்யாவுக்குச் சீக்கிரமே கலியாணம் வரப்போகுது. பொண்ணு பெரிய இடம் பட்டுச் சேலை வாங்கித் தாரேன் அப்படீன்னு எங்கம்மா சொல்லியிருந்தாங்கய்யா. நல்ல மௌகாப் பளக் கலரிலே கேட்டிருந்தேன். இப்பத்தான் இந்த மகராசி புள்ளையோட வந்திட்டாங்களே! இனிமே ஏது கலியாணமும், காட்சியும்? நம்ம புதுப் பட்டுச் சேலை ஆசை, இனிமே அம்பிட்டுதான்!'' என்று வருத்தப் பட்டுக் கொண்டிருந்தாள் அவள்.

சற்று நேரம் மதுரிமாவுக்கு ஒன்றுமே புரியவில்லை!

சின்னய்யாவுக்குக் கல்யாணம் என்றால்..

அதாவது விபுவுக்காக உதவி கேட்டு மதுரிமா இங்கே வரும் சமயத்தில் உதயசந்திரனுக்குத் திருமணப் பேச்சு நடந்து கொண்டு இருந்திருக்கிறது! திருமணம் விரைவிலே நடக்கப் போவதாகவும் இருந்திருக்கிறது. என்னவோ, பழைய கனல் அணையவில்லை. நீறு பூத்த நெருப்பு என்றெல்லாம் எண்ணினாளே!

பைத்தியக்காரி என்றால் அவள்தான் முழுப் பைத்தியக்காரி!



'ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள்' என்பார்கள். அந்த முப்பது நாளிலும் பாதியாகப் பதினைந்து நாட்களிலேயே, 'தாலி கட்டிய தோஷத்துக்காக வீட்டில் ஓர் இடம்' என்று கூறியவன் தானே? செருப்பாகக் கிடக்க வேண்டும் என்று சொன்னானே!

அதன் பிறகும், அவனிடம் ஒருத்தி நேசத்தை எதிர்பார்த்தால் அவள் முழுப் பைத்தியக்காரியேதான்!

இப்போது மகனைப் பார்த்ததும் மனம் உருகிவிட்டது.

அத்தோடு மறுதிருமணம் இயலாது என்கிறபோது இவளே இருக்கட்டுமே என்று எண்ணம்போலும்!

அதற்காகத்தான் இந்த இதழ் ஒற்றலும் இனிய பேச்சும்!

மிக எளிதாக அதில் ஏமாந்துவிட்ட தன்னை நினைக்கையில் மதுரிமாவுக்கு மிகவும் அருவருப்பாக இருந்தது.

மான ரோஷமே இல்லாத ஈனப் பிறவியாகி விடுவாள் போலிருக்கிறதே!

கூடாது!

ஓசையின்றி அறைக்குத் திரும்பச் சென்று கண்ணைத் துடைத்திக் கொண்டு வந்த அழுகையைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு யோசித்தாள்.

இனி, அவள் இங்கிருக்கக் கூடாது இருந்தால் மிகவும் வேலைப்பட்டுப் போவாள்!

நெஞ்சு நிறைய இருக்கும் நேசத்தை மறைப்பது கடினம். அந்த நேசம் அவளை அவன் விரும்பியபடி கால் செருப்பாகவே மாறி விடும்!

எனவே, அந்த நேசத்தை அவர்கள் அறியுமுன்பாகவே அங்கிருந்து சென்று விடுவது மேல்.

ஆனால் விபு?

மகனை நினைக்கையில் மதுரிமாவுக்கு அடக்க மாட்டாமல் கண்ணீர் பெருகி வழிந்தது.

அவனை, அவளோடு அழைத்துச் செல்வது அவனுக்குச் செய்யும் அநியாயம் ஆகும் என்பது ஏற்கனவே, அவள் எண்ணியிருந்தது. அழைத்துச் சென்றால் அவனது இழப்புகளின் அளவு மிகவும் பெரியது பிரும்மாண்டம்!

ஆனால் அவனை அடியோடு பிரிவது என்றால் அதுவும் அவளுக்குத் தாங்க முடியாத வேதனையாக இருந்தது.

ஆனால், அவள் அதைத் தாங்கித் தான் ஆக வேண்டும்!

தியாகத்தின் மறு பெயர்தானே தாய்மை!

அத்தோடு அவன் இருக்குமிடம் தெரியும் என்பதால் அவ்வப்போது மறைந்திருந்து, அவனது வளர்ச்சியைக் கண்டு களிக்கலாமே! அதை யாராலும் தடுக்க முடியாதே!

மறுநாள், உதயசந்திரன் திரும்பி வரும்போது தான் இங்கிருக்கக் கூடாது என்று முடிவு செய்தாள் மதுரிமா.

ஒரே நாளில் அந்த வீட்டைக் காலி செய்துகொண்டு இருக்கும் இடம் தெரியாமல் போய்விட முடியும் என்று மதுரிமா நினைக்கவில்லை.

ஆனால், இங்கிருந்து போய்விட்டாலே தனக்கு ஒரு தைரியம் வரும் என்பது அவளது கருத்து.

முன்பு வரவில்லையா?

அப்போதும் இப்படித்தானே?



உதயனால் எப்படித் தன்னைக் கைவிட முடிந்தது என்று எண்ணி எண்ணித் தவித்ததும் பிறகு, அங்கிருந்து கிளம்பி வந்து புது வாழ்வைத் தொடங்கும் முயற்சியில் ஒருவாறு அமைதி பெற்றதும்.

இப்போதும் அதையே செய்ய வேண்டியதுதான்.

சொல்லப் போனால், இதம் பார்க்க யாரும் இல்லாமல் தலை சுற்றல் வாந்தி என்று அப்போது பட்ட துன்பங்கள் இப்போது இருக்க வழியில்லை எனும்போது புது வாழ்வை அமைக்கும் முயற்சி முன்னை விட எளிதாகத்தான் இருக்க வேண்டும்.

ஆனால், இப்போது விபுவையும் பிரிந்தாக வேண்டும்!

பிரிந்துதான் ஆகவேண்டும் அவனது நன்மைக்காகவே பிரிந்துதான் ஆக வேண்டும். சும்மா, அதை நினைத்து 'ஙைஙை' என்று அழுவதாலோ பன்னிப் பன்னி அதையே நினைத்துக் கொண்டே இருப்பதாலோ ஒரு பயனும் இல்லை. இருக்கும் தைரியமும் கெடுவதுதான் மிச்சம்!

தனக்குத் தானே அறிவுறுத்தித் தன்னையே திடப் படுத்திக் கொண்டு, மதுரிமா கிளம்புவது பற்றித் திட்டமிடலானாள்.

பெரிதாகத் திட்டமிட ஒன்றும் இல்லை.

அங்கிருக்கும் சில முக்கியமான பொருட்களை எடுத்து வருவதாக, சாவித்திரியிடம் சொல்லிவிட்டுக் கிளம்பிப் போய்விட வேண்டும். நாளை உதயன் திரும்பி வருமுன் அந்த வீட்டை விட்டும் கிளம்பி விடவேண்டும். அது முடியாவிட்டால் கூட, அப்படி ஒன்றும் பெரிய பிரச்சினை ஆகிவிடாது.

விபுவை விட்டுக் கொடுத்துவிடும் போது அவளும் கூட வர வேண்டும் என்று உதயசந்திரன் குடும்பம் வலியுறுத்தப் போவது இல்லை.

கன்றுக்காகத்தானே தாயையும் உடன் வைத்துக் கொள்ள அவர்கள் நினைத்ததே!

சும்மாவே அவள் வேண்டாத மருமகள். ஆனால் அவர்கள் சம்மதம் இல்லாமல் மணந்த ஒரே காரணத்துக்காக இப்படியா ஒரு பெண்ணை வெறுப்பது? ஆசைப்பட்டு மணந்தவனே வெறுக்கும்படிச் செய்து விட்டார்களே!

ஒரு முறை பெற்றோரிடம் சென்று திரும்பி வருமுன் மாறி விடுவதானால் அவன் அன்பும்தான் எத்தகையதாக இருந்திருக்கும்.

இதையெல்லாம் எப்படி மறந்தாள்?

மூன்று ஆண்டுகள் முயன்று அமைய இருந்த கோடீசுவரச் சம்பந்தம் கெட்டுப் போனதில் இப்போது வெறுப்பு இன்னும் அதிகம்தான் ஆகும்!

உள்ளே வெறுப்பை வைத்துக் கொண்டு எல்லோரும் எப்படி நாடகம் ஆடுகிறார்கள்?

மாமனார் பரவாயில்லை. வெறுப்பை மறைக்க முடியாமல் ஒதுங்கிப் போய் விடுகிறார்!

அவளாலும் நடிக்க முடியாதுதான். ஒரேயடியாக ஒதுங்கி விடும் அவளது முடிவு மிகவும் சரியே!

அதை உடனே செயல்படுத்தாமல் வேண்டாததை எல்லாம் நினைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பதுதான் தப்பு!



பிடிவாதமாகத் தன்னை உறுதிப் படுத்திக் கொண்டு மதுரிமா மாமியாரிடம் சென்றாள்.

உள்ளூர உருப் போட்டு வைத்திருந்ததைச் சொன்னாள்.

''கட்டாயம் போக வேண்டுமாம்மா? வேண்டுமானால், உதயன் வந்த பிறகு இருவருமாகப் போய் எல்லாம் எடுத்து வாருங்களேன்?'' என்றாள் சாவித்ரி.

நல்ல நடிப்பு, என்று உள்ளூர மெச்சிக் கொண்டு அடுத்த நெட்டுருவை எடுத்து விட்டாள் மதுரிமா.

''தேட வேண்டியது எடுக்க வேண்டியது எல்லாம் நானேதான். உங்கள் மகனுக்குப் போர்தான் அடிக்கும். மற்ற ஃப்ளாட்காரரர்களிடம் விடை பெற வேண்டும். நேரம் ஆகும். விபுவைக் கண்டால் விட மாட்டார்கள். அவன் இங்கேயே இருக்கட்டும்?''

''ஆனால், அவன் விழித்துக் கொண்டு உன்னைத் தேடினால்?''

''நீங்கள் பக்கத்தில் இருந்தால் என்னை அதிகம் தேடமாட்டான். அவன்தான் உங்களிடம் நன்றாக ஒட்டிக் கொண்டு விட்டானே!''

உள்ளே இருந்த வருத்தத்தை மறைத்துக் கொண்டு உதட்டில் முறுவலோடு அவள் சொல்ல சாவித்ரிக்கு உச்சி குளிர்ந்துவிட்டது.

வாயெல்லாம் பல்லான மகிழ்ச்சியோடு, ''ஆமாமில்லை? எனக்கு அப்படியே தீபாவைச்சின்னதில் பார்த்த மாதிரி இருக்கிறது. அவளும் அவள் கணவரும் வெளிநாடு போயிருக்கிறார்கள். திரும்பி வந்ததும் எல்லாம் சொல்ல வேண்டும். இவனுக்கு 'விபு' என்று

நல்ல பெயர் வைத்திருக்கிறாயம்மா. அன்றைக்கு அகராதியில் பார்த்தேன். 'கடவுள்' என்று அர்த்தம் போட்டிருக்கிறது'' என்று மருமகளைப் பாராட்டினாள். சாவித்ரி.

ஆமாம், அவளுக்கும் தெரியும். அவனை முதல் முதலாகப் பார்த்தபோது அவளது துன்பங்களை யெல்லாம் நீக்கக் கடவுள், குழந்தையாக வந்திருப்பதாகத்தான் மதுரிமாவுக்குத் தோன்றியது. அதற்காகத்தான் அந்தப் பெயரை வைத்தாள்.

அந்தக் குழந்தையையே, இப்போது பிரியப் போகிறாளே!

ஒரு கணம் நெஞ்சை அடைத்துக் கொண்டு 'ஹோ' என்று வந்துவிட்டது அவளுக்கு.

ஒன்றும் வேண்டாம் சொத்தாவது? சுகமாவது? வளமான எதிர்காலமும் வேண்டாம். உங்கள் பாரம்பரியமும் வேண்டாம். எனக்கு என் பிள்ளையும் என் பிள்ளைக்கு நானும் போதும். என்று கத்திவிட்டுப் பிள்ளையைத் தூக்கிக் கொண்டு ஓடி விட வேண்டும் போல உடம்பின் ஒவ்வோர் அணுவும் துடித்ததை வெகு சிரமப்பட்டு அடக்கினாள்.

இது, ஒரு வினாடிப் பலவீனத்தில் முடிவு செய்வதில்லை! அவளது உணர்ச்சிகளுக்காகப் பிள்ளையின் எதிர்காலத்தைக் கெடுத்துவிடக் கூடாது!

நல்ல வேளையாக சாவித்ரி சின்னவளின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கவில்லை ஒரு புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தாள்.



தேடியது கிடைத்துவிட்டாற் போல, அந்தப் பக்கத்தை மதுரிமாவிடம் காட்டினாள்.

''இந்த டிசைன்'' நன்றாயில்லை? விபுவுக்கு இது போல ஸ்வெட்டர் பின்னலாம் என்று நினைத்தேன்''

அந்த மட்டும் பேரனிடம் பிரியம் இருக்கிறதும், அது போதும் என்று எண்ணியபடி மதுரிமா மாமியாரை ஆமோதித்தாள்.

''அப்படியானால் நான் கிளம்பட்டுமா?''

''காரை எடுத்துப் போ''

''கார் வேண்டாம்மா. எனக்கு அங்கே நேரமாகும். இரவு முழுவதும் தேடி எடுக்க வேண்டியது கூட இருக்கிறது. அப்படியே நாளைக்கு என் அலுவலகத்தில் விவரம் சொல்லவும் வசதியாக இருக்கும். அத்தோடு காரைக் கண்டதும் விளம்பரப்படுத்திய மாதிரிக் கூட்டம் சேர்ந்துவிடும். நான் சும்மா எல்லோரையும் போல, ஆட்டோவில் போய் விடுகிறேன். போய்விட்டு வசதிபோலத் திரும்பி வரவும் எனக்கு அதுதான் சரியாக இருக்கும்'' என்று கோவையாக இயம்பினாள் மதுரிமா.

ஒத்துக் கொண்ட போதும் ''ஆனால் ஒன்று. இனி நீ என்னை 'அத்தை' என்று அழைக்க வேண்டும். சரிதானா?'' என்று சிரித்தாள் சாவித்ரி.

பதிலாக 'ஈ' யென்று பல்லைக் காட்டிவிட்டு, உள்ளே சென்று மகனை ஒருதரம் ஆசையோடு பார்த்துவிட்டு, அந்த வீட்டை விட்டு மதுரிமா கிளம்பினாள்.

## 20



பிரியாநகர் ஃப்ளாட்டுக்குள் சென்ற போதும், மதுரிமாவுக்கு நெஞ்சை அடைத்துக் கொண்டுதான் வந்தது.

குழந்தை என்று நிச்சயப்பட்டதிலிருந்து விபுவோடு அவள் இங்கேதான் இருந்திருக்கிறாள்.

முதலில் வயிற்றுக்குள். பிறகு வெளியே.

விபுவுக்கு அவள் தொட்டில் வாங்கவில்லை. அடுத்தொரு பிள்ளைக்குத் தேவைப்படாது என்பதோடு குழந்தையைப் பாயில் போட்டால் உருண்டு புரளும்போது தலை வடிவம் அழகாக ஆகும் என்று டாக்டரும் சொல்லவே அந்தச் செலவை அவள் செய்யவில்லை. பாயில் கிடத்தி கொசுக்குடை வைத்துவிடுவாள்.

விபு புரண்டு படுத்துக் கொசுக் குடையைத் தள்ளி விட்டதிலிருந்து ஒவ்வொன்றாக நினைவு வரவும் அப்படியே படுக்கையில் விழுந்து கொஞ்சநேரம் கண்ணீர் விட்டாள்.

கண்ணீர் நிற்கவே நிற்காதோ என்று கூட அவளுக்குத் தோன்றியது.

ஆனால், முதலில் கணவனைப் பிரிந்ததில் இருந்து பலமுறை தன்னைத் தானே கட்டுப் படுத்திப்



பழகியிருந்ததால், இப்போதும் அந்தக் கட்டுப்பாடு அவளுக்குக் கை கொடுத்து அவளது கண்ணீரை நிறுத்தியது.

துயரத்தை அடக்கவும் மறக்கவும் வேலைதான் சரியான மருந்து என்று அனுபவத்தில் அறிந்திருந்ததால் முகத்தை கழுவிக் கொண்டு வேலையைத் தொடங்கினாள்.

முதலில் விபுவின் மருத்துவ ஃபைலை எடுத்து வைத்தாள். அவனுக்கு இதுவரை கொடுத்திருக்கும் தடுப்பு மருந்துகள் இனிமேல் கொடுக்கப்பட வேண்டியவை அவனுக்கு வந்த சுகவீனங்கள் அவை குணமாக டாக்டர் கொடுத்த மருந்துகள் எல்லாமே வரிசைப்படி பட்டியலிடப்பட்டிருந்தன. அவன் வயிற்றுக்குள் இருந்தபோது அவள் எடுத்துக் கொண்ட மருந்து டானிக் சீட்டுகள் கூட அதில் இருந்தன. முழு ''மெடிக்கல் ஹிஸ்டரி''!

விபுவுக்குப் பிடித்த விளையாட்டுச்சாமான்கள் அழகாக இருக்கும் சில புதிய ஆடைகள் எல்லாம் எடுத்து சேர்த்து அடுக்கி பார்சல் செய்து வைத்தாள்.

அடுத்து உதயனுக்கு சுருக்கமாக ஒரு கடிதம் 'மூன்று ஆண்டுகளுக்கு முன் இருந்த அதே மதுரிமாதான் இப்போதும் இருக்கிறேன். விபுவுக்காக என்னை சகிக்கத் தேவை இல்லை. அவனை உங்களிடம் தந்துவிட்டு நானே விலகி விடுகிறேன். விபுவைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்' என்று எழுதி மடித்து போஸ்ட் செய்வதற்காகக் கைப்பையுள் வைத்தாள்.

பிறகு, தன் படிப்பு தகுதி மற்றும் நடத்தை பற்றிய சான்றிதழ்களை எடுத்து வைத்தாள்.

அடுத்த வேலைக்கு வேண்டுமே!

அவளுக்கும் கொஞ்சம் துணிமணி எடுத்து வைத்தாள்.

ஒரு பத்து நாட்கள் இங்கிருந்து எங்காவது போய்விட்டால் நன்றாக இருக்குமே என்று தோன்றியதின் விளைவு அது.

'நன்றாக' என்று இனிமேல் வாழ்க்கை இருக்க வழி இல்லை என்பது நிச்சயமே. என்றாலும் இதயத்தை அழுத்தும் இரும்புக் குண்டின் கனம் கொஞ்சம் குறையாதா?

ஒரேயடியாக விலகிப் போய்விட, அவளுக்கு ஆசைதான். ஆனால் மூன்று ஆண்டுகளாகக் குடித்தனம் செய்த இடத்தைக் காலி செய்து கிளம்புவது அவ்வளவு எளிதில்லையே. காலி செய்து போய்த் தங்குவதற்கு இடம் இருந்தாலாவது பரவாயில்லை!

அது இல்லாததால் பத்து நாள் தங்களுக்கு மட்டுமாக ஓர் இடம் கண்டு பிடிக்கத்தான் அவளால் முடிந்தது.

குற்றாலத்தை ஒட்டி, ஒரு சிறு வீடு. வயதான ஒரு தம்பதிக்குச் சொந்தமானது. இன்னும் கொஞ்சம் குற்றாலத்துக்கு அருகில் இருந்திருந்தால் எப்போதோ இடமாகவேனும் விலை போயிருக்கும். வாடகையும் நிறைய வாங்க முடிந்திருக்கும். அதற்கு வழியில்லாததால் மதுரிமா போன்றோருக்கு வசதியாக இருந்தது.

லீவுக்கென்று மூன்று ஆண்டுகளாக அவள் சென்று தங்குவது அங்கேதான்.

இப்போதும் அங்கேயே செல்லலாம் என்று முடிவு செய்து, அவள் பெட்டி அடுக்கிக் கொண்டு இருந்த



போதுதான் அவள் வீட்டுக்கதவு தட்டப்பட்டது.

இன்னமும் அலுவல் முடிந்து மற்ற ஃப்ளாட்காரர்கள் வீடு திரும்புகிற நேரம் ஆகவில்லையே! யாராக இருக்கும் என்று யோசித்த படியே சங்கிலித் தாள்ப்பாளைப் போட்டுவிட்டு மதுரிமா கதவை லேசாகத் திறந்து பார்த்தாள்.

நாலைந்து மாதங்களுக்கு முன்பாகச் சந்தித்த உறவினர். கடைக்குப் போய்த் திரும்பும்போது சந்தித்து, அவளைப் பற்றிய விவரம் கேட்டுவிட்டுப் போன மனிதர் அவளுடைய தாயார் வழி உறவினர் பெயர் சுந்தரம்.

கதவைத் திறந்து விட்டபோது, ''நான் வெளியூருக்குக் கிளம்பிக் கொண்டிருக்கிறேனே அங்கிள். உங்களுக்கு ஒரு வாய்த் தண்ணீர் தரக் கூட வழியில்லை'' என்றாள் அவள் குறிப்பாக.

வந்தவரும் உள்ளே வர முயற்சிகூடச் செய்யவில்லை. ''ஒன்றும் வேண்டாம் அம்மா. நான் வந்தது வேறு விஷயம். உன் அம்மாவின் ஃபோன் நம்பருக்காக வந்தேன். அன்று நான் சொன்னது உனக்கு நினைவிருக்கிறதோ இல்லையோ நான் உன் அம்மாவுக்குப் பெரியப்பா பிள்ளை. இரண்டு குடும்பங்களுக்கும் உன் அம்மாதான் செல்லப் பிள்ளை. கடைசி அல்லவா? சுகும்மா, என்று உயிரை விடுவோம். ஆனால் சித்தப்பா வீட்டில் சுகுணாவை நடத்திய விதமே சரியில்லை... சே! என்ன பழைய கதை பேசிக் கொண்டிருக்கிறேன், பார். இங்கே உன் பிள்ளை காணாமல் போய்விட்டானாமே! இங்கெல்லாம் ஒரே பேச்சாய் இருக்கிறதே? நிஜம்தானாம்மா?'' என்று பரிவாய் விசாரித்தார்.

''ஆமாம், மாமா ஆனால் நல்ல வேலையாகக் கிடைத்துவிட்டான்'' என்றாள் அவள் மெதுவாக.

''நல்லவேளை, என்னம்மா? என் அம்மா குணத்துக்கு, அவளுடைய பேரக் குழந்தை கிடைக்காமல் எப்படிப் போகும்? மாப்பிள்ளை வெளியே போயிருக்கி றாராம்மா?''

உதட்டைக் கடித்துக் கொண்டு அவள் பேசாதிருக்கவும் கவனியாதது போல ''பின்னாடி வருவார் போல வரட்டும். ஆனால் என் வருத்தம் என்ன தெரியும்மாம்மா? அந்தக் கடத்தல்காரன் கிட்டே, உன் பிள்ளை விவரம் நான் தானம்மா சொல்லிவிட்டேன்'' என்று கண்ணைத் துடைத்துக் கொள்ளவும் மதுரிமா 'சரேல்' என்று நமிர்ந்து அவரைப் பார்த்தாள்.

''என்ன?''

''ஆமாம்மா, ஆனால் தப்பு நினைத்துச் சொல்லவில்லை. மாப்பிள்ளை பக்கத்தில் இல்லாமல் தனியாகப் பிள்ளை வளர்க்கிறாய் என்று மட்டும்தான் சொன்னேன். இங்கேயே வீடும் குடித்தனமுமாக இருக்கிறவன். பாவி பிள்ளை பிடிக்கிறவன் என்று எனக்குத் தெரியாதும்மா. துணையில்லாத வீடு என்று துணிந்திருப்பான் போல...

''என்னது? இங்கேயே அவன் வீடா? எங்கே மாமா?'' என்று மதுரிமா பரபரப்புடன் கேட்டாள்.

''எங்கேன்னா...?'' என்று யோசித்தார், உறவினர். ''இங்கே, நான் புதிசும்மா. போகிற வழி தெரியும். ஆனால் அட்ரசுன்னு கேட்டால் தெரியாதேம்மா'' என்று வருத்தப் பட்டார் சுந்தரம்.



மதுரிமா ஏதோ யோசிக்கவும். ''அல்லது... உனக்கு இங்கே தெரியும் இல்லையாம்மா? அவன் இருக்கிற வீட்டை உனக்கு நான் காட்டுகிறேன். பார்த்துக் கொள்'' என்றார்.

மதுரிமாவுக்கு, விபுவைக் கடத்தியவனிடம் சிலது கேட்க வேண்டியிருந்தது. பச்சைக் குழந்தையைப் போய்க் கழுத்தை வெட்டுவேன் என்று, எப்படியடா சொன்னாய் என்பது. அடுத்தது விபு பற்றி விவரம் விசாரிக்கையில் ஆளாளுக்கு, அவன் தந்தை வீட்டு விவரம் வெளியே சொன்னாளா என்று அவளிடம் குற்றம் சாட்டுகிற மாதிரிக் கேட்டார்கள். அவனுக்கு அந்த விவரம் எப்படித் தெரியும் என்று அவள் அறிந்து கொள்ள வேண்டியிருந்தது.

ஆனால் அந்த மாதிரி ஆட்கள் இருக்குமிடத்துக்குத் தனித்துப் போவது தப்பு என்று எண்ணியவளாய், ''முதலில் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் நாலு போலீஸ்காரர்களைக் கூட்டிக் கொண்டு போவோம்'' என்றாள்.

''சரிதான் போ. போலீசைக் கூட்டிக்கிட்டு நாம் போகிறதுக்குள்ளாக அவன் வீட்டையே காலி பண்ணிப் போய்விடுவான். என்ன விழிக்கிறாய்? இந்த ஸ்டேஷன் ஆட்கள் இவனிடம் மாமூல் வாங்குகிறவர்களாக இல்லை என்றால், அவன் இவ்வளவு தைரியமாக இங்கே இருப்பானா? ஒன்று செய்யலாம். நாம் இரண்டு பேரும் போவோம். அவன் வீட்டைத் தூரத்திலிருந்து பார்த்துவிட்டுத் திரும்பி விடுவோம். பிறகு, உன் புருஷனுக்குத் தெரிந்த வேறு போலீஸ்காரர்கள் மூலம், இவனைப் பிடித்து விடலாம் என்ன சொல்கிறாய்?''

மதுரிமா, சற்று யோசிக்கவும், ''அல்லது பிள்ளைதான் கிடைத்துவிட்டானே, இனி அவனைப் போய் எதற்காகப் பிடிக்க வேண்டும்? விட்டுவிடலாமா?'' என்று சுந்தரம் கேட்க, ''இல்லை மாமா முதலில் போய்ப் பார்ப்போம் வாருங்கள்'' என்று கதவைப் பூட்டிக் கொண்டு மதுரிமா கிளம்பினாள்.

சுந்தரம் அவளை ஆட்டோவில் கூட்டிச் சென்றார்.

நெரிசல் குறைவான ரோடுகளில் ஆட்டோ செல்லச் செல்ல மதுரிமாவுக்கு ஏனோ மனம் துணுக்குற்றது.

விபுவை ஆட்டோவில்தான் கடத்திச் சென்றார்கள்!

ஆனால், அவளோடு கூட இருப்பவர், உறவினர். முதல் முறை வந்தபோது அவளுடைய அம்மாவோடு அவரும் இருந்த குடும்பப் படங்களையும் காட்டினாரே.

அதிலும் பெரியப்பா மகன் 'சுந்தரம் அண்ண'னைப் பற்றி ஓரிரு முறை தாயார் பெருமையாகப் பேசியது கூட மதுரிமாவுக்கு நினைவிருந்தது! அப்போதும் கூட, ஏனோ மனம் குழம்பிவிட, ''போதும் மாமா ஆட்டோவைத் திருப்பச் சொல்லுங்கள். பிறகு இன்னொரு நாள் வந்து பார்த்துக் கொள்ளலாம். பிரபு அங்கிளிடம் சொல்லி வேறு போலீசையும் கூட்டி வரலாம். முதலில், ஆட்டோவைத் திருப்பச் சொல்லுங்கள்'' என்றாள் அவள்.

இரண்டாவது, 'திருப்பச் சொல்லுங்களை' அவள் சற்று அழுத்தமாகவே சொல்லவும், சுந்தரம் உடனே பதில் சொன்னார். ''இதோ வந்து விட்டோமம்மா. அடுத்த திருப்பம்தான். அல்லது இங்கேயே இறங்கிப் பார்க்கலாமா? ஏ நிறுத்தப்பா அட, நிறுத்தப்பா, ''என்று



ஒருவாறு நின்றுவிட்ட வண்டியிலிருந்து இறங்கி அவளையும் இறங்குமாறு சைகை செய்தார்.

ஆட்டோ டிரைவரும் கூட இறங்கி வந்து பார்த்தான்.

''அதோ பாரும்மா... அங்கே வலது கைப் பக்கமாக, இரண்டு வீடு சேர்ந்தாற்போலத் தெரிகிறதா? அதில் இடது பக்கம்...''

அவ்வளவுதான், மதுரிமாவின் காதுகளில் விழுந்த வார்த்தைகள்!

அதற்குள் பிடரியில் இடி விழுந்தாற்போல உணர்ந்தவள், அதற்கு மேல் நினைவிழந்தாள்.

மதுரிமாவுக்கு சுய நினைவு வந்த போது, தான் ஒரு நாற்காலியோடு சேர்த்துக் கட்டப் பட்டிருப்பதை உணர்ந்தாள்.

அனிச்சைச் செயல் போல, முதல் வேலையாகத் தன்னை விடுவித்துக் கொள்ள முயன்று, அவள் தோற்ற போது சுந்தரத்தின் குரல் கேட்டது.

அந்தச் சிறு அறையின் பக்க வாட்டுக் கதவு வழியாக உள்ளே வந்து, ''மன்னித்துக் கொள் மதுரிமா. பங்களூரில் விசாரித்த போது, உனக்குக் கராத்தே தெரியும் என்றார்கள். அதனால் தான் முன்னெச்சரிக்கையாக்கக் கட்டி விட்டேன்'' என்று சுந்தரம் கூறவும் மதுரிமா திகைத்துப் போனாள்.

உறவினர் என்று நம்பியது தப்பாகி விட்டதா?

விரைவிலே தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''என்னை எதற்காகக் கட்டிப் போட்டிருக்கிறாய்?'' என்று அதட்டலாகவே கேட்டாள்.

''போட்டிருக்கிறாயாவா? மரியாதை போய் விட்டதாக்கும்? போகட்டும் எனக்குப் பணம் வந்தால் சரி. உன்னை விடுவிக்க உன் புருஷனிடம் பணம் கேட்கப் போகிறேன். ரொம்ப வேண்டாம். ஒரு பத்து லட்சம்தான் கேட்கலாம் என்று இருக்கிறேன்''

''பத்து லட்சமா?''

''என்ன பத்து லட்சத்துக்கே வாயைப் பிளக்கிறாய்? அவன் சொத்து மதிப்பு எத்தனை கோடி தெரியுமா? இப்போது உன் புருஷனுக்கு ஃபோன் போடப் போகிறேன். நான் பேசியதும், உன்னிடம் தருவேன். 'தயவு பண்ணிப் பணத்தைக் கொடுத்து என்னைக் காப்பாற்றுங்கள்' என்று நீ அவனிடம் கெஞ்சிக் கேட்க வேண்டும்...''

''கேட்காவிட்டால்?''

''முதலில், உன் உடம்பு கொஞ்சம் நோகும். அப்புறம், உன் ரத்தம் கொஞ்சம் வடியும். தாங்குவாய் என்றா நினைக்கிறாய்? ஒரு சாதாரணத் தட்டுக்கே மயக்கம் தெளிய இரண்டு மணி நேரம் ஆகிவிட்டது. தெளியாமல் செத்து விடுவாயோ என்று கூடப் பயமாகி விட்டது. அவ்வளவு நோஞ்சானாக இருக்கிறாய் அசட்டுத்தனமாகவாய் வீரம் பேசாதே'' என்று அதட்டினான் சுந்தரம்.

''உனக்குத்தான் விஷயம் புரியவில்லை. எனக்காக, அந்த வீட்டில் பணம் தரமாட்டார்கள்'' என்றாள் அவள் கைத்த குரலில்.

''அடபோடீ, உன் பிள்ளைக்காக என்ன பாடுபட்டார்கள்? நீ வேண்டாம் என்றால் பிள்ளையைக் காப்பாற்றுவார்களா? எல்லாம் தருவார்கள்'' என்று



கையோடு கொண்டு வந்திருந்த ஃபோன் கருவியின் எண்களை அழுத்தத் தொடங்கினான்.

''உதயன் ஊரில் இல்லை பங்களூர் போயிருக்கிறார்.''

''வந்துவிட்டான். பெண்டாட்டி நினைவு வந்துவிட்டது போல'' என்றவன் மீண்டும் பட்டன்களை அழுத்தலானான். ''எந்தக் கழுதையோடு, பேசிக் கொண்டிருக்கிறான் முட்டாள்?''

மூன்றாவது தடவை, உதயசந்திரனோடு தொடர்பு கிடைத்துவிட, சுந்தரம் சுருக்கமாக விஷயத்தை விளக்கினான். ''இதோ, உன் பெண்டாட்டியிடமே பேசு'' என்று ரிசீவரை நீட்டினால், மதுரிமா வாயே திறக்கவில்லை.

ஆத்திரத்துடன், ''ஏய் பேசுடீ மரியாதையாகப் பேச மாட்டாய்?'' என்று அவளை ஓங்கி அறைந்தான்.

முனகலைக் கூட அடக்கிக் கொண்டு மதுரிமா மௌனமாக இருந்துவிட எதிர் முனையில் என்ன சொன்னாரோ?

[illegible]துடன், ''இப்போது, என்ன அடையாளம் வேண்டும் என்கிறாய்? உன் மனைவியின் தலையை வெட்டி பார்சலில் அனுப்பி வைக்கட்டுமா?'' என்று அந்த சுந்தரம் கத்தவும், அதிர்ந்து போய் ''பாவீ!'' என்றாள் மதுரிமா.

''விடு! என் மகனைக் கடத்தியதும் நீதானா!'' என்றாள் காற்றாகிப் போன குரலில்.




விபுவை வைத்துப் பணம் பறிக்க அவன் சொன்ன அதே வார்த்தைகள்!

பாவி! இவனிடம் போய் இப்படி ஏமாந்து விட்டாளே!

''பணத்தைத் தயார் பண்ணிவை. அதை, எங்கே எப்படித் தர வேண்டும் என்று அப்புறமாய்ச் சொல்லுகிறேன்'' என்று கூறி ரிசீவரை வைத்தான் அவன்.

பிறகு மதுரிமாவின் பக்கம் திரும்பி, ''ஆமாம். உன் பிள்ளை அந்தக் குட்டிப் பிசாசைக் கடத்தியதும் நான்தான். 'மிகவும் கஷ்டப்பட்டு அவன் யார்மகன் என்று கண்டுபிடித்து தாடி ஒட்டி, எட்டுக்குட்டிப் பிசாசுகளுக்கு ஈடு கொடுத்து ஆடி, ஒரு வழியாய், அவனைக் கடத்திக் கொண்டு போனால், கழுதை எனக்கே டிமிக்கி கொடுத்து விட்டு ஓடிவிட்டது! அதைத் தேடி ஓடிக் கண்டுபிடித்தும், ஒரு பயனும் இல்லாமல் போயிற்று! ஆனால் உன்னை அப்படி விட்டு விட மாட்டேன். அதனால்தான் கட்டியே போட்டு விட்டேன்'' என்ற தன் கதையைச் சொன்னான்.

விபுவைக் கடத்தியவனைப் பார்த்துக் கேட்க எண்ணிய கேள்வியை மதுரிமா அப்போதுகேட்டாள்.

விபுவைப் பற்றி அவன் எப்படித் தெரிந்து கொண்டான்?

''மூளையை வைத்து!'' என்று தலையைத் தட்டிப்



பெருமை காட்டி விட்டு அவன் சொன்னான்.

சுலேகாவுக்குப் பால்வினை நோய்வந்து, பெரும் செலவு செய்தும் பலனின்றி இறந்த பிறகு அவனுக்குச் செலவுக்குக் கஷ்டம்தான்.

மதுரிமா ஒரு விதமாகப் பார்க்கவும், ''என்ன? சுலேகா யார் என்று பார்க்கிறாயா? என் முதல் தங்கை. அண்ணன் சொன்னபடியெல்லாம் கேட்கும். அருமைத் தங்கம். அல்பாயுசில் போய்விட்டாள். அவள் ஆத்மா சாந்தி, அடையட்டும் பாவம். அடுத்தவள்தான் உன் அம்மா சுகுணா. சுத்த முசுடு! உருப்படாத கழுதை!'' என்றான் வெறுப்புடன்.

''அப்படியானால் நீ அம்மாவுடைய பெரியப்பா மகன் இல்லை. சொந்த அண்ணன். அம்மா வெறுத்து ஒதுக்கி உறவே வேண்டாம் என்று விலக்கிவிட்ட உடன் பிறந்தவர்'' என்றாள் மதுரிமா.

''ஆமாம்.'' என்று ஒத்துக் கொண்டான் அவன். ''பிழைக்க வழி சொல்லிக் கொடுத்தால் உறவே வேண்டாம் என்று விட்டாள். முட்டாள்! அவள் மகள் நீயும் அவளைப் போலத்தான் இருப்பாய் போலத் தெரிகிறது! இந்தக் கதையெல்லாம் சொல்லியிருப்பாளே என்றுதான் உன்னிடம் என் பெயரைச் சுந்தரம் என்றேன்'' என்று ஏளனமாகக் கூறிவிட்டுக் கதையைத் தொடர்ந்தான் அவன்.

இலக்கின்றிச் சுற்றிக் கொண்டிருந்த போதுதான் சுகுணாவுடைய பெண்ணை அவன் பங்களூரில் கண்டது. இவளை எப்படியாவது வளைத்துப் போடலாமா என்று பார்த்தால் அவள் ஜோடியோடு சுற்றிக் கொண்டிருந்தாள். விசாரித்ததில் அவன் பக்கா ஆள் என்று தெரிந்தது. இதில்

ஏதாவது பணம் பண்ணலாமா என்று அவன் யோசித்து முடிக்கு முன் திடீரென்று பார்த்தால் ஆளுக்கொரு பக்கம் காணாமல் போய்விட்டார்கள். பஞ்சையாய், பராரியாய் மூன்று ஆண்டுகள் அலைந்து விட்டு வந்தால் இங்கே பிள்ளையோடு சுகுணா மகள்!

புருஷன் மிலிட்டிரிக்காரன் என்கிறாள்!

''இதையே சுலேகாவிற்கு ஒரு பெண்ணிருந்து அவள் சொன்னால் நம்பியிருப்பேன். ஆனால் சுகுணா மகளை அப்படி வளர்த்திருக்க மாட்டாள் என்பது எனக்கு நிச்சயம். அதனால் மீண்டும் அலசி ஆராய்ந்தேன். உங்கள் திருமணம் தெரிய வந்தது. நீங்கள் பிரிந்ததும் தெரிந்தது. இந்தப் பையனின் பிறப்புப் பதிவேட்டைப் பார்த்தேன். விஷயம் தெரிந்து போயிற்று!'' என்றான் அவன் பெருமையாக. ''இந்த மோகனை ஏமாற்ற முடியுமா?''

'இந்த முகரக் கட்டையின் பெயர் மோகனா? கண்ணராவி' என்று எண்ணிக் கொண்டாள் மதுரிமா.

''இந்த விவரம் எல்லாம், திருட்டுத்தனமாகத் தெரிந்து கொள்ள எவ்வளவு செலவாகும் தெரியுமா?

சின்ன மீனைப் போட்டு பெரிய மீனைப் பிடிப்பது போல என்று செலவு செய்தேன். உன் மகன் விஷயத்தில் வீணாகி விட்டது. ஆனால் உன்னை வைத்து எடுத்து விடுவேன்.''

''இப்போதுதான் மெய்யாகவே ஏமாறுகிறீர்கள். எனக்காக அவ்வளவு பணம் கொடுக்க மாட்டார்கள்'' என்றாள் மதுரிமா மீண்டும்.

''அதையும்தான் பார்ப்போமே.'' என்று மீண்டும் டெலிஃபோனை எடுத்தான் அவன்.



உதயன்தான் எடுத்தான் போலும்.

''இதைப் பாருப்பா, மரியாதையாப் பணத்தை ரெடி பண்ணு அல்லது இங்கே நம்மளுக்குத் தெரிந்த ஒரு மாதிரிப் பட்ட இடங்கள் இரண்டு இருக்கிறது. அங்கே கொண்டு விட்டேன் என்று வை ஒரு நாளைக்கு ஐந்தே கஸ்டமர் என்றாலும் என்ன சம்பாத்தியம் பா..''

''ஏய் சி!'' என்றாள் மதுரிமா அருவருப்புடன்.

''உன் பெண்டாட்டிதாம்பா 'சீயாம் உனக்கு எப்படி?''

சற்று நேரம் மோகன் பேசினான். மறுமுனைப் பேச்சையும் கேட்டான்.

''விரல் படாது நகம் கூட அவள் மேல்படாது. ஆனால், கட்டை அவிழ்த்து விடுகிறபோது கை படுமே பரவாயில்லையா?'' என்று சிரித்தான்.

உடனேயே கடினமான குரலில், ''நான் அவளைக் கூட்டி வருகிறேன். கராத்தே படித்தவள் என்கிறதால் கைகால் எட்டாத தூரத்தில் துப்பாக்கியோடு ஆள்வரும். நீயோ அவளோ ஏதாவது சிலுமிஷம் பண்ணினீர்களானால் அப்புறம், அவளை உயிரோடு பார்க்க முடியாது'' என்ற மிரட்டலோடு பேச்சை முடித்தான்.

சற்று தூரத்தில் ஒருவன் துப்பாக்கியோடு நிற்க, அவளுக்குக் கட்டவிழ்த்து விட்டான்.

துப்பாக்கிக்காரன் பின் தொடர அவளை அழைத்துப் போனான்.

குறிப்பிட்ட இடத்தில் கையில் பெட்டியோடு உதயனைப் பார்த்த பிறகுதான் மதுரிமாவால் நம்ப முடிந்தது.

பெட்டியைத் திறந்து காட்டி விட்டு, ''அவளைப் பாதி தூரம் அனுப்பு அப்புறம்தான் பெட்டியைக் கீழே வைப்பேன்'' என்றான் உதயசந்திரன் உறுதியான குரலில்.

''சுட்டுவிடுவேன் என்று மிரட்டி உன்னையும் பணத்தையும் கொண்டு போய்விடத்தான் ஆசை. ஆனால் இன்னொரு முறை பணம் கேட்டால், நம்ப மாட்டான். நெருப்பை மடியில் கட்டிக் கொண்ட மாதிரி கராத்தே தெரிந்த உன்னாலும் எப்போதும் அபாயம்தான் அதனால் போ'' என்றான் மோகன்.

சொன்னபடியே பணப்பெட்டியை வீசிவிட்டு மனைவி அருகில் நெருங்கவும் இரண்டெட்டு முன்னே சென்று அவளை இறுக அணைத்துக் கொண்டான் உதயசந்திரன்.

'தட்தட்' என்று பலமாய் ஒலித்த, அவனது இதயத் துடிப்பை உணர்ந்த போது இவனும் பயந்திருக்கிறானே என்றிருந்தது அவளுக்கு.

அணைத்தவாறே, காருக்கு அழைத்துச் சென்று அவளை ஏற்றித் தானும் ஏறிக் காரைவேகமாக ஓட்டினான் அவன்.

அந்தப் பகுதியை விட்டு வெளியேறியதும் இடக்கையால் அவளைத் தன்னருகே இழுத்துக் கொண்டவன், அதில் திருப்தியுறாமல் ''இன்னும் ஒட்டி அமர்ந்து என் தோளில் சாய்ந்து கொள்மது'' என்று அவன் கூற அவளும் அது போலவே அவனோடு ஒட்டிக் கொண்டாள்.

திடும் என நினைவு வர, ''எவ்வளவு பணம் உதி! அவ்வளவும் போய்விட்டதே!'' என்றாள் கவலையுடன்.

''போனால் போகட்டும். நல்ல வேளை! பங்களூரில் வசூலான பணத்தை அங்கே பாங்கில் கட்டக் கூட நில்லாமல் ஓடி வந்தேன். அவன் கேட்ட பணத்தைக் கொடுத்து உன்னை, உடனே மீட்க முடிந்தது. ஆனால்... என்ன காரியம் செய்தாய் மது? ஏன்? அம்மாவிடம் சொன்ன கதை, என்னிடம் வேண்டாம். உண்மையைச் சொல்லு நீ அங்கிருக்கப் பிடிக்காமல் தானே இங்கே வந்தாய்? விபுவைக் கூட விட்டு விட்டு... ஏன் அப்படி?'' என்று ஒரு வருத்தத்துடன் கேட்டான் அவன்.



கைப்பையிலிருந்த கடிதம் நினைவு வர, ''விபுவுக்காக, என்னை நீங்கள் சகித்துக் கொள்ள வேண்டாம் என்று...'' என்று முடிக்காமலே நிறுத்தினாள் அவள்.

சரேலென்று ஓரம் பாய்ந்து ஒரு குலுக்கலுடன் கார் நின்றது.

''என்னது. விபுவுக்காக, உன்னைச் சகிப்பதா? இது என்ன பைத்தியக்காரத்தனமான பேச்சு? நேற்று நெற்றியில் முத்தமிட்டேனே! என் முகமும் கண்ணும் உனக்கு ஒன்றுமே சொல்லவில்லையா? உன் மனதில் ஒன்றும் இல்லை என்று சொல்லாதே நம்ப மாட்டேன். எப்போது அப்படி 'உதீ' என்று கதறிக் கொண்டு, என் மீது வந்து விழுந்தாயோ, அப்போதே எனக்கு நிச்சயம். அதே போலத்தான் நானும் மது. எனக்கும் எப்போதும் நீதான்.''

அணைக்க முயன்றவனின் கரத்தை விலக்கி விட்டாள்அவள். ''இதை நம்ப முடிந்தால் நன்றாகத்தான் இருக்கும்!''

''ஏன் நம்ப முடியாது?''

''...''

''ஏன் முடியாது என்று கேட்டேன்.''

மகா நியாயஸ்தன் போல எப்படிக் கேட்கிறான்?

தொண்டை அடைக்க வேலைக்காரி தனத்தின் பேச்சை அவனிடம் சொன்னாள் அவள். ''அதற்கு என்ன அர்த்தம்? இன்னொருத்தியை மணக்க நீங்கள் தயாராக இருந்தீர்கள் என்பது தானே? பிறகும் எப்போதும் நீதான் என்றால் எப்படி நம்புவது?''

''என்னிடம் கேட்டிருக்கலாமே! அம்மாவுக்கு மகன் மூலமும் பேரன் பேத்தி வேண்டும் என்று ஆசை. உன்னைப் பற்றி தகவலே இல்லாமல் போகவும், 'எக்ஸ்பார்ட்டியாக விவாகரத்து வாங்கிக் கொள், வேறு திருமணம் செய்து கொள் என்று வற்புறுத்திக் கொண்டே தான் இருந்தார்கள். அவர்களது ஆசை இயற்கைதான். ஆனால், நான்தான் மறுத்துக் கொண்டே இருந்தேன். என்னை மாற்றி விடலாம் என்று வீட்டில் ஏதாவது பேசியிருக்கலாம். கடைசியாக இந்தப் பேச்சே கூடாது. பேரன் பேத்தி என்றால், அவர்களுக்கு தீபா பிள்ளைகள் மட்டும்தான் என்று நான் கண்டிப்பாகச் சொல்லி முடித்த போதுதான், 'விபுவைக் காப்பாற்று' என்று நீ வந்து நின்றாய், இப்போது நம்ப முடிகிறதா, நீ மட்டும் தான் என்றதை?'' என்று சிறு புன்னகையோடு கேட்டான் அவன்.

ஆனால், இன்னமும் முகம் தெளியாமல், ''ஆனால் நீங்கள் திருமணமான புதிதிலேயே காதல் மனைவி இல்லை. வீட்டில் ஓர் இடம் மட்டும்தான் என்றெல்லாம் சொன்னீர்களே! செருப்பாய்க் கிடக்க வேண்டியவள் என்றும்'' என்றாள் அவள்.

ஒரு கணம் அமைதியாய் இருந்து விட்டு ''உன் அம்மா அவர்கள் வீட்டார் பற்றி உன்னிடம் ஒன்றுமே சொன்னதில்லை என்று நினைக்கிறேன் அப்படித் தானா?'' என்று வினவினான் உதயன்.



''திருமணத்தை எதிர்த்தார்கள். வெளியேறி விட்டோம் என்றதற்கு மேல் எதுவும் சொன்னதில்லை ஏன்?''

''ஒரு பெரிய கதை இருக்கிறது மது. அது, உன் பெற்றோரைப் பற்றி இல்லை. அதை வீட்டுக்குப் போய்ச் சொல்லுகிறேன். இந்த முறை அவன் என்னென்னவோ மிரட்டியதில் அப்பாவே கலங்கி விட்டார்கள். உன்னை நேரில் கொண்டு நிறுத்தினால் தான் எல்லோருக்கும் நிம்மதியாக இருக்கும். கிளம்புவோம்'' என்று காரை எடுத்தான் அவன்.

மிரட்டல் நினைவு வர, ''ஆனாலும் எவ்வளவு பணம் விரயமாகிவிட்டது உதி!'' என்றாள் மதுரிமா வருத்தத்துடன்.

''பணம் கொடுப்பது என்று முடிவு செய்தபின், சொல்லவில்லையே தவிர, அங்கிளுக்கு விவரம் தெரியும். இதை ஊகித்து ஏதாவது ஏற்பாடு செய்து வைத்திருப்பார் மது. இல்லாவிட்டாலும் அது பற்றிக் கவலை வேண்டாம்.''

வீடு சேர்ந்து நடந்தது பற்றிச் சொல்லி முடிக்கையில் டாக்ஸி ஒன்று வந்து நிற்க அதிலிருந்து இருவர் இறங்கினர். வாயில்படி விளக்கொளியில் கவனித்து விட்டு, ''அம்மா!'' என்று பாய்ந்தோடினாள் மதுரிமா.

''அப்பா வாருங்கள் அம்மா வாங்கம்மா!'' என்று சந்தோஷ மிகுதியில் வேறு எதையும் பேச மாட்டாமல் திணறினாள். ''எப்படிம்மா திடீரென்று? உள்ளே வாருங்கள். அப்பா உங்கள் மருமகன்!''

சாமான்களை இறக்கி வைப்பதை ஒரு கண் பார்த்தபடி, ''அப்பாவுக்கு இன்னொரு நீட்டிப்பு கிடைத்திருக்கிறது. உன்னைப் பாராமல் முடியாது என்று வந்தோம். அந்தக்

கூடை, பத்திரம்பா. நிஜ ஆஸ்திரேலியன் ஆப்பிள்!'' என்றாள் சுகுணா.

''உள்ளே வாருங்கள்'' என்று உதயன் அழைக்க, ''மது கொடுத்திருந்த முகவரிக்குப் போனால், 'கிட்னாப்பிங்' அது இது என்றார்கள்? அங்கேதான் இந்த விலாசமும் கொடுத்தார்கள்...'' என்று மருமகனிடம் சந்தானம் விளக்க எல்லோரும் உள்ளே வந்தனர்.

''எங்க மாமா, அத்தை'' என்று மதுரிமா அறிமுகம் செய்து வைக்க, ''நீங்களா?'' என்று ராகவனை வியப்புடன் நோக்கினாள் சுகுணா.

''நீங்கள் எப்படித்தான், எங்கள் வீட்டுப் பெண்ணை மருமகளாக ஏற்றீர்களோ தெரியவில்லையே!''

''என்னம்மா?!'' என்று கேட்டாள் மகள் வியப்புடன்.

''ஆமாம்மா. இவருடைய தம்பியைக் குடும்பத்தில் இருந்து பிரித்து அவரை உருக்குலைத்து அழித்தே விட்டவள் உன் பெரியம்மா.''

''என்னது?!''

''நிஜம்தான். உன் மாமாவும் பெரியம்மாவும் சேர்ந்து செய்தது. உன் மாமனார் எங்கள் வீட்டுக்கே வந்து சுலேகாவிடம் கெஞ்சிப் பார்த்தார். என்ன திமிராகப் பதில் சொன்னாள் தெரியுமா? ஆனால், மிஸ்டர் ரகுவின் மறைவுதான் வீட்டை அடியோடு துறக்கும்படி என்னை முடிவெடுக்க வைத்தது. அப்பா வீட்டிலும் அவர் சித்தி! இரண்டு வீடுகளுமே கசந்து விட இருவருமாகக் கிளம்பி விட்டோம்'' என்று சுகுணா உரைக்க சந்தானம் ஆமோதித்தார்.

''காதல் மணத்துக்கு எதிர்ப்பு. அதனால் வெளியேறினோம் என்றல்லவா சொன்னீர்கள்?''



''ஆமாம் இந்தக் கசப்பெல்லாம் சின்னப் பிள்ளைகள் உங்களுக்கு எதற்கு என்று எண்ணினோம். இப்போது உன் மாமனாரின் பெருந்தன்மை உனக்குத் தெரியட்டும் என்றுதான் சொன்னேன்.''

''சரி சரி இந்தப் பேச்சு போதும்'' என்று சந்தானத்தின் வேலை பற்றிப் பேசலானார் ராகவன்.

இரவு உணவின் பின் ஹோட்டல் அறைக்கே மதுரிமாவுடைய பெற்றோர் திரும்பி விட்டனர்.

''உன் அண்ணியுடைய அக்கா, நாளை அதிகாலையிலேயே வருவதாகச் சொல்லியிருக்கிறாள். அப்போது அங்கே இல்லாவிட்டால் நன்றாயிராது''.

''சென்னையிலிருந்து, பங்களூருக்கு வந்ததும், பெரியம்மா, மாமா பற்றிக் கேட்டீர்களே! வெளிப்படையாகக் கேட்டிருக்கலாமே! வெளிப்படையாகக் கேட்டிருந்தால் தெரியாது என்று உண்மையைச் சொல்லியிருப்பேனே!'' என்றாள் மதுரிமா.

''சொல்லியிருப்பேனோ என்னவோ? பெருந்தன்மை பற்றி உன் அம்மா சொன்ன போது மனம் சுட்டது'' என்றான் அவன் வருத்தத்துடன். ''ஒன்றிலிருந்து ஒன்றாய் நீ கார் பங்களா என்று வேடிக்கையாகப் பேசியதை எல்லாமே தப்பாக எடுத்து... சே! என்ன அநியாயம் செய்து விட்டேன் மதுரா!''

அவன் மருகி உருகுவது அவளுக்கும் வேதனையாகவே இருந்தது.

மூன்றாண்டு காலம் அனாவசிய வேதனையாகவே இருக்கலாம். ஆனால் பேரழுத்தத்துக்கு உள்ளான பிறகுதானே கரித்துண்டு வைரமாகிறது? 'இவர்களது அன்பும், இப்போது மிகுந்த உறுதி பெற்று விடவில்லையா?'

சும்மா என்றால், அவளுடைய மாமனார் மனதார அவளை, ஒரு மருமகளாக எப்போது ஏற்றிருப்பாரோ? ஏற்காமல் கூடப் போயிருக்கலாம்! இப்போது, ''சேற்றிலே மலர்ந்த செந்தாமரை' என்றான் மகன். அது உண்மை என்று நீ மட்டுமல்ல, உன் தாயாரும் நிரூபித்திருக் கிறார்கள். அன்றே ஆலம் சுற்றி வரவேற்றிருக்க வேண்டியது. இப்போது எல்லோருமாக ஊர்க் கோயிலுக்குப் போய்ப் பூஜை செய்துவிட்டு வருவோம். பணியாட்களுக்குப் புதிது வாங்கிக் கொடுத்துத் திருமணத்தின் போது போலவே கொண்டாடுவோம்'' என்றெல்லாம் கூறி மகிழுகிறாரே! இதுபோதாதா?

இதை எல்லாம் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தால், உதயனும் பதிலுக்கு இன்னொன்றைச் சொல்லி வருத்தப்பட்டுக் கொண்டிருப்பான். அவன் வருத்தப்படுவதே அவளுக்குப் பிடிக்கவில்லை! எனவே...

''போச்சுடா! இன்று முழுக்க இப்படியேதான் பேசிக் கொண்டிருக்கப் போகிறீர்களா? மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தனிமையில் சந்தித்திருக்கிறோம்! நான் என்னென்னவோ நினைத்துக் கொண்டு வந்தால்?''

சட்டென முகம் மலர, ''என்னென்ன நினைத்தாய் மது?'' என்று கேட்டான் அவன்.

''என்னைக் கேட்டால்? நேற்றிரவு அச்சாரம் கொடுத்தவருக்கு அல்லவா அது தெரியும்?'' என்று கண் சிமிட்டிக் கேட்டு விட்டு அவன் பார்வையில் சிவந்த முகத்தை அவன் மார்பிலேயே புதைத்துக் கொண்டாள் அவள்.